மான விலையில் விற்று வருகிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது, கலப்புப் பொருளாதாரம் தான் நம் சமுதாயத்திற்கு ஏற்றதாக இருக்கிறது என்று தெரிகிறது. வியாபாரத்தை தனிப்பட்டவர்களின் ஏகபோகமாக ஆக்கிவிட்டால், பொருள்கள் தனிப்பட்டவர்கள் கையில் குவியக்கூடும். அது, நாம் ஏற்றுக்கொண்டுள்ள சமதர்மக் கொள்கைக்கு முற்றிலும் புறம்பானது.

பொதுத் துறையிலுள்ள நம் ஆஃபீஸர்களுக்கு போதிய
திறமை இல்லை என்று சொல்ல முடியாது. இருந்தாலும், அவர் 11-10 a.m.
களுக்கு அந்தந்தத் துறைகளில் போதிய பயிற்சி இல்லை. உதாரணமாக, மாடு வளர்க்கும் திட்டம் சம்பந்தப்பட்ட துறையில் உள்ள ஆஃபீஸர்களுக்கு பால் பண்ணை நடத்துவது போன்றவற்றில் பயிற்சி இல்லை. அதே போல, மோட்டார் தொழில் சம்பந்தப்பட்ட துறையில் உள்ளவர்களுக்கு மோட்டார் போன்றவற்றை இயக்குவது போன்றவற்றில் போதிய பயிற்சி இல்லை. இத்தகைய பொறுப்பை நிர்வகிக்கும் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளுக்கு போலீஸ், ரெவின்யூ பயிற்சி அளிப்பது போல, மூன்று நான்கு திங்கள் அல்லது ஓராண்டு காலம் அவசியமான தொழில் பயிற்சியை அளித்து அதன் பிறகு அவர்களிடம் அந்தந்தத் துறையில் முழு பொறுப்பையும் ஒப்படைத்தால், பொதுத் துறை இப்போதுள்ளதைவிட நன்றாக நடைபெறும் என்பது என் கருத்து. இந்தத் துறையில் ஏற்படும் குறைகளுக்குக் காரணம் அவசியமான தேர்ச்சி இவர்களுக்கு இல்லாததுதானே தவிர இவர்கள் கவனக் குறைவாக இருக்கிறார்கள் என்றோ, இவர்கள் வேண்டுமென்றே தவறு செய்கிறார்கள் என்றோ சொல்லுவதற்கில்லை. இந்த ஐந்தாண்டுத் திட்டங்களில் நாம் எதிர்பார்க்காதது, நட்பு நாடாகிய பாகிஸ்தானும் சைனாவும் நம்மீது படையெடுத்தது தான். அதை நாம் எதிர்பார்க்கவில்லை. அதை நாம் எதிர்பார்க்காதது ஒரு பெரும் குறை. அதன் காரணமாக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நாம் எதிர்பார்த்தபடி நடக்காத சூழ்நிலை அல்லது அது நடக்கக் கொஞ்சம் காலதாமதம் ஆகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் நம் பொருளாதாரமும், வருவாயும், உற்பத்தியும் பெருகியிருக்கின்றன. மேலும், தையல் மெஷின்கள், மோட்டார் சைக்கிள்கள், ரயில்பெட்டி போன்றவற்றை நாம் இப்போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். ஆனாலும், உணவுப் பொருள்களை நாம் இப்போது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ள குறை எல்லோருடைய உள்ளத்தையும் உறுத்துகிறது. எனவே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்திக்கு அதிகமாக ஏற்பாடு செய்திருக்கிறோம். உணவு உற்பத்தி என்பது நினைத்தவுடன் மந்திரத்தால் நடக்கக்கூடிய காரியம் அல்ல. உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு நிலத்தைத் திருத்த வேண்டும். விவசாயிகளுக்கு இந்தத் தொழிலில் ஊக்கம் ஏற்படவேண்டும். அவர்களுக்கு ஊக்கம் பிறக்கச் செய்வதற்கு, சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள் சீர்திருத்தி யமைக்க வேண்டும். திட்டங்கள் நிறைவேறிய பிறகு, இறக்குமதி தேவையில்லாத அளவிற்கு

[திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார்] [25th March 1966

உணவு உற்பத்தி பெருக முடியும் என்ற நம்பிக்கை இப்போது இருக்கிறது. எனவே, உணவு உற்பத்திக்கு அதிகமான ஒதுக்கீடு கொண்டுள்ள இந்த நான்காவது திட்டத்தை நான் மிகவும் வரவேற்கிறேன்.

தொழிற் துறையில் விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்று நான் பல முறை சொல்லியிருக்கிறேன். ஒரு தனித் துறையை அமைத்து, விவசாயிகளுக்கு வேண்டிய இயந்திரக் கலப்பைகள், புல்டோஸர்கள், ஆழமான கிணறு தோண்டப் பயன்படும் பவர் ட்ரில்கள் முதலியவற்றை உற்பத்தி செய்ய நான்காவது திட்டத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சியாளர்கள் மூலம் இதையெல்லாம் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு ஊக்கத்தை உண்டுபண்ணும் வகையில், நெய்வேலியில் ஜூன் மாதத்தில் உர உற்பத்தி தொடங்கும் என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. உரம் மாத்திரம் உற்பத்தி செய்தால் போதாது. உழவர்களுக்கு வேண்டிய கருவிகளும் வேண்டும். உரம் விவசாயிகளுக்கு நியாயமான விலைக்குக் கிடைக்கும்படியும் செய்ய வேண்டும். இப்போது ஒரு உழவனுக்கு உரமோ விதை தானியமோ வேண்டுமானால், அதைப் பெற, தான் இருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன் ஆபீசுக்கு அவன் போக வேண்டியிருக்கிறது. அப்படிப் போனாலும் அவர்கள் போனவுடனேயே அவை கிடைப்பதில்லை. அன்றைக்குக் குறிப்பிட்ட ஆபீசர் இல்லாமலோ, தானியம் இல்லாமலோ, அல்லது அவற்றுக்கு விலை குறிப்பிடப்படாமலோ இருக்கிறது. இப்படிக் குடியானவர்கள் தங்கள் தொழிலை விட்டு மூன்று நான்கு நாட்கள் பஞ்சாயத்து யூனியன் ஆபீசுக்கும் விவசாய ஆபீசுக்கும் போய்வரவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதை மாற்றி விவசாயிகள் இருக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களுக்கு என்ன தேவை என்பதை ஆங்காங்குள்ள கிராம சேவக்குகள் மூலம் அறிந்து அதைப் பூர்த்தி செய்ய வேண்டும். அல்லது கிராமங்கள் தோறும் விவசாயிகள் சங்கம் அமைத்து அவற்றின் மூலம் விவசாயிகளின் தேவைகளை அறிந்து அந்தந்த கிராமங்களுக்கு விதைகள், உரங்கள் விவசாயக்கருவிகள் கிராமங்களுக்கு வினியோகிக்க ஏற்பாடு செய்தால், விவசாயிகளுக்கு நல்ல ஊக்கம் பெருக வாய்ப்பாக அமையும். உணவு உற்பத்தியில் தீவிரமாக ஈடுபடுவார்கள். ஆகையால் விவசாயத் துறையில் நாம் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை என்ற குறையில்லாத வகையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இன்னும் அதிகமாக என்ன செய்ய வேண்டுமோ அவற்றை தீவிரமாகச் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தை மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் இந்த சபையின் சர்க்கார் கட்சித் தலைவராக இருக்கிற கனம் தொழில் அமைச்சர் அவர்கள் ஜப்பான் சென்று வந்து சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைப்பதற்கு வேண்டிய ஊக்கத்தையும் ஆக்கத்தையும் ஏற்படுத்தி அதற்கு உறுதி அளித்திருக்கிறார்கள் அதற்காக சேலம் ஜில்லா வாசிகள் சார்பில் நன்றி செலுத்துவதோடு, அந்தத் தொழிற்சாலை விரைவில் தொடங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் சேலம் ஜில்லாவில் இன்ஜினியரிங் கல்லூரி தொடங்கிக் கொண்டிருக்கிறார்கள், அதைப் போன்று சிறிய தொழில் ஸ்டேட்டுகள் அமைத்து கொடுத்து பாலிடெக்னிக் கல்லூரி வைத்துக் கொடுத்தால் நலமாக இருக்கும். சேலம் ஜில்லா ஜனத்தொகை 33 லட்சமாக இருந்தது. இப்போது இரண்டாகப் பிரிந்து விட்டது. நாங்கள் 24 லட்சம் ஜனத்தொகை கொண்ட ஜில்லாவாக பிரிந்து இருக்கிறோம். இருந்தாலும் அந்த ஜில்லாவில் ஜனத்தொகையைக் கவனித்து அங்கே ஒரு பாலிடெக்னிக்கும், கலைக்கல்லூரியும், மருத்துவக் கல்லூரியையும், ஏற்படுத்தி இரும்புத் தொழிற்சாலை விரைவில் தொடங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை வரவேற்றுப் பாராட்டி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



25th March 1966] [திரு. ஏ. சாம்பசிவ ரெட்டியார்]

* திரு. எஸ். டி. சுந்தரம்: மாண்புமிக்க மன்றத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்து சில நிமிஷங்கள் பேச அனுமதித்ததற்கு நன்றி, நம்முடைய பொருளாதார வளர்ச்சியிலே போட்டிப் பொருளாதார நிலையிலிருந்து சமதர்ம பொருளாதாரத்திற்கு முன்னேறிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் கலப்புப் பொருளாதார நிலைபற்றிப் பேசும் நிலையில் தான் நம்முடைய திட்டங்கள் நம்முடைய பொருளாதார நோக்கங்கள், தொழில் வளர்ச்சிகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. இன்றைக்கு நாம் என்னதான் சமதர்மக் கனவு கண்டாலும் சமதர்மத்தை அமைக்க வேண்டுமென்று தீவிரமாக எண்ணினாலும் இன்றுள்ள நிலைமையில் கலப்புப் பொருளாதாரத்தில் தான் காலம் செயல்படுகிறது. நம் கண் கண்ட முறையாக அறிந்தோ அறியாமலோ கொண்டு அதில் ஈடுபட்டிருக்கிறோம். நம்முடைய திட்டங்களும் அவற்றின் மூலமாக ஏற்படும் ஆக்க வேலைகளும் எவ்வளவுதூரம் மக்களுக்கு நேரிடையாகப் பயன்படுகிறது, அவை அவர்களுக்கு பயன்பட்டு அதன் மூலமாக ஏற்படும் பலன்களை அவர்கள் அனுபவித்து அவர்கள் முகங்களிலே எந்த அளவு புன்னகையை நாம் காண்கிறோம் என்பதுதான் இப்போதைய கேள்வி.

இத்தகைய திட்டங்களும் அரசியல் பணிகளும் மற்ற நிர்வாகச் செயல்களும் மக்களின் உள்ளத்திலே எவ்வளவு நிறைவு தருகிறது, மக்களிடை எத்தகைய மலர்ச்சியை தோற்றுகிறது என்பதைப் பொறுத்துத்தான் அரசியலின் வெற்றி தோல்வி கணக்கிடப்படும்.

போட்டிப் பொருளாதாரம் இந்த நவீன யுகத்திற்குப் பயன்படாத ஒன்று என்பதை பல சரித்திர ஆசிரியர்கள் நிரூபித்திருக்கிறார்கள். முதல் உலக மகாயுத்தத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. யுத்தம் முடிந்த பிறகு வல்லுனர்கள் ஒரு அறிக்கை அதுபற்றி சமர்ப்பித்தார்கள். யுத்த நிபுணர்கள் தயாரித்த அந்த அறிக்கையில், போட்டிப் பொருளாதாரத்தைக் கொண்டு இயங்கிய அந்த

நாட்டு முதலாளிகள் எப்படிப் போட்டிப் பொருளாதாரத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள், அவர்கள் நாட்டைக் காக்க எவ்வளவு தூரம் அது பயன்படுத்தப்பட்டது என்பதை அறியலாம். இங்கிலாந்து நாட்டுக்கும் ஜெர்மனி நாட்டுக்கும் போர் மூண்டது. யுத்தம் முடிந்த பிறகு களத்தில் கிடந்த பிரேதங்களைப் பரிசோதனை செய்தபோது, ஜெர்மனி நாட்டு போர்வீரன் உடம்பிலே இருந்த தோட்டாக்கள், குண்டுகள் எல்லாம் 'மேட் இன் ஜெர்மனி' என்று குறிக்கப்பட்டிருந்தனவாம். அதேபோல இங்கிலாந்து நாட்டு வீரர்களின் பிரேதங்களில் பாய்ந்திருந்த குண்டுகளில் 'மேட் இன் இங்கிலாந்து' என்று பொறித்திருந்திருக்கிறது இது எதைக் காட்டுகிறது? யுத்தத்திற்கு முன்பு போட்டிப் பொருளாதாரம் வளர்ந்திருந்த ஐரோப்பாவில் ஜெர்மனில் தயாரித்து குண்டுகள் தான் வலிமை மிக்கவை, உயிரை வெற்றிகரமாகப் பறிக்கக்கூடியவை என்ற எண்ணத்தில் இங்கிலாந்து நாட்டு யுத்த அறிஞர்கள் ஜெர்மன் நாட்டு குண்டுகளை வாங்கி ஸ்டாக் செய்திருக்கின்றனர். அதையே யுத்தத்தின் போது ஜெர்மானியர் மீது பிரயோகித்திருக்கிறார்கள். அதைப்போலவே ஜெர்மன் நாட்டு வியாபாரிகள் இங்கிலாந்து நாட்டு குண்டுகள் வலிமை மிக்கன என்று எண்ணி இவற்றை வாங்கி ஸ்டாக் செய்திருந்து யுத்தத்தில் இங்கிலாந்து மக்களின் மீது அவற்றைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். தன்வினை தன்னையே சுட்டது என்பது இதுதான். போட்டிப் பொருளாதாரத்தை முதலாளித்துவம் வரவேண்டும் என்று சொல்வார்கள். சுயநலத்தையே அடிப்படையாகக் கொண்டு உழைத்தால் அந்த முதலாளித்துவம் மனித உலகத்திற்குக் கொடுத்த காணிக்கை இன்னலும் இழிநிலையுந்தான். அதை வரலாறு காட்டுகிறது.

சமுதாயத்தில் சமதர்மம் வேண்டும். மறுமலர்ச்சி வேண்டுமென்று கூறுகிறோம். நான் நான் என்று சொல்லும் மனிதன் நாம் நாம் என்று செயலாற்ற வேண்டுமென்பதுதான் சமதர்மத்தின் இலட்சியம் என்பது. நான் செய்யமுடியும் என்று சொல்வதாலேயே மனிதன் சமுதாயத்தில் தோல்வி அடைகிறான். ஆகவே நான் என்பதை விட்டு நாம் செய்யும் பணி, சமுதாயம் செய்யும் பணி, நாட்டிற்காக நாம் அனைவரும் செய்கிற பணி என்று எண்ணத்துவங்கினால்தான் சமதர்மப் பொருளாதார வளர்ச்சியில், மனிதன் நாகரீக வளர்ச்சியை முன்னேற்றத்தைக் காணமுடியும். கலப்புப் பொருளாதாரத்தைப் பற்றி பெருமையோடு பேசப்படுகிறது. அதன் விளைவுகளை நாம் அனுபவிக்கும் போது எவ்வளவோ இன்னல்களை நாடு எதிர்நோக்கியிருக்கிறது. அங்கத்தினர் சிலர் பேசும்போது அமெரிக்காவை, ஜப்பானை, மேற்கு ஜெர்மனியை உவமை காட்டிப் பேசுகிறார்கள். யுத்தத்தில் நசுக்கப்பட்ட நாடுகள்,பொருளாதார வளர்ச்சியில் இடுக்கண் பெற்ற நாடுகள் எல்லாம் விரைவாக மீண்டும் மறுமலர்ச்சி பெற்றிருக்கின்றன. அதற்காக மகிழ்ச்சியடைகிறோம். அதற்குக் காரணம் என்ன? அந்த நாட்டிலுள்ள மக்கள் பெற்றுள்ள தேசபக்தி இந்த நாட்டிலுள்ளவர்களுக்கு இருக்குமானால் அந்தப் போட்டிப் பொருளாதாரத்தை ஐயமில்லாமல் இங்கேயும் இன்றே இக்கணமே





அனுமதித்து விடலாம். நாம் எந்தப் பொருளாதார தத்துவத்தைக் கைக் கொண்டாலும் மனிதனின் மனநிலையில் வளர்ச்சி இருந்தால் தான் அது நன்றாக அமைந்திருந்தால்தான் எத்தகைய பொருளாதாரமும் மக்களுக்குப் பயன்படும். உள்ளவாறு செயல்படும் ஜெர்மன் மக்களுடைய தேசபக்தியோ, அமெரிக்க மக்களின் தேசபக்தியோ, ஜப்பான் மக்களின் தேசபக்தியோ இந்த நாட்டில் பண வளம் உள்ளவர்களுக்கு இருந்திருக்குமானால் நாம் இவ்வளவு தூரம் சமதர்மத்தைப் பற்றி சத்தம் போடவேண்டிய அவசியமிருந்திருக்காது. நாட்டு அன்பு குறைந்திருக்கும் வரையில் நாம் நாம் என்ற எண்ணம் குறைந்திருக்கும் வரையில் நான் நான் என்ற நினைவு எழுச்சிபெற்றிருக்கும் வரையில், நாட்டு வளம் சிலர் கையில் சிறைப்பட்டிருக்கும் வரையில் கோடிக்கணக்கான ஏழை மக்கள் சமதர்மத்தின் வாயிலாகத்தான் தங்களுடைய வருங்காலம் சிறக்கும், அதன் மூலமாகத்தான் தங்களுடைய சந்ததி நலத்தோடு இந்த நாட்டில் வாழமுடியும் என்று எண்ணுவதைத் தடுக்க எந்த சக்தியாலும் முடியாது. இன்றுள்ள நிலையில நம்முடைய நாட்டுப் பொருளாதாரத் தத்துவம் சமதர்மத்தத்துவமாகத்தான் இருக்க முடியும் என்பதில் ஏழைகளுக்கு கொஞ்சம் கூட ஐயமில்லை. இந்த நாட்டு அரசியல் வாதிகளுக்கு வேண்டுமானால் அதில் குழப்பம் இருக்கலாம். பணக்காரர்களுக்கும் பலதத்துவங்களை படித்த அறிஞர்களுக்கும் ஐயம் இருக்கலாம். ஆனால் ஏழைகளுக்கு சமதர்மம் ஒன்றுதான் தங்கள் வாழ்வை வளமாக்கும், நம் சந்ததியை கல்வி பெறவைக்கும் என்பதில் என்னளவில் சந்தேகமில்லை. ஆகவே அத்தகைய ஏழையின் நம்பிக்கை யொளியாய்த் திகழும் சமதர்மத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகியிருக்கும் இந்த நான்காவது ஐந்தாண்டு சமுதாய வளர்ச்சித் திட்டத்தை நாம் வரவேற்றேயாக வேண்டும். இதில் யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்கமுடியாது. நாம் எந்தெந்தத் துறையிலிருந்து இம்மன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்தாலும் மனித சமுதாயத்தில் ஆணி வேராக இருக்கும் கோடிக்கணக்கான ஏழை மக்களின் பிரதிநிதிகளாகத்தான் இருக்கிறோம் என்பதை மறக்காமல் சிந்திக்கும் வரையில் இந்த ஒரு சமதர்ம தத்துவம் தான் நமது வருங்கால வாழ்க்கைக்குரிய ஆதாரச் சக்தியாக உள்ளது என்று தெரியும்.

தத்துவப் போராட்டத்தில் தளர்நடை போட்டு பேசிக் கொண்டு நம் வாழ்க்கை இருக்கையிலே, நம்முடைய இயற்கை நம்மை ஒருவாறு இந்த ஆண்டு பழி வாங்கிவிட்டது. மனிதன் எண்ணுகிறான். ஆனால் கடவுள் அந்த எண்ணத்தை வேறு விதமாக மாற்றிவிடுகிறான். இன்று நாம் வான் நோக்கி இருக்கிறோம். மழை பெய்யுமா மழை பெய்யுமா என்று ஏங்கி நிற்கிறோம். மனிதன் தனக்குக் கிடைத்த இயற்கைச் செல்வங்களை எல்லாம் இழிவு படுத்தி, அதை மதிக்காமல், இயற்கையோடு இணைந்து வாழ வேண்டியவன் அதன் போக்கைத் தடுத்து தனக்கு அதனை வேகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பேராசை

எண்ணத்தில் காட்டை வெட்டினான், நதிகளை அவமதித்தான், நதிகளின் ஊற்றுகளையெல்லாம் சுயநலத்துக்காக மாற்றி ஊற்றின் கண்களையே அடைத்து விட்டான்.

உதாரணமாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். மனிதனுடைய ஆவேசம், போட்டிப் பொருளாதார சிந்தனையின் விளைவால் நான் என்ற உணர்ச்சி எவ்வளவு வேகமாகப் பரவி வருகிறது என்பதற்கு உதாரணமாக ஒரு நதியையே கெடுத்த பெருமை எங்கள் பக்கத்திலே இருக்கும் சில ஜனங்கள் பெற்றிருக்கிறார்கள். அந்த நதியின் பெயர் வசிஷ்ட நதி. நல்ல ஆறு அது. அதில் 20, 30 ஆண்டுகளுக்கு முன்னாலேயே நல்ல ஊற்று இருக்கும். ஆறு பெருகும். மனிதர்களுடைய பேராசை காரணமாக அந்த ஊற்றின் கால்களில் கரையோரத்தில் எல்லாம் கிணறுகள் வெட்டினார்கள். நதிக்கு ஆதாரமாக இருந்த, மலையில் இருந்த செடிகளைக் கரியாக்கினார்கள். மரங்களைக் கரியாக்கினார்கள். கடைசியில் மழை வரவில்லை, மேகம் மூளவில்லை. அதற்குப் பிறகு கிணறுகள் வெட்டினார்கள். அதன் ஊற்றுக்கண்களில் இருந்து நீர் பெருகிப் பாய்ந்து வந்து பயன்பட்டது. அதுவும் தீர்ந்தது. பிறகு அந்த ஊற்று நீர் கூட உப்பாகப் போகும் அளவுக்குப் பயன்படுத்திக்கொண்டார்கள். 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால் அந்த ஊரில் உப்புத் தண்ணீர் கேட்டாலும் கிடைக்காது. இப்போது உப்பு மாத்திரம் அல்ல, கிணறுகளில் பெட்ரோல் கூட வரும்போல் இருக்கிறது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எங்கே அது?

11-20 a.m. **திரு. எஸ். டி. சுந்தரம் :** ஆத்தூர் பகுதியில் நடந்ததை சொல்லுகிறேன். அவ்வளவு துரிதமாக மனிதனுடைய சுயநலப் பண்பு வேலை செய்கிறது. அது தான் போட்டிப் பொருளாதாரத்தின் விந்தை. அது நம் ஆத்மாவில், சமுதாயத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அது போக வேண்டும் என்று தான் இந்தத் திட்டங்கள் சமதர்மப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்படுகின்றன. அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, எந்த ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தங்களை அவர்கள் இந்தியர்கள் என்று எண்ணுவார்களேயானால் ஏழைகளின் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணுவார்களா? இந்த நாடும் உலக நாடுகளோடு வாழ வேண்டும் என்று எண்ணுவார்களேயானால் இதையெல்லாம் அவர்கள் மனதில் கொண்டு ஆளும் கட்சி எதுவாக இருந்தாலும், அரசாங்கம் எதுவாக இருந்தாலும் சமதர்ம இலட்சிய அரசாங்கத்தோடு ஒத்துழைப்பார்கள். அவர்களின் அரிய ஆலோசனையை சமதர்மத்தை துரிதமாக்கும் வகையில் அளிப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை.

முன்னே கூறியவர்கள் மற்ற மற்ற நாடுகளின் முன்னேற்றத்துக்கு மூலகாரணமாக இருக்கும் அவர்தம் நாட்டு அன்பைப்பற்றி குறிப்பிட்டார்கள். நம்முடைய மக்களுக்கு அது குறைவாக இருக்கிறது என்றும் எண்ணுகிறேன். அந்த மனப்பான்மை நம்மை எவ்வளவு தூரம் வளரச் செய்திருக்கிறது என்றால்



எப்போதும் நமக்கு ஏதாவது ஒரு எதிரி இருக்க வேண்டும் என்ற நிலைக்கு நம்மை தாழ்த்தி விட்டது. ஒரு நிரந்தர எதிரி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நமக்கு அறிவு சரியாக வேலை செய்வது இல்லை என்ற மந்த நிலை நமது மதியை ஆட்சி செய்கிறது. எல்லையில் பாகிஸ்தானோ, அல்லது சைனாவோ யாரோ ஒருவன் எதிரியாக இருக்க வேண்டும். இரண்டு எதிரி எவனும் இல்லாவிட்டால் நாமே நமக்கு எதிரியாக மாறி விடுகிறோம். அதன் விளைவுகள் தான் அண்மையில் நடந்த கலவரங்கள். ஆகவே எதிரி நமக்கு எப்போதும் தேவை என்ற அபாயமான உள்ளப் பாங்கு வந்துவிட்டது. இதற்கு எல்லாம் காரணம் நான் நான் என்ற தன்னல எண்ணம் தான். சமதர்ம இலட்சியத்தின் உயிரை அறியாமல் அலட்சியப்படுத்தும் விந்தைதான்.

அமெரிக்க பிரசிடெண்ட் கென்னடி ஒன்று சொன்னார். அதைத் தான் நம் தலைவர்களும் சொல்லுகிறார்கள். "Ask not what America has done to you, say what you have done to America." அமெரிக்கா உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே. நீ அமெரிக்காவுக்கு என்ன செய்தாய் என்று சொல் என்றார். அதைத் தான் நாமும் நம்மைப் பற்றிக் கேட்டுக் கொண்டு நாட்டுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையை விரைவில் செய்யக் கடமைப்பட்டு உள்ளோம். நாம் இந்த நாட்டுக்கு என்ன செய்தோம். தனிப்பட்ட அளவிலும், இயக்கத்தின் அளவிலும் நம்முடைய சமுதாயத்தின் அளவிலும் எவ்வளவு செய்து இருக்கிறோம் என்று எண்ணிப்பார்க்கிற மனோதத்துவப் பரிட்சையில் நம்மை நாமே பரிசோதித்துக் கொள்ள வேண்டிய நிலையில் (Self experiment) நாம் இன்று வாழ்ந்துக்கொண்டு இருக்கிறோம். இந்தப் பரீட்சைக்கு நாம் எவ்வளவு வேகமாக, நியாயமாக விடை கொடுக்கிறோமோ, அந்த விடையை செயலாக ஆற்றுகிறோமோ, அதைப் பொறுத்துத்தான் நம் வருங்கால வாழ்க்கை வளரும்-வாழும். அதற்கு நம் இன்றைய திட்டங்கள் நம்மை நல் வழியில் செலுத்துமாக என்று கூறி விடை பெறுகிறேன்.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவர் அவர்களே, திட்டங் 11-30 a.m.
களே வேண்டாம் என்று கூறும் பிரகிருதிகள் இந்த ராஜ்யத்தில் தான் இருக்கிறார்கள் என்பது ஒரு துரதிருஷ்டமாகும். உலகு எங்கும் திட்டம் போட வேண்டும், புத்தம் புதிய காரியங்கள் செய்ய வேண்டும் என்று உலக மக்கள் ஓடிக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் திட்டம் வேண்டாம் என்று கூறுகிறவர்கள், திட்டம் வேண்டும் என்று கூறுகிறவர்கள் திட்டங்களைத் திட்டிக் கொண்டே திரிகிறார்கள். அவர்களின் பின்னாலேயும் ஒரு கோஷ்டி பைத்தியக்காரத்தனமாகத் திரிகிறார்கள். திட்டங்கள் ஒரு நாட்டுக்கு இன்றியமையாதவை. திட்டம் இல்லாவிட்டால் எந்த நாட்டிலும் எந்தக் காரியமும் சரியாக நடைபெறாது. ஆகவே திட்டங்கள் மிகவும் தேவை.

[திரு. என். ஆர். தியாகராஜன்] [25th March 1966

ஒரு ரூபாய்க்கு இரண்டு பக்கங்கள் இருப்பதுபோல் திட்டங்களுடன் சேர்ந்தவைகள் தான் பெர்மிட், கோட்டா, லைசென்ஸ் என்ற சிஸ்டம்கள். திட்டங்கள் மட்டும் போடப்பட்டு அதனோடு லைசென்ஸ் பெர்மிட் கோட்டா என்ற இவைகள் இல்லாவிட்டால் அந்தத் திட்டம் செம்மையாக நடக்காது. ஒரு பக்கம் திட்டங்களை ஆதரிக்கிறேன் என்று சொல்லிவிட்டு மறுபக்கத்தில் பிரீ டிரேட் (Free Trade) இருக்க வேண்டும் என்று எனக்கு முன்னால் பேசியவர்கள் பேசினார். அதற்கு அர்த்தம் கிடையாது. திட்டங்களுடன் சேர்ந்தவைகள் தான் அவைகள். திட்டங்களின் தம்பிமார்கள் தான் அவைகள்.

உதாரணமாக வீடுகள் கட்டலாம் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் பெருமிதமாகச் சொன்னார்கள். நாம் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு ஃப்பரீயாக விட்டுவிட்டால், லைசென்ஸ், பெர்மிட் ஏதும் இல்லாமல் விட்டுவிட்டால் அப்புறம் சைனா பஜார் ரோடே இருக்காது. அத்தனை இடத்திலேயும் வீடுகளைக் கட்டிவிடுவார்கள் அதற்குப் பிறகு அங்கு ஆள் போக முடியாது, பஸ். போக்குவரத்து ஒன்றும் இருக்காது. ஆகவே திட்டங்கள் போடும்போதே எத்தனை வீடுகள் கட்ட வேண்டும், எப்படி கட்ட வேண்டும், எந்த இடத்திலே கட்ட வேண்டும், வீதியில் இருந்து எத்தனை அடிக்கு அப்பால் அவைகள் இருக்க வேண்டும், என்று வரையறை போடுகிறோம். பிறகு கார்ப்பொரேஷனிலிருந்து அவைகளுக்கு அப்ரூவல் வாங்கி வீடு கட்ட வேண்டும். கார்ப்பொரேஷனுக்கு நாம் எதற்குப் போக வேண்டும், அல்லது அங்கே இருக்கிற எஞ்சினியரிடம் எதற்காகப் போவது, எல்லாம் ஃப்பிரீ என்றால் இந்த ஊரில் ஜனநட மாட்டத்திற்கே வசதி இருக்காது. இடமே எங்கும் இருக்காது.

அதே போல் லைசென்ஸ், பெர்மிட், கோட்டா பற்றி கூறுகிறவர்கள், பஸ் சர்வீஸ் பற்றியும் கூறுகிறார்கள். பஸ்களை எல்லாம் இஷ்டம் போல் விட்டுவிடலாம் என்று கூறுகிறார்கள். அப்படி லைசென்ஸ் பெர்மிட் வேண்டாம் என்று ஒரு காலம் இருந்தது. இஷ்டம்போல் ஆட்களை ஏற்றிக் கொண்டு போகலாம் என்று ஒரு காலம் இருந்தது. அப்போது எல்லாம் ஒரு பஸ்ஸில் 20 பேர் தான் ஏறலாம் என்றால் 100 பேர் ஏறிக்கொண்டு போவார்கள். இப்போதும் கோளா மலைப்பகுதியில் 60 பேர் ஏறுகிற பஸ்ஸில் 120 பேர் போகிறார்கள். இந்த பஸ் சர்வீசுக்கு பரியாக பெர்மிட் லைசென்ஸ், கோட்டா சிஸ்டம் இல்லாவிட்டால் நாம் பஸ்ஸில் டிராவல் செய்யவே முடியாது. நான் சிறு பையனாக இருந்த போது மதுரையிலிருந்து ஒத்தக்கடை என்ற ஊருக்கு போக வேண்டிச் சென்றேன். அங்கே 20 பஸ்கள் இருந்தன, ஒவ்வொன்றிலும் ஒரு ஒரு ஆள் ஏறிக் கொண்டிருந்தான். 20 பஸ்ஸிலும் 20 பேர் ஏறிக்கொண்டிருந்தார்கள். ஒரு பஸ்ஸும் புறப்படவில்லை. காலையில் இருந்து மாலை வரை எல்லோரும் பஸ்ஸிலேயே சுற்றிக் கொண்டிருந்தோம். அப்போது பஸ்ஸில் இருந்த பிரயாணிகள் என்ன சொன்னார்கள் என்றால் " இந்தச் சர்க்கார் மாத்திரம்



25th March 1966] [திரு. என். ஆர். தியாகராஜன்]

ஒழுங்கான சர்க்காராக இருந்தால் இந்த பஸ்க்காரர்களுக்கு பெர்மிட் வைத்திருக்கும். நீ இத்தனை மணிக்குள் இங்கே போக வேண்டும். இத்தனை பேரைத் தான் ஏற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்லி இருக்கும் என்றார்கள். அதுபோல் பஸ்ஸுக்கு பெர்மிட் போன்ற சிஸ்டம் இல்லை என்றால் கண்ட கண்ட இடங்களிலே விட்டு விடுவார்கள். ஒரு பஸ்ஸும் சரியாக ஓடாது. ஒவ்வொரு பஸ்ஸுக்கும் ஒரு பாசஞ்சர் வீதம் 50 பஸ்கள் சென்னையிலிருந்து கிளம்பினால் அதில் 50 பேர் உட்கார்ந்துகொண்டிருப்பார்கள். அடுத்த ஊருக்குப் போக வேண்டும் என்றாலும் அதற்கு போய்ச் சேரும் காலம் நேரம் குறிப்பிட முடியாது என்ற நிலை ஏற்படும். ஆகவே கண்டபடி பஸ்களை விட்டுவிடலாம் என்பது தவறானது.

இன்னும் கூறுகிறார்கள். லைசென்ஸ், பெர்மிட், கோட்டா பற்றி கூறுகிறவர்கள் தான் எந்தவிதமான கண்ட்ரோலும் இருக்கக் கூடாது என்று கூறுகிறார்கள் சொத்து உள்ளவர்கள் கூட கண்டரோல் கூடாது என்கிறார்கள். மேலூருக்கு உணவு அமைச்சர் சமீபத்தில் வந்திருந்தார். வந்திருந்தபோது நெல் கொள்முதலில் கண்ட்ரோல் விலையில் நெல்லை அளந்தார்கள். அதை மக்களில் பலர் எதிர்த்தார்கள். 'கண்ட்ரோல் செய்து நெல்லை எங்கே வாங்கிக்கொண்டு போகிறீர்கள்' என்றார்கள். 'எல்லோருக்கும் சரியாகப் பங்கீடு செய்து தருவதற்காகத் தான் கண்ட்ரோல் விலையில் நெல்லைக் கொள்முதல் செய்கிறோம்' என்றார் உணவு அமைச்சர். அது எங்களுக்குப் பிடிக்கவில்லை என்று அங்கே உள்ள ஒரு 50 பேருக்கு மேற்பட்ட மிராசுகள் வந்து கூறிக்கொண்டிருந்தார்கள். கடைசியில் நான் தலையிட்டு அவர்களிடம் சொன்னேன் ; 'இப்போது பெரியாறு தண்ணீரை 1½ லட்சம் ஏக்கருக்கு பங்கிட்டுக் கொடுக்கிறோம். ஒரு ஸ்லூயிசில் இத்தனை கியூசெக்ஸ் என்று கொடுக்கிறோம் ; அந்த சிஸ்டத்தை எடுத்துவிடலாமா' என்று கேட்டேன். பெரியாறு தண்ணீர் பாய்கிறது. அங்கே 10,000 க்யூஸெக்ஸ் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. அந்தத் தண்ணீரைப் பொறுத்தவரையில், 'பெர்மிட்-லைசென்ஸ்—கோட்டா முறையை எடுத்துவிடலாமா' என்று அங்குள்ள மிராசுதார்களிடம் கேட்டேன். 'வேண்டாம்' என்று அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு, தண்ணீருக்கு மட்டும் இந்த முறை வேண்டுமாம். ஆனால், " அரிசியை மட்டும் மக்களுக்குப் பங்கிட்டுக்கொடுக்க கூடாது" என்று அந்த மிராசுதார்கள் சொன்னார்கள். காவிரித் தண்ணீரைப் பொறுத்தவரையில், கண்ட்ரோல் முறையை எடுத்துவிடுவது என்று வைத்துக்கொண்டால், ஒரு சொட்டுத் தண்ணீர் கூட மைசூரிலிருந்து இங்கே வராது ; எல்லாத் தண்ணீரையும் மைசூர்க்காரர்களே பயன்படுத்திக்கொள்வார்கள், தங்கள் நிலங்களில் எவ்வளவு தண்ணீரை வேண்டுமானாலும் தேக்கி வைத்துக்கொள்வார்கள். மைசூரிலிருந்து கொஞ்சம் தண்ணீர் வந்தாலும் அது தஞ்சாவூருக்குத் தான் போகிறது, அது சேலத்தில் பயன்படுத்தப்படுவதில்லை. ஆகவே, பெர்மிட்-லைசென்ஸ்-கோட்டா முறையை நீக்கவேண்டும் என்று சொல்லும்போது எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்க்க

வேண்டும். அந்த முறைபோனால், ரோடில் மக்கள் நடக்க முடியாது, ரோடில் வீடுகள் கட்டப்படும்; பல ஊர்களுக்கு மின் சாரம் வராது. எங்கள் ஊரில் மின்சார உற்பத்திக்குத் தேவையான தண்ணீர் இருக்கிறது. கட்டுப்பாடு இல்லாவிட்டால், அந்தத் தண்ணீரை மற்ற ஊர்க்காரர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியாதபடி நாங்கள் செய்துவிடுவோம். சர்க்கார் தலையிடாவிட்டால், யாரும் யாருடைய சட்டையையும் பிடித்து இழுக்கும் நிலைமை நிலவும். எங்கள் ஊரில் ஒரு பெரிய மில் முதலாளி இருக்கிறார். அவருக்கு வேண்டிய மில்லுக்கான இடத்தை 'அக்வயர்' பண்ணிக் கொடுக்க அரசாங்கம் தலையிட வேண்டும் என்று அவர் சொல்கிறார். இப்போது லட்ச ரூபாய் மதிப்புள்ள நிலத்தை 100 வருஷங்களுக்கு முன்பு அவர் பாட்டனார் 100 ரூபாய்க்கு வாங்கினாராம். ஆகவே அந்த இடத்தை அரசாங்கம் அவருக்கு 100 ரூபாய்க்கு 'அக்வயர்' செய்து கொடுக்க வேண்டும் என்று அவர் சொல்கிறார். சர்க்கார் அவருக்கு அதிகமான நிலத்தை 'அக்வயர்' செய்து கொடுத்தால் அவர் நிறைய நூல் உற்பத்தி செய்து கொடுப்பதாகச் சொல்லுவார். ஆனால், அவர் மில்லில் உற்பத்தி செய்யும் நூலின் விலையை சர்க்கார் கட்டுப்படுத்தக் கூடாது என்று அவர் கூறுவார். இவ்வாறு ஒன்றுக்கு சர்க்கார் தலையீடு வேண்டும் என்றும் இன்னொன்றுக்கு சர்க்கார் தலையீடு வேண்டாம் என்றும் அவர் ஏன் கூறுகிறார் என்று அவரிடம் கேட்டால், "எனக்கு லாபம் ஏற்படக்கூடிய காரியங்களில் சர்க்கார் தலையிடவேண்டும். எனக்கு நஷ்டம் ஏற்படுமானால் சர்க்கார் தலையிடக் கூடாது" என்று அவர் சொல்லுவார். மிளகாய் வற்றல் வியாபாரிகள் மிளகாய்க்கு 'கண்ட்ரோல் வேண்டாம்
11-40 a.m. என்றும், அரிசிக்கு கண்ட்ரோல் வேண்டும் என்றும் சொல்லுவார்கள். அரிசி வியாபாரிகள் மிளகாய்க்குக் கண்ட்ரோல் வேண்டும் என்றும் அரிசிக்குக் கண்ட்ரோல் வேண்டாம் என்றும் சொல்லுவார்கள். 'ஃப்ரீ ட்ரேட்' வேண்டும் என்று கனம் அங்கத்தினர் டாக்டர் ஹாண்டே கூறினார். இரண்டு மாதங்களுக்கு முன்பு எங்கள் ஊரில் கேழ்வரகு க்விண்டால் ஒன்று காலையில் முதலில் 40 ரூபாய் வீதம் விற்றது; பிறகு ஒரு மணி நேரத்தில் அது 50 ரூபாயாக ஏறியது. அதன்பிறகு ஒரு மணி நேரத்தில் அது 60 ரூபாயாக ஏறியது. அதற்குப் பிறகு 11½ மணிக்கு அது 82½ ரூபாயாக ஏறியது. இதற்குக் காரணம் என்னவென்றால் சேலத்திலிருந்து அங்கே வியாபாரிகள் வந்து அங்கிருந்த கேழ்வரகு பூராவையும் வாங்கினார்கள். இதுபற்றி உடனடியாக கலெக்டருக்கு போன் பண்ணினேன். கேழ்வரகை தேனியைவிட்டு வெளியே போகாதபடி தடைவிதித்தால் விலை குறையும் என்று கலெக்டரிடம் நான் சொன்னேன். கலெக்டர் அவ்வாறே தடையுத்தரவு பிறப்பித்தார். அதற்குப் பிறகு நான் மார்க்கெட்டுக்குச் சென்று வியாபாரிகளிடம் "கேழ்வரகு என்ன விலை" என்று கேட்டேன். அது க்விண்டால் 45 ரூபாய் என்று அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு) வியாபாரிகள் தானியங்களை நிறைய வாங்கி ஸ்டாக் வைத்துக்கொள்கிறார்கள்.



எங்கள் ஊரில் பலர் சேர்ந்து 80,000 ரூபாய் முதல் போட்டு புளி வியாபாரம் செய்கிறார்கள். ராஜ்யத்தில் எல்லா இடங்களிலும் அவர்கள் புளி வியாபாரம் செய்கிறார்கள். அவர்கள் கோடவுன்கள் கட்டி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கிலோ இரண்டு ரூபாய்க்கு விற்ற புளி 3 ரூபாய்க்கு விற்று, 4 ரூபாய்க்கு ஏறியபோது அவர்கள் கோடவுன்களைத் திறந்தார்கள்.

திரு. ஆர். வெங்கடாசலம்: எந்தக் காலத்திலும் புளி கிலோ 4 ரூபாய்க்கு விற்றதாக சரித்திரம் கிடையாது. நான் ஒரு புளி வியாபாரி.

திரு. என். ஆர். தியாகராஜன்: புளி கிலோ 4 ரூபாய் வீதம் விற்றது.

திரு. ஆர். வெங்கடாசலம்: உலகத்திலேயே புளி கிலோ 4 ரூபாய்க்கு விற்றதில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: ஒருவேளை அவர் புளியை கிலோ 4 ரூபாய் வீதம் வாங்கி கிலோ 3 ரூபாய் வீதம் விற்றிருப்பார்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நான்கு ரூபாய்க்கு விற்றது புலிக்குட்டியாக இருந்திருக்கும். (சிரிப்பு)

திரு. ஆர். வெங்கடாசலம்: கனம் அமைச்சர் சொல்லுவது போல அது புலிக்குட்டியாக இருந்திருக்கும்.

திரு. என். ஆர். தியாகராஜன்: புளி விலை அதிகமாக இருக்கும் போது, புளியமரம் வைத்தவர்கள் "வியாபாரிகள் இப்போது புளியை வாங்க மாட்டார்கள். விலை குறைந்தவுடன் அவர்கள் புளியை வாங்குவார்கள்" என்று சொன்னார்கள். 10, 12 வியாபாரிகள் சேர்ந்து நிறையப் புளியை வாங்கி அதை ஸ்டாக் பண்ணி வைத்திருந்து அதன் விலை உயர்ந்தவுடன் விற்றார்கள். இந்த வியாபாரத்தில், 10,000 ரூபாய் முதல் போட்டவருக்கு 50,000 ரூபாய் லாபம் கிடைத்தது. இதில் சர்க்கார் தலையிட்டிருக்க வேண்டும்.

திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்: இப்போது சர்க்கார் இவ்வளவு கட்டுப்பாடுகளை வைத்திருந்தபோதிலும், பொருள்கள் அதிக விலையில்தானே விற்கின்றன; காஞ்சீபுரத்திலுள்ள வியாபாரிகள் கொத்தவால் சாவடியில் உள்ள ஹோல்சேல்ஸ் வியாபாரிகளுக்கு பொருள்களை விற்கிறார்கள். ஏன் கண்ட்ரோல் இருக்க வேண்டும்?

திரு. என். ஆர். தியாகராஜன்: கனம் அங்கத்தினர் ஸ்ரீ தங்கவேல் முதலியார் சொல்லுவதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் கண்ட்ரோல் முறையை இன்னும் பலமாக நடத்த வேண்டும் என்று தெரிகிறது. ஆகவே இந்த கண்ட்ரோல் முறைகளை சாதாரண முறையில் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது. நான் வியாபாரிகள் மத்தியிலேயே வாழ்ந்துவரும் ஒரு அரசியல்வாதி.

[திரு. என். ஆர். தியாகராஜன்] [25th March 1966

ஒரு தடவை சர்க்கரைவள்ளிக் கிழங்கு தேனிக்கு வந்தது. அது கிட்டத்தட்ட கிலோ 2 ரூபாய் வீதம் விற்கக்கூடியது. அப்போது எனக்குப் பக்கத்தில் 4 வியாபாரிகள் பேசிக்கொண்டதை நான் கேட்டேன். அதன் விலையை உயர்த்துவதற்கு அவர்கள் யோசித்தார்கள். அவர்கள் ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டு அந்தச் சந்தைக்கு வந்திருந்த 1,500 மூட்டை கிழங்கையும் வாங்கினார்கள். அவர்கள் தாங்கள் வாங்கிய கிழங்கின் விலையை கிலோ 4 ரூபாய் என்று சொன்னார்கள். சந்தைக்கு வந்தவர்கள் அதை அந்த விலைக்கு வாங்கிக் கொண்டு போக வேண்டியிருந்தது. ஆகவே, இரண்டு, நான்கு வியாபாரிகள் இஷ்டப்பட்டால் அவர்கள் இந்த ராஜ்யத்தை என்ன வேண்டுமானாலும் பண்ணலாம் போல் இருக்கிறது. தேனியில் சிலர் 1 கோடி ரூபாய் முதல் போட்டு மிளகாய் வியாபாரம் பண்ணுகிறார்கள்; அவர்கள் மிளகாய் மன்னர்கள். அவர்கள் இஷ்டப்பட்டால், மிளகாயை என்ன விலைக்கு வேண்டுமானாலும் அவர்களால் கொண்டுவர முடியும். ஒரு வியாபாரி "ஒரு பர்லாங் நீள கோடவுன் கட்டி அதில் ஆந்திராவிலிருந்து கொண்டுவரக் கூடிய அரிசி பூராவையும் கொண்டுவந்து வைத்து, அரிசி படி 10 ரூபாய் வீதம் விற்கும்படி எங்களால் செய்ய முடியும். ஆனால் சர்க்கார் மாத்திரம் தலையிடாமல் இருக்க வேண்டும்" என்று சொன்னார். ஆகவே, சர்க்கார் தலையிடாமல் இருந்திருந்தால், இந்த நாட்டில் உணவு நெருக்கடி எந்த நிலைக்கோ போயிருக்கும். ஆகவே சர்க்கார் தலையீடு மிக மிக அவசியமானது. திட்டங்களும் மிக அவசியமானவை. திட்டங்கள் போட்டுத்தான் காரியங்கள் செய்ய வேண்டும். திட்டங்கள் போடும்போது கிராமப் பகுதிகள் பயன் பெறும் வகையில் போடவேண்டும். உணவு, உடை, உறைவிடம் இந்த மூன்றிற்கும் முதலிடம் கொடுக்கவேண்டும். உணவு இல்லாமல் மனிதன் வாழமுடியாது. உடையில்லாமல் வெளியே வரமுடியாது. தக்க உறைவிடம் இல்லாவிட்டால் மனிதன் எங்கே வாழுவான்? அவன் பட்டினியாக இருந்தாலும் மறைவிடத்தில் வாழ விரும்புகிறான். இந்த மூன்றிற்கும் முக்கிய இடம் கொடுக்க வேண்டும். கிராமப் பகுதிகளில் வீட்டுவசதி பெருக வேண்டும், ஒவ்வொரு ஊரிலும் ஜனத்தொகை பெருகிக்கொண்டே போகிறது. அதைக் கவனித்து எந்தெந்த ஊரில் அதிக ஜனத்தொகை என்று பார்த்து அவற்றிற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். தேனியில் 1933-ல் 12 ஆயிரம் ஜனத்தொகை இருந்தது. இப்போது 1961-ல் 30 ஆயிரம் என்று பெருகியிருக்கிறது. சென்னை, மதுரை போன்றவைகளை கவனிப்பதைப் போல ஜனத்தொகை பெருகிவரும் மற்ற நகரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கிராமங்களைப் பார்த்தால் அவை எப்படியிருந்தனவோ அப்படியேதான் இருக்கின்றன. ஆனால் ஜனத்தொகை பெருகிவிட்டது. வீட்டு வசதி பெருகவில்லை. பக்கத்திலுள்ள நிலங்களையும் வாங்க முடியவில்லை. எங்கள் ஊருக்குப் பக்கத்தில் சின்னமனூர் என்று இருக்கிறது. ஐந்தடிக்கு ஐந்தடியில் ஒரு குடும்பம் வாழ்கிறது. நான் லட்டுக்க



25th March 1966] [திரு. என். ஆர். தியாகராஜன்]

அங்கே போகும்போது அவற்றைக் கண்டேன். இரண்டு சுவர் தகரங்களைப் போட்டுக்கொண்டு வீடு என்ற பெயரில் குடும்பமாக வாழ்கிறார்கள். வீடு கட்டத் தயாராக இருந்தாலும் இடம் கிடைக்கவில்லை. ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் விற்கிறது. லட்சம் ரூபாய் போட்டு வாங்கினாலும் போக்குவரத்து வசதியில்லை. புற நகர்கள் சென்னையில் மட்டும் அமைத்தால் போதாது. எல்லா நகரங்களுக்கும் புற நகர்கள் அமைத்துக்கொடுக்க வேண்டும். அதற்கான பிளான்கள் போட்டு, லைட் வசதி, தண்ணீர் வசதி கொடுத்து குடியேறும்படி செய்துவிட்டால் ஊரிலுள்ள நெரிசல் குறையும்.

அடுத்து விவசாயத்துறையில் அரசாங்கம் அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டும். எங்கள் பகுதியில் ஏக்கர் 15 ஆயிரம் ரூபாய், இருபதினாயிரம் ரூபாய் என்று விற்கிறது. எங்கள் பகுதிக்குப் பக்கத்தில் பொட்டல் நிலங்கள் அதிகமாக சும்மாவே கிடக்கின்றன. அவற்றை விவசாயத்திற்குப் பயனுள்ளதாகச் செய்யவேண்டும். விவசாயிகளுக்கு அந்த மண்ணிலுள்ள உப்புக்களைப் போக்க வழி தெரியவில்லை. அதை விவசாய இலாகாவிடம் சொல்லி, மாற்று மண்போட்டுத் திருத்திக் கொடுத்தால், அந்தப் பகுதியில் அதிகமான விவசாயம் செய்யும் நிலைமை ஏற்படும். திட்டங்களில் விவசாயத்திற்கு முதலிடம் கொடுத்து மற்ற திட்டங்களுக்கு பின் இடம் அளித்து நல்லவிதமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை அமல் செய்யவேண்டுமென்று கூறி இதை வரவேற்று, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRI M. RAJAH IYER: Mr. Chairman, Sir, at the outset, I would like to emphasise that there are certain fundamental points which should be agreed to by all without reopening them time and again. My hon. Friend expressed certain misgivings about the wisdom of the 'Free Education Policy'. I may claim to have intimately seen its actual working and I may assure the hon. Member that in fact there is to-day no distinction—which was previously there—between the rich people's children and the poor people's children. All the students feel alike now. Some students who would not have had the opportunity to enter school come to school to-day and having entered the school they should not be conscious of their poverty. Sir, I may be permitted, in this connection, to point out to a striking incident which Gen. Eisenhower, former President of the United States, narrated when 11-50 a.m.
he declared open the World confederation of the Teaching profession General Conference. He said that though he came from a very poor family, till he had finished all the studies and entered adult life, he had no realisation of the fact how poor he had been as a young boy. That is the kind of feeling we would like our children here to have even though it is a well-known fact that our country is a poor country. Still among the people here, we would like the children to feel that there are no privileged children and unprivileged children at school. Free education has been

[Sri M. Rajah Iyer] [25th March 1966

a very constructive step to see to it that there is no such distinction among the boys at school. My hon. Friend referred to the poor man's children contributing to the education of the rich man's children. I do not know what contribution he expects the poor man's children to make. (An hon. Member: Taxes). Even in the matter of taxes, it is the rich man that pays and not the poor man. The poor man does not pay taxes and even the little that he pays cannot contribute towards the cost of education. Water, air and other amenities in life can be enjoyed by the poor and rich men. For all the good things in life are open to all alike. For instance, a civic Corporation throws open the facility of going to a park to all alike. I do not see any reason why at school alone there should be a sort of taxation. I, for one, should refuse to subscribe to the point of view that education should be paid for. It is due to the fact that there has been an age-old convention all along. We are used to the type of taxation of knowledge in educational institutions. When we are trying to do away with that taxation, we make it appear as though the rich man gets away with it while the poor man does not get the relief of it. It is not as if the poor man has got to pay for the rich man's education. The rich man could be taxed and taxed heavily in order to see that the financing of education is done by the State. I would like all the leaders of the various political parties to put their heads together and come to this agreed conclusion that education at school need not be taxed. The only tax that you should think of is to penalise indifference. That is the measure which the Government announced the other day. Otherwise, we will be reducing the schools to mere choultries. If the children would remain in the same class, year after year, without any incentive for education, they should be penalised. One failure, of course, could be condoned, because the failure might be due to circumstances beyond the control of the student. But if you say that education should be free without any let or hindrance, the students would become irresponsible. They boys would then come to the school not with the text books but with a packet of cinema literature pressed into their pockets without any sense of responsibility or discipline. Sir, in order to urge them on to study, it is well that we think of penalising the students, who fail due to indifference of this sort and not because of the fact that one is rich and another is poor. I would request everyone to subscribe to the view expressed by Karl Marx, namely, "In education, there must be no domination of man over man, and if you want a classless society, education must be free to all children of the citizens of the State". That system of rational education, we were proud of having introduced till our hon. Member reopened the whole question, Sir.

In Education to-day, if Madras has reached a particular level and we could be proud of our contribution, it is due to the very great part which the private agencies have played in the spread of education. This is a particular and significant aspect of our expansion of education, which I would like the Government to bear in mind. To-day, even though we have made education free —



25th March 1966] [Sri M. Rajah Iyer]

commitments to the private agencies have not yet been met, and, what is worse, we have not even formulated firmly what our commitments to these private agencies are going to be. Reference has been made only to meeting the Provident Fund contribution of the management schools. That is a very little thing, and it is not the only thing. Private agencies are to-day unable to play their salutary part in the spread of education, mainly because of the limited financial resources at their disposal. When we blocked the sources of revenue to the school, viz., the fee income, is it not the fundamental duty of the Government to see that these agencies do not suffer due to handicap of finance? Nothing has been done to remove this handicap. It was said that whatever was spent over and above Rs. 1,500 would be met by the Government. To-day restrictions are being placed as to how much of it can be spent on white-washing, on maintenance, on purchase of locks, on purchase of stationery, on purchase of furniture, etc. These small things are quite necessary. You cannot go about under the impression that the whole thing has to be taken with a pinch of district. Many managements are able to do good service to the cause of education. Enlightened managements would, I am sure, like to see that all the requisites in the school are provided, for which they would have found the resources all these years. But to-day they are not in that position, and they have to depend on Government for everything. There is a very mystifying circular from the department saying that if any management wants to incur any expenditure even of an ordinary nature, though it is not explicitly stated there, it must take the prior permission of the Department for the purchase of furniture, equipment, and various other things. Can education progress, if every management were to go to the department for permission for the purchase of necessary things for the improvement of the quality of education? What we should say is that if the institution tries to improve the quality of education, there should be absolutely no let or hindrance. The Government must find the necessary resources for the maintenance of the schools. May I, in this connection, offer a suggestion to the Government to work upon? Now we are levying special fees for games, stationery, examination, library, and even for excursion, and there are very many unnecessary special fees now collected. I do not see any reason why they should all continue. For instance, special fees for excursion—I know the educational benefits accruing from it—could be confined to such of those as can afford the luxury of an excursion. There are special fees levied for Craft Training, Scouting and other things. These special fees, I would say, are not necessary or they should not be given top priority in the scheme of things. But the Government can permit the levy of special fees for "school maintenance". Why not think of a special fee for school improvement? Why not the child be made to make a small contribution by paying a special fee for the maintenance of the school? 'Maintenance Special fee' can be collected from the children, and the fee so collected can be accounted for even as the special fees collected for stationery, games, etc., are to-day accounted for by the management. There will be a small contribution

from the children towards the school maintenance fund. Even if the fee is collected from the poor children, they would not be taxed much because, we give these children plenty of scholarships, whereas rich people do not get any scholarship. We have plenty of scholarship for the poor and none for the rich. From the scholarship paid to the poor, they can purchase text books and also pay a special fee towards the maintenance fund. This special fee can be restricted to Rs. 5 per child per annum and collected in two instalments.

12-00 noon Sir, we are glad to note that in the Fourth Plan Schemes, there is a realisation on the part of the Government of their obligation to ensure the proper health of the children. All our expenditure on education and our other commitments under education would be futile unless we ensure the proper health of the children. I am afraid no good can come out of the mid-day meals and other schemes, unless they are followed up with the medical examination of the children. We find a small provision made for contribution towards financing funds for medical examination of elementary school children.

Sir, I made a suggestion the other day. I do not know whether it was taken note of by the Government. Why should not Government approach the Life Insurance Corporation for a substantial fund for medical examination of school children? It is almost a commercial necessity of the Life Insurance Corporation to see to it that a substantial portion of its profits, at least a percentage of its profits, is ear-marked to ensure the proper health of the little children in the rural areas. If we can approach the Life Insurance Corporation for making some of their profits available for medical examination of the school children, it would be a worth while scheme, and to that extent there will be relief to the Government also.

Sir, we are happy that we have a crash programme and, realising the necessity and the need of the situation, now grants are made available for the purchase of scientific equipment for the secondary schools. We are happy about it. For improving the quality of education very substantial allotments are made. All credit to the Government for realising the need for scientific equipment in the schools. But there is a little snag there. Just last evening I saw a couple of headmasters coming to Madras from my district. They were coming to Madras in order to see to it that the grant of Rs. 4,000 which had been made available to their institutions for the purchase of scientific equipment, was spent before the 31st March of this year. There is this deadline of the 31st March. The institution has been allotted a sum of Rs. 4,000 for the purchase of scientific equipment. And to-day we are on the 25th of March. There is only just a week ahead for the financial year to end. And these headmasters have not yet purchased test tubes, burettes, and so on. Just with a week before him, the headmaster comes to Madras to purchase such things as he could lay hands on. It is not the need of the school that counts. It





is not the importance of the scientific equipment that counts. There is the 31st March starting in the face of the headmaster, and he has to purchase and produce cash vouchers in order to be able to get the Government grant. It is very unfortunate that there should be this sort of arrangement in the matter of purchasing scientific equipment for the schools. Can these schools not be allowed to purchase their requirements of scientific equipment on a phased programme in the course of, say, two years, four years or six years or even 10 years? Why should the grants made available for this lapse at the end of the financial year?

SRI K. BALUSUBRAMANYA AYYAR: It is not only in regard to scientific instruments but in regard to library books also?

SRI M. RAJAH IYER: Yes, books also. What actually happens is this. An enterprising publishers' representative turns up and he produces a particular list of books with sometimes very misleading titles. In fact, a book fell into my hands and it was designed as a book for prize distribution. On going through the book I thought that that was not the kind of book to be presented and read by students at their young age. No boy should read such a book, because it is too frank. And if such a book was given away as a prize, any parent looking at it would think that the institution was rather indiscriminate in the choice of the prize books. They should be given plenty of time to choose the books.

The best thing for the Government to do would be to make the equipment grant available over a period of years. I have repeatedly been saying that it is not merely a question of making Rs. 4,000 available. It is a question of making the right type of apparatus available. After all, a school might purchase a microscope, the cost of which may range from 40 to 400 rupees. We do not know what sort of a microscope is supplied to us. We do not know what the cost has been and how much it is really worth, how much of it has gone to the school, how much of it to the producer and the representative, how much has gone by way of discount and behind the scene, and all that. The best solution to this problem would be for the Government scientific factory to make available all this equipment. They are producing the instruments. The Government could well create a wing of the factory—laboratory equipment wing—and enforce that only the standard—not sub-standard—equipment should be supplied to the schools by that wing. I know it would take a long time to produce all the equipment necessary. Therefore it is I am particularly anxious, now that no grant made to schools, particularly for the purchase of scientific equipment, should be allowed to lapse, simply because the schools have not been able to purchase the equipment necessary before the deadline—the 31st of March.

We are happy, Sir, that attempts are being made to attract teachers by paying them increased stipends. The stipend has been raised from Rs. 18 to Rs. 25. I have been repeatedly saying

[Sri M. Rajah Iyer] [25th March 1966

that the rush in these training schools is heavy nowdays. There is no necessity to raise it.

THE HON. SRI R. VENKATARAMAN : The principle here is the same as the one in the free scheme of education.

SRI M. RAJAH IYER : I hope the Government will make it free training instead of giving the trainees a stipend to attract teachers. The entire premises, I am afraid, of paying a stipend leads to the misconception that we would not attract people to these institutions unless we pay stipend.

THE HON. SRI R. VENKATARAMAN : No, no. The principle is that people cannot afford; unless something is given for sustenance, people who cannot afford, may not be attracted to the profession. That is why stipend is given. If this is not given, then only those who can afford to take training at their own cost, will be attracted to the profession.

SRI M. RAJAH IYER : Sir, I am thankful to the Hon. the Leader of the House for elucidating the position. But I would just like to place one aspect of the matter for the consideration of the Government. We reserve seats in these training schools for the Scheduled castes and backward communities. These seats are never fully filled up in spite of the reservation, because these Harijan and Backward community boys are not so unimaginative as not to realise that, after passing the S.S.L.C., instead of taking to this teacher training with a small stipend, they could go in for P.U.C., or B.A., or B.Sc., with much better facilities provided for them by the Government. Even though 20 to 30 seats are reserved and earmarked for these students in the training institutions, they do not think of taking up teaching as a career. They get much bettter scholarship in the colleges, they get much better food in the college hostels, and they can dress themselves much better as college students than what they can in these training schools, where they cannot get that scale of scholarships and that type of food and hostel facilities. They get Rs. 500 to Rs. 1,200 as scholarship. Very attractive scholarships are thrown open to hem here. And these stipends are not going to compete with those terms and facilities available in the college. The result is the seats reserved for Scheduled castes and backward class boys are not filled, and we are giving them to those who have failed in the S.S.L.C. Even if it is a question of affording facilities to these boys during training, give them various other amenities such as scholarships, book allowances, residential and non-residential facilities and deny them to the rich boys. Make them available only to those socially and economically backward boys instead of continuing this system of granting a stipend for this profession alone, because the Government have done away with the system of granting stipends everywhere else.

Then, Sir, we are spending a sum of Rs. 78.9 lakhs on stipends. If we want people to take to this profession, then whatever we can spare, let us give that amount by way of house rent allowance and medical relief to the existing teachers. They have been asking for these amenities. Raise the age of retirement of teachers. What little you can save in other directions you can save and provide these amenities to teachers so that a better type of people may be attracted to the profession. If today we do not attract people to the profession, it is because, after these trainees enter the profession, the attractions are not so pronounced as they ought they would be when they entered the training school. Many go to the training school not because they are attracted by the profession but because they think the problem of unemployment for a couple of years is solved. Many have no idea of sticking on to the profession. So the better type of teachers can be attracted only when the Government make their service conditions much better instead of making attractive offers of stipends when they enter the training schools.



25th March 1966] [Sri M. Rajah Iyer]

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 10-30 a.m. to-morrow. 12-10 p.m.

The House then adjourned.

## V. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

*141. *Notification issued with G.O. Ms. No. 4073, Home, dated 16th November 1965, making amendment to the Madras Motor Vehicles Rules,* 1940, *published with Home Department Notification No.* 357, *dated the 29th March* 1940. [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act,* 1939 (*Central Act IV of* 1939).]

*142. *Notification issued with G.O. Ms. No.* 519, *Industries, Labour and Co-operation, dated 8th February* 1966, *notifying certain banks situated within the State of Madras, as approved banks for the purpose of the Madras Chit Funds Act,* 1961. [*Laid on the Table of the House under section* 68 (4) *of the Madras Chit Funds Act,* 1961 (*Madras Act* 24 *of* 1961).]

### B. Reports, Notifications and other papers.

† 17. *Note on Demand XIII—Education* (*English*

*Laid on the Table of the House on 7th March 1966.
†Sent by Messengers to all M.L.Cs. on 5th March 1966.

## 3. COIMBATORE CIRCLE—*cont.*

*Coimbatore district.*

Avinashi
Mettupalayam
Annur
Perianaickanpalayam
Coimbatore
Chitrachavadi
Palladam
Tirupur
Sulur
Darapuram
Mullanur
Kundadam
Udumalpet
Madathukulam
Gadinangulam
Nunipatti
Dali
Pollachi
Anaimalai
Valparai
Kottur
Omangulam
Mangalakurichi
Jeyarpadi
Pettapatti
Andiparasola
Palani
Kinathukadavu
Waterfalls
A. G. Road
Kamakshiamman koil
A. G. road-Pettinadai
Gobichettipalayam
Sathiamangalam
Thalavadi
Puduveri
Puliampatti
Bhavani
Attani
Andiyur
Ummapet
Erode
Perundurai
Kodumudi
Kunnathur
Chinnimalai
Annainasuchpallagam
Sengapalli
Oothakali
Kangeyam
Amaravathinagar
Komaralingam
Dhalavaipatnam
Madathukulam
Amaravathi main canal
Bhavanisagar
Gobi

*Salem district.*

Salem
Naripatti
Malur
Ottaiyampathi
Ercaud
Rasipuram
Namagiripet
Omalur
Echeri
Mettur dam
Salem Camp
Tiruchengode
Malasamudram
Shanhari district
Kurichi
Seven Seven
East Bank Canal
50/0 East Bank Canal
Atur
Malapadi
Thalaivasal
Thimmapatti
Ethapur
Namakkal
Paramathi
Sendamangalam
Melur
Dharmapuri
Perunagaram
Palagode
Marandahalli
Marur
Uthangarai
Kambannallur
Paripatti
Valapuram
Hosur
Deginikottai
Berihai
Thali
Dinnur
Mathur
Krishnagiri
Kaveripatnam
Nedengal
Barur



## 4. THANJAVUR CIRCLE.

*Cauvery Division.*

Grand Anicut
Tirukkattupalli
Tiruvaiyaur
Thanjavur
Vallam
Ayyampettai
Papanasam
Mettutheru
Tiruvaigavoor
Rajagiri
Sundaraperumalkoil
கருத்தல்ல. நான் சார்ந்துள்ள கழகத்தின் கருத்தும் அல்ல. ஆனால் அந்தத் திட்டங்களால் மக்களுக்கு என்ன பலன் ஏற்பட்டு இருக்கிறது என்பதை நாம் ஆராயும்போது மக்கள் வாழ்க்கை நிலை ஓரளவு உயர்ந்து வந்திருக்கிறது என்பதற்கு ஆதாரங்களும் அனுபவத்தோடு கூடிய நிலைமைகளும் நடைமுறையில் இருந்திருக்குமானால் நான் குற்றம் சாட்டத் துணியமாட்டேன். ஆனால் நடைமுறையில் எதிர்பார்த்த பலன் அறவேயில்லை. ஆதலாலே இந்தத் திட்டங்களை முழுமனதோடு சர்க்கார் நிறைவேற்றி இருக்கிறார்களா என்றால் இல்லை. இவ்வாறு நான் சொல்லுவதிலே யாருக்கும் ஐயப்பாடோ ஆட்சேபனையோ இருக்க முடியாது. இந்தச் சர்க்கார் மேற்கொள்ளும் சில கொள்கைகளைப் பொறுத்த வரையில் நம் மதிப்புக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். மாநிலங்களை மொழிவழி அடிப்படையில் பிரிப்பதை அன்றைய தினம் எதிர்த்துக் கூறிய அறிவுரையை, அனுபவத்தை அரசாங்கம் கேட்கவில்லை என்று தெரிவித்தார்கள். ஆனால் நான் சொல்லுவது மொழிவழிப் பிரிவினை அவசியம்தான். ஆனால் அன்றைய தினமே அந்தத் திட்டம் சரியாக அமுல்படுத்தப்பட்டு நியாயமாக மாநிலங்கள் அனைத்தும் மொழிவழியின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தால் இப்போது சில மாநிலங்களில் அமளி ஏற்பட்டு நாட்டுக்கும் நஷ்டம் ஏற்பட்டு இருக்காது.

எந்த ஒரு திட்டத்தையும் நல்ல முறையில் ஆராய்ந்து நிறைவேற்ற துணிவு வேண்டும். அந்த அடிப்படையில் சர்க்கார் பஸ் போக்குவரத்து நிலைமையை ஆராய்ந்து பார்த்தேன். அதில் பல நஷ்டக் கணக்குகள் காட்டப்பட்டு உள்ளன. சமீப காலத்தில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் சில பஸ்கள் சேதமாக்கப்பட்டதால் நஷ்டம் ஏற்பட்டு இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் என்ன என்பதை சர்க்கார் யோசித்துப் பார்க்க வேண்டும். மொழித் துறையில் எடுக்கப்பட்ட முடிவை தயக்கமின்றி நியாயமானமுறையில் செயல்படுத்தத் தவறிய இந்தக் காரணங்களால் ஏற்பட்ட விளைவு தான் இவைகள் என்பதை நாம் உணர முடியும். அப்படிப்பட்ட நிலைமைகளை, வன்செயல்களை நான் ஆதரிப்பதாக இதற்கு அர்த்தம் கொள்ளக் கூடாது. சர்க்கார் திட்டங்களை நிறைவேற்றும்போது நாட்டில் அமைதி இருந்தால் தான் அந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படும் என்பது என்னுடைய திட்டவட்டமான அபிப்பிராயமாகும்.

நேற்றையதினம் மதிப்புக்குரிய உறுப்பினர் சுந்தரம் பேசும்போது சொன்னார்கள். போர் நெருக்கடி காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்ட ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் இப்போது முன்னேறுவதற்குக் காரணம் அந்த நாட்டு மக்களின் தேச பக்தி தான் என்றார். தேச பக்தியில் நம் நாட்டு மக்கள் யாருக்கும் பின்தங்கியவர்கள் அல்ல. மதிப்புக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் போல் இப்போது ரேஷன் அளவைக் குறைத்திருக்கிறார்கள். மக்கள் ஏதாவது சத்தம் போட்டு இருக்கிறார்களா? அல்லது அதைப் பயன்படுத்தி தவறான வழியில் மக்களைத் தூண்டி



26th March 1966] [திரு. என். வி. நடராசன்]

இருக்கிறோமா? அதற்கு ஏற்றபடி நம் அன்றாட வசதிகளைக் குறைத்துக்கொண்டு இருக்கிறோமே தவிர அதற்கு மாறாகப் போகவில்லை. முறைதவறிய வழியில் போக மாட்டோம். போவதும் தவறு என்பது எங்களுக்குத் தெரியும். அதிலே எங்களுக்கு அழுத்தமான நம்பிக்கை இருக்கிறது. யாரோ விரல் விட்டு எண்ணக் கூடிய சிலர் தவறான வழியில் போனால் அது தான் இந்த நாட்டுச் செயல் என்று கூறமுடியுமா?

சர்க்காரால் நடத்தப்படும் தொலை தூர பஸ்கள் எல்லாம் ஓரளவு நல்லமுறையில் நடக்கின்றன. அவ்வப்போது அந்த பஸ்களில் நான் பிரயாணம் செய்யும்போது நிலைமைகளை உணருகிறேன். எனவே அதைப் பொறுத்த அளவுக்கு பாராட்டுகிறேன். ஆனால் சென்னை நகருக்குள் ஓடும் பஸ்களை எடுத்துக்கொண்டால் அந்த அளவுக்குப் பாராட்ட முடியவில்லை. அதற்கு என்ன காரணம் என்றால் உத்தியோக மண்டலத்தை விரிவாக்கிக் கொண்டே போவதுதான் அந்த நிர்வாகத்தில் குறைகளை ஏற்படுத்துகிறதோ என்று நினைக்கிறேன். இனி எந்த ஒரு காரணத்துக்கும், உத்தியோக மண்டலத்தை இன்னும் பெருக்கிக் கொண்டே போகாமல் இப்போது விரிவடைந்துள்ள அளவிலேயாகிலும் நிறுத்திக்கொண்டு கீழ்மட்டத்தில் உள்ள தொழிலாளர்களுக்கும் அதே நிலையில் உள்ள மற்றவர்களுக்கும் சர்க்கார் வேண்டிய வசதிகளைச் செய்யுமானால், சென்னை நகர பஸ்போக்குவரத்தும் லாபம் உள்ளதாக நடக்கும் என்பதே என் எண்ணமாகும். அரசினர் வழங்கியுள்ள குறிப்பேட்டில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். டீசல் ஆயில் விலை உயர்ந்துவிட்டது. டயர் விலை உயர்ந்துவிட்டது. விற்பனைவரி உயர்வு காரணமாக பல பொருள்களுடைய விலையும் உயர்ந்துவிட்டன என்று. ஆனால் அதே சமயத்தில் தனியார் துறையை எடுத்துக்கொண்டோமானால் இவ்வளவு விலைகள் உயர்ந்திருந்தாலும் அவர்களால் மட்டும் எப்படி லாபம் பெற முடிகிறது? இன்னும் விரிவடைந்த நிலையில் அவர்கள் எப்படி தொழில் நடத்த முடிகிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று சர்க்காருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குக் காரணம் நான் முதலில் சொன்னது போல் உத்தியோக மண்டலத்தைக் குறைத்து, அது விரிவடையச் செய்யாமல் அக்கறையோடு கவனித்தால் லாபம் பெறக்கூடும் என்று கனம் தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் விவசாய 12-30
உற்பத்தியிலும், உணவு உற்பத்தியிலும் மிகுந்த அக்கறை காட்டப் p.m.
பட்டு வந்தது. ஓரளவு விலை மலிவாக இருந்தது. ஆனால் 2-வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் அந்த நிலை மாறி உணவு உற்பத்தி செய்கிறவர்களுக்கும் அதேபோல் பொது மக்களுக்கும் தொல்லை தரக்கூடிய அளவுநிலை ஏற்பட்டு இருக்கிறது. காரணம் விவசாயத் துறைக்குக் காட்டப்பட்டு வந்த அக்கறையும், ஒதுக்கப்பட்ட தொகையும் குறைக்கப்பட்டு கனரகத் தொழில்களுக்கு அதிகமான அளவுக்கு முக்கியத்துவம் காட்டப்பட்டு இருக்கிறது என்பது தான்

கருத்தல்ல. நான் சார்ந்துள்ள கழகத்தின் கருத்தும் அல்ல. ஆனால் அந்தத் திட்டங்களால் மக்களுக்கு என்ன பலன் ஏற்பட்டு இருக்கிறது என்பதை நாம் ஆராயும்போது மக்கள் வாழ்க்கை நிலை ஓரளவு உயர்ந்து வந்திருக்கிறது என்பதற்கு ஆதாரங்களும் அனுபவத்தோடு கூடிய நிலைமைகளும் நடைமுறையில் இருந்திருக்குமானால் நான் குற்றம் சாட்டத் துணியமாட்டேன். ஆனால் நடைமுறையில் எதிர்பார்த்த பலன் அறவேயில்லை. ஆதலாலே இந்தத் திட்டங்களை முழுமனதோடு சர்க்கார் நிறைவேற்றி இருக்கிறார்களா என்றால் இல்லை. இவ்வாறு நான் சொல்லுவதிலே யாருக்கும் ஐயப்பாடோ ஆட்சேபனையோ இருக்க முடியாது. இந்தச் சர்க்கார் மேற்கொள்ளும் சில கொள்கைகளைப் பொறுத்த வரையில் நம் மதிப்புக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். மாநிலங்களை மொழிவழி அடிப்படையில் பிரிப்பதை அன்றைய தினம் எதிர்த்துக் கூறிய அறிவுரையை, அனுபவத்தை அரசாங்கம் கேட்கவில்லை என்று தெரிவித்தார்கள். ஆனால் நான் சொல்லுவது மொழிவழிப் பிரிவினை அவசியம்தான். ஆனால் அன்றைய தினமே அந்தத் திட்டம் சரியாக அமுல்படுத்தப்பட்டு நியாயமாக மாநிலங்கள் அனைத்தும் மொழிவழியின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தால் இப்போது சில மாநிலங்களில் அமளி ஏற்பட்டு நாட்டுக்கும் நஷ்டம் ஏற்பட்டு இருக்காது.

எந்த ஒரு திட்டத்தையும் நல்ல முறையில் ஆராய்ந்து நிறைவேற்ற துணிவு வேண்டும். அந்த அடிப்படையில் சர்க்கார் பஸ் போக்குவரத்து நிலைமையை ஆராய்ந்து பார்த்தேன். அதில் பல நஷ்டக் கணக்குகள் காட்டப்பட்டு உள்ளன. சமீப காலத்தில் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் சில பஸ்கள் சேதமாக்கப்பட்டதால் நஷ்டம் ஏற்பட்டு இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் என்ன என்பதை சர்க்கார் யோசித்துப் பார்க்க வேண்டும். மொழித் துறையில் எடுக்கப்பட்ட முடிவை தயக்கமின்றி நியாயமானமுறையில் செயல்படுத்தத் தவறிய இந்தக் காரணங்களால் ஏற்பட்ட விளைவு தான் இவைகள் என்பதை நாம் உணர முடியும். அப்படிப்பட்ட நிலைமைகளை, வன்செயல்களை நான் ஆதரிப்பதாக இதற்கு அர்த்தம் கொள்ளக் கூடாது. சர்க்கார் திட்டங்களை நிறைவேற்றும்போது நாட்டில் அமைதி இருந்தால் தான் அந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படும் என்பது என்னுடைய திட்டவட்டமான அபிப்பிராயமாகும்.

நேற்றையதினம் மதிப்புக்குரிய உறுப்பினர் சுந்தரம் பேசும்போது சொன்னார்கள். போர் நெருக்கடி காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்ட ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் இப்போது முன்னேறுவதற்குக் காரணம் அந்த நாட்டு மக்களின் தேச பக்தி தான் என்றார். தேச பக்தியில் நம் நாட்டு மக்கள் யாருக்கும் பின்தங்கியவர்கள் அல்ல. மதிப்புக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் போல் இப்போது ரேஷன் அளவைக் குறைத்திருக்கிறார்கள். மக்கள் ஏதாவது சத்தம் போட்டு இருக்கிறார்களா? அல்லது அதைப் பயன்படுத்தி தவறான வழியில் மக்களைத் தூண்டி





இருக்கிறோமா? அதற்கு ஏற்றபடி நம் அன்றாட வசதிகளைக் குறைத்துக்கொண்டு இருக்கிறோமே தவிர அதற்கு மாறாகப் போகவில்லை. முறைதவறிய வழியில் போக மாட்டோம். போவதும் தவறு என்பது எங்களுக்குத் தெரியும். அதிலே எங்களுக்கு அழுத்தமான நம்பிக்கை இருக்கிறது. யாரோ விரல் விட்டு எண்ணக் கூடிய சிலர் தவறான வழியில் போனால் அது தான் இந்த நாட்டுச் செயல் என்று கூறமுடியுமா?

சர்க்காரால் நடத்தப்படும் தொலை தூர பஸ்கள் எல்லாம் ஓரளவு நல்லமுறையில் நடக்கின்றன. அவ்வப்போது அந்த பஸ்களில் நான் பிரயாணம் செய்யும்போது நிலைமைகளை உணருகிறேன். எனவே அதைப் பொறுத்த அளவுக்கு பாராட்டுகிறேன். ஆனால் சென்னை நகருக்குள் ஓடும் பஸ்களை எடுத்துக் கொண்டால் அந்த அளவுக்குப் பாராட்ட முடியவில்லை. அதற்கு என்ன காரணம் என்றால் உத்தியோக மண்டலத்தை விரிவாக்கிக் கொண்டே போவதுதான் அந்த நிர்வாகத்தில் குறைகளை ஏற்படுத்துகிறதோ என்று நினைக்கிறேன். இனி எந்த ஒரு காரணத்துக்கும், உத்தியோக மண்டலத்தை இன்னும் பெருக்கிக் கொண்டே போகாமல் இப்போது விரிவடைந்துள்ள அளவிலேயாகிலும் நிறுத்திக்கொண்டு கீழ்மட்டத்தில் உள்ள தொழிலாளர்களுக்கும் அதே நிலையில் உள்ள மற்றவர்களுக்கும் சர்க்கார் வேண்டிய வசதிகளைச் செய்யுமானால், சென்னை நகர பஸ்போக்குவரத்தும் லாபம் உள்ளதாக நடக்கும் என்பதே என் எண்ணமாகும். அரசினர் வழங்கியுள்ள குறிப்பேட்டில் எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். டீசல் ஆயில் விலை உயர்ந்துவிட்டது. டயர் விலை உயர்ந்துவிட்டது. விற்பனைவரி உயர்வு காரணமாக பல பொருள்களுடைய விலையும் உயர்ந்துவிட்டன என்று. ஆனால் அதே சமயத்தில் தனியார் துறையை எடுத்துக்கொண்டோமானால் இவ்வளவு விலைகள் உயர்ந்திருந்தாலும் அவர்களால் மட்டும் எப்படி லாபம் பெற முடிகிறது? இன்னும் விரிவடைந்த நிலையில் அவர்கள் எப்படி தொழில் நடத்த முடிகிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று சர்க்காருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குக் காரணம் நான் முதலில் சொன்னது போல் உத்தியோக மண்டலத்தைக் குறைத்து, அது விரிவடையச் செய்யாமல் அக்கறையோடு கவனித்தால் லாபம் பெறக்கூடும் என்று கனம் தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் விவசாய 12-20 p.m.
உற்பத்தியிலும், உணவு உற்பத்தியிலும் மிகுந்த அக்கறை காட்டப்பட்டு வந்தது. ஓரளவு விலை மலிவாக இருந்தது. ஆனால் 2-வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் அந்த நிலை மாறி உணவு உற்பத்தி செய்கிறவர்களுக்கும் அதேபோல் பொது மக்களுக்கும் தொல்லை தரக்கூடிய அவலநிலை ஏற்பட்டு இருக்கிறது. காரணம் விவசாயத் துறைக்குக் காட்டப்பட்டு வந்த அக்கறையும், ஒதுக்கப்பட்ட தொகையும் குறைக்கப்பட்டு கனரகத் தொழில்களுக்கு அதிகமான அளவுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு இருக்கிறது என்பது தான்

சர்க்கார் தந்துள்ள விவரங்களில் இருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. ஆகையால் விவசாயத் துறையைப் பொறுத்த அளவுக்கு இப்போதாவது ஒரு நிரந்தரமான திட்டத்தை வகுத்துக்கொண்டு எனக்கு முன்னால் பேசிய ராஜா சர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னபடி அதை அவ்வப்போது பரிசீலனை செய்து அது எந்த அளவுக்கு உபயோகமாக உள்ளது, இன்னும் எந்த அளவுக்கு உபயோகப் படுத்தப்பட வேண்டும் என்று ஆராய வேண்டும். அப்படிப் பரிசீலனை செய்தால் அதில் எதிர்பார்க்கும் பலன் ஓரளவாவது ஏற்படும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதிலும் நெல் உற்பத்திச் செய்யக் கூடிய நிலங்களில் எல்லாம் இப்போது கரும்பையே பெரிதும் உற்பத்தி செய்து வருகிறார்கள். கரும்பு மட்டுமல்ல. இன்னும் வேறு பல பொருள்களையும் உற்பத்தி செய்து வருகிறார்கள். இப்போது தந்துள்ள வேளாண்மைத் துறை மான்ய 1966-67 கோரிக்கையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. "இரண்டாவது திட்ட முடிவில் கரும்பு உற்பத்தி 67.50 லட்சம் டன்னாக இருந்தது 3-வது திட்ட காலத்தில் 77.50 லட்சம் டன்னாக உயர்த்த முடிவு செய்யப்பட்டது. 1966-67 முடிவில் இந்த இலக்கை அடைய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 4-வது திட்ட காலத்தில் 18.00 லட்சம் டன் கரும்பு கூடுதலாக உற்பத்திசெய்யத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இப்போது கரும்பு சாகுபடி செய்யும் நிலப் பரப்பு எவ்வளவோ அதை விட்டுவிட்டு இனிமேல் நெல் உற்பத்தி செய்யும் நிலங்களில் கரும்பு சாகுபடி செய்வதற்கு அனுமதி கேட்டால் சர்க்கார் கண்டிப்பாக இருந்து அனுமதி கொடுக்கக் கூடாது என்பதுதான் என் வேண்டுகோளாகும். இப்படியே கரும்பையும் மற்ற பொருள்களையும் உற்பத்தி செய்து கொண்டே போனால் நெல் உற்பத்தி எப்படி அதிகமாகும்? அரிசி விலை குறையும் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும். ஆகவே சர்க்கார் இதுபற்றி கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தொழில் துறையை எடுத்துக் கொண்டால் அதிகமாக தமிழகத்தில்தான் முன்னேறி இருக்கிறது என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள். அதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழில்துறை ஓரளவு விரிவு அடைந்திருக்கிறது. ஆனால் அப்படி விரிவு அடைந்த தொழில்களால் ஏழைகளுக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டு இருக்கிறதா? சர்க்காருக்கு லாபம் ஏற்பட்டு இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. அதற்குக் காரணம் என்ன என்றால் உண்மையிலேயே அப்படிப்பட்ட தொழில்கள் பலன் தருவதற்கு சர்க்காரில் மற்ற செயல் முறையும் கொள்கையும் ஆதாரவாக இல்லை. மின்சார உற்பத்தியைப் பற்றியும் நாம் ஆராய்ந்து பார்த்தால், நமது மாநிலத்தில் எவ்வளவு விரிவாக அதைப் பயன்படுத்தமுடியுமோ அந்த அளவு பயன்படுத்தப்படுகிறது என்பதை மறுக்கவில்லை. ஆனால் கல்பாக்கம் அனல் திட்டத்தை நிறைவேற்றுவதாக உறுதி கூறியிருக்கிறார்கள். காலஞ்சென்ற விஞ்ஞானமேதை டாக்டர் பாபா





அவர்களால் துவக்கிவைக்கும் வாய்ப்பைப் பெற்ற கல்பாக்கத் திட்டம் உடனடியாகச் செயல்படுத்தப்படவேண்டும். மாநில சர்க்கார் உறுதியோடு மத்திய சர்க்காரை அணுகி அதற்கான அனுமதியையும், பொருளாதாரத் துறையில் குறைபாடு இருந்தால் அதை சரிக்கட்டுவதற்கான வாய்ப்பையும் பெற வேண்டும். குறிப்பாக தொழில் அமைச்சர் அவர்கள் அதற்காகப் போராட வேண்டும். அதற்கு இந்த மன்றம் பெரும் துணையாக இருக்கும் என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்காது என்று நம்புகிறேன். துவக்க இருக்கிறோம் என்று ஆண்டுக்கணக்கில் சொல்லிக்கொண்டிருப்பதைவிட அதை நடை முறையில் மேற்கொண்டால்தான் நம்பிக்கையும் பலனும் உண்டாகும். சேலம் இரும்பாலையைப் பொருத்தவரையில் உள்ளபடியே வேதனைப்படவேண்டியிருக்கிறது. சமீபத்தில் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் ஜப்பான் நாட்டுக்குச் சென்று அத்திட்டத்தை உருவாக்குவதற்கான முடிவோடு வந்ததாக அவர்கள் வந்ததும் தெரிவித்தார்கள். பத்திரிகையாளர்களிடமும் தெரிவித்தார்கள். அண்மையில் டெல்லிக்குச் சென்றிருந்தபொழுது அங்குள்ளவர்களுடன் பேசி அதற்கான சூழ்நிலையை உருவாக்கி வருவதாகச் சென்றார்கள். சென்றபோது இருந்த உறுதி சென்று திரும்பியதும் அவர் தந்த செய்தியிலிருந்து தெரியவில்லை. டெல்லி சர்க்கார் கைவிரித்துவிட்டார்களோ என்ற ஐயம்தான் கனம் அமைச்சரின் பதிலிலிருந்து தெரிகிறது. நாமே நம்மால் முடிந்த வரையில் அதைச் செய்யலாம் என்ற முறையில் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தொழில் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்களுக்கு கெட்ட எண்ணம் இருப்பதாக நான் சொல்லமாட்டேன். சேலம் இரும்பாலையை செயல்படுத்தவேண்டுமென்ற அக்கரை அவருக்கு இருக்கிறது. ஆனால் அதற்குத் தடையாக மத்திய சர்க்கார் இருக்கிறது. சேலம் இரும்புத் தொழிற்சாலை பற்றி நீண்ட காலமாக சொல்லப்பட்டு வந்தும்கூட அதை முக்கிய பிரச்னையாக மத்திய சர்க்கார் ஏற்று அதற்கு செவி சாய்க்கவில்லை என்றால் அதைவிட ஏமாற்றமும் கேலியும் நமது மாநிலத்துக்கு வேறென்னவேண்டும்? அமைச்சர் அவர்கள் அண்மையில் அதைப் பற்றித் தெரிவித்துள்ள கருத்தும் வெளிநாட்டுக்குப் போய்வந்ததும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக்காட்டியது போல ஆந்திர மாநில முதலமைச்சரால் கண்டிக்கும் அளவுக்குக்கூட வந்துவிட்டது என்றால் இதைவிட தமிழ்நாட்டிற்கும் மாநில அரசிற்கும் கேவலமானது வேறில்லை. ஆந்திர முதலமைச்சரின் பேச்சை பத்திரிகையில் பார்த்தபோது வேதனைப்பட்டேன். ஆந்திர மாநில முதலமைச்சர் என்றால் அவர் அந்த மாநிலத்திற்கான அதிகாரங்களைக் கேட்டுப் பெறட்டும். அதற்கு அவரால் முடியவில்லை என்றால் அவர் விரும்பினால் நாம் வேண்டுமானாலும் துணையிருக்கலாம். ஆனால் இங்குள்ள அமைச்சர்கள் மீது முறைதவறி குற்றஞ்சாட்டி பேசுவதும் மத்திய அரசாங்கம் நமக்கு அதிக சலுகைகளை அளித்திருப்பதைப்போல எண்ணிப் பேசுவதும் மிகத்தவறானது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம் மாநில சர்க்கார் நமக்கு வேண்டியவற்றைப் பெறுவதற்கு உறுதியோடு இருக்கவேண்டும்.

[திரு. என். வி. நடராசன்] 26th March 1966

சேலம் இரும்பாலையை நாமே ஆரம்பித்து நடத்தலாம் என்ற முடிவுக்கு வருவதைவிட, அந்தத்திட்டத்தை அந்த அளவுக்கு குறைப்பது கூடாது. எனவே மத்திய அரசின் உதவியைக் கொண்டு அதை ஆரம்பிக்கவேண்டுமே தவிர நம்மால் அதைச் செய்யலாம் என்று விட்டுவிடக்கூடாது. அப்படி நாமே செய்திருக்கலாம் என்றால் எப்போதோ இதை ஆரம்பித்து முடித்திருக்கலாம். எனவே இதுவரையில் போராடி கடைசியாக மத்திய அரசு அனுமதி தரவில்லை என்றால் தமிழ் மாநிலத்தை அவர்கள் புறக்கணிக்கிறார்கள் என்றும் குற்றம் சாட்ட விரும்புகிறேன். நேற்றைய தினம் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள். வியாபாரிகளாக இருக்கிறவர்கள் விலையை ஏற்றி விற்கிறார்கள் என்றும், அதைத் தாங்களே பார்த்ததாகவும் கூறினார்கள். உற்பத்திப் பொருள்களைப் பதுக்கிவைத்துவிட்டு விலையை ஏற்றியவுடனே வெளியே கொண்டுவருகிறார்கள் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் பகிரங்கமாக இந்த மன்றத்தில் குற்றம் சொல்லும் அளவுக்கு வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் நடந்துகொள்கிறார்கள், மக்களுக்குக் கொடுமை செய்துவருகிறார்கள் என்றால் அந்த ஊழலை உடனடியாகத் தடுக்க ஏன் சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்கிறேன். அப்படி நடவடிக்கை எடுத்திருந்தால் அகவிலை இப்படி உயர்ந்துகொண்டே போகாது என்பது என்னுடைய அபிப்பிராயம். கட்டுப்பாடு வேண்டும். அதே சமயம் அதை நிறைவேற்றுவதற்கு கண்டிப்பான முறையில் சர்க்காருக்கும் உணர்வு வேண்டும். கட்டுப்பாடு உத்திரவைப் போட்டுவிட்டு அதைச் சரியாக நிறைவேற்றாவிட்டால் அதற்கு மாற்றுக் கொள்கையுடையவர்கள் சர்க்காரின் குறுக்கீடு அறவே வேண்டாமென்று சொல்வதற்கும் துணையாகப் போகிறது. எந்தக் குறிக்கோளுக்காக கட்டுப்பாட்டைக் கொண்டுவருகிறோமோ அதை நிறைவேற்றும் அளவுக்கு நடைமுறையில் சர்க்கார் தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக சர்க்கார் மேற்கொண்டுள்ள தொழில்கள் எல்லாம் நஷ்டக் கணக்கிலே நடைபெற்றுக்கொண்டு வருவது மிகவும் வருத்
12-30 p.m. தமாக இருக்கிறது. நான் கருதுகிறேன், தொழில் அமைச்சர் தவறாக கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். இந்த மாநிலத்தில் அல்லது பொதுவாக எல்லாத் தொழில்களையும் தேசியமயமாக்கவேண்டுமென்ற கொள்கை நிறைவேறக்கூடாது என்பதற்காக பெரும் தொழில் அதிபர்களிடம் சர்க்கார் கூடிப் பேசிக்கொண்டு சர்க்கார் துறையில் தொழில்கள் நடந்தால் நட்டமாகத்தான் முடியும் என்று சொல்லி, தொழில்களை தேசியமயமாக்குவதை கைவிட ரகசிய திட்டமாக இருக்குமோ என்று கருதுகிறேன். அந்த ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் சர்க்கார் துறையில் லாபம் கிடைக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் முறையில் செயல்படவேண்டும். அப்போதுதான் பெரும் தொழில்கள் தேசியமயமாக முடியும். மக்களுக்கும் அதில் நம்பிக்கை ஏற்படும். அதன் மூலமாக வரிச் சுமை குறையும். விலைவாசியும் குறையும்



26th March 1966] [திரு. என். வி. நடராசன்]

ஜார்ஜ்டவுன் பகுதியிலுள்ள வால்டாக்ஸ் ரோடில் காலை ஏழு மணியிலிருந்து பத்து மணிவரையில் அமைச்சர் அவர்கள் சிறிது நேரம் தங்கிப்பார்க்க வேண்டும். பேசின் பிரிட்ஜ் ஸ்டேஷன் அடுத்து மூன்று குறுகிய பாலங்கள் இருக்கின்றன. அங்கே ஜன நெரிசல் இருக்கிறது என்பதால் அந்த பாலத்தைக் கடக்க ஒரு வழிப் போக்கு வரத்து வைத்திருக்கிறார்கள். தங்கசாலையிலிருந்து புறப்படும் பஸ் வியாசர்பாடிக்குப் போகவேண்டுமென்றால் பேசின்பிரிட்ஜ் ஜங்ஷனுக்கு வந்தவுடன் ½ பர்லாங் தொலைவிலுள்ள நெல்லூர் ஹைரோடு ஆரம்பமாகிறது. இப்போது ஊர் சுற்றுவதுபோல வால்டாக்ஸ் ரோடு, யானை கவுனிக்குப் போய் சால்ட்குவாட்டர்ஸ் வழியைச் சுற்றி வியாசர்பாடி ரோடுக்கு வரவேண்டும். லாரிகளும் அந்தப் பக்கம் போக வேண்டும். பஸ்கள் போகவேண்டும். பிரைவேட் கார்கள் போக வேண்டும். தள்ளுவண்டிகள் போகவேண்டும். சைக்கிள், டாக்சி, பள்ளிகளுக்கு செல்லும் பிள்ளைகள், வயதானவர்கள் வால்டாக்ஸ் ரோடில்தான் போகவேண்டும். இப்படிப்பட்ட பெரும்போக்குவரத்து நெருக்கடியை அந்தப் பகுதிமக்கள் எத்தனை நாளைக்கு அனுபவிக்கவேண்டுமோ தெரியவில்லை. நான் பலமுறை அந்தப் பாலங்களை அகலப்படுத்தி விஸ்தரிக்கவேண்டுமென்று வலியுறுத்திப் பேசியிருக்கிறேன் சர்க்கார் கவலை செலுத்துவதாக தெரியவில்லை. அதற்காகப் போராட்டம் நடத்தி அதில் பத்து பேர் செத்து, மோதல்கள் ஏற்படும்வரை சர்க்கார் காத்திருக்கக்கூடாது. மூட்டிக்கொண்ட பிறகுதான் குனிவோம் என்ற நிலைக்கு சர்க்கார் ஆளாகக்கூடாது. சர்க்கார் கட்சித் தலைவரவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அங்குள்ள போலீஸ் நிலையத்திற்கு எதிராக வலது—இடது பக்கம் போவதற்கு தடுப்புச் சுவர் வைக்கப்பட்டிருக்கிறது. அதிக நெருக்கடியின் காரணமாக அந்தத் தடுப்பு சுவர் இடிந்துபோய்விட்டது. அப்படி இடிந்த சுவர் அப்படியே இருக்கிறது. அது அங்குள்ள நெரிசலைக் காட்டும் சாட்சியாக இருக்கிறது. ஏழைகள் வசிக்கும் ஜார்ஜ்டவுன் பகுதிகளும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் நெருக்கடி வாய்ந்ததாக இருக்கிறது. அதையும் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். லாரிகள் எல்லாம் அந்தப் பக்கம் போகின்றன. ராஜாசர் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப்போல லாரிகளை வேறு ரோடுகள் வழியாக அனுப்பலாம். கோத்தவால் சாவடிக்குப் போகும் லாரிகளை வேறு அகலமான பாதைகளில் அனுப்ப வகை செய்யவேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

நமது மாநிலத்தில் நிறைவேற்றப்பெறும் இந்தத் திட்டங்களின்மீது நான் விடுவித்துள்ள எண்ணத்தை அக்கறையோடு சர்க்கார் பரிசீலனை செய்தால் கூடுமானவரையில் இப்போதுள்ள குறைகளை நிவர்த்திக்க அனுகூலமாக இருக்கும். என் வேண்டுகோள்களுக்குப் பதில் சொல்வது என்ற முறையில் மட்டும் இல்லாமல் நிலைமையை நேரில் கண்டு சீர்தூக்கிப் பார்த்து நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக மக்களை சர்க்கார் சொல்லும் சொல்லுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டது. [illegible] ஏற்படும் நிலைமை இருப்பதால் நாட்டில் கலவரங்கள் ஏற்பட்டு இந்தத் திட்டங்கள் தடைப்படுகின்றன.

[திரு. என். வி. நடராசன்] [26th March 1966

எனவே முல்லை பிரச்சினைகளைப்பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்து பேசி நல்ல முடிவுக்கு வந்து மேற்கொண்டுள்ள நான்காவது திட்டத்தின் மூலமாவது ஓரளவு நன்மைகள் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படும் வகையில் செயல்படவேண்டும். இருக்க இடம், உண்ண உணவு, உடுத்த உடை, செய்வதற்கு வேலை என்ற அடிப்படை உடைமைகள் வழங்கப்பட வேண்டும். சில தினங்களுக்கு முன் மேட்டூர் டாமுக்கு ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகப் போயிருந்தேன். அங்கே ஒரு ஊர்வலம் நடத்துவதற்கு தொழிலாளிகள் தயாராக இருந்தார்கள். வீடு கட்டும் திட்டத்தில் அக்கிரமம் நடந்திருப்பதாகவும் அதற்காக தொழிலாளர்கள் அதைக் கண்டித்து ஊர்வலம் நடத்தவும் இருந்தார்கள். அதைத் தெரிந்து நான் அதில் தலையிட்டுத் தடுத்து முதலில் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுபோங்கள், அவர்கள் செய்யவில்லை என்றால் பிறகு இதையெல்லாம் செய்யலாம் என்று சொன்னேன். அதில் திராவிட முன்னேற்றக் கழக தோழர்கள் சிலர் கலந்துகொண்டிருந்தார்கள் என்பதினால் அதில் தலையிட்டுக் கூறினேன். அதை நான் கனம் முதலமைச்சர் அவர்களிடம் நேரில் எடுத்துச் சொன்னேன். அவர்கள் அதைக் குறித்து எழுதித் தருமாறும், அதைக் கவனிப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அங்கே வேலை செய்யும் பட்டாளி மக்கள் வீடு கட்டிக்கொள்ள முடியாதபடி இன்று அங்கே நிலங்களின் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. முன்பு ஒரு செண்ட் நிலம் 30 ரூபாய்க்கு விற்று வந்த இடத்தில் இப்போது ஒரு செண்ட் 200 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அங்குள்ள பாட்டாளி மக்களிடையே பெரிய அதிருப்தி உருவாகி வருகிறது. சர்க்கார் இவை போன்ற விஷயங்களையெல்லாம் கவனித்து, திட்டங்களை சிறப்புடன் நல்ல முறையில் நிறைவேற்ற முன்வரவில்லையென்றால் திட்டங்களால் யாதொரு பலனும் ஏற்படாமல் போய் விடக்கூடும் என்று சுட்டிக்காட்டி என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார் : கனம் தலைவர் அவர்களே, முதன் முதலில், சென்ற மூன்று ஐந்தாண்டு திட்டங்களை [illegible] நாம் எல்லோரும் எதிர்பார்த்ததைவிட நல்ல முறையில் நிறைவேற்றியதற்காக அரசாங்கத்திற்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பது முக்கிய நோக்கமாக இருக்கிறது. இன்று நாட்டில் உள்ள பெரும் பிரச்சினையாகிய உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்தத் திட்டத்தில் விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. [illegible] வருத்தப்படத்தக்க விஷயம் இந்த ராஜ்யத்தில் பல பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வழிவகைகள் இல்லாதது. அண்டை ராஜ்யங்களின் ஒத்துழைப்புடன் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். நாம் விவசாய உற்பத்தியை இன்னும் அதிகமாகப் பெருக்க வேண்டுமானால் அதற்கும் பேச்சுவார்த்தைகள் நடத்தி அண்டை ராஜ்யத்திலுள்ள தண்ணீரை நம் ராஜ்யத்



26th March 1966]

[திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்]

திற்குக் கொண்டு வந்தே தீர வேண்டும் என்னும் நிலையில் நாம் இருக்கிறோம். இந்த நிலையில் இல்லாமல் இங்கே இருப்பதைக் கொண்டு நம் விவசாய உற்பத்தியை எப்படிப் பெருக்குவது என்று பார்த்தால், பல பகுதிகளில் ஏராளமான கிணறுகளை வெட்ட வேண்டும் என்பது தெரியும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வருஷத்திற்கு 5,000 கிணறுகள் வீதம் மொத்தம் 25,000 கிணறுகள் வெட்ட உத்தேசித்திருப்பதாகக் கூறப்படுகிறது. விவசாயத்திற்கு நிறைய வசதிகள் செய்ய வேண்டும். இருக்கும் சாகுபடி நிலங்களில் அதிகமான விளைச்சல் வர வழிவகைகள் காண வேண்டும். நமது பெரியவர்கள் 'அகலமாக உழுவதைக் காட்டிலும் ஆழமாக உழுங்கள்' என்று கூறுவார்கள். கிழக்கே மிகச் சிறந்த முறையில் முன்னேறியிருக்கும் ஜப்பானில் அந்த முறையில் விவசாயம் அபிவிருத்தி செய்யப்படுகிறது. அங்கே நிலம் நபருக்கு ஐந்து ஏக்கருக்கு மேல் கிடையாது. ஜப்பானியர்கள் அந்த ஐந்து ஏக்கரில் மிகச் சிறந்த முறையில் விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்கள் நல்ல தரமுள்ள விதைகளையும் ஏராளமான செயற்கை உரங்களையும் உபயோகிப்பதுடன் விஞ்ஞான முறைகளையும் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் ஆறு மாத காலத்தில் காயாகிப் பழமாகக்கூடிய சில பழங்களை விஞ்ஞான முறையில் இஞ்ஜெக்ஷன் மூலம் மூன்று மாத காலத்தில் பழுக்கச் செய்து மார்க்கெட்டுக்குக் கொண்டுவருகிறார்கள். நமது நாட்டில் உணவுப் பிரச்னை தீர, மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் மாற வேண்டும் என்று கருதுகிறோம். அவர்களுடைய உணவுப் பழக்கங்கள் நல்ல முறையில் மாறுவதற்கு காய்கறிகள் ஏராளமாக விளைய வேண்டியது அவசியம்; பழ வகைகளும் ஏராளமாக உற்பத்தியாக வேண்டியது அவசியம்; மீன் வகைகளும் ஏராளமாகக் கிடைக்க வேண்டியது அவசியம். இவை ஏராளமாக உற்பத்தியாவதோடு மட்டுமன்றி இவை எல்லோருக்கும் குறைந்த விலையில் கிடைக்கவும் வேண்டும். அதற்கு வழிவகை செய்ய வேண்டும். மேலும், பலபகுதிகளில், மக்களின் வாழ்க்கைத் தரம் உயர உயர அவர்களுடைய உணவுப் பழக்கவழக்கங்கள் மாறிவருவதைப் பார்த்துவருகிறோம்.

தொழில் துறையில் சமீபத்தில் நமது ராஜ்யம் அகில இந்திய ரீதியில் வேறெந்த ராஜ்யமும் அடையாத அளவிற்கு வேகமான வளர்ச்சியை அடைந்திருக்கிறது என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்கிறார்கள். மூன்று வருஷங்களுக்கு முன்பு பிரசுரிக்கப்பட்ட கணக்குகளில் சில புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. இந்தியாவில் தமிழ் நாட்டின் பரப்பளவு 4 சதவிகிதம்தான். ஆனால் ஜனத்தொகை 7.7 சதவிகிதம் தொழில் துறையில் உற்பத்தி 9.1 சதவிகிதம். தொழில் துறையில் நாம் எவ்வளவு வேகமாக முன்னேறியிருக்கிறோம் என்பதைத் தெளிவாகக் காட்டக்கூடிய ஒரு கண்ணாடியாக இது அமைந்திருக்கிறது. நாம் தொழில் துறையில் எவ்வளவு வேகமாக வளர்ந்திருக்கிறோம் என்பதற்கு இன்னொரு புள்ளி விவரம் கூடக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு. 12-05 p.m.

[26th March 1966

[திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்]

Precentage share of Madras State in national production in 1964 :—

| | PER CENT. |
|---|---|
| Tanned leather .. .. .. .. | 48 |
| Power driven pumps .. .. .. | 45 |
| Plastic Moulding .. .. .. .. | 38 |
| Caustic Soda .. .. .. .. | 30 |
| Motor Vehicles .. .. .. .. | 24 |
| Motor cycles and bicycles .. .. .. | 24 |
| Carbondioxide gas .. .. .. .. | 22 |
| Superphosphate .. .. .. .. | 21 |
| Power transformers .. .. .. | 20 |
| Sanitarywares .. .. .. .. | 19 |
| Stonewares and pipes .. .. .. | 19 |
| Cottonwares .. .. .. .. .. | 17 |
| Cement .. .. .. .. .. | 14 |

இது உண்மையிலேயே பெருமைக்குரிய விஷயம். இருந்தாலும் என்போன்றவர்கள் ஓரளவு குறைப்படும் நிலையில் இருக்கிறோம். நான் அரசாங்கத்தைக் குறைகூறவில்லை. இன்று தமிழ்நாட்டில் மருந்து வகைகளை ஏராளமாகத் தயாரிக்கக்கூடிய தொழில்கள் வளர்ச்சி அடையவில்லை. இப்போது மருந்து வகைகள் மஹாராஷ்டிரம், வங்காளம் ஆகிய இடங்களில் தயாரிக்கப்பட்டு அங்கிருந்து தான் நம் ராஜ்யத்திற்கு வருகின்றன. அவைகளை இங்கேயே செய்ய முடியும். இந்தத் தொழிலில் நான்காவது திட்டத்தில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் என்று கனம் தொழில் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு முன் பேசிய ஸ்ரீ நடராஜன் தொழிற்சாலைகள் பற்றிப் பேசினார். அரசாங்கத் தொழில் துறையில் ஏற்படும் நஷ்டத்திற்குக் காரணம் ஒருவேளை தனியார் தொழில் துறையில் உள்ளவர்கள் செய்யும் சதித் திட்டமாக இருக்குமோ என்ற அச்சத்தை அவர் தெரிவித்தார். தனியார் தொழில் துறையில் உள்ள நாங்கள் உண்மையில் போட்டியை விரும்புபவர்கள் என்பதை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். நல்ல போட்டி இருந்தால்தான் தொழில் வியாபாரம் வளர்ச்சி அடையும். மேலும், நம் மாநிலத்தில் கூட்டுறவு முறையில் 12 நூற்பு ஆலைகளை அமைக்க அரசாங்கம் முன்வந்தபோது அதை நாங்கள் மனதார வரவேற்று அரசாங்கத்திற்கு யோசனைகள் கூறி அதனோடு ஒத்துழைத்திருக்கிறோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரில் பஸ் ஓட்டும் தொழிலில் அரசாங்கத்திற்கு லாபம் வரவில்லை என்றும் தனியார் நடத்தும் பஸ் தொழிலில் லாபம் வருகிறது என்றும் கருதப்படுகிறது. நானும் கோவையில், கோவை நகரத்தில் மாத்திரம் பஸ் தொழில் நடத்துகிறேன். எனக்கு லாபம் வரவில்லை, நஷ்டம் தான் வருகிறது. இந்தத் தொழிலை அங்கே அரசாங்கம் எப்போது எடுத்துக் கொள்ளுமோ என்று நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம்.



26th March 1966]

[திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்]

பஸ்களை எல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பலர் பேசுவதை நான் கேட்டு இருக்கிறேன். கோவை நகரத்தைப் பொறுத்தவரை எடுக்கக்கூட வேண்டாம். கொடுங்கள் என்றாலே போதும். எந்த நிமிஷத்திலும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அங்கு இருக்கும் தொழில் நிலைமையைப் பார்த்துத் தான் அப்படிச் சொல்லுகிறேன். வேறு ஒன்றும் இல்லை. இன்னும் ஒன்று கூட இந்த மன்றத்தில் குறிப்பாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 12–50 p.m.

அநேக எஞ்சினியரிங் தொழில்கள் அவர்கள் எந்த அளவுக்கு வேலை செய்ய முடியுமோ அந்த அளவுக்கு வேலை செய்ய வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றன. "working under capacity" மூலப் பொருள்கள் இல்லாத காரணத்தால் அல்லது வேறு பல காரணத்தால் அவைகள் எந்த அளவுக்கு முழுக்க வேலை செய்யமுடியுமோ அந்த அளவுக்கு வேலை செய்ய முடியாத நிலைமையில் இருந்து வருகின்றன. அதை அரசாங்கம் பரிசீலித்து நமது ராஜ்யத்தில் இருக்கிற எந்தத் தொழிலாக இருந்தாலும் சரி, அந்தத் தொழிலில் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்தால் தான் அது சிக்கனமாக இருக்கும். சாதாரணமாக ஒரு மில்லை எடுத்துக் கொண்டால் 25,000 கதிர்கள் ஓடும். 6,000, 8,000, 10,000 கதிர்களை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு மில் ஓடினால் அது உண்மையிலே நஷ்டத்திற்குத்தான் ஓடும். அந்த வகையில் தொழில் துறையில் இன்னும் கொஞ்சம் கவனத்தைச் செலுத்தி தொழில்களிலும் முழு அளவுக்கு வேலை செய்வதற்கு வழி வகைகள் செய்ய வேண்டும் என்றுதான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதே சந்தர்ப்பத்தில் அடுத்த 4-வது ஐந்தாண்டு திட்டத்தில், சென்ற 3 ஐந்தாண்டு திட்டங்களில் எவ்வளவு வேகமாக முன்னேறி சென்றோமோ அந்த வேகத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்து, அகில இந்திய ரீதியில் 3-வது ஸ்தானத்தை வகிக்கிற நாம் ஏன் முதல் ஸ்தானத்திற்குச் செல்லக் கூடாது என்று யோசனை செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள் எல்லோருமே திறமை வாய்ந்தவர்கள். என்னைப் பொறுத்தவரையில் எந்த மெஷினையாவது பார்க்கிறபோது அதை வேறு நாட்டில் இருந்து வாங்கலாம் என்று எண்ணமே வருவது இல்லை. அதற்கு மாறாக ஏன் இதை நாமே செய்து கொள்ளக் கூடாது என்ற யோசனைதான் வருகிறது. அந்த அளவுக்கு நாம் எஞ்சினீயரிங் துறையில் வந்து இருக்கிறோம். இதைச் சரியான முறையில் பயன்படுத்தி இன்னும் வேகமாக வளர்ச்சிக்கு வகை செய்ய வேண்டும் என்பது தான் என் வேண்டுகோள்.

அடுத்து நமக்கு இருக்கிற பெரிய பிரச்னை எதிர்க் கட்சித் தலைவர் கனம் ஏ. எல். முதலியார் அவர்கள் வெகு அழகாக எடுத்துச் சொன்னது போல் குடி தண்ணீர் பிரச்னையாகும். குடி நீர் பிரச்சனை சென்னை நகருக்கு மட்டுமல்ல. பொதுவாக எல்லா துறைகளிலும் வளர்ந்து வருகிற நாம் இந்த ராஜ்யத்தில் இருக்கிற ஒவ்வொரு தலை நகரத்தையும் ஒரு ஆக "Ideal city"

[26th March 1966

[திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்]

லட்சிய நகரமாக வைத்திருக்க வேண்டும். பாதுகாக்கப்பட்ட குடிநீர், சாக்கடை வசதி, இன்னும் சுகாதார வசதி இவைகள் எல்லாம் இருந்தால் தான் ராஜ்யம் வளர வாய்ப்பு ஏற்படும். சிறு நகரத்தில் உள்ளவர்கள் தலை நகரத்தைப் போய் பார்த்தால் அந்த முறையிலேயே தங்கள் ஊரை வைத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். பொதுவாக பொதுச் சுகாதாரம் நல்ல முறையில் இருக்க வேண்டும். அதைத் தான் இன்னும் நாம் எல்லோரும் விரும்புகிறோம். எல்லோரும் நகரத்திற்கு வர வேண்டும் என்று விரும்புவதற்குக் காரணம் கிராமப்புரத்தில் அவர்கள் எதிர்பார்க்கிற அளவுக்கு நாகரீகமாக சௌகர்யம் இல்லாத காரணத்தால் தான் என்கிறார்கள். நகரப் பகுதியில் இருக்கிற தொழில் வளர்ச்சியும் ஒரு காரணம். அதை மாற்ற வேண்டும் என்றால் சுகாதார வசதிகளில் நகரத்திற்கும் கிராமங்களுக்கும் வித்தியாசமே இருக்கக் கூடாது. கிராமம் என்றால் 500 வீடு இருக்கலாம், நகரம் என்றால், 5,000, 10,000 வீடுகள் இருக்கலாம். ஆனால் கிடைக்கிற வசதிகளில் வித்தியாசம் எதுவும் இல்லாது இருந்தால் தான் நாட்டில் நாம் ஒரு நல்ல வளர்ச்சியைக் காண முடியும்.

அதே மாதிரி தான் இந்த ராஜ்யத்தைப் பொறுத்த அளவில் சென்ற சில பல வருஷங்களாகவே சொல்லி வந்திருக்கிறேன். அப்படி இருந்தும்கூட ராஜ்யத்தில் இருக்கக் கூடிய இளைஞர்களுக்கு நல்ல முறையில் விளையாட இடங்கள் கிடையாது. நமது அண்டை ராஜ்யமான கேரளாவில் கூட ஸ்போர்ட்ஸ் ஸ்டேடியம்கள், 7, 8 இருப்பதாகக் கேள்வி. நமது ராஜ்யத்தைப் பார்த்தால் சென்னையில் மாத்திரம் தான் இருக்கிறது. வேறு இடங்களில் கிடையாது. இளைஞர்களுடைய வளம் தான் இந்த நாட்டினுடைய சொத்து. அவர்கள் நல்ல முறையில் இருக்க வேண்டும் என்றால் நல்ல முறையில் விளையாட இடங்களை அமைத்துக் கொடுத்து அவர்கள் தேக நிலையை நல்ல முறையில் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆக, ஒவ்வொரு ஜில்லா தலைநகரத்திலும் ஒரு ஸ்டேடியம் இருக்கவேண்டும். பிரமாதமாக ஒன்றும் செலவு ஆகிவிடாது. ஒரு 10 லட்சம், 15 லட்சம் ரூபாய் இருந்தால் ஒரு அழகான ஸ்டேடியம் அமைக்க முடியும். அவ்வளவையும் அரசாங்கம் கூட கொடுக்க வேண்டியதில்லை. அந்தப் பகுதியில் இருக்கிற நகர சபையும் ஓரளவுக்கு செலவைப் பகிர்ந்துகொள்ள முன் வர வேண்டும்.

**திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர் :** கிரிக்கட் ஆடும்போது 10 நாள் பிள்ளைகள் ஒன்றுமே படிப்பதில்லை.

**திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார் :** இப்போது மாணவர்கள் அப்படி இருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. நானே ஒரு ஸ்போர்ட்ஸ்மென். ஸ்போர்ட்ஸ்மென் என்றால் பள்ளிக் கூடத்தில் மார்க் குறைவாக வாங்குவார்கள் என்று சொல்லுவார்கள். ஆனால் நான் அதற்கு விதி விலக்காக இருந்திருக்கிறேன். எனவே அதன் காரணமாக படிப்பு ஒன்றும் குறைந்து விடாது. ஆகவே அது போன்ற விளையாடும் இடங்களை நிறைய அமைத்துத் தர வேண்டும்.



26th March 1966]

[திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்]

இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக இன்றையதினம் நமக்கு இருக்கிற பெரும் பிரச்னை நமது ஜனத்தொகை. சிலவற்றை நான் நினைப்பது கூட உண்டு. இந்த திட்டங்கள் எல்லாவற்றையும் காட்டிலும் நமக்கு மிக முக்கியமாக வேண்டியது இந்த குடும்பக் கட்டுப்பாடு திட்டம் தான். இதைப் பெரிய திட்டமாகப் போட வேண்டும் என்பது என்போன்றோர் கருத்து. இன்னும் சில சந்தர்ப்பங்களில் யோசனை செய்து பார்த்தாலும் ஜனநாயக நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் யார் இருந்தாலும் அவர்கள் இஷ்டம் போல் ஒன்றும் செய்ய முடியாது. மக்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் எதையும் செய்ய வேண்டும் என்கிற நிலை இருப்பதன் காரணமாக ஜனநாயகத்தையே புறக்கணித்துவிட்டு ஒரு முரட்டு சட்டம் போட்டாலும் கூட சரி என்று சொல்லுகிற அளவுக்கு இந்தப் பிரச்னை இருக்கிறது என்று கருதுகிறேன். நண்பர் நடராஜன் அவர்கள் பேசும் போது சொன்னார்கள் தொழில் வேகமாக வளர்ந்திருக்கிறது. ஆனால் மக்கள் மத்தியிலே அந்த வளர்ச்சியைக் காண முடியவில்லை என்பதாக. இன்னும் வேகமாக திட்டங்களைப் போட்டு செயல்படுத்தும் நிலையில் இருந்தாலும் கூட இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு கண்டேயாக வேண்டும். அது இல்லை என்றால் வேறு திட்டங்கள் எல்லாம் எதிர்பார்க்கிற பலனைத்தர முடியுமா என்பதையும் யோசனை செய்து பார்க்கவேண்டும். முன்னேறிய நாடுகள் என்று சொல்லக் கூடிய அநேக நாடுகளில் பார்க்கிறோம். ஒரு இளைஞரிடம் நான் பேசிக் கொண்டிருந்தேன். நம் பரம்பரை வழக்கப்படி எங்காவது ஒரு வீட்டுக்குப் போனால் உங்களுக்கு எவ்வளவு குழந்தைகள் என்று கேட்பது நம் வழக்கம். அந்த இளைஞரைக் கண்டு நான் இந்தக் கேள்வியைக் கேட்டதும் அவர் சொன்னார். எங்கள் நாட்டிலே விலைவாசி ஏராளமாக ஏறிவிட்டது. ஆகவே "I cannot afford to have a child"; வருகிற வருமானம் எங்கள் இருவருக்குமே சரியாக போகிறது என்று சொன்னார். குழந்தையே வேண்டாம் என்பதற்காகச் சொல்லவில்லை. அவர்களுக்கு அந்த அளவு தெரிந்திருப்பதால் தான் ஓரளவுக்கு அவர்கள் சமுதாயம் நல்ல முறையில் இருக்கிறது.

மேற்கத்திய நாடுகளில் வாழ்க்கைத் தரம் உயர்ந்த நிலையில் உள்ள நாடு என்னும் சுவீடன் நாட்டை பார்த்தால் அங்கே ஒரு குடும்பத்தில் சராசரி குழந்தை. 7 என்று கூறுகிறார்கள். முக்கால் குழந்தை கூட கிடையாது. அந்த நாடுதான் இன்றையதினம் ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள எல்லா நாடுகளைவிட அமெரிக்காவையும் விட வாழ்க்கைத்தரத்தில் உயர்ந்தநிலையில் விளங்கிவருகிறது. குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி பேசும்போது இதைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. ஜனத்தொகைப் பெருக்கத்தைத் தடுப்பதற்கு நாம் சரியான வழிவகைகளைச் செய்யவில்லை என்றால் எவ்வளவு திட்டம் போட்டாலும் உடனடியாக நிவர்த்தி அதன் மூலம் கிடைக்காது என்று என்னைப்போன்றவர்கள் நினைக்கிறோம்.

[26th March 1966

**திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்:** இப்போதே விவசாயத்திற்கு ஆள் கிடைக்கவில்லை என்று சங்கடப்படுகிறோம். இது மாதிரி நான்கு, மூன்று என்று பெற்றுக்கொள்ளாதே இரண்டு பெற்றுக்கொண்டால் போதும் என்று சொல்லிக்கொண்டிருந்தால் அங்கே யார் வந்து வேலை செய்வது? விவசாயத்தை யார் பார்ப்பது? இதையெல்லாம் பார்த்தால் முன்னும் பின்னும் உதைப்பதுபோல இருக்கிறது திட்டங்கள் எல்லாம். இப்படியே நான்கு தலைமுறையில் குறைந்துகொண்டே போனால் எத்தனை கோடி தமிழ்நாட்டில் இருக்கும்? இப்படியே கொஞ்ச நாள் விட்டு விட்டால் ஆண், பெண் சந்ததி அபிவிருத்தி குறைந்த போகிறது. இரண்டு குழந்தைகள் பெற்ற குடும்பத்தில் அடுத்த தலைமுறையில் ஒன்றுதான் பிறக்கிறது. சந்ததி வரவரக் குறைந்துகொண்டு வருகிறது. இதையெல்லாம் கொஞ்சம் பார்த்து சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்:** மதிப்பிற்குரிய கனம் தங்கவேல் முதலியார் அவர்கள் குடும்பக்கட்டுப்பாடு வந்தால் விவசாயத்திற்கு ஆள் கிடைக்காது என்று சொல்கிறார்கள். அதே சமயத்தில், ஏராளமான பேர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்றும் பேசுகிறோம். நமது நாட்டிலே ஆள் குறைப்பு வந்துவிடும் என்ற கவலை நமக்குக் கிடையாது. ஏராளமான மக்கள் வேலை வாய்ப்பில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். சமீபத்தில் ஜெர்மன் போயிருந்த போது அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். எங்கள் நாட்டில் 5 லட்சம் பேர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்றார்கள். வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதற்கு அவர்கள் சொல்லும் அர்த்தம் என்னவென்றால் ஐந்து லட்சம் பேருக்கும் வேலை கொடுக்கமுடியும், இருந்தாலும் வேலைக்கு அமர்த்தாமல் வைத்துக்கொண்டிருக்கிறோம் என்கிறார்கள். அந்த நிலை வரும்போது உண்மையில் சந்தோஷப்படவேண்டும். அந்த நிலைமை நமது நாட்டில் சமீபத்தில் வருமென்ற நம்பிக்கை இல்லை.

அடுத்த நான்காவது திட்டத்தில் கோவையில் ஒரு வைத்தியக் கல்லூரி வருவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. வரவேற்கிறேன். இப்போது நகரத்தில் இருக்கிற ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியையோ அல்லது அங்கிருக்கிற கட்டிடங்களையோ வைத்து நடத்தலாம் என்று அரசாங்கம் எண்ணக்கூடாது. தனியாக 200 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து ஆயிரம் படுக்கைகள் கொண்ட ஒரு ஆஸ்பத்திரி கட்டி பின்னால் அது யுனிவர்சிட்டி காம்பஸ் ஆகும் வழிவகையுடன் ஆரம்பிக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். கடைசியாக ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடிக்கிறேன்.

**மிஸ்டர் சேர்மன்:** அதுவும் ஒரே ஒரு நிமிஷத்தில்.

**திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்:** நமது தொழில் அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். சமீபத்தில் வந்த பட்ஜெட்டிலே மத்திய அரசாங்கம் இரண்டு சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாக வரி போட்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் வரி விதித்தால்



[திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்]

26th March 1966]

நமக்கென்ன என்ற நிலை இல்லை. தொழில் துறையில் இங்கே உற்பத்தியாகிற சரக்கு ஏராளமாக வேறு ராஜ்யங்களுக்கு சென்று கொண்டிருக்கிறது. வரி விகிதம் அதிகமான காரணத்தால் என்னைப் போல உள்ளவர்கள் பம்பாய், கல்கத்தாவிலே சரக்கை விற்க வேண்டுமென்றால் 3 சதவிகிதம் வரி கொடுக்கவேண்டியிருக்கிறது. அந்த இடங்களில் பிராஞ்சு வைத்துவிட்டால் வரி கிடையாது. ஏற்கனவே தமிழ் நாட்டிலுள்ள தொழில் அதிபர்கள் வேறு ராஜ்யத்தில் பிராஞ்சு வைத்து இரண்டு சதவிகிதம் வரிகூட கொடுக்காமல் தொழில் நடத்தும் வாய்ப்பு இருக்கிறது. இன்னும் அதிகமாக வரி வந்தால் இதுவரையில் இல்லாதவர்கள் கூட பம்பாய், கல்கத்தா போன்ற மாகாணங்களில் தங்களுடைய சரக்குகளை மாற்றி நமது ராஜ்யத்திற்கு வருமான வரி இல்லாத முறையில் விற்பனை செய்வதற்கு வழிவகை காணும் நோக்கத்தில் இருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு வரி குறைப்பு செய்யவேண்டுமென்பதற்காக இல்லை. மூன்று சதவிகிதம் என்றால் சரக்கின் விலை அதிகமாகிறது. கன்ஸ்யூமர் ரெசிஸ்டன்ஸ் அதாவது வாங்குகிறவர்கள் விலை அதிகமாக இருக்கிறது என்று சஞ்சலப்படுகிறார்கள். இதை மாற்றவேண்டும், எல்லோரையும் போல நாமும் பம்பாயிலும் கல்கத்தாவிலும் பிராஞ்சு வைத்துக்கொள்ளலாம் என்று ஆரம்பித்தால் விற்பனை வரியில் வரும் வருமானம் மிகவும் குறைந்துபோகும். மத்திய அரசாங்கம் அதிகமாக வரி விதித்தாலும்கூட அதைக் குறைப்பதற்கு நமது ராஜ்யத்திற்கு அதிகாரம் இருப்பதாக சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் நம்முடைய ராஜ்யத்திற்கு வரும் வருமானம் குறையாத வகையில் வேறு வழியில் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்போல அதைக்காட்டிலும் அதிகமாக செயலாற்றச் செய்யவேண்டுமென்று என் விருப்பத்தைத் தெரிவித்து என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 10-30 a.m., on Monday, the 28th March 1966.

The House then adjourned. 1-00 p.m.

### V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 143. *Notification issued with G.O. Ms. No.* 4282, *Home. dated 4th December* 1965, *making amendments to the Madras Motor Vehicles Rules* 1940, *published with Home Department Notification No.* 357, *dated the 29th March* 1940. [*Laid on the Table of the House under section* 133(3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

† 144. *Notification issued with G.O. Ms. No.* 2027, *Education, dated 3rd December* 1965, *approving the list of all the parks and play-fields set out in the area within the jurisdiction of the Tiruvarur Municipal Council.* [*Laid on the Table of the House*

*under section 14(3) of the Madras Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959 (Madras Act 26 of 1959).]*

† 145. *Notification issued with G.O. Ms. No. 147, Revenue, dated 27th January 1960, directing that the ryotswari settlement of Vysur Agraharam inam estate in Hosur taluk of Dharmapuri district be effected in accordance with the provisions contained in the settlement notification relating to the settlement of estates in northern taluks of composite Salem district. [Laid on the Table of the House under section 67(4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]*

† 146. *Notification issued with G.O. Ms. No. 163, Rural Development and Local Administration, dated 1st February 1966 making amendments to the rules relating to provident funds maintained by Municipal Councils published with the Rural Development and Local Administration Department Notification No. 2244, dated 2nd December 1931. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

† 147. *Notification issued with G.O. Ms. No. 4398, Home, dated 14th December 1965 making amendment to the Madras Motor Vehicles Rules 1940 published with Home Department Notification No. 357, dated 29th March 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]*

† 148. *Notification issued with G.O. Ms. No. 241, Home, dated 29th January 1966 making amendment to the Madras Distillery rules 1960, published with Home Department notification S.R.O. No. A-3469 of 1960, dated 9th May 1960. [Laid on the Table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937.)]*

† 149. *Notification issued with G.O. Ms. No. 194, Rural Development and Local Administration, dated 4th February 1966 making the Madras Public Buildings (Licensing) Rules 1966 under the Madras Public Buildings (Licensing) Act, 1965. [Laid on the Table of the House under secton 25(4) of the Madras Public Buildings (Licensing) Act, 1965 (Madras Act 13 of 1965).]*

**B. Reports, Notifications and other papers.**

† 18. Nite on Demand XIII—Education (Tamil).

†† 19. List of unstarred Questions Nos. 4 to 7.

† 20. Pamphlet on " Housing in Madras State, 1965-66 ".

†† 21. Review on labour in Madras State 1965-66 with Errata.

---

* Laid on the Table of the house on 7th March 1966.

† Laid on the Table of the house on 25th March 1966.

†† Sent by Messengers to all M.L.Cs. on 24th March 1966.



APPENDIX

[*Vide* Answer to starred question No. 118 on page 52 .]

(அ) & (இ) அச்சிடுவதிலும், தாள்களைப் பயன்படுத்துவதிலும் மிகக் கண்டிப்பான சிக்கனத்தைக்கடைப்பிடிக்கும்படி துணைத் தலைவர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பான உத்தரவுகளாவன:—

(1) இயன்ற இடங்களில் எல்லாம் படிவங்களைச் சிறு அளவு தாள்களில் அச்சிட வேண்டும். தரப்படுத்திய, தரப்படுத்தாத படிவங்கள் அனைத்தும் தாள்களின் இரு புறங்களிலும் அச்சிடப்பட வேண்டும். தனிப்பட்ட காரணங்களுக்காக அவ்வாறு சிக்கனமாய் அச்சடிக்க முடியாவிட்டால் மட்டுமே அப்படிச்செய்ய வேண்டிய தில்லை.

(2) பல்வேறு வகை அச்சுப்பணிகளுக்காக குறைந்த கனமுடைய தாள்களைப் பயன்படுத்தவேண்டும். அரசாங்க அச்சக மேற்பார்வையாளர் (இப்போது வொர்க்ஸ் மானேஜர்) குறிப்பிட்ட ஒரு வகையைச் சேர்ந்த ஓர் அச்சுப்பணிக்கு அவர் போதுமானதெனக் கருதும் கனமுடைய தாள்களை வழங்க அவருக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(3) பெயர் பொறித்த அலுவற் கடிதத்திற்காக அரசாங்க அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுவந்த வெண்மை நிற உறைகளுக்குப்பதிலாக, சிறிய அளவில் பழுப்பு நிறக்காகிதத்தில் செய்த உறைகள் வழங்கப்படுகின்றன. ஏற்ற இடங்களில் இந்த உறைகளுக்கு சிக்கனப் பெயர்ச்சீட்டுகளைப் பயன்படுத்த வேண்டும்.

(4) அரசாங்க தலைமை அலுவலகத்துறைகளின் ஆண்டு அட்டவணைகள் அச்சிடும் பணியை தேசிய நெருக்கடி காலத்தில் நிறுத்தி வைக்கவேண்டும். காலாண்டு அட்டவணைகளின் நான்கு நகல்களை ஆண்டுதோறும் கால் பகுதி துணி வைத்து பைண்டு செய்யவேண்டும்.

(5) தட்டெழுத்து யந்திரம் அல்லது நகல் எடுக்கும் யந்திரம் அல்லது படியெடுக்கும் யந்திரங்கள் இவற்றின் மூலம் வசதியாக அல்லது மிக மலிவாக நகல் எடுக்கக்கூடியவற்றை அச்சிடக் கூடாது.

(6) அச்சிடுவதற்குரிய எந்த விஷயமும் (அ) செயலகத் துறைகளின் விஷயத்தில் அரசாங்கத் துணைச்செயலாளரின் பதவிக்கும் குறையாத ஓர் அதிகாரி சரி பார்த்த பிறகும், (இ) ஏனைய துறைகள் விஷயத்தில் அலுவலகத்துறைத் தலைவர் சரி பார்த்த பிறகும் அன்றி மற்றப்படி, அச்சிடுவதற்காக அரசாங்க அச்சக மேற்பார்வையாளருக்கு (இப்போது வொர்க்ஸ் மானேஜருக்கு) அச்சிடுவதற்காக அனுப்பக்கூடாது. அச்சிடுமாறு செய்து கொள்ளும் கோரிக்கையுடன் சான்றிதழ் ஒன்றையும் அனுப்ப வேண்டும். அச்சிடுவது மிகவும் அவசியம் எனத் திருப்திகரமாகத் தெரிந்துகொண்டிருப்பதாகவும், தேவையான மிகக் குறைந்த அளவு நகல்களே கேட்கப்பட்டுள்ளன என்றும் உரிய அதிகாரி அச் சான்றிதழில் உறுதி கூறியிருக்கவேண்டும்.

[26th March 1966

(7) தரப்படுத்தாத படிவங்களை 2000 நகல்களுக்கு மேல் அச்சிடவேண்டுமானால், அதற்குரிய உத்தரவு அரசாங்கத்தின் அனுமதியுடன் மட்டுமே அனுப்பப்படவேண்டும்.

(8) சிறப்பு சந்தர்ப்பங்களில் மட்டுமே, வண்ணங்களில் அச்சிடுமாறு கேட்கவேண்டும்.

(9) சாதாரண வகையைச் சேர்ந்த தாள்களைப் பயன்படுத்த இயலாதபோது மட்டுமே வழவழப்பான தாள்களில் அச்சிடுமாறு கேட்கவேண்டும்.

(10) மிகவும் அவசியமான விஷயங்களில் மட்டுமே, புதிய படிவங்களைத் தரப்படுத்தவேண்டும். அவ்வாறு செய்வதற்கு முன் அரசாங்கத்தின் திட்டமான அனுமதியைப்பெற வேண்டும்.

(11) பொதுவாகப் பெரிய உறைகளைப் பயன்படுத்துவதை விட்டு விட்டு, இயன்றவரை சிறிய அளவு உறைகளைப்பயன்படுத்த வேண்டும்.

V2,11,32'N66
N66·67,55
62930

# THE MADRAS LEGISLATIVE COUNCIL

**Monday, the 28th March 1966.**

The House met in the Council Chamber, Fort St. George, at half past ten of the clock, Mr. Chairman (The Hon. Sri M. A. MANICKAVELU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS

*Statutory Rationing in the City of Madras*

†* 17 *Q.*—Sri M. SUBBIAH CHETTIAR (on behalf of Sri S. K. SAMBANDHAN) : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the estimated expenditure for implementing the Statutory Rationing in the City of Madras; and

(*b*) the steps taken by the Government for further procurement of foodgrains in the State to meet these requirements?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Rs. 18 lakhs approximately.

(*b*) No additional procurement is necessary to meet this requirement as the entire city was covered by informal rationing before the statutory rationing came into force. The scale of ration has remained unchanged.

Sri M. SUBBIAH CHETTIAR : Sir, do these eighteen lakhs of rupees mentioned by the Hon. Minister relate to the Madras City or to the whole State ?

The Hon. Sri V. RAMAIAH : This relates to the statutorily rationed areas.

Sri M. SUBBIAH CHETTIAR : Sir, can the Government assure that good quality rice will be always available and without any interruption to the card-holders?

The Hon. Sri V. RAMAIAH : There has not been any interruption in supply to the card-holders. Our effort is to supply good quality rice.

Dr. H. V. HANDE : Sir, does this sum include the salary of the officers, the clerks and others, and also probably the rental charges of the rooms that are occupied by the officers?

The Hon. Sri V. RAMAIAH : Yes.

Sri M. SUBBIAH CHETTIAR : Sir, what is the total expenditure expected for the whole State ? How is this expendi-

† * Question postponed from the list of questions for the 31st January 1966.

ture being met? Is any extra charge made in the sale of the foodgrain? Is there any difference between the price charged from the consumer and the procurement price?

THE HON. SRI V. RAMAIAH : A separate question may be put.

SRI K. S. ABDUL WAHAB : Sir, may I know the places where the statutory rationing is in operation?

THE HON. SRI V. RAMAIAH : Madras City, Coimbatore town, and its suburbs.

SRI M. SUBBIAH CHETTIAR : Sir, is it not a fact that the Government are charging Rs. 8 extra per quintal (sixty measures) of rice on the procurement price? What is the object of this extra cost?

THE HON. SRI V. RAMAIAH : The hon. Member may put a separate question.

### *Petitions in respect of Elections to Panchayats and Panchayat Unions.*

†* 129. *Q.*—SRI M. SUBBIAH CHETTIAR : (on behalf of SRI S. K. SAMBANDHAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of petitions pending in the various District Munsifs' Courts in respect of elections to various Panchayats and Panchayat Unions as on the latest available date; and

(*b*) the number of cases where functions of the Presidents of Panchaayts and Chairman of Panchayat Unions have been stayed in the South Arcot district?

THE HON. SRI S. M. A. MAJID : (அ) 29 மனுக்கள்.

(இ) தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் ஆகியவற்றின் தலைவர்கள் பதவி ஏற்றபின்பு அவர்களுடைய அலுவல்களை நிறைவேற்ற முடியாமல் தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டதாக எந்த நிகழ்ச்சிகளும் இல்லை.

DR. H. V. HANDE : May I know, Sir, why such inordinate delay is taking place? To prevent such delays, what concrete steps have the Government taken?

THE HON. SRI S. M. A. MAJID : The delays are due to the parties approaching the courts and obtaining orders of stay.

### *Level-crossing gate at Gengu Reddi Road*

* 130. *Q.*—DR. H. V. HANDE (on behalf of SRI S. K. SAMBANDHAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the difficulties caused to the public and the girl students of the Presidency High School, Egmore, on account of the closure of the level-crossing gate at Gengu Reddi Road for more than half an hour at a time between 9 and 11 a.m. and 4 and 6 p.m. every day;

† * Question postponed from the list of Questions for the 26th March 1966.



(*b*) if so, whether there is any proposal to construct an over-bridge for pedestrian crossing; and

(*c*) if so, the stage at which the matter stands?

THE HON. SRI S. M. A. MAJID : (அ) ஆம்; ஆனால், கெங்கு ரெட்டி சாலையில் இரு பக்கங்களிலும் சற்றுத்தொலைவில் இரண்டு மேம்பாலங்கள் இருக்கின்றன. இவற்றைப் பொதுமக்கள் பயன்படுத்தலாம்.

(இ), (உ) கெங்கு ரெட்டி சாலை இருப்புப் பாதை சந்திப்பில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கான திட்டக் குறிப்பு ஒன்று இருந்தது; ஆனால், போதிய நிதி வசதி இல்லாததால் இத் திட்டக் குறிப்பு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Sir, what is the estimated cost of this construction, if it should go through?

THE HON. SRI S. M. A. MAJID : Approximately Rs. 40 lakhs.

### *Salary of teachers in Aided Secondary schools*

* 131 *Q.*—SRI M. RAJAH IYER (on behalf of SRI G. KRISHNAMOORTHY) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of cases in which the Department of Public Instruction has taken into account the local board scale of pay instead of the Government scale of pay, for fixing the salaries of teachers in aided secondary schools in the City of Tiruchirappalli, as from 1st April 1964; and

(*b*) the relief proposed in such cases?

THE HON. SRI R. VENKATARAMAN (on behalf of the HON. the Chief Minister) : (*a*) There are no separate scales of pay for teachers in Government, local body and aided secondary schools with effect from 1st June 1960. Therefore, the question of adoption of local board scale instead of Government scale of pay for purposes of fixation of salaries of teachers in aided Secondary Schools in Tiruchirappalli district does not arise.

(*b*) Does not arise.

### *Graduate teachers of Panchayat Union Elementary schools*

person's house two C.I.D.'s were sent. He is a harmless young boy who cannot do anything subversive. He hails from a nationalist family. I am myself a nationalist. My entire family is nationalist. Half of our family we have given to the Forces. We have had a recent bereavement. I am looking after that family. When we are nationalists, why do the Government think that we are capable of mischief and that we have extra-territorial loyalty? We are doing everything for the sake of the country. When that is the case, just because the particular person wrote a letter to the Editor, is it proper or just to send C.I.D.'s to his house? I have got confidence in the Minister for Industries. Is it proper in the name of justice and in the name of democracy to throttle the Opposition like this? Don't you want the Opposition Party to point out the errors of administration? If there is no Opposition Party, how can we call it a democracy? That is the only point I want to raise to-day. Please allow the Opposition to function properly. Please do not intimidate people. The other day I inaugurated a particular function in a particular area where one of the workers put up the Swatantra Party flag on his house. There were several constables and C.I.D.'s going after him. Is it proper justice? Are there not Congress flags in several places? Are there not other flags ? Why should only the Opposition flag be thrown out? Why should the Opposition Members be harassed? When we go and address public meetings, how many C.I.D's come? How can we build up the Opposition? We have got points and we want to express them, but the people are afraid to come before us because of this intimidation. I have already spoken about the Defence of India Rules. It is futile to talk about it. At least let the Government stop opening our letters and sending C.I.D.'s after our Party workers. This is the only way of avoiding military rule. Only a healthy and strong democratic Opposition Part yis the panacea to prevent Army rule. All that I want to say to-day is this. Please for Heaven's sake allow the Opposition to come up. I am not asking anybody to canvass support for us. Please do not throttle us. Please do not choke us. I am working hard and doing so many things. I am doing everything in the nationalist way. Still my life is made miserable. I have dedicated my life to the Opposition Party so that a healthy democracy may be built up. I have no other interest in life. I request the Minister for Industries to look into this and save democracy by stopping forthwith such pestering of Opposition parties by the C.I.D.'s and the Police. Are we sending the Police and the C.I.D.'s and taking action for the irresponsible statements made by the ruling Party? I do not deny that irresponsible statements are sometimes made by the Opposition Party. But why do the Government have one yardstick for one Party and another yardstick for another Party?

Finally, I request the Minister for Industries to take the matter immediately to the Chief Minister. Elections are approaching. We have to carry on our Party propaganda before

[Dr. H. V. Hande] [28th March 1966

the public boldly and fearlessly. There are hardly eight months before us. The Government Party are also carrying on Party propaganda. We are also doing it. We are doing it in an honest manner to prevent a situation as in Ghana or Indonesia arising. There is no other solution to prevent Army rule except a healthy, democratic Opposition Party. I request the Minister for Industries to intervene in the matter and do something.

With these words, I wind up.

* **திரு. எம். எதிராஜுலு:** கனம் தலைவர் அவர்களே, இந்த உப மானிய கோரிக்கையை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த கோரிக்கையில் 21 கோடியே 33 லட்சம் ரூபாய்க்கான துணை மதிப்பீட்டிற்கு இங்கே ஒப்புதல் கோரப்படுகிறது. இதில், பின்தங்கிய மாணவர்களுக்காக 43,38,000 ரூபாய் கோரப்படுகிறது. பின்தங்கிய இனத்தவர்களுக்கு அதிகச் சலுகை கொடுக்க வேண்டும் என்பதை கனம் அமைச்சர்களுக்கு இந்த மன்றத்தில் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சென்ற பட்ஜெட்டில் பொதுவாக, பின்தங்கிய சமூகத்தினர் முன்னேற்றத்திற்கான தொகை 5 கோடியே 30 லட்சம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் பெரும் பகுதி ஹரிஜன மக்களுக்குத்தான் போகிறது. ஹரிஜனங்களுக்காகச் செலவழிப்பதை நான் முழுதும் வரவேற்கிறேன். ஆனால் மிகவும் பின்தங்கிய சமூகத்தவர் பிள்ளைகளுக்கு உதவி சரியாகக் கிடைப்பதில்லை. இவ்வளவு மார்க்குகள் வாங்கியிருந்தால்தான் உதவி அளிக்கப்படும் என்று, மார்க் முறையைக் கையாள்வதால் சமூகத்தில் மிகவும் பின்தங்கியுள்ள மக்கள் முன்னேற முடியாமல் அதே நிலையிலேயே இருக்கிறார்கள். மார்க்குகள் அடிப்படையில் பார்த்தால் அவர்கள் உதவி பெற முடிவதில்லை. பின்தங்கிய மாணவர்கள் படிப்பிற்காக, பி.யு.சி.; பி.ஏ.; எம்.ஏ.; பி.எஸ்;சி. எஞ்சினியரிங் படிப்பு முதலிய எல்லாப் படிப்பிற்குமாக, 1960-61-ம் ஆண்டில் 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது; 1961-62-ம் ஆண்டில் 46 லட்சம் ரூபாயும்; 1962-63-ஆம் ஆண்டில் 62 லட்சம் ரூபாயும்; 1964-65-ஆம் ஆண்டில் 70 லட்ச ரூபாயும்தான் ஒதுக்கப்பட்டன. 1965-66-ஆம் ஆண்டில் இதற்காக 69 லட்ச ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. மொத்தச் செலவிற்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கும்போது, இதற்காக ஒதுக்கப்பட்டது 69 லட்சம் ரூபாய் இதனால் கல்லூரிகளிலும், உணவு விடுதிகளிலும் உள்ள மாணவர்களில் 25 சதவிகிதத்தினர்தான் சலுகை பெறுகிறார்கள் என்பதை நான் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. சமூகத்தில் மிகப் பின்தங்கிய நிலையில் உள்ள க்ஷவரத் தொழிலாளர்களும் சலவைத் தொழிலாளர்களும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். இவர்களும் 45 சத விகிதம் மார்க்குகள் வாங்கினால்தான் இவர்களுக்கு கல்விச் சலுகை உண்டு என்றால் இவர்கள் மிகவும் பாதிக்கப்படுவதால், இவர்களுக்கு தனிச் சலுகை கொடுக்கக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். இந்தியாவில் கல்கத்தா, போபால்; காரளா. திரிபுரா; மத்திய பிரதேசம் முதலிய



28th March 1966] [திரு. எம். எதிராஜுலு]

இடங்களில் க்ஷவரத் தொழிலாளர்களும், சலவைத் தொழிலாளர்களும், ஹரிஜனங்களும் இந்தச் சலுகை விஷயத்தில் ஒன்றாகக் கருதப்படுகிறார்கள். அந்த மாதிரி தமிழ் நாட்டிலும் ஏன் இவர்கள் கருதப்படக்கூடாது? இவர்களுக்கு தமிழ் நாட்டிலும் ஏன் அவ்வாறு சலுகை அளிக்கக் கூடாது? டெல்லியிலும் கல்கத்தாவிலும் இவர்கள் தொடக்கூடாதவர்களா? அங்கே இவர்கள் தொடக்கூடியவர்களாகத்தான் இருக்கிறார்கள். அங்கே இவர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்பட்டிருக்கும்போது இங்கேயும் ஏன் இவர்களுக்கு இந்தச் சலுகையை அளிக்கக்கூடாது? நான் இரண்டு தினங்களுக்கு முன்பு மதுரைக்குச் சென்றிருந்தேன். அப்போது அங்கே இந்த சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் என்னிடம் வந்து "எங்களுக்கு கல்லூரியில் சம்பளச் சலுகை கொடுக்கப்படவில்லை" என்று சொன்னார்கள். ஹரிஜனங்களுக்கு கல்விச் சலுகை அளிப்பதுபோன்று இந்தப் பிற்பட்ட இனத்த- (11-30 a.m.) வருக்கும் கல்விச் சலுகை அளிக்க வேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன். இவர்கள் தொடக்கூடியவர்களாகக் கருதப்பட்டாலும் கிராமங்களில் இவர்களை சமமாக உட்காரவைக்கும் நிலை இன்னும் வரவில்லை. நகரங்களில் மற்றவர்கள் இவர்களை தங்களுடன் சமமாக உட்காரக்கூடியவர்கள் என்று கருதினாலும் அந்த நிலை கிராமங்களில் இன்னும் வரவில்லை. அது கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வரும் என்பது எனக்குத் தெரிகிறது. பிற்பட்ட சமூகத்தினரை முன்னேற்றமடையச் செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று கனம் அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன். "இதற்கென ஐந்து நிமிஷம் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நாடு சுதந்திரமடைந்து 18 ஆண்டுகள் ஆகிவிட்டன. இவர்கள் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்கள்? இவர்களில் ஒருசதம்கூட இந்த ராஜ்யத்தில் கெஜடெட் ஆபீசராக வரவில்லை.

அவர்கள் எல்லாம் மற்ற மற்ற ராஜ்யத்தில் எவ்வளவோ முன்னேறி இருக்கிறார்கள். நான் டெல்லி சென்றபோது பார்த்தேன். அங்கே சலவைத் தொழிலாளர் என்று சொல்லக்கூடிய சமூகத்தைச் சேர்ந்தவர் டைரக்டர் ஆப் பப்ளிசிடி அண்டு இன்பர்மேஷன் அதிகாரியாக பி. கே. பசந்திரி என்பவர் இருக்கிறார். இன்னும் எக்ஸ்டெர்னல் அபேர்ஸ், ஹோம் டிபார்ட்மெண்டு என்ற இடங்களில் பெரிய உத்தியோகத்தில் இருக்கிறார்கள். 700 ரூபாய், 800 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். அதைப் போல இந்த ராஜ்யத்தில் . . .

**திரு. க. அன்பழகன்:** அவர்கள் எல்லாம் இப்போது சலவைத் தொழிலாளர்கள் அல்ல. படித்துப் பாஸ் செய்துவிட்டு வேலைக்கு வந்தவர்கள்.

**திரு. எம். எதிராஜுலு:** ஆமாம் படித்துப் பாஸ் செய்தவர்கள் தான். தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் அவர்கள் சேர்ந்திருப்பது காரணமாக அங்கே அவர்களுக்கு உத்தியோகச் சலுகை

கிடைக்கிறது. ஆனால் இங்கே இந்த சமூகத்தில் இருப்பவர்கள் எப்போதுதான் ஒரு கலெக்டராக, ஒரு ஜட்ஜாக வருவது? எந்தக் காலத்தில்தான் வருவார்கள்? 18 ஆண்டுகளுக்குப் பிறகும்கூட இன்னும் வரவில்லை என்றால் நாங்கள் என்ன பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் போய்க்கேட்பதா? யாரைப் போய்க் கேட்பது?

**மிஸ்டர் சேர்மன்** : கனம் அங்கத்தினர் இன்னும் ஏதாவது பேசப்போகிறார்களா, அல்லது இதையே பேசப் போகிறார்களா? இதிலேயே காலத்தைப் போக்கிவிட்டால் வேறு எதையாவது பேச முடியாதே என்று கேட்கிறேன்.

**திரு. எம். எதிராஜுலு** : வேறு வழியே இல்லை. ஆகவே அவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்து கல்விச் சலுகை, உத்தியோகச் சலுகை கொடுக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

* **திருமதி டி. எல். திரிபுரசுந்தரி** : தலைவர் அவர்களே, இந்தத் துணை மான்யக் கோரிக்கையில் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பெண்களுக்கே உண்டானது உணவுப் பிரச்னை. அந்த உணவுப் பிரச்னைபற்றி ஏதோ நம்முடைய அரசாங்கம் செய்திருக்கிறது. ஔவை மூதாட்டியார் சொல்லி இருக்கிறார், 'பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்' என்று. அந்த முறையில் அரசாங்கம் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதன் அடிப்படையில் இன்றையதினம் விளைபொருள்களுக்காக பல கோடி பணத்தைக் கொடுத்து விளைச்சலைப் பெருக்கி, ஏழை நடுத்தர மக்கள் எல்லோருக்கும் நல்ல அரிசி கிடைக்கும்படியான சந்தர்ப்பத்தைக் கொடுத்துப் பங்கீட்டு முறையைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். செய்து கொண்டும் இருக்கிறார்கள். அந்தப் பங்கீட்டு முறை இல்லாவிட்டால் எல்லோருக்கும் அரிசி கிடைக்காது. அதுவும் கண்ட்ரோல் வைக்காமல் இருந்தால் அதுகூட கிடைக்காது. விலைவாசி இன்னும் ஏறிப்போய் இருக்கும். சில அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள் கண்ட்ரோல் இல்லாவிட்டால் நல்ல முறையில் அரிசி கிடைக்கும் என்று. கண்ட்ரோலை எடுத்து விட்டால் அரிசி கிடைக்கவே கிடைக்காது. கண்ட்ரோல் வைத்த காரணத்தால்தான் படி அரிசி இன்னும் ரூ. 1-8-0, ரூ. 1-10-0 விலைக்குள்ளேயே இருந்துகொண்டிருக்கிறது. கண்ட்ரோலை எடுத்து விட்டால் இதற்குள் ஒரு படி 3 ரூபாய் என்ற அளவில் அரிசி விலை உயர்த்தப்பட்டு இருக்கும். இதைப் போலவே நம்முடைய அரசாங்கம் இன்னும் கொஞ்சம் விளைபொருள்களையும், புளி, மிளகாய், எண்ணை, மிளகு, ஜீரகம், தனியா இவைகளையும் விலைக் கட்டுப்பாடு செய்து கண்ட்ரோல் வைத்துக்கொடுத்தால் நன்றாக இருக்கும். இப்போது அவைகள் எல்லாம் அதிக விலைக்குத்தான் விற்கப்படுகின்றன. ஏழை எளியவர்கள் 1 அணாவுக்கு 2 அணாவுக்கும் மிளகாய் வாங்கி எத்தனையோ இடங்களில் காலட்சேபம் நடத்துகிறார்கள். ஆகவே நாம் அவைகளுக்கும் ஒரு கண்ட்ரோல் விலை வைத்துவிட்டால் நன்றாக இருக்கும்.



முக்கியமாக விறகுக் கட்டையை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு குண்டு விறகு ரூ. 3-25 விற்கிறது. அதே நேரத்தில் அரசாங்கமும் விறகுக் கடை வைத்திருக்கிறது. அதில் ஒரு குண்டு விறகு ரூ. 1-50-க்கு விற்கிறார்கள். அது மிகவும் குறைவாக இருக்கிறது. இன்னும் அதிகப்படியாக அரசாங்கம் அந்தக் கடைகளைத் திறந்தால் மிகவும் நன்றாக இருக்கும். இப்போது அரசாங்கக் கடைகளில் விறகு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அதையும் அரசாங்கம் பார்த்து விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்னும் கல்வியை எடுத்துக் கொண்டால் அதில் பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி ஏழை எளிய குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டும் என்ற முறையில் சம்பளம் இல்லாதபடி 10-வது வரை படிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் வழிவகுத்துக் கொடுத்து இருக்கிறது. அதே நேரத்தில் சில மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடங்களிலும், தனியார் நடத்தும் பள்ளிக்கூடங்களிலும் சம்பளம் வாங்குகிறார்கள். ஒரு பிள்ளைக்கு முதல் ஸ்டாண்டர்டுக்கு ரூ. 5, 6 என்று வாங்குகிறார்கள். அது மாத்திரமல்ல, சில நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அதற்கு குழந்தைகளை 'நீங்கள் கண்டிப்பாக டிக்கட் விற்றுக்கொண்டு வர வேண்டும், இல்லாவிட்டால் நீங்கள் 10 ரூபாய் டிக்கட் வாங்க வேண்டும்' என்று கட்டாயப்படுத்துகிறார்கள். அதை அரசாங்கம் கண்காணித்து அது மாதிரி நடக்கிற பள்ளிக்கூடங்களில் அதைச் செய்யவிடாமல் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனெனில் நாம் படிக்க வேண்டும் என்று பல கோடி பணத்தை ஒதுக்கி நம் பிள்ளைகள் நல்ல முறையில் படிக்க வேண்டும் என்று இருக்கும்போது அவர்கள் இப்படி வாங்குகிறார்கள் என்றால் அது மிகவும் வெட்கக்கேடாக இருக்கிறது. கட்டாயமாக வாங்குகிறார்கள். பிள்ளைகளை மிகவும் தொந்தரவு படுத்துகிறார்கள். இதையும் அரசாங்கம் கவனித்து இது மாதிரி நடக்கும் பள்ளிக்கூடங்களை நன்றாக கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்று. மேம்பாலம் கட்டுவதற்காக கொஞ்சம் பணம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அந்த முறையில் எடுத்துக்கொண்டால் நம்முடைய ரிப்பன் கட்டிடத்திற்கு எதிரே இருக்கும் இடத்தில் ஒரு பாலம் கட்ட வேண்டும். ஆனால் மேம்பாலம் கட்ட முடியாது என்றால் நம் செக்ரட்டேரியட் எதிரில் கட்டுகிறமாதிரி யாவது கட்டிவித்தால் நன்றாக இருக்கும். ஏனெனில் அதில் காலையிலும் மாலையிலும் ஆபீஸ் வேளையில் நிறைய ஜனங்கள் நின்று கொண்டு இருக்கிறார்கள். அது அவர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது என்ற முறையில் அதையும் அரசாங்கம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்று. பஸ் பற்றி 2 வார்த்தை சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன். பஸ் நடத்துவதில் நஷ்டம் வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைச் சரியான முறையில் நடத்தினால்

இருக்கிறோம். அதில் வருமானம் வரும். அதுபோன்ற பணம் வருகின்ற வழிகளை நகர சபைகளுக்கு விட்டுக்கொடுக்கவேண்டும். நகரசபை அவசரக் கூட்டத் தடுப்புச் சட்டம் அமுலுக்கு வந்தால் தினமும் இரண்டு கூட்டம் போடுவார்கள். நான்கு விஷயம் வைத்துக்கொள்வார் சேர்மன். காலையில் ஒரு கூட்டம், பத்து மணிக்கு ஒரு கூட்டம், ஐந்து மணிக்கு ஒரு கூட்டம் என்று போடுவார்கள். அரை மணி இண்டர்வெல் கொடுத்து அடுத்த கூட்டம் போடுவார்கள். ஒரே நாளில் நான்கு விஷயத்தைப் பேசுவார்கள்.

**மிஸ்டர் சேர்மன் :** அந்த ரகசியத்தை கனம் அங்கத்தினர் சொல்லிக்கொடுக்கிறார்களா ?

**திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் :** அதைப்பற்றி என்ன எழுதப்போகிறார்கள் என்று தெரியாது, வந்தால் தானே தெரியும். தண்ணீர் குழாய்க்கு திருகு குழாய் வைத்தால் தண்ணீரைத் திறந்து விட்டுவிடுகிறார்கள் என்று கைப்பிடி வைத்தார்கள். அதில் பின்புறம் கல்லை வைத்துவிட்டுப் போய்விடுகிறார்கள். அதைப் போக்குவதற்காக மேல் நோக்கு அழுத்தும் வகையில் அமைத்தார்கள். அதற்கும் கீழே கொம்பை வைத்துத் திறந்துவிடுகிறார்கள். நாம் எதைச் செய்தாலும் அவர்களும் அதற்குத் தகுந்தாற்போல மாற்று வேலை செய்துவிடுகிறார்கள். சில சமயம் கயிற்றையே கட்டிவிடுகிறார்கள். இதுதான் மனித சுபாவம். காஞ்சீபுரத்தில் கவர்ன்மெண்டு மூலம் பஸ் ஸ்டாண்டில் ஷெட்டு கட்டியிருக்கிறார்கள். அதற்கு நகரசபை ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் செலவு செய்தது. நான் சேர்மன் ஆவதற்கு முன்பே அது நடந்தது. பஸ் நிற்க லாயக்கில்லை. பாதி பஸ் வெளியேயும் பாதி உள்ளேயுமாய் கட்டப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் பஸ்கள் நீளம் குறைவாக இருந்தது. அதற்குத் தகுந்தபடி செய்திருக்கலாம். இப்போது பஸ்கள் அதிக நீளமாக வர ஆரம்பித்துவிட்டன. அதனால் அந்த பஸ்கள் நிறுத்தி வைக்கப் போதாத நிலையில் அந்த நிலையம் இருக்கிறது. இதைப்பற்றி அதைக் கட்டிய இஞ்சினியர்கள் கவனித்திருக்கவேண்டாமா? அவர்கள் கவனிக்காததால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீணாகப் போய்விட்டது. அத்தனையும் மக்களிடம் வாங்கிய வரிப்பணம். அதைப்பற்றி அங்குள்ளவர்கள் ரிபோர்ட் செய்யவேண்டுமென்றார்கள். அதைப்பற்றி கமிஷனரிடம் சொன்னால், 'இருங்கள் பிறகு செய்யலாம்' என்று சொல்கிறார். அதனால்தான் நான் அதை இங்கே சொல்லிவிட்டேன். அதை மூன்று தடவை ஏலம் விட்டோம். யாரும் வாடகைக்கு அதை எடுப்பதற்கு முன்வரவில்லை. ஒரு லட்சத்திற்கு மேற் செலவு செய்த இடத்தை ஏலத்தில் விடும்போது யாரும் எடுக்க வரவில்லை. என்ன காரணம் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மார்க்கெட்டாக வைத்து விடலாமா ?

**திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் :** மார்க்கெட்டாக வைப்பதற்கு வழியில்லை. அதில் இப்போது ஒரு லட்சத்திற்கும் மேலாக செலவாகி வீணாகிவிட்டது. அந்த நஷ்டத்தை யார் கொடுப்பது?





சர்க்கார்தான் கொடுக்கவேண்டும். அதை வேலை செய்தவர்களைப் பிடிக்கவேண்டும். எந்த உபயோகத்திற்காக செய்தோமோ அதற்கு அது பயன்படாமல் இருக்கிறது. அந்த நஷ்டத்தை கவர்ன்மெண்டுதான் கொடுக்கவேண்டுமென்று தீர்மானம் போட இருக்கிறோம்.

சல்பேட் கொடுப்பதைப் பற்றி ஒன்று சொல்லவேண்டும். விவசாய அபிவிருத்தி வேண்டுமென்று எல்லோரும் சொல்கிறோம். சல்பேட் வாங்கவேண்டுமென்று போனால் ரொக்கத்திற்குக் கொடுக்க மாட்டோம், கடனுக்குத்தான் கொடுப்போம் என்கிறார்கள். அங்கே 11–50 a.m. கடனுக்கு வாங்கினால் 30 ரூபாய் அல்லது 32 ரூபாய்க்கு அதை வாங்கலாம். ஆனால் ரொக்கத்திற்கு என்னைப்போன்றவர்கள் வாங்க வேண்டுமென்று போனால் கடனுக்குத் தான் கொடுப்போம் என்பதால் வாங்கமுடியவில்லை. வெளியே போய் வாங்க வேண்டியிருக்கிறது. அங்கே ரூ. 60 வரையில் கொடுத்து வாங்கினேன். எப்படி வெளியே சல்பேட் வந்து விற்கிறது? நீங்கள் இவ்வளவு கட்டுப்பாடு வைத்து என்ன பிரயோஜனம்? கடனுக்கு வாங்க வேண்டுமென்றால் அடங்கல் எல்லாம் எடுத்துக்கொண்டு போக வேண்டும். நாம் கொஞ்சம்தானே வாங்குகிறோம். ஆயிரக்கணக்கான ரூபாய்க்கா வாங்குகிறோம்? கையில் இருப்பதை கொடுத்து வாங்கலாமென்றால் முடியவில்லை. வெளியே போய் ரூ. 60-க்கு வாங்க வேண்டியிருக்கிறது. எல்லாம் தெரிந்திருந்தாலும், ரூ. 35-க்கு வாங்கமுடியவில்லை. கட்டுப்பாடுதான் வேண்டும். அப்போதுதான் ஒழுங்காக நடக்கும் என்று சொல்கிறீர்களே, 'எப்படி சல்பேட் வெளியே வருகிறது?' 'தனிப்பட்டவர்களை அவிழ்த்துவிட்டால் ஆளை விழுங்கிவிடுவார்கள்' என்று பேசுகிறீர்கள். இப்போது அடாபிடிக்காரன் பிழைப்பதற்குத்தான் நீங்கள் போடுகிற சட்டம் பயன்படுகிறது. நேர்மையானவர்களுக்கு சட்டம் பிரயோஜனப்படவில்லை. அது ஏன் என்று தெரியவில்லை. இப்படி வைத்துக் கொண்டு விவசாயியை 'அதிகமாக உற்பத்தி செய்துகொடு' என்றால் அவன் எப்படிக் கொடுக்க முடியும்? விவசாயி மனம் கெட்டுப்போய்விட்டது. இவற்றை பேசவேண்டுமென்று நினைத்தேன். பேசிவிட்டேன். இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, I am thankful to the hon. Members for the contribution they have made. Several points have been raised and I shall try to deal with them seriatim. The hon. Member, Sri M. Rajah Iyer, asked whether it was going to be a complete re-survey that was contemplated or whether it was merely going to be a re-codification of the existing records. It is proposed to have a complete re-survey and re-survey will be made according to the metric system and not according to the present measurement. Therefore, this will be really important in the keeping of our records. This system has been prevalent for a number of years. This has to be done once in 30 years. It is right and proper that the land record should be brought up-to-date.

[Sri R. Venkataraman] [28th March 1966

So far as livestock census is concerned, I hope the members of the teaching profession will not grudge doing a little service to the country in this direction. Apart from teaching, they have to undertake additional work of this kind. It is usual in other countries to call on the service of the people who have a little leisure. That is the only way of reducing the cost; otherwise the cost of making re-surveys will become very high. I do hope that the teachers, who have always been very generous in giving a part of their time for national work, will not very much object to this.

So far as examination fees are concerned, we find that tabulators have to be given extra amount, and this is on the basis of the recommendation which the Department of Education sent. The Government have come forward to give that extra remuneration. So far as remuneration to the examiners themselves are concerned, I suppose they will continue to make agitation. Some provision will be made in future. At the present moment, the Government think that the present remuneration is adequate.

With regard to the Provident Fund contribution, since the Government have undertaken the responsibility, they are making lump sum contribution at the time when either the Provident Fund account is closed or when the person retires. The Government need not go on paying every year a part of the amount, which is due. It will be very difficult for accounting purposes also. Even in the matter of gratuity in private companies, they do not go on making annual contribution towards Gratuity Fund. They make payment at the time when it is due. This saves a lot of administrative work. I do hope that this will go a long way to ensure the correct payment of the Provident Fund to the teachers. In any event, I am sure, teachers would welcome the change that has been made by the Government in undertaking this responsibility to pay the management's contribution themselves and in a lump sum.

Dr. Hande referred to certain difficulties, which the Opposition suffers from. The Intelligence Department has its own responsibilities. In general, they decide who are the persons and what are the activities that have to be watched or followed. I do not think the Government have issued instructions to the effect that the Opposition members should be harassed in any way or anything of that kind. There are a number of Opposition members here and I do not think they have complained of any such interference by the Intelligence Department. However, it hurts me when it is said by nobody else but by one of the members of the House that he has any such handicaps or difficulties in following the legitimate activities of political work. Sir, I will have this matter referred to the Home Secretary and have it looked into by the Government.

MR. CHAIRMAN : I understand the hon. Member referred to fellow workers and not to himself.



28th March 1966]

THE HON SRI R. VENKATARAMAN : I thought he mentioned about himself. So far as the other people are concerned, naturally it is the responsibility of the Intelligence Department, and the Government cannot interfere and give directions as to what they should do. Any interference by the Government may result . . . .

*திரு. க. அன்பழகன் :* இதுபற்றி கனம் அமைச்சர் விளக்கம் தருவதால் நான் இதுபற்றி ஒரு செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன். எனக்கு வரும் கடிதங்கள் கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கின்ற என்போன்ற முக்கியமானவர்களுக்கு வரும் கடிதங்கள் கூட, அஞ்சலகத்திலிருந்து தாமதித்து வருகின்றன. அஞ்சலகத்தில் கடிதங்கள் வந்தால், அவை அங்கே வந்துள்ளது பற்றிய செய்தி முதலில் எனக்கு வரும. அதற்குப் பிறகு கடிதம் எனக்கு வரும். அஞ்சலகத்தில் எனக்குக் கடிதங்கள் வந்தால், என்னிடம் அஞ்சலகத்தினர் ஒரு கடிதத்தைக் கொடுக்கும்போது "இன்னொரு கடிதம் உங்களுக்கு இருக்கிறது. அது பிற்பாடு வரும்" என்று தெரிவிப்பதுண்டு. நான் இதுபற்றி வருத்தம் தெரிவிக்காததற்குக் காரணம் என்னவென்றால், அஞ்சலகத்தினர் எங்களுக்கு வரும் கடிதங்களைப் படித்துப் படித்து எங்களை ஆதரிப்பவர்களாக ஆகியிருக்கிறார்கள். எங்கள் கடிதங்களை இவ்வாறு படிக்கும் முறையைக் கையாளலாமா என்று கனம் அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, if the suggestion of the hon. Member is that no letters addressed to any member, merely because he is in the Opposition, be opened or censored, I am sure I cannot give that assurance, because the responsibility for the maintenance of law and order and the maintenance of certain standards rests with the Intelligence Department and they have to exercise their functions. All I can say is, I can ask the Department to do it with care and consideration and taking all circumstances of the case into account. We cannot give a blanket order saying that no censor or no interference with the letters or with the activities of any person, should be made. It is not possible.

Sir, the hon. Member Sri Ethirajulu wanted that the 12-00
'Washerman' and 'Barber' communities should be classified as noon.
scheduled castes. They have already been classified as the 'Most Backward Communities' and they are in receipt of certain facilities such as scholarships, etc. This is a matter in which I am afraid the Government do not want to go on adding to the list of scheduled castes and tribes, because the endeavour should be, as far as possible, to minimise this sort of classification, and bring all the people on a level of equality rather than increase the number of these scheduled castes and tribes and so on. Whatever facilities the hon. Member wants for certain communities,

the Government can consider. But they cannot go on classifying people who do not belong to the Scheduled Classes and scheduled tribes as such. So far as educational concessions are concerned, the hon. Member Sri Ethirajulu himself knows that we have given them these facilities. The only thing is that the Government have said that to earn a scholarship the candidates should have obtained a minimum number of marks. If they had not got the minimum, they cannot get the scholarships. What I understood from the hon. Member's submission was that even this minimum mark should be removed in the case of these candidates. In that case, it will be very difficult really to select the students who want to continue their studies and those who do not want to study. It will become a sort of part time employment. Without any intention to taking to studies, they will simply sit in the classes, merely because they get the scholarships. Now that should be discouraged. Therefore, the minimum is prescribed.

The hon. Member Srimathi Tirupurasundari Ammal talked about fees being collected by some educational institutions. I am afraid, I have not caught the point very correctly. So far as elementary schools are concerned, education is free. Nobody charges any fees. But there are nursery schools run by private people and they are entitled to charge. There is no good in the hon. Member saying that the nursery schools are charging fees. But the primary schools do not and cannot charge any fees. There is no instance in which a primary school has charged any fees. If any such school has charged any fees, it may be brought to the notice of the Government and the Government will take appropriate action.

Mr. CHAIRMAN : I think the hon. Member was referring to donations being compulsorily recovered or collected.

The Hon. Sri R. VENKATARAMAN : I would like to know whether it is in elementary schools or in nursery schools.

*திருமதி டி. எல். திரிபுரசுந்தரி :* எலிமெண்டரி பள்ளிகள்.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :* இதைப் பற்றி அங்கத்தினர் எழுதி அனுப்பினால் சர்க்கார் அதைக் கவனிக்கும். பிரைவேட் மேனேஜ்மெண்ட்டாக இருந்தாலும் சரி, சர்க்கார் மேனேஜ்மெண்டாக இருந்தாலும் சரி, எலிமெண்டரி பள்ளிகளில் சம்பளம் வாங்கமுடியாது.

Then, Sir, the hon. Member Sri A. K. Thangavel Mudaliar also made a few points, and he said that there had been some wasteful expenditure in regard to the construction of the Kancheepuram bus stand. The matter has been just brought to our notice by the hon. Member. I have no information about it. Anyway this will be referred to the Hon. Minister for Local Administration for his attention.



Sir, in regard to the distribution of fertilizers, I want to explain the position and also the procedure. If the co-operative loans are given in cash, many people do not use it for buying fertilizer. They spend it on other purposes. Therefore the Government have insisted that the co-operative loans which are distributed should be in the shape of fertilizers, seeds, etc. The disbursement of loans is linked to certain distribution societies. Therefore in those societies they will only give on credit against the loans that are to be sanctioned by the co-operative credit society. Out of the total loan sanctioned, say 40 or 50 or 60 per cent of the loan will be distributed as fertilizer, seed and so on, and this is linked to the co-operative society which distributes the fertilizers and, therefore, the society says that it cannot sell for cash but gives only to those who have been sanctioned the loans and who, in turn, have to take the loans in the shape of fertilizer, seeds, and so on.

*திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் :* கூட்டுறவு ஸொஸைடிகளிலெல்லாம் கடன் தான் கொடுக்கிறார்கள் ; அங்கே ரொக்கம் கொடுப்பதில்லை. மற்ற இடங்களில், கடன் இல்லாமல் ரொக்கமே கொடுப்பதாகச் சொல்வதற்கில்லை. சர்க்கார் உதவி அளிப்பது கூட்டுறவு ஸொஸைடியின் மூலம் தான். இரண்டு கடைகளில் பணம் கொடுக்கப்படும் நிலை இருந்து, ஒன்றில் கடனும், மற்றொன்றில் ரொக்கமும் கொடுக்கப்பட்டால் 'அங்கே போ' என்று சொல்ல முடியும். இப்போது இருக்கிற கடை, ஒரே கடை தான்.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :* திரு. தங்கவேல் முதலியார் அவர்கள் பணமே கொடுக்காமல், சுலபமாக, கடனே வாங்கிக் கொண்டிருக்கலாம். அது ரொம்பவும் நல்லது தான். அவர் தன்னிடம் இருக்கும் பணத்தை 'இன்வெஸ்ட்' பண்ணினால் அவருக்கு நிறைய 'இன்டெரெஸ்ட்' வரும். இந்தக் கூட்டுறவு ஸொஸைடியினர் நிறைய 'இன்டெரெஸ்ட்' சார்ஜ் பண்ணுகிறார்கள்.

*திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் :* இந்தக் கடையில் சரக்குகள் கடனுக்குக் கொடுக்கப்படுகின்றன. சிலர் கடனே வாங்கக் கூடாது என்று நினைக்கிறார்கள். சிலர் 'இவர்களிடம் கடன் வாங்க வேண்டாம், வேறு இடத்தில் கடன் வாங்கிக் கொள்ளலாம்' என்று நினைக்கிறார்கள். சிலர் எப்போதும், எதற்கும், கடன் வாங்க விரும்புகிறார்கள். இவ்வாறு மூன்று விதமான மனிதர்கள் இருக்கிறார்கள். இரண்டு கடைகள் இருக்கின்றனவா, இல்லையா என்று பார்க்காமல் நான் பேசவில்லை. இன்னொரு கடை இல்லவே இல்லை.

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, all these arise out of short supply. We have to give to the co-operatives because they have the highest priority, and since we want the small cultivator, who borrows money for the purpose of cultivation to get the sort of preference in the distribution of fertilizers, it is being done in that way. When the fertilizer supply increases, certainly

[28th March 1966

it will be channelled through different sources and the members will be able to purchase for cash. This is all I have to say. Thank you, Sir.

MR. CHAIRMAN : The discussion on the Final supplementary statement of expenditure for 1965-66 is over.

### V.—DISCUSSION ON THE STATE PLAN SCHEMES—*cont.*

MR. CHAIRMAN : We will now continue the discussion on the State Plan schemes. The hon. Member Sri O. P. Ramaswami Reddiar will now speak.

**திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்** : கனம் தலைவர் அவர்களே, நான் சில பொது விஷயங்களைப் பற்றிப் பேச விரும்புகிறேன்; ஏனென்றால் எனக்கு பட்ஜெட் பிரதி கூடக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் நான் பொது விஷயங்களைப்பற்றித் தான் பேச முடியும். இதற்கு நான் யார் பேரிலும் குற்றம் சொல்லவில்லை. எனக்கு வர வேண்டிய பட்ஜெட் பிரதி போன்றவைகளை யாரோ வாங்கி எங்கேயோ போட்டுவிட்டார்கள். எனக்குத் தெரியாத விஷயத்தைப் பற்றிப் பேச நான் தயாராயில்லை. பேச வேண்டிய விஷயம் சம்பந்தப்பட்டவைகளை நான் படித்திருந்தாலொழிய அவைகளைப் பற்றிப் பேச முடியாது. இப்போது சில பொது விஷயங்களைப் பற்றிப் பேச விரும்புகிறேன்.

இப்போது உணவுப் பிரச்னை ரொம்பவும் தொல்லையுள்ளதாக இருக்கிறது. அதன் காரணமாக எங்கே பார்த்தாலும் கூச்சலும் கலகமுமாக இருக்கிறது. இந்தக் கலகங்கள் போன்றவை பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் பிரசுரமாவதை இந்த அரசாங்கத்தார் ஏன் அனுமதிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இன்னொரு ராஜ்யத்தில் சிலர் எதையாவது கொளுத்தினால் இந்த ராஜ்யத்திலும் சிலர் எதையாவது கொளுத்துகிறார்கள். நேற்று 5 இடங்களில் கொளுத்துதல் நடந்ததாகப் பத்திரிகையில் படித்தேன். இவ்வாறு பத்திரிகையில் பிரசுரமானால், "இங்கேயும் கொளுத்து" என்று சொல்லுவதாக அதற்கு அர்த்தம். இருக்கிற தொல்லை போதாதென்று இது இன்னும் தொல்லை கொடுப்பதாக இருக்கிறது. தடுக்க வேண்டியதைத் தடுக்க வேண்டும். தடுக்க வேண்டியதைத் தடுக்காமல் தடுக்கத் தகாதவற்றைத் தடுத்தால் என்ன பிரயோஜனம்? கனம் அமைச்சர்கள் சொல்லுவதை ஆபீஸர்கள் சரியாக carry out பண்ணுவதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட நிலைமை எவ்வளவு காலம் இருப்பது? கனம் அமைச்சர்கள் 'அஷ்யூரன்ஸ்' கொடுத்தால் பிறகு அவர்கள் தொல்லைக்கு ஆளாகிறார்கள். ஆபீசர்கள் கொடுக்கும் தகவலைப் பார்த்து கனம் அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. நாங்களெல்லாம் ஒரு மாதிரியாக இருந்தவர்கள். இப்போதுள்ளது போன்ற நிலைமையை நான் 'டாலெரேட்' (tolerate) பண்ணவே மாட்டேன். நிலைமை இப்படி இருந்தால் யார் தான் அரசாங்கத்தை எப்படி நடத்த முடியும்? ஆகையால் 'பெர்மனெண்ட் ஸெர்விஸ்' சரியாக நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் சரியான முறையில்



28th March 1966] [திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்]

நடந்துகொள்ள தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்காக unit of work ஆவது fix செய்ய வேண்டும். அவர்களைக் கவனிக்க ஸி.ஐ.டி. போடலாம். அவர்கள் சரியாகச் செயலாற்றவில்லையானால் அவர்களுக்கு ஸி.ஐ.டி. போடலாம். எல்லாம் சரியாக carra out பண்ணப்பட முடியாவிட்டால், இப்போதுள்ள அமைப்பை கலைத்துவிட்டு டிக்டேட்டர் ஷிப்' முறையைக் கொண்டுவரலாம். இப்போதுள்ள நிலைமைஇப்படியே நீடித்தால் நானும் பேச முடியாது, நீங்களும் பேசமுடியாது. அந்த நிலைமை வரக்கூடாது என்று நான் விரும்புகிறேன். அதிகாரிகள் அவர்கள் செய்ய வேண்டியதைச் செய்யாவிட்டால் மந்திரிகள் என்ன செய்ய முடியும்? சில சமயங்களில் வரும் தகவல்களைப் பார்த்தால், செய்யப்பட்டவைகூட செய்யப் படாமல் இருப்பதாக அவை தெரிவிப்பது தெரியும். தகவல்கள் சில சமயங்களில் அந்த முறையில் வருகின்றன. நான் சபைக்கு வந்தால் இப்படியெல்லாம் பேசுகிறேனே என்று சிலர் நினைக்கக்கூடும். அரசாங்கம் நன்றாக நடக்க வேண்டும். ஏன்? நானும் மற்றவர்களும் பிழைக்க.

**திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்** : தினத்தந்தி பத்திரிகையில் 'ஆண்டிப்பண்டாரம்' என்ற பகுதியில் பிரசுரமாவதை கனம் அங்கத்தினர் படித்திருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன். இருக்கிறதை, எதையாவது பிரசுரிப்பது என்ற முறையில் பத்திரிகைக்காரர்கள் நியூஸ் பேப்பரில் பல விஷயங்களைப் பிரசுரிக்கிறார்கள்.

**திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்** : அதை நான் இதுவரையில் படிக்கவில்லை. நாங்களெல்லாம் ஒரு மாதிரியாக இருந்தவர்கள். இப்போதுள்ளது போன்ற நிலைமையை நான் tolerate பண்ண மாட்டேன், நாட்டில் இப்போது எவ்வளவோ தொல்லைகள் இருக்கின்றன. பத்து மாநிலங்களில் இப்போது மழை பெய்யவில்லை. இந்த ராஜ்யத்தில் 10 நாட்கள் மழை பெய்தது. அந்த மழையில் நஞ்சை பயிர் தான் கொஞ்சம் விளைந்தது; புஞ்சைப் பயிர் விளையவில்லை. விளைந்த தானியங்களிலும் பூச்சி புழுக்கள் இருக்கின்றன. தானியங்களை ஆங்காங்கே நல்ல முறையில் 'ஸ்டாக்' பண்ணி மக்களுக்குக் கொடுத்தால் நல்லது. இந்த அரசாங்கத்தார் கண்ட்ரோலைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாவற்றையும் தங்கள் தலையில் போட்டுக்கொள்கிறார்கள். எல்லோரும் திருடுகிறார்கள். பேசுவது ஒன்றும் செய்வது வேறொன்றுமாக பலர் இருக்கிறார்கள். நாட்டில் 99 சதவிகிதத்தினர் ஏழைகளாக இருக்கிறார்கள். அவர்கள் கூச்சல் போடுகிறார்கள். பலர் தங்கள் கடமையை சரியாகச் செய்யாததால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமை நீடித்தால் குட்டி 'டிக்டேடர் ஷிப்' நிலைமை வரும், 'தடி எடுத்தவன் தண்டல்காரன்' என்ற நிலைமை வரும்.

சும்மா மினிஸ்ட்டர்களைப் பிடித்துக்கொண்டு பேசுவதில் பிரயோசனம் இல்லை. நானும் மந்திரிகளை ஒன்று கேட்கிறேன். எப்போது பார்த்தாலும் ஊரை ஏன் சுற்றுகிறீர்கள்? அந்த மாதிரி

கேட்டதால் தான் நான் ' unpapular ' ஆனேன். இருந்தாலும் நான் இப்போதும் கேட்கிறேன். எப்பேசது பார்த்தாலும் ஊர் ஊராக போய்க்கொண்டிருந்தால் வேலை செய்வதற்கு 'டைம்' எங்கே இருக்கும்? இதை யாராவது ஒருவர் சொல்லித்தானே ஆக வேண்டும். சொன்னால் எல்லோருக்கும் கோபம் வருகிறது. எனக்கு என்ன சொல்லுவது என்றே தெரியவில்லை. இந்த நிலையில் சாப்பாடு, துணி, கல்வி வசதி கேட்கிறோம். கல்வித் துறையில் முன்னே பேசியவர் சொன்னார் அவர்களுக்கு வசதி இல்லை, இவர்களுக்கு வசதி இல்லை என்று. இப்படி ஒவ்வொருத்தரும் பிரித்துப் பிரித்து பேசிக்கொண்டே போனால் யாருக்குத்தான் கிடைக்கும்? நான் சொல்வது இவைகளையெல்லாம் சரியான முறையில் கொடுங்கள், இல்லாவிட்டால் abolish பண்ணிவிட்டு வேலையைப் பாருங்கள். அவசவர்கள் இஷ்டப்படியெல்லாம் distribute செய்ய முடியுமா? அப்படித்தானே நம்மைப் பிடித்துக்கொண்டு தொல்லை செய்கிறார்கள். எதிலே எடுத்தாலும் 'அது சரியில்லை, இது சரியில்லை' என்கிறார்கள். அதிலேயும் உண்மை இருக்கிறது. ஆகையால் இப்படிப் பிரித்துக்கொண்டே போனால் என்ன ஆவது? எந்த ஜாதிக்கு என்று தான் செய்வது? நம்நாட்டில் எல்லோருமே ஏழை தான். 100-க்கு 90 பேர் ஏழை. எவனுக்கு என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை. வரியைப் போட்டிருப்பதைப் பார்த்தால் 16 கோடியிலிருந்து இப்போது 185 கோடி அளவுக்கு போட்டிருக்கிறோம். வரி யார் கொடுக்கிறான்? அவனுக்கு என்ன சலுகை செய்கிறோம்? உத்தியோகத்தில் இருப்பவர்கள், மற்றவர்களுக்கு, சலுகை இல்லை என்று சண்டை போடுகிறோமே, இவ்வளவு வரியையும் இவனைவிட ஏழையாக இருக்கிறவனிடம் இருந்துதானே வாங்குகிறோம்? அவன் சௌகர்யத்திற்கு நாம் என்ன செய்கிறோம் என்று யோசிக்க வேண்டும். இப்படி பல துறைகளிலும் பல தொல்லைகள். ஒவ்வொருவரும் தன் தன் கடமையைச் சரியான முறையில் செய்துகொண்டு வந்தால் தான் இந்தத் தொல்லைகள் எல்லாம் சீக்கிரமாகப் போகும். எந்தக் கட்சியாவது இருக்கட்டும் எந்த அரசாங்கமாவது இருக்கட்டும். தகுந்த முறையில் எல்லோரும் வேலை செய்தால் ஒழிய—சம்பளம் மட்டும் வாங்கிக் கொண்டால் போதும் என்று நினைத்தால்—ஒன்றும் நடக்காது. ஜனங்கள் சும்மா இருக்க மாட்டார்கள். இப்போது ஜனங்கள் organised ஆக இல்லை. அதனால் நாம் advantage எடுத்துக் கொள்வதா?

விவசாயிகளைத் தொல்லைபடுத்தினால் என்ன ஆகும் உற்பத்தி என்று தெரிந்துவிட்டது. உற்பத்தி குறைந்துபோய்விட்டது. இன்னும் கோவாப்பரேடிவ் முறையில் தங்கவேல் முதலியார் சொன்னார். 'அவன் அப்படி நடக்கிறான், இவன் இப்படி நடக்கிறான்' என்று. இதெல்லாம் உண்மை தான். அரசாங்கமே எல்லாவற்றையும் செய்கிறோம் என்று எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டால் அவைகளை சரியான முறையில் செய்ய வேண்டும், இல்லாவிட்டால் விட்டுவிட வேண்டும்.





**திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர்:** மினிஸ்டர் டூர் பற்றி சொன்னார். எல்லா social works லேயும் அவர்களைக் கூப்பிடுகிறார்கள். ஒரு உதாரணம் சொல்கிறேன். இராமலிங்க சங்கத்திற்கு 5 மணிக்கு அழைத்திருந்தார்கள். நாங்கள் 6 மணிக்கு அழைத்திருந்தோம். இதிலே எல்லாம் கலந்து கொள்ளத்தானே வேண்டியிருக்கிறது.

**திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்:** அப்புறம் அந்த வேலைகளைத் தான் பார்க்க முடியும். ஆபீஸ் வேலையைப் பார்க்க முடியாது. நான் அப்படி பண்ணிக்கொண்டு இல்லையா? அதிலே தானே unpopular ஆனேன். கடமையைச் செய்ய அந்த இடத்திலே இருந்துகொண்டு நம் கடமையைச் செய்யவில்லை என்றால் என்ன அர்த்தம்? இவர்கள் போவது என்று க்கூப்பிட்டுக் கொண்டே தான் இருப்பார்கள். ஏதோ 10 நாளைக்குப் போங்கள். 20 நாளைக்கு வேலையைப் பாருங்கள். 'அந்தக் கட்சி என்கிறீர்கள், இந்தக் கட்சி என்கிறீர்கள்? இன்னும் ஓட்டு வாங்க வேண்டும் அதற்கெல்லாம் போய்த்தான் ஆக வேண்டும். அப்படி எவ்வளவோ தொல்லைகள் இருக்கின்றன. அரசாங்கத்தை யார் நடத்தினாலும், அது எந்தக் கட்சியாக இருந்தாலும், தகுந்த முறையில் நடத்தி, வேலை செய்ய தயாராக இருந்தால் ஒத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் சும்மா Criticise செய்துகொண்டே இருக்க வேண்டியது தான். சென்ட்ரல் கவர்மெண்ட் ஆகட்டும், இந்த அரசாங்கம் தான் ஆகட்டும், இப்படி நடந்தால் அரசாங்கத்தை எப்படி நடத்துவது?

**திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்:** எல்லாவற்றையும் நாம் தானே செய்து கொண்டோம். 'எல்லாவற்றையும் நாங்களே செய்கிறோம் என்று சொல்லிவிட்டு, செய்யாவிட்டால் நாம் சும்மா விட முடியுமா?

**திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்:** அதைத் தான் நானும் கூறுகிறேன். செய்ய வேண்டிய கடமையைத் தகுந்த முறையில் செய்ய வேண்டும். 'கடமையைச் செய்; உண்மையைப் பேசு" என்று சொல்லுகிறோம். இரண்டுமே இப்போது இல்லை. "சத்ய மேவ ஜயதே" என்று மட்டும் போட்டுக்கொண்டிருக்கிறோம். பேசுவது ஒன்று, நடப்பது ஒன்று என்றால் எது சரியாக இருக்கும் ஆகவே ஒவ்வொருவரும் தன்னைத்தானே திருத்திக்கொண்டாலொழிய இந்த நாட்டுக்கு விமோசனம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மேலே பிரசிடெண்டில் இருந்து கீழே சாதாரண தோட்டி வரையிலும் அப்படித் தான் இருக்கிறது. காரணம் என்ன? எதற்காக நம்மைக் குறை கூறுகிறார்கள்? அரசாங்கம் நம் கையிலே இருக்கிறது. நாம் இவைகளைக் கண்ட்ரோல் செய்ய முடியவில்லை என்றால் அதனுடைய reflection வேறு விதமாக இருக்கிறது. தொல்லைகள் மூலம் நமக்குத் தொந்தரவு தருகிறார்கள். இவைகளையெல்லாம் ஒவ்வொருவருமே யோசிக்க வேண்டும். யோசிக்காவிட்டால் என்ன ஆகும்? பக்கத்தில் என்ன நடந்தது? இந்தோனேஷியாவில் என்ன நடந்தது? அப்புறம் சைனாக்காரன் உள்ளே புக ஆரம்பிப்பான். 12-20 p.m.

வியாபாரம் பண்ணுகிறவன் தப்பு செய்கிறுன். உத்தியோகம் செய்கிறவன் தப்பு பண்ணுகிறுன். நாமும் தப்பு பண்ணுகிறேம். இப்படி எல்லோரும் தப்பு பண்ணிக்கொண்டு இன்னொருத்தனை மட்டும் குறை கூறினல் என்ன செய்வது? ஆகையால் ஒவ்வொருவனும் தன்னைத் திருத்திக்கொண்டாலொழிய ஒன்றும் செய்ய முடியாது. அவனவனே அவனவனுக்குச் சட்டம் போட்டுக் கொள்ள வேண்டும். அது தான் முன்னே நடந்தது. இப்போது இல்லை. பள்ளிக் கூடங்களிலேயே இது இல்லை. பள்ளிக்கூடங்களுக்கு இந்த வருஷம் 45 கோடி ஒதுக்குகிறேம். படிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு எவன் படிக்கிறுன்? வீட்டில் யாரும் சொல்லுவதே இல்லை. நான் கூட ஒரு பள்ளிக்கூடம் வைத்து இருக்கிறேன். அங்கே பிள்ளைகள் படிப்பதே இல்லை. அதை abolish பண்ண வேண்டும் என்று நினைக்கிறேன். படிக்காத பிள்ளைகளுக்கு எதுக்காக சங்கத்திலே இருந்து சாப்பாடு, துணி, புஸ்தகங்கள் எல்லாம் கொடுக்க வேண்டும்? அரசாங்கம் கொடுக்கிறது என்றுல் அது எங்கே இருந்து கொடுக்கிறது? உங்களிடமும் எங்களிடமும் இருந்து வாங்கித்தானே தருகிறது. இப்படிப் பல தொல்லைகள் இருக்கின்றன. இது இப்படியே இருந்தால் நாம் ஒன்றுமே செய்ய முடியாது. நாம் எல்லாம் தவறுதலாக இருக்கிறேம். என் வார்த்தையைப் பொய்யாக்க நாளைக்கே ஏற்பாடு செய்தால் நன்றுக இருக்கும்.

நானெல்லாம் பழைய ஆள். எல்லாம் efficient ஆக இருக்க வேண்டும் என்று நினைக்கிறவன். இவ்வளவு ஊழல் நான் எப்போதும் பார்த்தது இல்லை. நாம் முன்னே எப்படி இருந்தோம். இப்போது எப்படி இருக்கிறேம் என்று பார்க்க வேண்டும். நம்மை நாமே திருத்திக்கொள்ள வேண்டும். அவன் தப்பு செய்கிறுன் என்று சொல்லிக்கொண்டே நாமும் தப்பு செய்வதா? அந்த மாதிரி எண்ணம்தான் அதிகமாகியிருக்கிறது. இந்த மாதிரி இருந்தால் பிரயோசனம் இல்லை. நான் ஏதோ சொல்லுகிறேன், கேட்டால் கேளுங்கள், கேட்காமல் நாசமாய்த் தான் போவோம் என்றுல் போங்கள். நானும் கூட இருந்து நாசமாகப் போகிறேன். அந்த நிலையில் தான் இருக்கிறது சென்ட்ரல் கவர்மெண்டும் மற்ற எல்லா கவர்மெண்டுமே. இயற்கையும் அப்படித் தான் இருக்கிறது. நாமும் அதற்குத் தகுந்தாற்போல அயோக்கியத்தனம் செய்துகொண்டிருந்தால் எப்படி அரசாங்கத்தை நடத்துவது? அதிலும் எல்லாத் தொல்லைகளையும் இவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறுர்கள். எல்லாவற்றையும் நாங்களே நடத்துகிறேம் என்று சொல்லிவிட்டு நாமே சரியாக வேலை செய்யாமல் மற்றவனைப் பார்த்து தப்பு சொல்லுகிறேம். அதைப் பார்த்துவிட்டு மற்றவனும் நமக்கு தப்பு information கொடுக்கிறுன். நாம் தவறு செய்யும் நிலைமை வருகிறது. ஆகவே இதையெல்லாம் பார்த்து சரியானபடி செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை:** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கும் 4-வது ஐந்தாண்டுத் திட்ட முதற் குறிப்பில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.





இது நமது மாநிலத்தைப் பொறுத்த அளவில் உள்ள 4-வது ஐந்தாண்டுத் திட்டம். நமது மாநிலத்தின் தென்கோடிப் பகுதியில் இதுவரை ரயில் இணைப்பு இல்லை. அது இந்தத் திட்டத்தில் இடம் பெறுது என்பது எனக்குத் தெரியும். ஏனெனில் நமது மத்திய திட்டத்தில் இதற்கு நிதி ஒதுக்க வேண்டிய நிலை உள்ளது. நமது மாநிலம் இதற்கு முதலிடம் கொடுத்து, 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்கோடி முனையான திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயில், கன்னியாகுமரி வரை ரயில் இணைப்புச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமது மத்திய அமைச்சராகவிருந்த திரு. டி.டி.கே. அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்யும்போது மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியிலோ அல்லது நான்காவது திட்டத்திலோ இந்த ரெயில்வே திட்டத்தை அமுல் செய்கிறேம் என்று உறுதி கூறினுர்கள். சேர்க்கப்பட்டிருப்பதாக எங்கும் தெரிவிக்கப்படாதது, அந்தப் பகுதியில் வாழ்கிற மக்களுக்கு பெரும் வேதனையாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் இவை தொழில்துறையில் பின்னணியில் இருக்கின்றன. குளச்சல் போன்ற துறைமுகங்கள், தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்தப்படும்போது அந்தப் பகுதி முழுவதும் ரயில் மூலமாக இணைப்பது அந்தப் பகுதியின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, மாநிலத்தின் வளர்ச்சிக்கு துணையாக இருக்கும். உதாரணமாக இந்தப் பகுதிகளிலுள்ள மரங்களின் விலையைவிட கன்னியாகுமரி மாவட்டத்தில் மரங்கள், பலகைகள் மிகவும் குறைந்த விலையில் கிடைக்கின்றன. நான் இதுபற்றி வியாபாரிகளைக் கண்டு கேட்டபோது அவர்கள், மதுரையிலிருந்து வாங்கிச் செல்கிறுர்கள் என்று தெரிந்தது. மதுரைப்பகுதியில் கிடைப்பதைவிட குறைந்த விலையில் கன்னியாகுமரியில் கிடைத்தாலும் அதைப் பயன்படுத்த முடியவில்லை. காரணம், கன்னியாகுமரியில் வாங்கி அவற்றை லாரியில் கொண்டுவரும் செலவு 500 ரூபாய் ஆகிறது. சிரமமும் இருக்கிறது. அதனுல் விலை கூடுதலாக இருந்தாலும் மதுரைப் பகுதியில் வாங்குகிறேம் என்கிறுர்கள். மாநில வளர்ச்சிக்கு அங்கே ரயில் இணைப்பு அவசியமானது. நான்காவது திட்டத்தில் சேர்க்கும் வகையில் மத்திய திட்டத்தில் முதல் சலுகையில் இதைக் கொண்டுவர மாநில அரசாங்கம் வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, நமது நான்காவது திட்டத்தில் உணவு உற்பத்திக்கு ஏற்ற நிலையில் தண்ணீர் வசதியை அதிகப்படுத்தும் நிலையில் பல சிறு பாசனத் திட்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறுர்கள். அதில் இன்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் பயன்படுகிற நீர் எவ்வளவு என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமது சென்னை மாநிலத்தில் தண்ணீர் பற்றுக்குறை இருப்பதால் கேரளாவிடம் தண்ணீர்ப் பிச்சை கேட்கிறேம். அவர்கள் கடலில் சென்றுலும் பாவாயில்லை உங்களுக்கில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறுர்கள். நமது பகுதியில்

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [28th March 1966

12-30 p.m. சிறு பாசனத் திட்டங்கள் ஏற்படுத்தும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சர்வே செய்த முன்னாள் ஆங்கிலேய இன்சினியர் கோதையார் திட்டம் ஒன்று அமைத்திருக்கிறார். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு சர்வே செய்த மாம்பழத் துறை அணைத்திட்டமும், பொய்கை அணைத் திட்டமும் குறிக்கப்பட்டிருக்கின்றன. கோதையாறு அணைத்திட்டங்களில் இவை உட்பட்டன. அதையும் சர்வே செய்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றி திருநெல்வேலி மாவட்டத்திற்கும் மற்ற பகுதிகளுக்கும் பயன்படச் செய்யலாம். டன்னல் போட்டு மலையைக் குடைந்து கொண்டுவரும்படி செய்து அதனைப் பயன்படுத்தினால் மற்றவர்களிடம் சென்று பிச்சை கேட்காமல் இருக்கும் வாய்ப்பை அது அளிக்கும். குளச்சல் துறைமுகம் சிறு துறைமுக வளர்ச்சித் திட்டத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரையில் எந்தவிதமான அபிவிருத்தியும் செய்யப்படவில்லை. நான்காவது திட்டத்தில் சேர்த்திருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் வரையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதலிடம் கொடுத்து குளச்சல் துறைமுகத்தை சிறப்பாக அமைத்தால் முன்னேற்றமளிக்கும். மேல்நாட்டவர்கள், குறிப்பாக பிரஞ்சு நாட்டவர்கள் குளச்சல் துறைமுகம் வழியாக அந்தப் பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததை வரலாற்றின் வாயிலாக அறிய முடிகிறது. பிரஞ்சு தளபதியின் சிலை அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. நான்காவது திட்டத்தில் அதைச் சேர்த்திருக்கிறோம். பல திட்டங்களைத் தெரிவித்து பிறகு செய்வதற்கு முடியாமல் விட்டுவிடுவதைப்போல இல்லாமல் இருக்கவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்கிறேன். நமது பகுதியின் கிழக்கு கடற்கரைத் துறைமுகங்களில் லீ புரம் துறைமுகம் ஒன்று. அங்கே பல கப்பல்கள் வந்து தங்கிச் சென்றதற்கான அடையாளங்கள் தென்படுகின்றன. அதையும் பயன்படுத்திக்கொண்டால் தூத்துக்குடி துறைமுகத்திற்கு இணையாக வைத்துக் கொள்ள முடியும். அதைப்பற்றியும் குறைந்தளவு பரிசீலனையாவது செய்ய முற்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

நான்காவது திட்டத்தில் ஆரம்பப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியரைத் தலைமை ஆசிரியராக நியமிக்கவேண்டும். கல்வித்தரம் உயர்ந்தால்தான் நம் நாட்டினுடைய திட்டம் வளரும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பாராட்டவேண்டியது. நான்காவது திட்டம் முதற்குறிப்பு 109-ம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பல பள்ளிகளில் ஆரம்பப்பள்ளியில் பணிபுரிந்துவருகிற செகண்டரி கிரேடு ஆசிரியர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருக்கக் கூடாது என்று விதித்து அவர்களுக்கு எலிமெண்டரி கிரேடு சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால் திட்டத்தில் ஆரம்பப் பள்ளி தலைமையாசிரியர் பட்டதாரி ஆசிரியராக இருக்கவேண்டுமென்று வருத்துக் கொள்கிறோம். நிர்வாக நடைமுறையில் அப்படியில்லை. தேசிகவிநாயகர் உயர்நிலைப்பள்ளியில் 1963-ல் உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்த ஆரம்பப்பள்ளியில் 6 செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இருந்தார்கள். 1964-ல் 6 செகண்டரி கிரேடு



28th March 1966] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

ஆசிரியர்கள் இருந்தார்கள். 1965-ல் 6 செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்றப்பட்டு அதற்குரிய சம்பளம் கொடுக்கவேண்டுமென்று விதித்து இந்த கல்வி வருடம் முழுவதும் சம்பளம் வாங்காமல் இருக்கிறார்கள். நாம் திட்டங்களை எழுதுகிறோம். நடைமுறையில் அது நடைபெறுவதில்லை. அது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்றால், தெரியாது என்று நினைக்கிறேன். அங்குள்ள கல்வி அதிகாரிகள் தவறு செய்கிறார்கள். அது அவர்களின் தவறுதான் என்றாலும் அரசாங்கம்தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதிகாரிகள் மீது குற்றம் சொல்லிப் பயனில்லை. திட்டங்களில் உயர்ந்த கல்வி பார்த்தவர்களை நியமிக்கவேண்டுமென்று வைத்துக்கொண்டு எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்கள்தான் இருக்கலாம் அங்கே என்று கல்வி அதிகாரி சொல்வது தவறு. மெட்ராஸ் எஜுகேஷனல் ரூலில் உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்த ஆரம்பப் பள்ளியிலும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைச் சேர்ந்த ஆரம்பப்பள்ளியிலும் ஆசிரியராகவரும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் அனைவரும் செகண்டரி கிரேடு ஆசிரியராக இருக்கலாம் என்று சட்டமே செய்திருக்கிறார்கள். செயிண்ட் ஜோசப் கான்வெண்டு, தேசிக விநாயகர் உயர்நிலைப் பள்ளி போன்றவற்றில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் எலிமெண்டரி கிரேடில்தான் இருக்கவேண்டி வற்புறுத்தப்படுகிறார்கள். செகண்டரி கிரேடு ஆசிரியராக பணியாற்றி வருபவர்கள் கூட சம்பளம் பெறாமல் இருக்கிறார்கள். இதனை உடனடியாக அரசாங்கம் கவனிக்கவேண்டும். இதுவரை அதுபோன்ற தொல்லை கொடுத்த அதிகாரிக்கு சரியான குறிப்பீடு அனுப்பி எக்ஸ்பிளனேஷன் கேட்டு ஏன் இந்தத் தொல்லையைச் செய்தீர்கள் என்று கேட்டால் தான் இன்னுமாவது அதுபோன்ற தொல்லைகள் ஏற்படாமல் இருக்குமென்று எடுத்துக்கூற விரும்புகிறேன். குளச்சல் உயர்நிலைப்பள்ளி, தூத்தூர் பயஸ் பள்ளி, ஜெரோனிபுரம் உயர்நிலைப்பள்ளி இவற்றில் எல்லாம் கழிந்த ஆண்டு இருந்தது போன்ற வகுப்புக்கள் அனுமதிக்கப்படாததால் பல ஆசிரியர்கள் கஷ்டப்படுகிறார்கள். குளச்சல் உயர்நிலைப்பள்ளியில் 14 வகுப்புக்கள் இருந்தன. இந்த ஆண்டு 13 வகுப்புக்களுக்குத்தான் அனுமதி அளித்திருக்கிறார்கள். அனுமதி அளிக்க மறுத்ததால் தொடர்ந்து வேலை பார்த்த ஆசிரியர்கள் ஒரு வருஷம் சம்பளம் வாங்காமல் இருக்கிறார்கள். நான்கு வருஷம் தொடர்ந்து வேலை பார்த்தவர் குளச்சல் பள்ளியில் சம்பளம் வாங்காமல் இருக்கிறார். அந்தப் பகுதியிலுள்ள அதிகாரிகள் செய்யும் தவறுதும் இது. எஸ்.எஸ்.எல்.சி. ரிசல்ட் பின்னால் வெளி வந்தது. அதில் தோற்ற மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி.-யில் சேருவதற்கு காலம் தாழ்ந்தது. எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பை இரண்டு, மூன்று என்று பிரித்து அமைப்பதற்கு பள்ளி துவங்கிய ஆறாவது நாளில் முடியவில்லை. பின்னால் பிரிக்கப்பட்டு அனுமதி கேட்டால் அதற்கு அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். வகுப்பு செயல்படுகிறது, அதில் ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள், மாணவர்கள் படிக்கிறார்கள். ஆசிரியருக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. கல்வி அதிகாரி சட்ட நுணுக்கத்தைக் காட்டுகிறார்.

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [28th March 1966

12-30 p.m. சிறு பாசனத் திட்டங்கள் ஏற்படுத்தும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சர்வே செய்த முன்னாள் ஆங்கிலேய இன்சினியர் கோதையார் திட்டம் ஒன்று அமைத்திருக்கிறார். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு சர்வே செய்த மாம்பழத் துறை அணைத்திட்டமும், பொய்கை அணைத் திட்டமும் குறிக்கப்பட்டிருக்கின்றன. கோதையாறு அணைத்திட்டங்களில் இவை உட்பட்டன. அதையும் சர்வே செய்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றி திருநெல்வேலி மாவட்டத்திற்கும் மற்ற பகுதிகளுக்கும் பயன்படச் செய்யலாம். டன்னல் போட்டு மலையைக் குடைந்து கொண்டுவரும்படி செய்து அதனைப் பயன்படுத்தினால் மற்றவர்களிடம் சென்று பிச்சை கேட்காமல் இருக்கும் வாய்ப்பை அது அளிக்கும். குளச்சல் துறைமுகம் சிறு துறைமுக வளர்ச்சித் திட்டத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரையில் எந்தவிதமான அபிவிருத்தியும் செய்யப்படவில்லை. நான்காவது திட்டத்தில் சேர்த்திருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் வரையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதலிடம் கொடுத்து குளச்சல் துறைமுகத்தை சிறப்பாக அமைத்தால் முன்னேற்றமளிக்கும். மேல்நாட்டவர்கள், குறிப்பாக பிரஞ்சு நாட்டவர்கள் குளச்சல் துறைமுகம் வழியாக அந்தப் பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததை வரலாற்றின் வாயிலாக அறிய முடிகிறது. பிரஞ்சு தளபதியின் சிலை அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. நான்காவது திட்டத்தில் அதைச் சேர்த்திருக்கிறோம். பல திட்டங்களைத் தெரிவித்து பிறகு செய்வதற்கு முடியாமல் விட்டுவிடுவதைப்போல இல்லாமல் இருக்கவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்கிறேன். நமது பகுதியின் கிழக்கு கடற்கரைத் துறைமுகங்களில் லீ புரம் துறைமுகம் ஒன்று. அங்கே பல கப்பல்கள் வந்து தங்கிச் சென்றதற்கான அடையாளங்கள் தென்படுகின்றன. அதையும் பயன்படுத்திக்கொண்டால் தூத்துக்குடி துறைமுகத்திற்கு இணையாக வைத்துக் கொள்ள முடியும். அதைப்பற்றியும் குறைந்தளவு பரிசிலனையாவது செய்ய முற்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

நான்காவது திட்டத்தில் ஆரம்பப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியரைத் தலைமை ஆசிரியராக நியமிக்கவேண்டும். கல்வித்தரம் உயர்ந்தால்தான் நம் நாட்டினுடைய திட்டம் வளரும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பாராட்டவேண்டியது. நான்காவது திட்டம் முதற்குறிப்பு 109-ம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பல பள்ளிகளில் ஆரம்பப்பள்ளியில் பணிபுரிந்துவருகிற செகண்டரி கிரேடு ஆசிரியர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருக்கக் கூடாது என்று விதித்து அவர்களுக்கு எலிமெண்டரி கிரேடு சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால் திட்டத்தில் ஆரம்பப் பள்ளி தலைமையாசிரியர் பட்டதாரி ஆசிரியராக இருக்கவேண்டுமென்று வருத்துக் கொள்கிறோம். நிர்வாக நடைமுறையில் அப்படியில்லை. தேசிகவிநாயகர் உயர்நிலைப்பள்ளியில் 1963-ல் உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்த ஆரம்பப்பள்ளியில் 6 செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இருந்தார்கள். 1964-ல் 6 செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் இருந்தார்கள். 1965-ல் 6 செகண்டரி கிரேடு



28th March 1966] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

ஆசிரியர்கள் எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்றப்பட்டு அதற்குரிய சம்பளம் கொடுக்கவேண்டுமென்று விதித்து இந்த கல்வி வருடம் முழுவதும் சம்பளம் வாங்காமல் இருக்கிறார்கள். நாம் திட்டங்களை எழுதுகிறோம். நடைமுறையில் அது நடைபெறுவதில்லை. அது அரசாங்கத்திற்குத் தெரியுமா என்றால், தெரியாது என்று நினைக்கிறேன். அங்குள்ள கல்வி அதிகாரிகள் தவறு செய்கிறார்கள். அது அவர்களின் தவறுதான் என்றாலும் அரசாங்கம் தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதிகாரிகள் மீது குற்றம் சொல்லிப் பயனில்லை. திட்டங்களில் உயர்ந்த கல்வி படித்தவர்களை நியமிக்கவேண்டுமென்று வைத்துக்கொண்டு எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்கள்தான் இருக்கலாம் அங்கே என்று கல்வி அதிகாரி சொல்வது தவறு. மெட்ராஸ் எஜுகேஷனல் ரூலில் உயர்நிலைப் பள்ளியைச் சார்ந்த ஆரம்பப் பள்ளியிலும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைச் சேர்ந்த ஆரம்பப்பள்ளியிலும் ஆசிரியராகவரும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் அனைவரும் செகண்டரி கிரேடு ஆசிரியராக இருக்கலாம் என்று சட்டமே செய்திருக்கிறார்கள். செயிண்ட் ஜோசப் கான்வெண்டு, தேசிக விநாயகர் உயர்நிலைப் பள்ளி போன்றவற்றில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் எலிமெண்டரி கிரேடில்தான் இருக்கவேண்டி வற்புறுத்தப்படுகிறார்கள். செகண்டரி கிரேடு ஆசிரியராக பணியாற்றி வருபவர்கள் கூட சம்பளம் பெறாமல் இருக்கிறார்கள். இதனை உடனடியாக அரசாங்கம் கவனிக்கவேண்டும். இதுவரை அதுபோன்ற தொல்லை கொடுத்த அதிகாரிக்கு சரியான குறிப்பீடு அனுப்பி எக்ஸ்பிளனேஷன் கேட்டு ஏன் இந்தத் தொல்லையைச் செய்தீர்கள் என்று கேட்டால் தான் இன்னுமாவது அதுபோன்ற தொல்லைகள் ஏற்படாமல் இருக்குமென்று எடுத்துக்கூற விரும்புகிறேன். குளச்சல் உயர்நிலைப்பள்ளி, தூத்தூர் பயஸ் பள்ளி, ஐரேனிபுரம் உயர்நிலைப்பள்ளி இவற்றில் எல்லாம் கழிந்த ஆண்டு இருந்தது போன்ற வகுப்புக்கள் அனுமதிக்கப்படாததால் பல ஆசிரியர்கள் கஷ்டப்படுகிறார்கள். குளச்சல் உயர்நிலைப்பள்ளியில் 14 வகுப்புக்கள் இருந்தன. இந்த ஆண்டு 13 வகுப்புக்களுக்குத் தான் அனுமதி அளித்திருக்கிறார்கள். அனுமதி அளிக்க மறுத்ததால் தொடர்ந்து வேலை பார்த்த ஆசிரியர்கள் ஒரு வருஷம் சம்பளம் வாங்காமல் இருக்கிறார்கள். நான்கு வருஷம் தொடர்ந்து வேலை பார்த்தவர் குளச்சல் பள்ளியில் சம்பளம் வாங்காமல் இருக்கிறார். அந்தப் பகுதியிலுள்ள அதிகாரிகள் செய்யும் தவறாகும் இது. எஸ்.எஸ்.எல்.சி. ரிசல்ட் பின்னால் வெளி வந்தது, அதில் தோற்ற மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி.-யில் சேருவதற்கு காலம் தாழ்ந்தது. எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பை இரண்டு, மூன்று என்று பிரித்து அமைப்பதற்கு பள்ளி துவங்கிய ஆறாவது நாளில் முடியவில்லை. பின்னால் பிரிக்கப்பட்டு அனுமதி கேட்டால் அதற்கு அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். வகுப்பு செயல்படுகிறது, அதில் ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள், மாணவர்கள் படிக்கிறார்கள். ஆசிரியருக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. கல்வி அதிகாரி சட்ட நுணுக்கத்தைக் காட்டுகிறார்.

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [28th March 1966

பள்ளி திறந்த ஆருவது நாள் எஸ்.எஸ்.எல்.சி. ரிசல்ட் அறிவித்தீர்களா? இல்லை. பல சூழ்நிலைகளில் எஸ்.எஸ்.எல்.சி. ரிசல்ட் காலதாமதமாக வந்தது. அதற்குப் பிறகுதான் வகுப்பின் பிரிவினை செய்து கொடுக்க முடியும். இவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு உடனடியாக சம்பளம் கொடுக்கப்படவேண்டும். பல திட்டங்களைக் கொண்டு வருகிறோம். பிறர் பாராட்ட நாம் செயல்படுவதாகச் சொல்கிறோம். ஆனால் அதை அமுல்படுத்தும் போது அதிகாரிகள் தொல்லை கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதிய உணவு வழங்கும் திட்டத்திற்கு நான்காவது திட்டத்தில் 175 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரவேற்கத்தக்கது. மதிய உணவு வழங்கும் வேலை ஆசிரியர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் மிகுந்த தொல்லைப்படுகிறார்கள். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு மதிய உணவு தயார் செய்துகொடுக்கும் வேலைக்கு குற்றேவலர்கள் அளிக்கப்படவில்லை. ஆசிரியர்களே எல்லாவற்றையும் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கான இரண்டு பைசாவை பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துக்கள் வழங்கவேண்டியிருக்கிறது. அதுவும் திருநெல்வேலி மாவட்டத்தில் எங்குமே கொடுக்கப்படவில்லை. பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளைக் கண்டு அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்பதற்கும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு தைரியம் இருப்பதில்லை. காரணம், அவர்கள் பஞ்சாயத்து யூனியனின் கட்டுப்பாட்டில் இருப்பவர்கள். அதனால் அவர்கள் தொல்லைப்படுகிறார்கள். 175 லட்ச ரூபாய் வழங்கி அதை பஞ்சாயத்து மூலமாக வழங்குவது சரியாக நடக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்கள் கல்வியைக் கற்பிப்பதோடு விடப்படவேண்டும். அவர்கள் பிச்சை எடுக்கவும் ஆடு மாடுகள் எண்ணவும் செய்யப்படுவது கூடாது. மாணவர்களுக்கு பயிற்றுவதுதான் அவர்கள் கடமையாக இருக்கவேண்டும். ஒன்று, அவர்களிடத்தில் முறையான பணத்தைக் கொடுக்கவேண்டும். அல்லது பஞ்சாயத்தினிடமே முழுப் பொறுப்பையும் விடவேண்டும். அவர்கள் அதைச் சரிவர செய்யாவிட்டால் ஆசிரியர்கள் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டுவதில்லை. ஊரார்கள் அடுத்த தேர்தலில் அவர்களைப் பார்த்துக்கொள்வார்கள். அதைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(Sri Mohanlal Mehta in the Chair)

அடுத்து நான்காவது திட்டத்தில் தொழில் கல்விக்கு மிகச் சிறப்பிடம் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த தொழிற் கல்வி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆறு தனியார் பள்ளிகளில் தொழிற்கல்வி நிலையம் செயல்படுகிறது. அதை பைஃபர் கேட்டட் கோர்ஸ் என்பார்கள். அந்த ஆறு பள்ளிகளில் ஒரு தொழிற் கல்வி ஆசிரியருக்கு கழிந்த ஏழு வருஷங்களாக இங்கிரிமெண்டு வழங்கப்படாமல் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், அந்த போஸ்ட் பர்மனென்ட் ஆகவில்லை என்று கல்வி



28th March 1966] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆறு வருஷமாக நடைபெறுகிறது. மூன்று வருஷமானால் எந்த போஸ்டும் பர்மனெண்டாக ஆகும். ஆனால் கல்வி அதிகாரிகள் செய்யும் தொல்லை இது. எவ்வளவு சொன்னாலும் அவர்கள் செவி சாய்ப்பது இல்லை. மதிப்பிற்குரிய செட்டிநாட்டரசர் கூறியது போல ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றி மட்டுமல்ல, இந்த மன்றத்தில் பேசும் அங்கத்தினர்கள், பட்ஜெட் விவாதத்திலும், கவர்னர் உரையிலும் பேசுகிறார்கள். அதைப்போல மின்சார பட்ஜெட்டை பற்றியும் பேசப்படுகிறது. மின்சார போர்டார் ஒரு வெளியீடு வெளியிடுகிறார்கள். மின்சார போர்டு பட்ஜெட் பற்றி பேசிய அங்கத்தினர்கள் என்னென்ன குறிப்பிட்டார்கள், அதில் என்னென்ன செய்யப்பட்டது என்ற விவரம் அதில் அளிக்கப்படுகிறது. அதுபோன்று ஒவ்வொரு துறையினரும் வெளியிடவேண்டும். அங்கத்தினர்கள் கேட்பதற்குப் பதில் எழுதவேண்டுமென்று சிலர் சொன்னார்கள். அப்படி எழுதுவார்களா என்பது சந்தேகம்தான். அங்கத்திலர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போது ஒவ்வொரு இலாகாவைப்பற்றி குறிப்பிடுகிறார்கள், உதாரணமாக நான் கல்வி இலாகா பற்றி, அங்கே இங்கிரிமெண்டு வழங்கவில்லை. சம்பளம் இத்தனை மாதங்களாகக் கொடுக்கப்படவில்லை என்பனபோன்று சொல்கிறேன். இப்படி அங்கத்தினர்கள் சொல்லும் குறைகளைக் குறித்து, அதற்கு அவற்றைச் செய்திருக்கிறோம் அல்லது செய்யவில்லை என்பதை வருஷத்திற்கு ஒருமுறை எங்களுக்குத் தெரிவித்தால் நன்றாக இருக்கும். நமது அமைச்சர் அவர்கள் நேற்று சொல்லியபோது, அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் பார்க்கிறார்கள் என்று சொன்னார்கள். அனேகர் பார்க்காமலே பார்த்ததாகச் சொல்வார்கள். ஆசிரியர்கள் என்னிடம் பல குறைகளைச் சொல்கிறார்கள். அவற்றைப் பார்ப்பதற்கே நேரமிருக்காது. இருந்தாலும் பார்த்தேன், அதைப்பற்றி சொல்லியிருக்கிறேன் என்றுதான் சொல்லமுடியும். அதுமாதிரி இல்லாமல் பதிலை அச்சிட்டு அனுப்பவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலை வாய்ப்பு அளிப்பது பற்றி நான்காவது திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது; வேலை வாய்ப்பைக் கொடுப்பதற்கு எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சு விரிவுபடுத்தப்படுவதாக சொல்லியிருக்கிறார்கள். அதில் உள்ள ஒரு சிக்கலைத் தெரிவிக்க விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் வேலை வாய்ப்பளிக்கும் அலுவலகம் இருக்கிறது. அதில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். ஐந்தாண்டு தொடர்ந்து பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். வேலை வரும் என்று எதிர்பார்த்தவண்ணம் அவர்கள் இருந்துவருகிறார்கள். சென்ற ஆண்டில் அங்குள்ள டி.இ.ஓ. தனியாக ஒரு விளம்பரம் போட்டு பத்து ரூபாய் கட்டிவிட்டு வேலைக்குவா என்று சொல்லி வேலைக்கு நியமித்திருக்கிறார்கள். எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் பதிவு செய்திருந்தவர்கள் வேலை வரும் என்று எதிர்பார்த்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது கல்வி அதிகாரி தனி விளம்பரம் போட்டு ஆள் எடுக்கிறார். பதிவு செய்தவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். மாவட்ட

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [28th March 1966

அதிகாரிகளுக்கு இந்த அதிகாரம் இருப்பதை எடுத்துவிட வேண்டும். எல்லாமே எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சு வாயிலாக எடுக்கப்பட வேண்டும் அல்லது சர்வீஸ் கமிஷன் மூலமாக எடுக்க வழி செய்யவேண்டும். கல்வி அதிகாரிக்கும் ஆள் எடுக்கும் அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, எம்ப்ளாய்மெண்டுக்கும் ஆள் பொறுக்கும் அதிகாரத்தை அளித்திருப்பதால் அந்த வேலையை யார் செய்வது என்று தெரியாத நிலையில் தத்தளிக்கிறார்கள். அதில் ஒரு ஒழுங்கு முறையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஐந்து ஆண்டுகளுக்கு முன் நெல் விளைந்த நிலங்களில் எத்தனை இப்போது வியாபாரப் பயிர் நிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன என்ற புள்ளி விவரத்தைச் சேகரித்தால் நம்நாட்டில் இப்போது உணவு தானிய விவசாயம் எந்த நிலையில் இருக்கிறது என்பது தெரியும். சோழவந்தான் முதல் திருச்சி வரை நெல் விளைந்த நிலங்களில் ஏராளமானவை கரும்பு விளையும் நிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. எங்கள் பக்கத்தில் நெல் விளையும் நிலங்கள் பல ரப்பர் விளையும் நிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. பாதுகாப்புச் சட்டம் பயன் படுத்தப்பட வேண்டிய இடம் இங்கு என்பதைச் சுட்டிக்காட்டு கிறேன்.



28th March 1966] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியூர் உயர்நிலைப் பள்ளியில் உள்ள ஆடியோ விஷுவல் ஸ்கீம் ஃபண்டை வேறொரு இடத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். ஏனென்றால் அங்கே அதற்கு கட்டிடம் இல்லை; ஆனால் வள்ளியூரில் கட்டிடம் இல்லாமல் ஷிஃப்ட் சிஸ்டம் இருக்கிறது. அங்கே பள்ளிகள் பன்றிக்கூடுகள் போல இருக் கின்றன. அங்கே ஆடியோ விஷுவல் ஸ்கீம் நிதி கட்டிடம் கட்டப் படாமல் அந்த பண்ட் வேறொரு பள்ளிக்கூடத்திற்கு அளிக்கப் பட்டிருக்கிறது. அதேபோல இளக்காடு பள்ளிக்கான ஃபண்ட் வேறொரு பள்ளிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு இல்லாமல், அந்த அந்தப் பள்ளிக்கான ஃபண்ட் அந்த அந்தப் பள்ளிக்கு அளிக்கப்பட வேண்டும். அவ்வாறு நடக்க முடியாதபடி அங்குள்ள டிவிஷனல் இன்ஸ்பெக்டர் உத்தரவு அனுப்புகிறார். ஏனென்றால் சம்பந்தப்பட்ட பள்ளியினர் தான் இந்நிதியை செயல் படுத்தமுடியும்.

நான் கூறிய எல்லா விஷயங்களையும் கவனிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். திட்டமிட்டுச் செயல் படுவது என்பது மிகச் சிறப்பானது. ஆனால் போட்ட திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்துவதில் எல்லோரும் அக்கறை காட்ட வேண்டும். பல அரசாங்க ஊழியர்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கவில்லை. அவர்கள் அரசாங்கத்திற்கு எதிராகவே இருக்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்தைக் குறை கூறி வருகிறார்கள். மேலும் பல அதிகாரிகள் மக்கள் சொல்லுவதைக் கேட்பதே இல்லை. ஏதாவது கேட்டால் "எம்.எல்.ஏ.-யிடம் பேசுங்கள்", 'எம்.எல்.சி. யிடம் சொல்லுங்கள்' "மற்றவர்களிடம் சொல்லுங்கள்" என்று அவர்கள் கூறுகிறார்கள். இதெல்லாம் தேர்தல் காலத்தையொட்டிய நிலைமையோ என்னவோ தெரிய வில்லை. இந்தக் குறைகளையெல்லாம் தீர்க்க வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடிக் கிறேன்.

**திரு. எஸ். ஜெயராம செட்டியார்:** கனம் தலைவர் அவர் களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு சுமார் 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இதில் முதல் வருஷத்தில் திட்ட வேலைகளுக்காக 75 கோடி ரூபாயே ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதற்குக் கிட்டத் தட்ட 1/5 பங்கு ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்; அப்படி இருக்க, இதற்கு 1/15 பங்கே ஒதுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன என்று எனக்கு சரியாகத் தெரியவில்லை. மொத்தத்தில், இந்தத் திட்ட வேலைகளைப் பற்றி அபிப்பிராயங்கள் சொல்லுவதற்கு முன், ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் முடிவுகளையும் அவைகளில் ஏற்பட்ட அனுபவங்களையும் நாம் ஆராய வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இப்போது இந்த மாநிலத்தில் உணவுப் பிரச்னையும் மற்ற பிரச்னைகளும் தலைதூக்கியதால் வேறெங்கும் கண்டிராத அளவிற்கு ஒரு பெரிய நெருக்கடி நிலைமை இங்கே

தோன்றியுள்ளதால் இங்குள்ள மக்கள் இந்தத் திட்டப் பிரச்னைகளைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். பருவ மழை தவறியதன் காரணமாகவும், நாட்டு மக்கள் பூராவும் ஒன்று என்ற நிலையில் மற்ற மாநிலங்களில் ஏற்பட்ட உணவுக் கஷ்டத்தை சமாளிக்கும் பொறுப்பை நாமும் ஓரளவு ஏற்று அந்த மாநிலங்களுக்கு நாம் உணவு கொடுத்ததன் காரணமாகவும், நம் மாநிலம் உணவு விஷயத்தில் எப்போதும் பற்றாக்குறை நிலையில் இருக்கிறது. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறிய பிற்பாடும் நாம் இந்த நிலையில் இருக்கிறோம். மொத்தத்தில், நாம் எடுத்துக்கொண்ட பிரயாசைகளையும் செய்த முயற்சிகளையும் பார்க்கும்போது, நமக்கு எதிர்பார்த்த அளவு பலன் கிடைக்கவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. காரணம் என்னவென்றால் திட்டங்களில் மனிதர்கள் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. சில தொழில்களில் என்ஜின்கள் குறிப்பிட்ட மணி நேரத்திற்கு இவ்வளவு என்று செய்துவிடுகின்றன. ஆனாலும், கிராமப்புறங்களிலும் மற்ற இடங்களிலும் பொதுமக்கள் உற்சாகத்துடனும் அறிவுடனும் செய்ய வேண்டிய காரியங்களைப் பொறுத்த வரையில், நமது முயற்சியைப் பார்க்கும்போது நாம் எதிர்பார்த்த பலன் நமக்குக் கிடைக்கவில்லை. உணவுத் துறையில் நாம் போதிய அளவு முன்னேறவில்லை. இதற்கு மதிப்பிற்குரிய அங்கத்தினர் ஸ்ரீ சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள் கூறியதுபோல, அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மட்டும் பொறுப்பாளிகள் அல்லர்; பணத்தை வாங்கி விநியோகம் செய்யும் பஞ்சாயத்து யூனியன் உத்தியோகஸ்தர்களின் திறமை கூட ஓரளவு குறைந்திருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். எல்லோருமே ஒத்துழைத்தால் தான் இது முடியும். நாம் ஏதோ சில தொகைகளைக் கொடுக்கிறோம். சர்க்கார் பணத்தை வசூலித்து அந்தந்த ஸ்தாபனங்களிடம் கொடுக்க முடியும். அவ்வளவு தான். அதை நல்ல முறையில் பயன்படுத்துவது அந்தந்த ஸ்தாபனங்களின் பொறுப்பாகும். டிஸ்டிரிக்ட் போர்டுக்கு கொடுப்பதை விட கிராமப்புறங்களில் கிராமப் பஞ்சாயத்துக்கே கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தோம். அப்படியே கொடுத்தோம். இப்போது என்ன நிலை என்றால் பஞ்சாயத்து போர்டுகளையே ஒழித்துவிட்டால் கூட போதும் என்று நினைக்கிற அளவுக்கு வந்திருக்கிறது. அவரவர்கள் பொறுப்பை அவரவர்கள் சரியாக செய்தால் ஒழிய நாம் இதில் முன்னேறுவது ரொம்ப கஷ்டம்.

நம்முடைய முன்னாள் முதலமைச்சர் நம் தலைவர் இராமசாமி ரெட்டியார் சொல்லுகிறபடி அங்கேயும் சரியாக இல்லை. இங்கேயும் சரியாக இல்லை. அவர் எப்போதும் இப்படி உணர்ச்சி வசப்பட்டு வருத்தப்பட்டுக்கொள்வார். ஒவ்வொரு வருஷமும் இப்படி வருத்தம் தெரிவித்துக்கொள்ளுவார். அதேபோல் தான் இன்றையதினமும் சொன்னார். விஷயங்களைச் சொல்லுவதில் பிரயோசனம் இல்லை, எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று சொன்னார்கள். மனிதனுடைய தரம் திருந்தியதாகத் தெரியவில்லை. சந்தர்ப்பம் கொடுத்தால் அதில் எவ்வளவு சுரண்டலாம் என்ற எண்ணம் தான் இருந்துகொண்டு வருகிறது. சண்டைக்குப் பிறகு





எவனைப் பார்த்தாலும் குறுகிய காலத்தில் பணக்காரனாகிவிட வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டது. திட்டங்களின் பேரில் நாம் எவ்வளவு பணம் கொடுத்தாலும் மேலே இருக்கிற அதிகாரியிலிருந்து கீழே இருக்கிற மக்கள் வரை யாரும் சரியில்லை. அதனால்தான் திட்ட வேலை சரியாக நடப்பதில்லை. முன்னே மாதிரி சின்ன ஸ்தாபனம் அல்ல. ஒரு அகண்ட ஸ்தாபனமாகி விட்டது. பெரும் தலைவர் ஒருவர் சமீபத்தில் சொன்னார். செண்ட்ரல் கவர்ன்மெண்ட்டில் பார்த்தால் ஒரு பெரிய சமுத்திரம் மாதிரி இருக்கிறது. அங்கே திமிங்கிலங்கள் எல்லாம் கூட இருக்கும்போல் இருக்கிறது என்றார். அந்த மாதிரி நிலையில் காரியம் நடக்கிறது. நாம் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் எவ்வளவு முயற்சி செய்து கண்காணிக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் திட்டங்கள் சரியாக நிறைவேறும். நல்லபடி நடக்கும் என்று பாராமுகமாக இருந்துவிட்டால் மற்றவர்கள் செய்துவிடுவார்கள் என்று நினைத்துவிட்டால் ஒன்றும் நடக்காது. மந்திரிகள் 5, 6 பேர் இருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் ஊர் ஊராகப் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த அந்த ஆட்கள் வந்து நீங்கள் எங்கள் ஊருக்கு வந்தே தான் ஆக வேண்டும், வராவிட்டால் நாங்கள் செத்துப் போய்விடுவோம் என்று சத்தியாகிரகமே செய்கிறார்கள். அதற்காகத் தான் மந்திரிகள் போகிறார்கள். அவர்கள் அப்படி வற்புறுத்திக் கூப்பிடும் சமயங்களில் நான் பக்கத்திலே இருந்து பார்த்திருக்கிறேன். எனவே எந்தக் காரியத்திலும் மக்கள் ஊக்கம் காட்டி உற்சாகத்தோடு ஈடுபட வேண்டும். நாமும் ஜாக்கிரதையாக இருந்து பார்த்துக்கொள்ள வேண்டும். தொழில் துறையில் இருக்கிற மாதிரி நாம் பாராமுகமாக இருந்தால் 4, 5 ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்தாலும் நாம் இந்த நிலையிலேயே தான் இருப்போம். ஆகையால் நாமும் அக்கறை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எலக்டிரிசிடி சம்பந்தமாக ஒரு விஷயம் சொல்ல நினைக்கிறேன். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் தோண்டவேண்டும் என்றும் அதற்கு 50, 60 கோடி ஆகும் என்றும் சொன்னார்கள். இதற்கு 12-50 p.m. மத்திய சர்க்கார் வசதி இல்லை என்று சொல்லிவிட்டார்களாம். அப்படி என்றால் நம் மாகாணத்தில் இருந்தாவது பணம் திரட்டிக் கொடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது விஷயமாக நம் தொழில் அமைச்சர் அதில் தலையிட்டு 2-வது சுரங்கம் போட நம் மாகாண செலவிலாவது ஆவன செய்ய வேண்டும் நாம் ஏற்கனவே பார்த்தோம். ஹைடல் பிராஜெக்ட்களை நம்பிக் கொண்டிருந்தால் நம் தொழில் விவசாயம் எல்லாம் ரொம்பவும் கஷ்டப்பட்டுவிட்டது. ஆகவே அந்த விஷயத்தை கவனித்து 50, 60 கோடி கடன் வாங்கியாவது அதற்கு வேண்டிய வேலையைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சேலம் ஸ்டீல் பிராஜெக்ட் பற்றி சொல்லுகிறார்கள். இரும்பும் எலக்டிரிசிடியும் ரஷ்யாவை வளம்பெருக்கும் நிலைக்குக் கொண்டு வந்து விட்டன. நாம் இரும்பையும் மின்சாரத்தையும் நம்

[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்] [28th March 1966

மாகாணத்தில் உற்பத்தி செய்து ஏராளமாக விநியோகிக்கும் தன்மையில் ஏற்பாடு செய்தால் நம் மாகாணம் தனித் தன்மையோடு வளர முடியும் என்று சொல்லுகிறார்கள், தெரிந்தவர்கள். அது உண்மை என்றால் அதற்கு வேண்டிய வேலை செய்ய வேண்டும். ஏற்கனவே அமைச்சர் அவர்கள் அதில் விசேஷ கவனம் செலுத்துகிறார்கள். அதை இன்னும் அதிகமாக கவனித்து முடித்து வைப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக திருச்சியிலிருந்து தூத்துக்குடி வரை பிராட் கேஜ் ரயில் போட வேண்டும் என்று நம் ராஜா ஸர் செட்டிநாடு அடிக்கடி சொல்லுவார்கள். அதை நானும் வற்புறுத்துகிறேன். நான் சமீபத்தில் தூத்துக்குடி சென்றிருந்தேன். அங்கே இருக்கிற ஹார்பரைப் போய்ப் பார்த்தேன். முன்னே ஹனுமார் அணை கட்டியது போல் பெரிய பெரிய கல்லைக் கொண்டு வந்து போட்டு இருக்கிறார்கள். நான் ஒரு கல்யாணத்திற்காகச் சென்றவன் அதைப் போய் பார்த்துவிட்டு வந்தேன். அது பாதியில் இருக்கிறது. அதைப் பற்றி நான் தலைவர் காமராஜரிடம் சொன்னேன். இப்படிப் பாதியில் நிற்கிறதே என்று அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் ரூபாய் இல்லை என்று நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கும் பாதியிலேயே என்றார். அதையும் பூர்த்தி செய்து தரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். சேது சமுத்திரம் திட்டத்தையும் முடித்துவிட்டு தூத்துக்குடியையும் டீப் போர்டாக செய்து விட்டால் நன்றாக இருக்கும். அதையும் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நேற்று நம் செட்டி நாட்டு ராஜா அவர்கள் பேசும்போது Upper Periyar பிராஜெக்ட் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அப்போது இல்லை. அப்படி இருந்தால் அது இராமநாதபுரம் ஜில்லாவுக்கு ரொம்பவும் தண்ணீர் சப்ளை செய்ய உதவியாக இருக்கும். அதையும் 4-வது திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக இராமநாதபுரம் கிழக்குப் பகுதியில் கொஞ்சம் விசேஷ கவனம் செலுத்தி அதை பேக்வார்டு ஏரியா என்று டிக்ளேர் செய்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பிரைமரி ஹெல்த் சென்டர்களில் 13 சென்டர்களில் அங்கே தான் டாக்டர்கள் போக மாட்டோம் என்கிறார்கள். அங்கே போக அவர்களுக்கு மனம் இல்லை. எனவே அங்கே விசேஷ வசதிகளையெல்லாம் செய்து கொடுத்தாவது இன்னும் பல விசேஷ சலுகைகள் செய்து கொடுத்தாவது அந்த ஏரியாவை டெவலப் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பள்ளிக்கூடம் கட்டுவது போன்ற காரியங்களில் அதற்கு முதலிடம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாயத் துறையில் கூட நில வளம் அங்கே சரியாக இல்லாததால் அதையும் கவனிக்க வேண்டும்.

பள்ளிக்கூடம் சம்பந்தமாக பப்ளிக் ஸ்கூல்களை abolish செய்துவிட்டு ஒரே தரமாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். எனக்குக் கூட இது எதற்கு என்று தான் தோன்று



28th March 1966] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

கிறது. முதலாளிகளுக்கு என்று ஒரு பள்ளிக்கூடமா? எல்லோருக்கும் ஒரே பள்ளிக்கூடம் என்று வைத்து equal opportunitiesfor students என்று கொடுத்தால் நன்றாக இருக்கும் இதுபற்றி சமீபத்தில் ஒரு controversy ஏற்பட்டு இருக்கிறது. பள்ளி ஸ்கூல்களுக்கு 2 ஆயிரம்; 3 ஆயிரம் என்று கொடுத்து அவர்கள் பிள்ளைகளை படிக்க வைத்து அவர்கள் இங்கிலீஷ் படிப்பது, நம் பிள்ளைகள் மட்டும் சும்மா இருப்பது என்றால், பிரயோசனம் இல்லை. ஹாரிங்டன் ரோட்டில் Boys களுக்கு இங்கிலீஷில்தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். அங்கே படிக்கிற பிள்ளைகள் இங்கிலீஷில்தான் எல்லாம் பேசுகிறார்கள். அதைப் பார்த்தால் அவர்கள் ஏதோ superior beings மாதிரியும் நாம் ஏதோ ஒரு inferior type மாதிரியும் இருக்கிறது. சோஷலிசம் நம் குறிக்கோள் என்று இருப்பதால் இதையெல்லாம் எடுக்க வேண்டும். அப்போதுதான் இன வேற்றுமை ஒழிந்து போகும் என்று நினைக்கிறேன்.

கடைசியாக நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களுக்கு ஒரு வார்த்தை, spinning mills பற்றி. நான் ஒரு பஞ்சு வியாபாரி என்ற முறையில் இரண்டு வார்த்தை சொல்ல ஆசைப் படுகிறேன். முன்பு நூல் நிறைய தேவையாக இருந்ததுபோல் தெரிந்தது. ஒரு வருஷம் முந்தி வரை நம் நாட்டில் ordinary people களினுடைய consumption அதிகப்படியாக இருந்ததாகத் தோன்றியது. இப்போது தேக்கமாக இருக்கிறது. அதற்குக் காரணம் பாகிஸ்தானோடு சண்டை நடக்காத போது smuggling நடந்து artificial demand இருந்தது. இப்போது தேக்கம் தான் அதிகமாக இருக்கிறது. எனவே இன்னும் Private people களுக்கும் Spinning mills ஜாஸ்தியாக்காமல் Export செய்ய ஏற்பாடு செய்து finer counts இருந்தால் அதை சர்க்கார் தரப்பில் கொடுத்து, அந்த முறையில் Spinning mills ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு 4-வது ஐந்தாண்டுத் திட்டம் நல்ல முறையில் நிறைவேற வேண்டும் என்றும், மூன்று ஐந்தாண்டு திட்டங்களையும் விடச் சிறப்பாக நாடு வளர்ச்சியடைய வேண்டும் என்றும் சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

VICE-CHAIRMAN (Sri Mohanlal Mehta): The House will now adjourn and meet again at 10-30 a.m. to-morrow.

The House then adjourned.

## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 150. *Notification issued with G.O. Ms. No. 195, **Rural** Development and Local Administration, dated 4th **February** 1966 specifying certain officers to perform the functions of the competent authority under the Madras Public Buildings (Licensing) Act, 1965 for the areas specified in the notification.*

[28th March 1966

[*Laid on the Table of the House under section* 25(4) *of the Madras Public Buildings (Licensing) Act*, 1965 (*Madras Act* 13 *of* 1965).]

*151. *Notification issued with G.O. Ms. No.* 200, *Rural Development and Local Administration, dated* 4*th February* 1966 *appointing the* 1*st day of April* 1966 *to be the date on which the Madras Public Buildings (Licensing) Act*, 1965 *shall come into force.* [*Laid on the Table of the House under section* 25(4) *of the Madras Public Buildings (Licensing) Act*, 1965 (*Madras Act* 13 *of* 1965).]

*152. *Notification issued with ROC* 84682/65-F5, *dated* 13*th December* 1965 *declaring that the provisions of the Madras District Municipalities Act*, 1920, *specified in the Schedule of the notification and rules issued thereunder shall be extended to and be in force in the area for the time being within the jurisdiction of the Srivaikundam Town Panchayat in Tirunelveli district with effect from* 1*st January* 1966. [*Laid on the Table of the House under section* 179(4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

*153. *Notification issued with G.O. Ms. No.* 3348, *Revenue, dated* 30*th November* 1965 *relating to the Tribunals for Dharmapuri district under the* (*i*) *Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1963 (*Madras Act* 26 *of* 1963), (*ii*) *Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act*, 1963 (*Madras Act* 30 *of* 1963), (*iii*) *Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Act*, 1963 (*Madras Act* 27 *of* 1963) *and* (*iv*) *Madras Inams (Supplementary) Act*, 1963 (*Madras Act* 31 *of* 1963). [*Laid on the Table of the House under sections* 73(5), 48(5), 50(6) *and* 13(4) *of the above Acts respectively.*]

*154. *Notification issued with G.O. Ms. No.* 210, *Rural Development and Local Administration, dated* 7*th February* 1966 *relating to the constitution of 'Yercaud Township' 'Yercaud Township Committee', etc., under the Madras Panchayats Act*, 1958. [*Laid on the Table of the House under section* 179(4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

*155. *Notification issued with G.O. Ms. No.* 187, *Rural Development and Local Administration, dated* 3*rd February* 1966 *appointing in addition to the Director of Rural Development, the Joint Director of Rural Development also as an inspecting and Superintending Officer, in respect of townships constituted under the Madras Panchayats Act*, 1958. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

*156. *Notification issued with G.O. Ms. No.* 4472, *Home, dated* 21*st December* 1965 *making amendment to the Madras Motor Vehicles Rules*, 1940, *published with Home Department*



28th March 1966]

*Notification No.* 357, *dated* 29*th March* 1940. [*Laid on the Table of the House under section* 133(3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

*157. *Notification issued with G.O. Ms. No.* 73, *Home, dated* 7*th January* 1965 *making amendment to the Madras Motor Vehicles Rules*, 1940 *published with Home Department Notification No.* 357, *dated* 29*th March* 1940. [*Laid on the Table of the House under section* 133(3) *of the Madras Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

*158. *Notification issued with G.O. Ms. No.* 481, *Local Administration, dated* 1*st March* 1966 *declaring that with effect on and from the* 1*st March* 1966, *the area specified in the Schedule of the notification shall be a township called the "Avadi Township" and relating to the constitution of "Avadi Township Committee", etc.* [*Laid on the Table of the House under section* 179(4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

*159. *Notification issued with G.O. Ms. No.* 34,1 *Rural Development and Local Administration, dated* 17*th February* 1966 *making amendments to the Rural Development and Local Administration Department Notification II*–2, *No.* 23 *of* 1966, *dated the* 7*th February* 1966. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

*160. *Notification issued with G.O. Ms. No.* 385, *Home, dated* 8*th February* 1966 *making amendment to the Rule published with Home Department Notification S.R.O. No. A*-681 *of* 1965, *dated the* 19*th June* 1965. [*Laid on the Table of the House under section* 54(3) *of the Madras Prohibition Act*, 1937 (*Madras Act X of* 1937).]

*161. *Notification issued with G.O. Ms. No.* 33, *Public (Services-A) Department, dated* 5*th January* 1966 *making amendment to the Madras Public Service Commission Regulations*, 1954. [*Laid on the Table of the House under Article* 320 (5) *of the Constitution of India.*]

*162. *The Annual Financial Statement for* 1966–67 *and Supplementary Financial Statement for* 1965–66 *of the Madras State Electricity Board.* [*Laid on the Table of the House under Section* 61(3) *of the Electricity (Supply) Act*, 1948 (*Central Act* 54 *of* 1948).]

## B. Reports, Notifications and other papers.

‡22. *Review on the progress made in Co-operative Development Schemes in* 1965–66 *in English and Tamil.*

‡23. *Speech by Home Minister on Demand XII—Police in English and Tamil.*

‡ 24. *Speech by Minister for Home on Agriculture Demand in Tamil.*

‡ 25. *Policy Note under Demand XVIII—Animal Husbandy.*

‡ 26. *Review on the progress made in Handloom Industry in English and Tamil.*

‡ 27. *Policy Note on the working of the Civil Supplies Department.*

‡ 28. *Review on the Industrial Development in Madras State, 1965–66 in English and Tamil.*

29. *Review on the Nationalised Transport in the Madras State Transport, 1965–66 in English and Tamil.*

‡ 30. *Policy note under Demand XXV—"Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes."*

† 31. *Review on the working of the Forest Department.*

* 32. *Note on Fisheries in the Madras State in Tamil.*

33. *Explanatory Note on the draft amendment to the rules published with Revenue Department Notification, dated the 21st December 1949.*

* Laid on the Table of the House on 25th March 1966.
† Laid on the Table of the House on 26th March 1966.
‡ Sent by messeangers to all M.L.C.s on 24th March 1966.



## APPENDIX.

[*Vide* answer to Starred Question No. 140 on page 111]

(இ) சுற்றுலா மாளிகையில் தங்குவதற்கு நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.—

| | மதுரை. | திருச்சி. | உதகமண்டலம் | |
|---|---|---|---|---|
| | | | பருவ காலத்தில். | மற்றைய நாட்களில். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| பல படுக்கைகள் கொண்ட பெரிய அறையில் ஒரு படுக்கைக்கு .. .. | 2 00 | 2 00 | *5 00 | †2 50 |
| தரை தளத்திலும் இரண்டாவது மாடியிலும் தனி படுக்கையறை ஒன்றுக்கு .. .. .. | 3 00 | 3 00 | 10 00 | 5 00 |
| முதல் மாடியிலுள்ள தனி படுக்கையறை ஒன்றுக்கு | 4 00 | | | |
| தரை தளத்திலும் இரண்டாவது மாடியிலும் உள்ள இரு படுக்கை அறை ஒன்றுக்கு .. | 5 00 | 5 00 | 15 00 | 7 50 |
| முதல் மாடியிலுள்ள இரு படுக்கை அறை ஒன்றுக்கு .. .. .. | 6 00 | | | |
| விசேஷ அறை ஒன்றுக்கு | .. | .. | 25 00 | 12 50 |
| நவீன விசேஷ அறை ஒன்றுக்கு .. .. | .. | .. | 30 00 | 15 00 |
| கூடுதலாக வரும் 12 வயதுக்கு மேற்பட்ட நபர் ஒன்றுக்கு .. .. | 1 00 | 1 00 | 3 00 | 3 00 |

| | குற்றாலம். | நாகர்கோயில். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. பை. | ரூ. பை. |
| தனி நபர் ஒருவருக்கு .. .. .. | 5 00 | 3 00 |
| தனி நபர் அல்லது தம்பதிகளுக்கு .. | .. | 3 00 |
| கூடுதலாக வரும் 12 வயதுக்கு மேற்பட்ட நபர் ஒன்றுக்கு .. .. | 2 50 | 1 50 |

*8 நபர்களுக்கு மேற்படாத குழு ஒன்றுக்கு பருவகாலத்தில் நாளொன்றுக்கு ரூ. 30.

†8 நபர்களுக்கு மேற்படாத குழு ஒன்றுக்கு மற்றைய நாட்களில் நாளொன்றுக்கு ரூ. 15.

(உ) ———

(ஊ) ———

# THE MADRAS LEGISLATIVE COUNCIL

*Tuesday, the 29th March 1966.*

The House met in the Council Chamber, Fort St. George at half past ten of the clock, Mr. Chairman (THE HON. SRI M. A. MANICKAVELU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *U.G.C. scale of pay*

* 141. *Q*.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any communication has been received by this Government from the Minister for Education, Government of India asking the State Government to implement U.G.C. scale of pay to the College lecturers;

(*b*) if so, the details thereof; and

(*c*) the extra expenditure this Government will have to incur per year by adopting the U.G.C. scale of pay for college lecturers in the entire State?

THE HON. SRI R. VENKATARAMAN (on behalf of the Hon. the Chief Minister) : (*a*) No.

(*b*) and (*c*) Do not arise.

DR. H. V. HANDE : Sir, some time back, a statement was issued by the Union Education Ministry to the effect that a communication was sent to the State Government. Of course, the answer given is ' No '. But have this Government discussed this subject with the Union Education Minister?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir. It is generally the principle of the Government to follow the University Grants Commission's scales of pay wherever it is possible. The U.G.C. have in many cases advised the private institutions to observe the U.G.C. scales of pay. But no such letter or communication has been received. That is what I said.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** பல்கலைக்கழக மானியக் கமிஷனின் சம்பள விகிதத்திற்கும் தற்போது நம் சென்னை அரசினர் கொடுக்கும் சம்பள விகிதத்திற்கும் உள்ள வேறுபாடு யாது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சில துறைகளில் வேறுபாடு இருக்கிறது. உதாரணமாக, ப்ரின்ஸ்பால்களுக்கு 'செகண்ட் ப்ளான் ஸ்கிம் ஸ்கேல்'-ல் யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் ஸ்கேல் ரூ. 600—40—800, சென்னை சர்க்கார் ரிவைஸ்ட் ஸ்கேல் ரூ. 600—30—900. ப்ரொபஸர்களுக்கு யு.ஜி.சி. ஸ்கேல் ரூ. 400—25—700. சென்னை சர்க்கார் ஸ்கேல் ரூ. 350—25—650. அசிஸ்டெண்ட் ப்ரொபஸர்களுக்கு யு. ஜி. சி. ஸ்கேல் ரூ. 200—15—320—20—520, சென்னை சர்க்கார் ஸ்கேல் ரூ. 225—10—275—15—465,

**திரு. க. அன்பழகன்:** மத்திய அரசாங்கத்தின் சார்பில் அமைந்துள்ள பல்கலைக் கழக மானியக் குழுவின் கருத்துப்படி அந்த அளவு ஊதியம் தராத காரணத்தால் சென்னை அரசாங்கக் கல்லூரிகளில் பணியாற்றுபவர்களில் நல்ல தரமும் திறமையும் உடையவர்கள் இந்தப் பல்கலைக் கழகத்தைவிட்டு வேறு இடங்களுக்குச் சென்றுவிடும் நிலைமை இருப்பதை அரசாங்கம் அறிந்திருக்கிறதா? இந்த நிலைமை நீடிக்காமல் இருப்பதற்காக அந்த ஊதியங்களைச் சமநிலையில் வைக்க அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அவை சற்றேறக்குறைய சமநிலையில் இருக்கின்றன என்பதுதான் சர்க்காரின் கருத்து. அவ்வாறு நம் ராஜ்யத்திலுள்ளவர்கள் அதிகமாக வெளி ராஜ்யங்களுக்குச் சென்றுவிடுவதாகத் தகவல் இல்லை.

DR. H. V. HANDE: Sir, when the University Grants Commission is prepared to foot half the bill, what is the difficulty for the State Ministry to give the other matching grant, especially in view of the fact that the Union Minister for Education has made a statement in the Lok Sabha in answer to a question that he has addressed all the State Ministers regarding this? Whether he has addressed or not, what is the difficulty for the Government to give this?

THE HON. SRI R. VENKATARAMAN: Financial difficulties. Even the fifty per cent has got to come from the State Government. Our expenditure on elementary education, on mid-day meals, and on other things, is enormous. Therefore, it has not been possible completely to adopt the U.G.C. scales.

*High School at Bathraikottai in Cuddalore Taluk*

*142 Q.—SRI M. RAJAH IYER (on behalf of SRI S. K. SAMBANDHAN): Will the Hon. the Chief Minister be pleased to state with reference to the answer given to the Legislative Council Question No. 5, dated 29th January 1966—

(a) whether the particulars have since been received from the Director of Secondary Education;

(b) if so, the details thereof;

(c) the distance of the nearest high school to the high school at Bathraikottai; and

(d) the year in which it was opened?

THE HON. SRI R. VENKATARAMAN (on behalf of the Hon. the Chief Minister): (a) Yes.



(b) The strength of the Board High School, Bathraikottai, is as follows:—

| | |
|---|---|
| Standard VI ... ... ... ... | 14 |
| Standard VII ... ... ... ... | 12 |
| Standard VIII ... ... ... ... | 11 |
| Standard IX ... ... ... ... | 16 |
| Total | 53 |

Details of the teachers employed in the school and their qualifications are as follows:—

| Designation. | Qualification. | Number of posts. |
|---|---|---|
| Headmaster .. | B.A.B.T. .. .. | 1 |
| Secondary Grade Assistant. | Secondary Grade Trained Teacher's Certificate. | 3 |
| Tamil Pandit, Grade I. | S.S.L.C, Senior Basic Trained Tamil Vidwan. | 1 |
| Physical Education Teacher, Grade II. | Lower Grade certificate in Physical Education. | 1 |
| | Total .. | 6 |

(c) Eight miles.

(d) 1965-66.

*Government Teachers' Training Schools*

*143. Q.—SRI M. SANKARALINGAM PILLAI: Will the Hon. the Chief Minister be pleased to state the mode of constitution of the Selection Committee for the Government Teachers' Training Schools?

THE HON. SRI R. VENKATARAMAN (on behalf of the Hon. the Chief Minister): It is not desirable in the public interest to divulge these details.

**திரு. ஆர். வெங்கடாசலம்:** இந்தப் பயிற்சிப் பள்ளிகள் இருக்கும் இடங்களில் இந்தக் கமிட்டியில் பொதுவாக ஒரு குறிப்பிட்ட கட்சியினர் வராமல், எல்லோரும் வரும் முறையில் ஏதேனும் முறை வகுக்கப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இப்போது வகுக்கப்பட்டுள்ள முறை அவ்வாறு தான் இருக்கிறது.

**திரு. க. அன்பழகன்:** பயிற்சிக்குச் சேர விரும்பும் மாணவர்களைப் பொறுக்கியெடுக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் அரசாங்க அதிகாரிகள் மட்டுமா அல்லது அரசாங்க அதிகாரிகளைத் தவிர

[29th March 1966

பல்வேறு வகையில் பொதுமக்களுடன் தொடர்பு உடையவர்களும் இதில் இடம் பெறுகிறார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சாதாரணமாக, செலெக்ஷன் கமிட்டி அங்கத்தினர்களைப்பற்றி விவரங்கள் கொடுத்தால் சிலர் போய் அவர்களைப் பார்த்துவிடுவார்கள் என்று சர்க்காருக்கு சந்தேகம் இருப்பதால், இந்தத் தகவல் கொடுக்கப்படுவதில்லை. (குறுக்கீடு) அங்கத்தினர்கள் யார் என்பது எப்படியோ வெளியில் தெரிந்துவிடுகிறது என்பது வேறு விஷயம். இந்த அங்கத்தினர்களில் பெரும் பகுதியினர் Official-ஆகவும் ஒரே ஒருவர் Non-official-ஆகவும் சில இடங்களில் இருப்பதாகத் தகவல் இருக்கிறது.

SRI M. RAJAH IYER: Sir, have the Government received any representation from non-official members that they are be siged by thousands and crowds and that it is not fair to nominate such members and put them to this pressure?

THE HON. SRI R. VENKATARAMAN: We have not received any representation to that effect.

*Spinning mill at Gingee*

* 144 Q.—SRI M. RAJAH IYER (on behalf of SRI S. K. SAMBANDHAN): Will the Hon. the Minister for Industries be pleased to state the stage at which the starting of a private spinning mill at Gingee in South Arcot district stands?

THE HON. SRI R. VENKATARAMAN: Lands have been acquired. Preliminary arrangements for import of machinery have been made and firm orders placed for indigenous machinery. The construction of factory buildings will be taken on hand on receipt of approved plans from the authorities concerned.

*Bridge across the Gadilam river*

* 145. Q.—SRI S. K. SAMBANDHAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal to construct another bridge over the Gadilam river at Cuddalore; and

(b) if so, the stage at which the matter now stands?

THE HON. SRI V. RAMAIAH: (a) The Government have sanctioned the bridge work referred to by the Member.

(b) Technical sanction has been accorded and the tender has been accepted. The work will be taken up shortly.

DR. H. V. HANDE: What is the estimated cost, Sir?

THE HON. SRI V. RAMIAH: It is Rs. 24.20 lakhs.



29th March 1966]

SRI K. S. ABDUL WAHAB: May I know, Sir, the spot where the bridge is to be constructed?

THE HON. SRI V. RAMAIAH: It is Gadilam bridge at Cuddalore.

*Civil Supplies Department Check Posts*

* 146 Q.—DR. H. V. HANDE (on behalf of Sri S. K. SAMBANDAN): Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the particulars required to be noted by the members of the staff in charge of check posts administered by the Civil Supplies Department on the various highways; and

(b) the purpose for which these particulars are required?

THE HON. SRI V. RAMAIAH: (a) The staff employed in the check posts are required to note the number of vehicle, name of the owner and driver and the details of the goods transported, date and time of arrival of the vehicle at the check post, the place from where and the place to which the vehicle is proceeding and, if there is any movement of paddy/rice/coarse grains whether they are covered by necessary transport or export permit.

(b) The particulars will be useful for taking action against the persons concerned whenever there is contravention of movement control orders. These particulars are also useful for statistical purposes.

SRI V. K. RAMASWAMY MUDALIAR: Sir, even if there are no prohibited articles, is there any necessity to give all these particulars, and if so do not the Government think that this is a harassment?

THE HON. SRI V. RAMAIAH: This is mainly to check the movement of certain articles of food the movement of which is prohibited. So, for this purpose, the lorry will have to stop and give the particulars.

திரு. க. அன்பழகன்: இப்படிப்பட்ட நெடுஞ்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகளுக்குக் குறுக்கே போடப்பட்டுள்ள கட்டை அல்லது இரும்புக் கம்பி இரவு நேரத்தில், போதிய வெளிச்சம் இல்லாததால் தெரிவதில்லை. இதன் காரணமாக அங்கே பல சமயங்களில் விபத்து ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அது லாரிகளுக்குத்தான் இருக்கிறது, கார்கள் போகலாம் என்று எண்ணி பலர் அங்கே கார்களில் வருகிறார்கள். கார்களுக்குச் சோதனை இல்லை. எனவே அப்படிப்பட்ட இடங்களில் ஆபத்தில்லாதபடி, அந்தக் கட்டை அல்லது கம்பி வெள்ளையடிக்கப்பட்டோ வேறு விதமான வர்ணம் பூசப்பட்டோ, இரவில் தெளிவாகத் தெரியும்படி இருக்கச் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

[29th March 1966

கனம் திரு: வி. ராமைய்யா : இது அப்போதைக்கப்போது
10-40 a.m. கவனிக்கப்பட்டு வருகிறது. நானே அந்த ஆபத்துக்கெல்லாம் உட்பட்ட நிலையில் தான் இருக்கிறேன். இவற்றைத் தொடர்ந்து நல்ல முறையில் வைத்திருக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். இதில் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும்.

DR. H. V. HANDE : Are the Government aware that these check posts are breeding places of corruption and, if so, what concrete steps do the Government propose to take to prevent this sort of corruption?

THE HON. SRI V. RAMAIAH : We will have to enforce strictly the laws relating to movemnt control. For this many other devices will also have to be found. This matter is constantly under the consideration of the Government.

*Inam lands*

*147 Q.—DR. H. V. HANDE (on behalf of SRI S. K. SAMBANDHAN) : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any representation has been received from the temple servants of the State with regard to the taking over of the inam lands which they have been enjoying hitherto; and

(b) if so, the details thereof and the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) Representations have been received from the General Secretary, Tamil Nad Hindu Devalaya Poosari Archakar and Agriculturists Sangham, Nethimedu, Salem, on behalf of the Sangham, Madras, the Tamil Nad Hindu Devalava Poosari Archaka Sangham, Salem and the Tamil Nad Devasthanam Employees Sangham, Tiruppur. The representations are for redressal of the grievances faced by the Archakars in getting pattas, etc., due to the implementation of the Madras Inam Estate (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) and the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963). The matter is under consideration.

*Social workers in the hospital*

*148 Q.—DR. H. V. HANDE (on behalf of SRIMATHI MARY C. CLUBWALA JADHAV) : Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of social workers working in the various hospitals in the State?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Eighty-one.

DR. H. V. HANDE : May I know the nature of work of these social workers?



29th March 1966]

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : The duties of the Social Workers attached to the Mental Hospital are arrangements to be made in the wards for games, attending to the personal needs of patients, Group Theory of Sessions, rehabilitation programme, and training of paramedical workers. One Social Worker is attached to the General Hospital in the Venereal Diseases Department and she acts as a receptionist and attends to writing a history of the cases.

DR. H. V. HANDE : From the answer of the Hon. Minister it is seen that there are Psychiatric Social Workers in the Mental Hospital. What is the minimum qualification required of them? For the reason that no qualification is prescribed, they may dabble in psychiatry.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : A degree of B.A. of Madras or Annamalai University with Psychology as optional, preferably with practical experience of home visiting under the guidance of Psychiatric Social Workers for not less than one year in the Tata School of Social Work, Bombay, or in the Institute of Mental Health, Bangalore.

SRI K. S. ABDUL WAHAB : May I know the authority who is entrusted with the power of appointing these Social Workers and the criteria for selection of these Social Workers and the starting pay fixed for them?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : The head of the institution appoints them. We have got four or five kinds of Social Workers for various hospitals. We have got Social Workers with minimum general education qualification and with previous experience in social work. They are allowed pay in the scale of Rs. 100–5–150 or 125–5–175. There are Social workers with minimum general qualification and with a diploma in the School of Social Work or any other qualification equivalent to it. They get pay in the scale of Rs. 125–5–175. There are the Psychiatric Social Workers with S.S.L.C. qualification and training in Red Cross or and similar bodies, whose scale of pay is Rs. 125–5–175. There are also Psychiatric Social Workers with graduate qualification and with training as Psychiatric Social Worker for one year in the Tata School of Social Work, Bombay, or in the Institute of Mental Health, Bangalore. Their scale of pay is Rs. 140–5–220. Then, there is a Social Worker in the Venereal Diseases Department of the Government General Hospital, with S.S.L.C. qualification and previous experience as Medical Social Workers (having undergone a training in different aspects of venereal diseases). She gets pay in the scale of Rs. 100–5–150, but the Director of Medical Services has now recommended a scale of Rs. 200–5–240–10–270.

SRI M. RAJAH IYER : As regards the Psychiatric Social Workers in the Mental Hospital, considering the delicate nature

[29th March 1966

of the work they are called upon to do, is there any special allowance for which they are eligible, and has there been any appraisal of the work done by them to sonsider the worthwhileness of continuing them as Psychiatric Social Workers?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Except the pay, there is no special allowance. But the Government may consider whether it will be possible for them to treat such cases.

SRI K. BALASUBRAMANYA AYYAR : Do these Social Workers consist of men and women or women alone?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : At present there are only women.

*Welfare Officers of Jail Department*

* 149 Q.—DR. H. V. HANDE (on behalf of SRIMATHI MARY C. CLUBWALA JADHAV) : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(a) the number of Welfare Officers employed in the Jail Department in the State and their duties; and

(b) the number of Probation Officers employed in each district in the State and their duties?

THE HON. SRI G. BHUVARAHAN : (a) Five. The duties of the Welfare Officers are set out in statement[a] placed on the Table of the House.

(b) The particulars are furnished in the statement [a] placed on the Table of the House.

*Transfer of teachers in the panchayat unions*

* 150 Q.—SRI M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the basis on which the Committee to enquire into the transfers of teachers in the Panchayat Unions was appointed?

THE HON. SRI S. M. A. MAJID : An ad hoc body has been constituted in each Panchayat Union to consider proposals for transfer of elementary school teachers of the Union. The Revenue Divisional Officer is the Chairman of the body. The Chairman and the Commissioner of the Union and the District Education Officer are members.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** தலைவர் அவர்களே, இந்த வேலை மாற்றம் பரிசீலனை செய்யும் குழுவில் ஆசிரியர்களுடைய பிரதிநிதி யாராவது இருக்கிறார்களா? National Award வாங்கிய ஆசிரியர்களுக்காவது இடம் அளிக்க அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் :** ஏற்கனவே நிர்வாக சம்பந்தப்பட்ட வரையில் ஆர்.டி.ஓ. சேர்மனாகவும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், யூனியன் சேர்மன், உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள்.

[a] Printed as Appendix I on pages 210–212.



29th March 1966]

ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட வரையில் இந்தப் பிரச்னையில் ஜாக்கிரதையாக முன்பு இருந்ததுபோல தவறுகள் இருக்கக்கூடாது என்று Ad hoc கமிட்டி ஏற்பட்டு செயல்படுகிறது. அது எல்லோருடைய திருப்திக்கும் ஏற்ப செயல்பட்டு வருவதை அங்கத்தினர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. ஆர். வெங்கடாசலம் :** அத்தகைய குழு ஆண்டுக்கு ஒரே ஒரு முறை தான் கூடவேண்டுமென்று நியதி இருக்கிறதா?

**கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் :** ஏப்ரல், மே, மாதங்களில் கூடி பரிசீலனை செய்யும் நிலைமையில் இருக்கிறது. அப்போதுதான் அவசியம் ஏற்படுகிறது. அதற்கிடையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்றால் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும்.

SRI M. RAJAH IYER : May I know whether this committee is to consider the general service condition of teachers or only the question of how transfers of teachers are made?

**கனம் திரு. எஸ். எம். ஏ. மஜீத் :** சில இடங்களில் ஆசிரியர்கள் இல்லாமல் இருக்கலாம். சில ஆசிரியர்கள் வேறு கோளாறுகளினால் மாறுதல் செய்யும் பிரச்னை சம்பந்தமாக தலைவரின் நோட்டத்துக்குக் கொண்டு செல்லலாம். சமீபத்தில் இந்த மாதிரி பிரச்னைகள் பரிசீலனை செய்யப்பட்டு, ஜாக்கிரதையாக செய்யப்பட்டு வருகிறது என்பதை, அங்கத்தினர்கள் பாராட்டும் முறையில் நடந்து வருகிறது என்பதை, அங்கத்தினர்களே அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

## UNSTARRED QUESTIONS.

*Dearness Allowance to Engineering Instructors, Craft Instructors, etc.*

8. Q.—SRI M. RAJAH IYER : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Special pay granted to certain teachers like Engineering Instructors, Craft Instructors, etc., in Secondary Schools is taken into account for calculation of the Dearness Allowance admissible on their salary; and

(b) if so, whether a copy of the G.O. will be laid on the Table of the House?

A.—(a) Yes.

(b) A copy of Government Memorandum [a] No. 45287 E3/62-1, Education, dated 12th July 1962 is placed on the Table of the House.

[a] Printed as Appendix II on pages 212–213

[29th March 1966

*Fixation of salary in an elementary school*

9 Q.—Sri M. RAJAH IYER: Will the Hon. the Chief Minister be pleased to place on the Table of the House with reference to the answer given to the Legislative Council Question No. III on 12th August 1965 a copy of the G.O. allowing the service of a Secondary Grade Trained teacher in a High School prior to 1st June 1960 for fixation of salary in an elementary school?

A.—A copy of the G.O. [a] is placed on the Table of the House.

*Conveyance Allowance to Non-Gazetted Officers.*

10 Q.—Sri S. K. SAMBANDHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any Conveyance Allowance is given to any of the categories of Non-Gazetted Officers; and

(b) if so, the details thereof?

A. (a)—Conveyance Allowance is granted by the State Government to Government servants, who have to tour regularly on Official duty within a specific area for maintenance of a specified conveyance and is in lieu of all fixed travelling allowances, ordinarily admissible for journeys within the specified area.

(b) A statement [b] is placed on the table of the House.

*State Transport Department.*

11 Q.—Sri M. SUBBIAH CHETTIAR: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) the number of buses for (i) long distance express services and (ii) city services in the State Transport Department;

(b) whether different accounts are maintained for the above two categories; and

(c) if so, the profit and loss account on the above services separately for the past three years?

| | As on 31st March 1965. | As on 31st January 1966. |
|---|---|---|
| (a) i. Long distance services. | 123 | 158 |
| ii. City | 815 | 935 |

(b) Separate proforma accounts are maintained for City services including suburban services and long distance services only from 1st April 1964.

a Printed as Appendix III on page 213.
b Printed as Appendix IV on pages 213-214.



29th March 1966]

| | City. | Long distance. |
|---|---|---|
| (c) | 1962-63 Rs. 22,688 (Profit) | (including accounts for long distance and suburban services also.) |
| | 1963-64 (—) Rs. 28,40,820 (Loss) | |
| | 1964-65 (—) Rs. 23,88,681 (Loss) | (including accounts for suburban services.)—Rs. 3,90,894 (Profit). |

*Incomes of the Municipalities in the State*

12. Q.—Sri K. S. ABDUL WAHAB: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the incomes of the Municipalities in the State during the year 1962-63;

(b) the amount of aid given by the Government to each of them; and

(c) the expenditure incurred for the establishment for each Municipality?

A.—A statement [a] is placed on the table of the House.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO SERVING OF AN ORDER ON SRI UMANATH, M.P., BY THE GOVERNMENT OF MADRAS.

Dr. H. V. HANDE: Mr. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance namely the serving of the second order on Sri Umanath, M.P., by the Government of Madras which came up for adverse comment in Parliament and to clarify the position in this regard.

* The Hon. Sri R. VENKATARAMAN: Mr. Chairman, on behalf of the Chief Minister, I wish to make the following statement:—

Sri U. Umanath M.P., was detained in the Cuddalore Central Jail under rule 30 (1) (b) of the Defence of India Rules. The wife of the detenu, Mrs. Pappa Umanath wrote a letter to the Chief Minister stating that her health was deteriorating day by day and that she needed her husband to help her with the treatment. Hence Sri Umanath was released on a month's parole to enable him to attend on his ailing wife in Tiruchirappalli as per G.O. Rt. No. 432, Public (General-B) Department, dated the 22nd February 1966. Among the other conditions of parole mentioned in this order, Sri Umanath was required to report daily before the concerned Police authorities. He had

a Printed as Appendix V on pages 214-215.

agreed to abide by these conditions and had also given a written undertaking before his release that he would report daily before the concerned Police authorities, i.e., the Superintendent of Police, Tiruchirappalli or the nearest Police Station, Woraiyur.

On 1st March, the Government received information that Sri Umanath was thinking of going to Delhi. Since he was required to report before the Woraiyur Police daily, it was felt that his trip to Delhi could be undertaken only by modification of the parole order. Hence, a clarification of the parole order was sent to him on 2nd March, stating that under the present conditions of parole, he should not go to Delhi. This communication is only elucidatory in nature. It is not an order and it has not introduced any new conditions of parole either.

This Government do not consider it proper to comment on the proceedings of the Parliament. However, I wish to point out to the Members that when a question was raised by a Member of Parliament on this issue, whether it would be proper for the Speaker to give a ruling without finding out what the State Government or the Chief Minister had to say in the matter, the Speaker had replied that his ruling concerned the Central Government.

The State Government are vested with full authority to pass orders of detention to release detenue on parole, to specify conditions to be observed by the detenue during the parole period, etc. This Government were well within their rights in acting in the manner in which they did.

### III.—DISCUSSION ON THE STATE PLAN SCHEMES—*cont.*

**திரு. க. அன்பழகன்:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய நகல் அறிக்கையின் மீது இந்த விவாதம் இங்கே நடைபெறுகிறது. திட்டவட்டமான நிலைமை இன்னும் தெரிவிக்கப்படுகிற சூழ்நிலை தோன்றாவிட்டாலும் இந்த அளவாவது இந்தத் திட்டம் நடைபெற்றாக வேண்டுமென்ற கருத்தில் பொதுவான உடன்பாடு தோன்றக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தால் ஏற்பட்ட வளர்ச்சியினுடைய விளைவுகள், பொருளாதார முன்னேற்றம் என்று குறிப்பிடப்படுகிற கருத்துக்கள் இவையெல்லாம் இடைநிலையில் விட்டுவிடப்படாமல் தொடர்ந்து இன்னும் ஓரளவு முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்று கருதப்படுகிறது. ஓரளவு என்பது எந்த அளவு என்பதைப் பின்னால் விளக்கப்படத்தக்கதாக இருக்கிறது. இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் எந்த அளவு மூலதனம் போடவேண்டிய சூழ்நிலை இருந்ததோ அந்த
10-50 a.m. அளவுக்கு, மூன்று திட்டங்களுக்கும் சேர்ந்து உள்ள அளவுக்கு நான்காவது திட்டத்தில் மூலதனம் போடவேண்டுமென்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். என்றாலும் இந்த ஐந்தாண்டுத்





திட்டத்தால் ஏற்பட்ட வளர்ச்சி என்ன வகையானது என்று எண்ணிப் பார்த்தால் மூலதனம் போட்டதில் குறைவில்லை. பல்வேறு தொழில்கள் தோன்றியிருக்கின்றன என்ற குறிப்பில் எந்தவிதமான குறையும் இல்லை. ஆனால் அதன் வளர்ச்சியின் விளைவு இன்ன அளவு என்று சொல்வதில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. பலன் கிடைத்ததா என்று சொல்வதை எண்ணிப்பார்த்தால் அந்தப் பலன் பொதுமக்களைப் போய்ச் சேர்ந்ததா இல்லையா என்று ஆராயும்போது, பொதுமக்கள் என்று சொல்லும்போது ஏழை மக்கள், நடுத்தர மக்கள்—இவர்கள் திட்டத்தின் பலனைப் பெறவேண்டிய அளவு பெறவில்லை என்பதை யாரும் மறுக்க முடியாது. உண்மையாகவே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறத்தாழ இருபதினாயிரம் கோடி அளவுக்கு மத்திய அரசாங்கம் திட்டமிடுகிற நிலைமையிலும், மாநில அரசாங்கத்தில் அரசாங்க சார்பில் 600 கோடி அளவுக்கும் தனியார் துறையில் ஏறத்தாழ 200 அல்லது 250 கோடி அளவுக்கும் மூலதனம் இடலாம் என்று தெரிவிக்கப்படுகிறபோது ஏற்கனவே இடப்பட்ட மூலதனத்தின் பலன் முழு அளவுக்கு ஏழைகளை வாழ வைக்கவில்லை என்ற எண்ணத்தால் இந்தத் திட்டத்தில் மகிழ்ச்சி பிறக்கவில்லை. இந்தப் புள்ளிவிவரங்களைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். புள்ளிவிவரம் ஆராய்ந்து கொடுக்கப்படுகின்றன என்று சொல்வதைவிட புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்று சொல்வது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன். புள்ளிவிவரத்தைக் கொண்டுவந்து குவிக்கிறார்கள். அதில் நாம் உட்கார்ந்துகொண்டு போகிறோமே தவிர ஆராய்ச்சி செய்யப்பட்டு சரியான கணக்கின் அடிப்படையில் விவரங்களோடு நடைபெறவில்லை. உணவு உற்பத்தியைப் பொருத்தவரையில் திட்டத்தின் லட்சியத்தை யாரும் மறுக்கமுடியாது. அரசாங்கம் தந்திருக்கிற புள்ளிவிவரத்தைப் பார்த்தால் ஏறக்குறைய மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணவேண்டுமென்ற பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 16½ லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி அதிகப்படுத்த முடியும் என்று எதிர்பார்த்தார்கள். என்ன வகையில் என்றால், ரசாயன உரம், பசுந்தழை உரம், பெரிய பாசனத் திட்டம், சிறு பாசனத் திட்டம், மண் வளப் பாதுகாப்பு, நல்லவிதை, தரமான விதைகள் இத்தனை வகைகளில் எதிர்பார்த்தார்கள். இதில் தவறில்லை. இந்த அளவுக்கு நிச்சயமாக 7¾ அல்லது 8 லட்சம் டன் ரசாயன உரத்தினால் உற்பத்தி அதிகமாகத்தான் வேண்டுமென்று சொல்லும்போது அதற்கான ஆதாரம் அவர்களிடத்தில் இல்லை. அதை எட்டிப்பிடிக்கவும் இல்லை. ரசாயன உரம் இத்தனை லட்சம் டன் வழங்க முடியும் என்றால் அதை வரவேற்கிறேன். ரசாயன உரத்தினால் 7.9 லட்சம் டன் உற்பத்தி அதிகமாகும் என்றால், ரசாயன உரம் கிடைக்காததால் குறைவது மட்டுமல்ல, உரம் போதுமான அளவு கிடைக்காததால் வேறு குறைந்திருக்கிறது. ரசாயன உரம் போட்டால்கூட துணைப் பொருள்கள் சரியில்லை என்றால் நிலத்திலே போடப்படும் ரசாயன

[திரு. க. அன்பழகன்] [29th March 1966

உரமும் சேர்ந்து பயிரைப் பாழ்படுத்துமே தவிர அதில் முன்னேற்றம் காண முடியாது. நிலத்தில் பசுந்தழை உரங்கள் போடப்பட்டு அந்த வயலுக்கு சேர்க்கவேண்டிய சத்துக்களைச் சேர்த்து அதற்குப் பிறகு ரசாயன உரம் சேர்த்தால் அது ஓரளவு உடல் நலமில்லாதவர்கள் சாப்பிடுகிற டானிக்கைப் போன்றிருக்கும். ஆகையால் வெறும் புள்ளி விவரங்களைக் காட்டி நாட்டு மக்களை வாழ்விக்க முடியாது. பசுந்தழை உரத்தினால் 3½ லட்சம் டன் அதிகரிக்கும் என்று சொல்லி 3.3 அளவுக்கு கொஞ்சம் அதிகமாக உற்பத்தியாகிவிட்டது என்று சொல்கிறார்கள். எந்த மீட்டரை வைத்து அளந்தார்கள்? பசுந்தழை உரம் என்பது ஏமாற்றமாக இருக்கிறது. பொதுமக்களுக்கு அதன் அவசியத்தை உணர்த்த முடியவில்லை. பஞ்சாயத்துக்கள் மூலம் செய்யும்போது பசுந்தழை உரங்களின் சேகரிப்பிற்கு சில காரியங்கள் நடைபெறுகின்றன என்பதைத் தவிர அதற்கான 'டார்கெட்' ஏற்படும் அளவுக்கு செயல்படவில்லை. உள்ளூர் ஆதாரங்கள், பெருநீர்ப் பாசனம், சிறுநீர்ப்பாசனம் இவை இருந்தாலும் தர விதைகளால் ஓரளவு வரும், வரவேற்கலாம். ஒவ்வொரு நிலமும் பயிர்ச் செலவு செய்துவரும்போது நாளுக்கு நாள் மண் வளத்தை இழந்துவருகிறது. ஓரளவு அதன் தரத்தை நிலம் இயற்கையாகவே இழக்கிறது. இப்படிப்பட்ட நிலங்களில் ரசாயன உரம் போட்டால் முதல் முறை ஒரு சதவிகிதம் இருக்குமானால் அடுத்த ஆண்டு இரண்டு, மூன்று சதவிகிதம் அளவுக்கு தரக்குறைவு ஏற்படுகிறது. ஏற்படுகிற இழப்பிற்கு ஈடுகட்டாமல் பொதுவாகச் சொல்வது என்றால்—நஷ்டம் ஈடுகட்டப்படாமல் போய்விடுகிறது. திட்டத்தைப் பற்றி முன்பு ஒருமுறை தெரிவித்ததைப்போல, பெண் பார்க்கும் முன்பு மாப்பிள்ளையிடம் சொல்வார்கள், அழகான பெண், நான் குழந்தையிலிருந்து பார்த்திருக்கிறேன், எலும்பிச்சம் பழம் போன்ற நிறம், மூக்கும் முழியும் பார்த்தால் வேண்டாமென்று சொல்லமாட்டாய் என்று. மாப்பிள்ளை மங்கலான நேரத்தில் போயிருந்தால் ஏமாந்து போயிருப்பான். வெளிச்சமான நேரத்தில் பார்த்தால் உண்மை நிலை புரியும். பெண் எலும்பிச்சம்பழம் நிறத்தில் இருப்பது சோகை காரணமாகத் தான் என்று சொல்வான். அதைப்போல மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சோகையிருந்தாலும் கூட அதில் எலும்பிச்சம்பழ நிறம் காட்டப்படுகிறது. அதில் ஏமாறும் வயதில் நான் இல்லை. நிறம் அம்மாதிரி காட்டப்படுகிறதே தவிர உண்மை அதுவல்ல என்ற குற்றச்சாட்டை சொல்லிக்கொள்கிறேன். நான்காவது திட்டத்தில் 1970-71-ல் ஆளுக்கு 18 அவுன்சு தரக்கூடிய அளவுக்கு மொத்தம் 76 லட்சம் மெட்ரிக் டன் தேவை என்று தெரிவித்து அதை நிறைவேற்றுகிறோம் என்றும் தெரிவிக்கிறார்கள். புள்ளி விவரம் தரவே வேண்டாம். ஐந்தாண்டுத் திட்ட முடிவில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காட்டுவோம் என்ற உறுதியைத் தாருங்கள். அதற்காக எந்த நாட்டிலிருந்தேனும் கருவிகளைக் கொண்டுவாருங்கள், தேவையானால் ரசாயன உரத்தைக் கடனாகப் பெறுங்கள். இந்த நாட்டில் பொதுமக்கள் உழவுத் தொழிலில்



29th March 1966] [திரு. க. அன்பழகன்]

எப்படியெப்படி நடந்துகொண்டால் தன்னிறைவுக்கான பலத்தைப் பெறலாம் என்பதைச் சொல்வதற்கு ஆளும் கட்சிக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது. எதிர்க்கட்சி இப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபடுவதாக இருந்தால் ஏர் முனைத் திருவிழாவில் எதிர்க்கட்சியினரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஆளும் கட்சிக்கு ஏர் 11-00 a.m.
முனை மட்டுமல்ல அதற்கு முன்பே காளைமாடு இருக்கிறது. வேறு யாராவது வந்து அதை ஓட்டிக்கொண்டு போய்விடுவார்களோ என்று ஏர்முனைத் திருவிழாவில் அவர்களைச் சேர்த்துக்கொள்ளாவிட்டாலும் அந்த விழாவில் மட்டும் கிடைப்பதல்ல ஏர்முனை. மற்ற நாட்களிலும் அது கிடைக்கும்.

ஆனால், அந்த அளவுக்கு இருக்கிற இந்த ஏர் முனைத் திருவிழா போன்ற பல நிகழ்ச்சிகள் மூலமாக பொதுமக்களுக்கு இதிலே அதிக அக்கறை உண்டாக்க வேண்டும். அதன் மூலம் விவசாயத்தைப் பற்றி அதிக தெளிவு உண்டாக்க வேண்டும்.

அடுத்து இனி நான் சொல்லிக் கொள்ள விரும்புவது பொது மக்கள் ஒத்துழைப்பு பற்றியதாகும். நான் சொல்லுவது வெறும் வேடிக்கைக்கு என்று கூட அமைச்சர் அவர்கள் கருதலாம். நான் சொல்ல விரும்புவது, பொதுமக்கள் ஒத்துழைப்பை, தேவையான அளவுக்கு அரசாங்கத்தால் பெற முடியவில்லை என்பதாகும். நேற்றைய தினம் பேசிய திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் மிகவும் உணர்ச்சியோடும் ஆத்திரத்தோடும் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். அதாவது இன்றைய அதிகார வர்க்கத்தில் இருப்பவர்கள் சரியாகப் பணியாற்றாத காரணத்தால் தான் ஆட்சி நடத்துகிறவர்கள் அந்தக் குறைகளுக்கு பொறுப்பு ஏற்க வேண்டி இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இந்தத் திட்டத்தின் நகலில் (தமிழ் அறிக்கையில்) 4-வது பக்கத்தில் வேறு ஒரு காரணத்திற்காக இந்தப் புள்ளிவிவரம் தரப்பட்டு இருக்கிறது. பொதுமக்கள் ஒத்துழைப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட பணம் ரூ. 6,00,000. செலவு ஆனது ரூ. .04 லட்சம், .02 லட்சம் .06. அதாவது ரூ. 2,000, 4,000, 6,000 என்ற கணக்கில் தான் செலவாகி இருக்கிறது. தலைப்பு "பொதுமக்கள் ஒத்துழைப்பு". இதிலிருந்து எனக்கு கிடைக்கிற குறிப்பு எல்லாம் அரசாங்கத்தின் தரப்பில் பொதுமக்களின் ஒத்துழைப்பு ஏறத்தாழ பூஜ்யம் என்பதாகத் தான் இருக்கிறது. பொதுமக்கள் ஒத்துழைப்பு தருவதற்கான ஆர்வம் அவர்களிடம் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

அடுத்து உணவு உற்பத்தியைப், பெருக்குவது. இது திட்டங்கள் போடுவதனால் மட்டும் முடிந்துவிடுவதில்லை. அதாவது திட்டங்கள் மறு பரிசீலனை செய்யப்படும் முறையில், இந்தத் திட்டங்கள் கிராம பொருளாதாரத்தை அடிப்படையாக வைத்து போடப்பட்டு இருக்கவேண்டும். கிராமப் பொருளாதார அடிப்படையில் இந்தத் திட்டங்கள் இன்றையதினம் இருக்கின்றனவா என்றால் இல்லை. நான் சொல்லுவது குடிசைத் தொழில் பற்றியல்ல. அதே போல் பெரும் தொழில் வளர்ச்சி கூடாது என்றும் சொல்லவில்லை. கிராமப்

[திரு. க. அன்பழகன்] [29th March 1966

பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாக வைத்து திட்டங்கள் போடப்படும்போது தான்,—அந்த வளர்ச்சியைப் பொறுத்து தான் கிராம மக்கள் உணவு உற்பத்தியை அதிகமாக்குவதில் அக்கறை காட்டுவார்கள். பலர் என்ன நினைக்கிறார்கள்? நாம் இன்னும் எவ்வளவு நாள் இந்த கிராமத்திலே இருக்கப் போகிறோம்; நம் மகனுக்கு சென்னை போன்ற நகரத்திலே வேலை கிடைக்காதா? அப்படி வேலை கிடைக்கும்போது குடும்பத்தோடு அவனுடன் போய்விடமாட்டோமா என்று எண்ணக்கூடிய நிலையில்தான் பெரும்பாலானவர்கள் கிராமத்திலே இருப்பவர்கள் இருக்கிறார்கள். மிகப் பெரிய நிலச்சுவான்தார்கள், அதிக நிலம் வைத்திருப்பவர்கள்—அவர்கள் எல்லாம் 30 ஏக்கர் தானே வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்ல முன்வரக்கூடும்—உச்ச வரம்பு 30 ஏக்கர் தான் என்றாலும் உச்ச வரம்புக்கு மேலே மிச்ச வரம்பு கட்டிக் கொண்டவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் கூட இன்றைக்கு கிராமங்களில் குடியிருக்காமல் நகரத்திலே தான் இருக்கிறார்கள். இன்னும் ஏழை எளிய மக்கள், உழவர்கள், கிராமங்களில் வாழ முடியாத வறுமை காரணமாக, கிராமத்தை விட்டு சென்னை போன்ற நகரங்களுக்கு வர ஆரம்பித்து விட்டார்கள். சென்னை நகரில் குடிசைப் பிரச்னை இன்னும் தீர்க்கப்பட வில்லை என்று ஏற்கனவே இங்கே உள்ளவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இன்னும் கிராமங்களிலிருந்து ஏழை எளிய மக்கள் இங்கே வருகிறார்கள் என்றால்—சினிமா பார்ப்பதற்காக அல்ல—கிராம வாழ்க்கையில் ஏற்படுகிற துன்பங்கள் காரணமாக, வறுமை காரணமாக, சென்னைக்கு வருகிறார்கள் என்றால் இந்தப் பிரச்னையை எப்படித் தீர்க்க முடியும்? எனவே கிராமத்தை விட்டு பல காரணங்களால் வெளியே போக முடியாதவர்களும், வசதி இருப்பதன் காரணமாக வெளியே போக முடியாதவர்களும் தான் இன்றையதினம் கிராமத்திலே இருக்கிறார்கள். எனவே 4-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் கிராமங்களினுடைய வாழ்க்கை வசதிகளை அதிகப்படுத்த வழி வகை காண வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வழி வகை என்று சொன்ன உடனே, சோஷல் சர்வீஸ் என்ற முறையில் இப்போது கிராமங்களில் பள்ளிக்கூடம் கட்ட வில்லையா? ஒன்று இரண்டு கட்டிடங்கள் இடிந்து போனாலும் மற்ற கட்டிடங்கள் நன்றாக இல்லையா, இன்னும் புதிய கட்டிடங்கள் கட்ட திட்டமில்லையா என்று கேட்பார்கள், மருத்துவ மனைகள் இல்லையா என்று கேட்பார்கள். பல இடங்களில் மருத்துவ மனைகள் இருந்தும் மருத்துவர்களும் மருந்தும் இல்லாத நிலையும், கிராம வைத்தியம் என்ற முறையில் சித்த வைத்தியம், இண்டிஜீனஸ் மெடிசன் வைத்தியப் படிப்பு படித்திருப்பவர்களுக்கு ஏறத் தாழ 6 மாதம் வரை சம்பளம் தராத நிலை இருக்கிறது. சுகாதார அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதால் அதை உடனடியாக கவனிப்பார்கள் என்று சொல்லுகிறேன். பஞ்சாயத்துக்கள் மூலம் அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கிறது என்றாலும் அலவன்ஸ் என்ற முறையில் அரசாங்கத்திடமிருந்து கிடைக்க வேண்டிய பணம்



29th March 1966] [திரு. க. அன்பழகன்]

ஆறு மாதம் ஆகியும் கிடைப்பது இல்லை. அதேபோல் பள்ளிக் கட்டிடங்கள் நகரத்தில் இருக்கிற பள்ளிக்கூடங்களைப் போல் நல்ல நிலைமையில் கண்காணிக்கப்படாத காரணத்தால் அவைகள் மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கின்றன. இப்படி சமுதாய நலத்திற்காக நீங்கள் செய்யும் காரியங்கள் பொதுமக்களுக்குப் போகாததால் கிராம மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து பொருளாதார நிலையில் ஏற்பட்டு இருக்கிற வளர்ச்சி என்று சொல்லப்படுவது எல்லாம் நேஷனல், தேசீய வருமானத்தைப் பற்றிய புள்ளி விவரத்தைக் கொண்டதாகவே இருக்கிறது. தேசீய வருமானம் என்று சொல்லப்படுகிற மொத்தத் தொகை, சராசரி வருமானம் என்ன என்று கணக்குப் போட்டு எதைச் சொல்லுகிறோமோ அந்தக் கணக்குப்படி பொதுமக்களிடம் போய்ச் சேர்ந்தால் நான் அதை வரவேற்கிறேன். ஆனால் சராசரி வருமானம் என்பது அடித் தட்டில் இருப்பவனுக்கும் உச்ச நிலையில் இருப்பவனுக்கும் இடையே போடப்படுவதாகும். அந்தச் சராசரி, சராசரியாக மக்களை எட்டுவது இல்லை. உள்ளபடியே நடுத்தர வர்க்கத்திற்கு மேல் நிலையில் உள்ளவர்கள் தான் அதாவது 'அப்பர் மிடில் கிளாஸ்' என்று சொல்லப்படுகிறவர்கள் தான் அந்தச் சராசரி வருமானத்தைப் பெறுகிறார்கள். சாதாரண 'மிடில் கிளாஸ்' மக்கள் கூட அந்த சராசரி வருமானத்தைப் பெறுவதில்லை. அதற்கும் கீழே தொழிலாள மக்களாக, ஏழை மக்களாக, கடை நிலையில் வாழ்கிறவர்கள் இந்த சராசரி வருமானத்தை எட்டி பிடிக்க முடிவதில்லை. ஆகவே தேசீய வருமான உயர்வைக் காட்டி சென்ற ஆண்டு 240 ஆக இருந்தது இந்த ஆண்டு 350 ஆக இருக்கிறது என்று காட்டி 250, 350 என்ற அளவில் உயர்ந்திருக்கிறது. ஆனால் விலைவாசி உயர்வோ, புள்ளிவிவரங்கள்படி 21 சதவிகிதம் தான் அதிகமாகி இருக்கிறது என்று காட்டுவதிலே பொருள் இல்லை. 'இந்தியன் எக்கானமி' என்ற இந்த நூலிலும் விலைவாசி உயர்வு 21 சதவிகிதம் தான் உயர்ந்திருக்கிறது என்று போடப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் பார்க்கிற போது விலைவாசி உயர்வு அதிகமில்லை என்ற கணக்கைக் காட்டுகிறார்கள். கணக்குப் போடுவதிலே புலிகளாக இருப்பதால், திறமைசாலிகளாக இருப்பதால் தான் அரசாங்கத்தில் இவர்கள் பொறுப்பான நிலையில் இருக்க முடியும். ஆனால் உண்மை நிலை அதுவல்ல. சராசரி வருமானம்—நீங்கள் சொல்லுகிற சராசரி வருமானம் வருகிறவர்கள் சமூகத்தில் 100-க்கு 20 பேர்கள் கூட இல்லை என்று என்னால் காட்ட முடியும். 100-க்கு 80 பேர்கள் சராசரி வருமானத்திற்கும் கீழே இருப்பவர்கள் தான். அப்படி இருக்கும் போது விலைவாசி உயர்வு யாரையும் பாதிக்காது என்றால் உங்களுக்கு நாட்டு மக்களுடைய நிலை தெரியாது, ஏட்டில் இருக்கும் புள்ளிவிவரங்கள் தான் உங்களுக்குத் தெரியும் என்று தான் சொல்லிக் கொள்வேன்.

நகரத்தில் வாழ்கிறவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சேர்த்து தான் ரூ. 360 என்றால், ஒரு ஆளுக்கு ஒரு நாளைக்கு 1 ரூ என்ற

[திரு. க. அன்பழகன்] [29th March 1966

சராசரி வருகிறது. சென்னையில் 5 பேர் உள்ள குடும்பத்திற்கு 5 ரூபாய், வாழ முடியுமா அதிலே? அமைச்சர் அவர்களுக்கு நினைவு இருக்கும் என்று நம்புகிறேன். கிராம உழவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் சராசரி வருமானம் ஒரு நாளைக்கு 13½ பைசா தான். யாராவது மறுத்து 15 பைசா அல்லது 4 அணா என்று சொல்லட்டும். கிராம மிராசுதார்களின் வருமானம் பற்றி நான் சொல்லவில்லை. உழவன், "ஃபார்மர்"—உழைப்பாளியின் வருமானம் சராசரி ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு 13½ பைசா, என்று சொல்லப்படுகிறது. அது 15 பைசாவாகத்தான் இருக்கட்டும். ஒரு குடும்பம் முழுவதற்கும் சேர்ந்து ஒரு ரூபாய் கூட வரவில்லை. இந்த நிலையில், பொருளாதார வளர்ச்சியால் ஏற்படவேண்டிய உண்மையான பலன் யாருக்குக் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை, கிடைக்க வழி செய்யப்படவில்லை; அப்படி கிடைப்பதற்கு குறுக்கே சில தடைகள் இருக்கின்றன; அவைகள் இன்னும் களையப்படவில்லை என்று நான் தொழில் அமைச்சர் அவர்களிடம் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பண்டித நேரு அவர்கள் இந்தத் திட்டங்கள் யாருக்காக போடப்படுகின்றன என்று குறிப்பிடும்போது இந்தத் திட்டங்கள் மிகப் பெரிய லட்சாதிபதிகள் இன்னும் பெரிய செல்வந்தர்களாக ஆவதற்கு அல்ல; ஆனால் ஏழைகளுக்கு, கிராமத்திலே உள்ள உழவர்களின் வாழ்க்கை செம்மைப்படுவதற்கு என்று குறிப்பிட்டார். ஆனால் ஏழை மக்கள் இன்னும் ஏழை மக்களாகவே தான் இருக்கிறார்கள். ஒருவன் மடியிலே இருக்கிற காசுக்கும் அடுத்த விட்டுக்காரன் மடியில் இருக்கும் காசுக்கும், சமுதாயத்தில் இருக்கிற காசுக்கும் உள்ள உறவை வைத்துத்தான் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு காணப்படுகிறது. செட்டி நாட்டிலே முன்பெல்லாம் ஏழை என்றால் சுமார் 2 லட்சம் உள்ளவர் என்று பொருள். 2 லட்சம் ரூபாய் உள்ளவரைத் தான் ஏழை என்று குறிப்பிடுவார்கள். இன்றைக்கு அதையும் இழந்து விடும் சூழ்நிலையில் இருக்கிறார்கள். 2 லட்சம் இருப்பவனை ஏழை என்று கருதப்பட்டு வந்த நிலை அவர்களுக்குள்ளே 10 ஆண்டுகளுக்கு முன்னே இருந்து வந்தது.

இன்றைய சமுதாய நிலையில் பார்த்தால் ஏழை மக்கள் இந்தப் பொருளாதார வளர்ச்சியில் பங்கு கொள்ள முடியவில்லை என்பது தெரிகிறது. அப்படி பங்கு பெற வேண்டும் என்றால் நம்முடைய திட்டங்கள் கிராம அடிப்படை நோக்கத்தில் தொடங்கப்பட வேண்டும். கிராமத்தை ஒட்டிய பகுதிகளில் பெரிய தொழில் வளர்ச்சி ஏற்பட முயற்சி செய்ய வேண்டும். கிராமப் பகுதிகளில் பெரிய தொழிற்சாலைகளும் தொழிற்பேட்டைகளும் ஏற்படுத்துவதன் மூலம் நகரத்தை நோக்கி அங்குள்ள மக்கள் குடியேற வருவதைத் தடுக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தவும், அதன் மூலம் நகர்ப்புறங்களில் அம்மக்களை சிரமைக்க முடியாமல் இருக்கும் நிலைமையைத் தவிர்க்கவும் ஆன வழியில் சென்னை அரசாங்கம் பல திட்டங்களை ஆராயும் திறமை உள்ளதாக இருப்பதால் இதையும் ஆராய்ந்து அகில இந்தியாவுக்கும் ஒரு வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டமாவது உழவர்களை வாழவைக்கும் திட்டமாக இருக்க வேண்டும். உழவர்களுக்கு நிலம் என்று சொன்ன கருத்து எங்கோ போய்விட்டது. அதற்குப் பிறகு உழவனுக்கு வாழ்வு என்று சொன்ன கருத்து இன்னும் இருந்துவருகிறது. அக்கருத்தின்படி உழவனுக்கு வாழ்வளிக்க வகை செய்தால் அவர்கள் உணவு உற்பத்தியை அதிகப்படுத்துவார்கள். அதனால் ஏற்படும் நன்மைகள் நம்மையும் சாரும்.



29th March 1966] [திரு. க. அன்பழகன்]

ஒரு அறிஞர் ஒரு கட்டுரையில் சில விஷயங்களை மிக அழகாகச் சொல்லியிருக்கிறார். "இன்று இந்தியாவில் திட்டம் போடப்படுகிறதே தவிர பயிர்செய்யும் குடியானவர்கள் பயிர் செய்யும் இடங்களுக்குப் பக்கத்தில் தங்கியிருக்கக்கூடிய சூழ்நிலை அங்கே இல்லை" என்று அவர் எழுதியிருக்கிறார். இதற்கு இரண்டு, மூன்று காரணங்கள் இருக்கின்றன. பயிர் நிலத்தின் அளவு குறைவாக இருப்பது ஒரு காரணம். தங்கியிருப்பதற்கு வேண்டிய நிலத்தின் அளவு குறைவாக இருப்பதும் ஒரு காரணம். அவர்கள் விவசாயத்தைக் கண்காணிப்பதற்குகந்த சூழ்நிலை இல்லாமல் இருப்பதும் ஒரு காரணம். திரு. தங்கவேல் முதலியார் அவர்கள் நேற்றுக் கூறியதுபோல, விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் ரசாயன உரம் கேட்கப் போகும் இடத்திலும் அவர்களுக்குத் தொல்லை இருக்கிறது; கடன் கேட்கப் போனால் அங்கேயும் அவர்கள் தொல்லைக்கு ஆளாகிறார்கள். கடன் வசூலிக்கப்படும்போதும் அவர்கள் தொல்லைக்கு ஆளாகிறார்கள்: அவர்கள் வாங்கிய கடன்கள் மூன்று தவணைகளில் திருப்பிப் பெறப்படக்கூடிய நிலைமை இருக்கும்போது அந்தக் கடன்கள் அவர்களிடமிருந்து ஒரே தடவையில் திரும்பப் பெறப்படுகின்றன; அவர்களிடமிருந்து கடன்கள் ஒரே தடவையில் கட்டாயப்படுத்தி திரும்பப் பெறப்படுகின்றன. மேலும் கடன்கள் கட்டாயப்படுத்திப் பெறப்படுகின்றன. இதுபற்றி நான் முன்பொரு முறை குறிப்பிட்டபோது கனம் அமைச்சர் நான் சொன்னதை மறுத்தார். மின்சார போர்டுக்குக் கடன் கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறவன் நான். மின்சார போர்டிற்கு 12 அல்லது 13 லட்சம் ரூபாய் கடன் வசூலிக்கவேண்டும் என்று கோயம்புத்தூர் கலெக்டரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்றும், அந்தத் தொகை வசூலிக்கப்பட்டுவிடும் போல் இருக்கிறது என்றும் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. ஆகவே நேரடியான கட்டாயம் இல்லை என்றாலும் மறைமுகமான கட்டாயம் இருக்கிறது. இருந்தாலும், பொதுவாக தொழிற்சாலைகளைப் பெருக்கத்தான் வேண்டும். கிராமத் தொழில்களால் நேரடியான பலன் எந்த அளவு கிடைக்கக்கூடுமோ அந்த அளவு கிடைக்கச் செய்ய வழி வகை காண வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். 11-10 a.m.

அடுத்து, தமிழ்நாடு அரசாங்கம் நிறைவேற்ற விரும்பும் பல திட்டங்களை மத்திய அரசாங்கம் பல காரணங்களால் ஊக்குவிப்பதில்லை என்ற குற்றச்சாட்டை நான் வன்மையாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசாங்கத்தார் நெருக்கடிக்கு

[திரு. க. அன்பழகன்] [29th March 1966

ஏற்றபடியே, 'ப்ரெஷர்'-க்கு ஏற்றபடியே தான் தீர்மானிக்கிறார்கள். அவர்கள் வல்லடி வழக்கிற்குத் தலைவணங்குகிறார்கள். நமது கனம் அமைச்சர்கள் வல்லடி வழக்கில் திறமையில்லாதவர்கள். நமது கனம் அமைச்சர்களுக்கு அந்தத் திறமை இல்லாததால், அவர்களை அச்சுறுத்தும் முறையில் இவர்கள் நடந்து கொள்ளாததால், இவர்கள் போர்க்கொடி உயர்த்தும் முறையில் நடந்து கொள்ளாததால் அதிக வயதான நமது கனம் முதலமைச்சர் இனி போர்க்கொடி உயர்த்த முடியாது—நமது மாநிலத்திற்குப் பெற வேண்டிய பங்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறப்படவில்லை. இவ்வாறு பங்கு என்று கூறும்போது விகிதாசாரப் பங்கை நான் குறிப்பிடவில்லை. தொழில் துறையில் தமிழ்நாட்டில் நிறைவேற்றக் கூடிய திட்டங்களுக்கெல்லாம் சென்னை அரசாங்கத்தினர் ஆவன எல்லாவற்றையும் செய்திருக்க வேண்டும். சேலம் இரும்புத் தொழிற்சாலை வரும், வரும் என்று இந்த ராஜ்யத்தினர் 10 ஆண்டுகளாக எதிர்பார்த்தார்கள். அது இன்னும் வரவில்லை. அதேபோல, இங்கே இன்னும் பல தொழில்களில் மத்திய அரசாங்கத்தார் அக்கறை காட்டவில்லை. இன்று மத்திய அரசாங்கத்தாரோடு தொடர்பு வைத்துக்கொண்டிருக்கும் வாய்ப்பு தமிழ் நாட்டில் பல காங்கிரஸ் தலைவர்களுக்கு இருக்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் தான் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருக்கிறார். அவராலேயே பிரதமர் நியமிக்கப்படுகிறார் என்ற பெருமை கொண்டாடப்படும்போது, இந்த நிலைமை இருக்கிறது. சேலம் இரும்புத் தொழிற்சாலை வரவில்லை. நெய்வேலியில் இரண்டாவது குழி தோண்டப்பட்டு பழுப்பு நிலக்கரி எடுக்கப்பட்டு மின்சார உற்பத்தி செய்யப்படுமா என்றால் அது இப்போது முடியாது என்று தெரிகிறது. சேதுசமுத்திரத்திட்டம் இன்னும் ஆராய்ச்சி நிலையிலேயே இருக்கிறது. தூத்துக்குடித் திட்டம் நிறைவேற்றப் படுமா என்றால், அது பாதி நிலையில் தான் இருக்கிறது. இருப்புப் பாதையில் பிராட்கேஜ் இங்கே போடப்படுமா என்றால், அது இப்போது இங்கே வராது, வடக்கே போட்ட பிறகு தான் அதைத் தெற்கே போடமுடியும் என்று சொல்லப்படுகிறது. அணு மின்சார நிலையத்தை கல்பாக்கத்தில் ஏற்படுத்தலாம் என்றனர். அதற்கு வெளி நாட்டாருடன் உடன்படிக்கை வேண்டுமென்பதால் பல ஆண்டுகளாக அத்திட்டத்திற்கு தடங்கல் இருந்துவருகிறது. மாநில அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கத்திடம் செல்வாக்கு இருப்பதற்கு மிகவும் உகந்த சூழ்நிலை இன்று இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலும் மத்திய அரசாங்கத்திடம் செல்வாக்கு இல்லாத தமிழ்நாட்டு அரசாங்கத்தாருக்கு அனுதாபம் தெரிவிக்க வேண்டியவர்களாக நாங்கள் இருக்கிறோம். நமது மாநில அமைச்சர்கள் திறமையிலோ அனுபவத்திலோ குறைந்தவர்கள் என்றோ, காங்கிரசின் வளர்ச்சியில் அக்கறை இல்லாதவர்கள் என்றோ, எதிர்க் கட்சிகளை வீழ்த்துவதில் திறமையில்லாதவர்கள் என்றோ நான் சொல்லமாட்டேன். அப்படிப்பட்டவர்கள் திட்டங்களில் நம் மாநிலத்திற்குரிய பங்கைப் பெற முடியவில்லை என்றால் அதைப் பெறுவதற்கு இவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசாங்கத்தில் அதிகாரங்கள் குவிந்திருப்பதால் மாநில அரசாங்கத்தின் உரிமைகள் பறிபோகின்றன, மாநிலத்தின் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. ஜப்பான் நாட்டில் ஏற்பட்டுள்ளதைப் போன்ற தொழில் வளர்ச்சியை தமிழ்நாட்டில் ஏற்படுத்த முடியும். அதற்கு வேண்டிய ஆற்றலும் நுண்ணறிவும் இங்குள்ளவர்களுக்கு இருக்கின்றன. தமிழ்நாட்டில் தொழில்களை அமைக்க மத்திய அரசாங்கத்தார் லைசென்ஸ் தருவது போன்ற முறை பெருந் தவறு. வேண்டுமானால், மத்திய அரசாங்கத்தார் நமக்கு ஒரு எல்லையை வகுக்கலாமே தவிர, தொழில்கள் அமைக்கும் விஷயத்தில் 'இந்தத் தொழிலை அமைக்காதீர்கள்' என்று சொல்லும் அதிகாரத்தை அவர்கள் பெற்றிருப்பது, மாநிலத் தொழில் வளர்ச்சிக்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது. மாநில அரசாங்கத்திற்குப் போதிய அதிகாரங்களும் செல்வாக்கும் இருந்திருந்தால், கனம் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் ஜப்பானுக்குச் சென்றபோது ஆந்திர முதலமைச்சர் அவரிடம் வந்து "உங்கள் மாநிலத்திற்குச் செய்ய வேண்டிய கடமைக்காக நீங்கள் ஜப்பானுக்குச் சென்றாலும் எங்கள் மாநில நலனையும் கருத்திற் கொண்டு சென்று வாருங்கள், எங்களுக்கும் உதவி பெற்று வாருங்கள்" என்று அவரிடம் கேட்டுக்கொண்டிருக்கக் கூடும். காட்டுவளத் துறை போன்ற பல துறைகளிலும் மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. எனவே மாநிலங்களின் பல விஷயங்களில் தலையிடும் மனப்பான்மை மத்திய அரசாங்கத்தாரிடம் வளர்ந்துவருகிறது. மத்திய அரசாங்கத்தினிடம் மாநில அரசாங்கத்தின் உரிமைகள் வளர வேண்டும் என்பதை நமது 11-20
கனம் அமைச்சர்கள் வலியுறுத்த வேண்டும். அந்த வாய்ப்பு a.m.
இருந்தால் தான் காங்கிரசுக்கும் நல்லது, இல்லாவிட்டால் காங்கிரசே அழிந்துபோகும் நிலைமை விரைவில் ஏற்படும்.



29th March 1966] [திரு. க. அன்பழகன்]

அடுத்து, சென்னை மக்களுக்குக் குடிதண்ணீர் தருவதற்குப் பெரிய திட்டம் வேண்டும் என்று கனம் அமைச்சர் தெரிவித்தார். கிருஷ்ணா, கோதாவரித் தண்ணீரைக் கொண்டுவந்து இவர்களுக்கு குடிதண்ணீர் தரமுடியும் என்று சொல்லப்பட்டது. நாங்களும் எதிர்பார்த்தோம். எப்படியோ ஏராளமான தண்ணீர் வந்தால் நாட்டுக்கு நல்லதுதான். அதற்கு பக்கத்து மாநில அரசாங்கத்தின் முழு ஒத்துழைப்பு இல்லை. அதைப்போல ஹொக்கனக்கல் மின்சாரத் திட்டத்தைப் பற்றி மைசூர் அரசாங்கத்திடம் பேசி முடிவு எடுக்கலாம் என்று ஐந்தாண்டுத் திட்டத்தில் காணப்படுகிறது. மைசூர் அரசாங்கத்திற்கு நம்மோடு ஒத்துழைப்பதற்கான இயல்பான மன வளர்ச்சி இல்லை. அதைக் குற்றமாகச் சொல்லவில்லை. இன்றைக்குள்ள சூழ்நிலை அப்படி. இது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மொழிவாரிப் பிரிவினையால் வந்தது என்றார்கள். மொழிவாரிப் பிரிவினையால் வந்தது அல்ல அது. அதிகாரவாரி பிரிவினைதான் அதற்குக் காரணம். அவரவர்கள் அதிகாரம் பெறுவதற்காக அங்கங்குள்ள மக்கள் எதைச் சொன்னால் விரும்புவார்களோ எதற்காக அமைச்சராக மதிக்கிறார்களோ அதன் விளைவே தவிர அது மொழிவாரியால் வந்ததல்ல. கோளத்தில் மீதமாகும் தண்ணீரைத் திருப்பிவிட

வேண்டுமென்றால் அந்த அரசாங்கத்தின் முழு ஒத்துழைப்பு பெற முடியவில்லை. செட்டி நாட்டரசர் இரண்டு நாட்களுக்கு முன்பு சொன்னார்கள் அப்பர் பெரியாறு திட்டம் என்று. அப்பர் என்றால் திருநாவுக்கரசரா என்று கேட்கக்கூடும் சிலர். மேல் பெரியாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஏற்கனவே மூன்றாவது திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு மத்திய அரசாங்கத்திற்குப் போனதற்குப் பிறகு இவ்வளவு திட்டத்தையும் நீங்கள் நிறைவேற்றப் போகிறீர்களா என்று பெருமூச்சு விட்டு அதையும் அழித்துவிட்டார்கள். அதை நிறைவேற்ற வேண்டுமென்றால் பக்கத்து மாநில ஒத்துழைப்பு நமக்குத் தேவைப்படுகிறது. அதனால் அவர்களுக்கு இழப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் விளக்கமுடியும். மத்திய அரசாங்கத்தில் நமக்குள்ள உரிமைகள் அவர்களிடத்தில் கேட்டுப் பெறும் சூழ்நிலை இருப்பதால் மத்திய அரசாங்கத்தின் தயவை வைத்துக்கொண்டு எதையும் நடத்தவேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்க தொழில் அமைச்சரோடு கூடிப் பேசலாம். மத்திய அரசாங்கத்தில் உள்ளவர்கள் முன்பு தூத்துக்குடி திட்டத்தை ஒப்புக் கொள்வதாகச் சொல்லிச் சென்றுவிட்டு பிறகு ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று கடிதம் எழுதியதைப் போல ஏற்படக்கூடாது. இப்போது அந்த உறுதியைக் கைவிடும் வாய்ப்பு மத்திய அரசாங்கத்திடம் இருப்பதால் அதையும் மாற்றலாம் என்று தெரிகிறது. நமக்கு தக்க அதிகாரம் இருந்தால்தான் பக்கத்து மாநிலத்தில் உள்ளவர்கள் நம்மை எதிர்பார்ப்பார்கள். நாமும் அவர்களை எதிர்பார்க்கலாம். அதற்கு வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும். அடுத்தபடியாக தெரிவிக்க விரும்புவது, மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் திட்ட அடிப்படையில் அமையவேண்டுமென்று விரும்புகிறேன். "India's Economic Growth" என்ற புத்தகத்தில் எடுத்துக்காட்டியபடி நம்முடைய பொருளாதாரத்தில் நேரடியாக தலையிடுவது தவறாக எண்ணவேண்டியிருக்கிறது. ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி புள்ளிவிவரத்தோடு காட்டினால்தான் தெரியும். பொருளாதார வளர்ச்சி பற்றி குறிப்பிடும்போது

"This does not, however, mean that all the people are now better off. Those whose money incomes have not risen as fast as the rise in prices would be worse off than before. In so far as farmers, taken as a group, are concerned, indications are that their economic condition has improved appreciably since the commencement of the five-year plans."

என்று விவசாயிகளைப் பற்றி அவர்களுடைய பொருளாதார வளர்ச்சி எப்படி ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். அகில இந்திய அடிப்படையில் எடுத்தால் அதுதான் தெரியும். ஆந்திராவில் சராசரி உழவனுக்குக் கிடைத்திருக்கிற நிலம் எவ்வளவு? அதைப் பங்கிடும்போது எப்படி பங்கிடப்படுகிறது. தமிழ்நாட்டில் எவ்வளவு இருக்கிறது? பங்கிடும்போது ஏழைகளுக்கு எவ்வளவு நிலம் இப்போது சேரும் என்று கணக்கிட்டால் தெரியும். இதை விட்டு அகில இந்திய புள்ளிவிவரம் தமிழ்நாட்டின் உண்மையான நிலைமையை மூடி மறைக்கப் பயன்படுகிறது. தமிழ்



நாட்டைத் தனியாக எடுத்தால், உழவன், தொழிலாளி, நடுத்தர வகுப்பினர் ஆகியோருக்கும் வரும் வருமானத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையாக இருந்தாலும் நாட்டில் ஏற்பட்டிருக்கிற மொத்த பொருளாதார வளர்ச்சியில் அந்த அளவு முன்னேற்றம் வேண்டுமோ அதற்கு ஈடான வளர்ச்சியில்லை என்று எடுத்துக்காட்ட மாநில அரசாங்கத்தின் தனியான புள்ளி விவரம் சேகரித்தாக வேண்டும். தொழில் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைச் சொல்லும்போது எவ்வளவு தொழில் ஏற்பட்டிருக்கிறது, எவ்வளவு மூலதனம் போட்டிருக்கிறார்கள் என்று கணக்கிடப் படுகிறது. மொத்த வேலைவாய்ப்பு அதில் காட்டப்படுகிறது. அதனால் லாபம் எவ்வளவு, நன்மை என்ன, எந்த வகையில் அவை பங்கிடப்படுகின்றன என்று விகிதாசார விகிதம் நிச்சயமாகத் தரப்படவேண்டும்.

சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஏற்படுவதைப் பற்றி இதுவரையில் மத்திய அரசாங்கம் அக்கறை காட்டவில்லை என்றாலும் அந்தத் தொழிலை எவ்வளவு அவசியம் என்று இன்றைக்கு திட்டத் துறைக்கு அமைச்சராக இருக்கும் திரு. அசோக்மேத்தா அவர்கள் கருதியிருக்கிறார் என்பதை சில காலத்திற்கு முன் தெரிவித்திருக்கிறார்.

"Despite the fact that we have within India all the natural resources to make India one of the world's greatest steel producing nation, we currently are importing significant quantities of steel.

Non-ferrous metal, especially aluminium poses a severe shortage in India."

இரண்டு பற்றிய கருத்தையும் தெரிவித்திருக்கிறார். இரும்பும் நம்மிடத்தில் இருக்கிறது. அலுமினியத்திற்கு மேட்டூரில் தொழிற்சாலை தொடங்க இருக்கிறோம் என்றாலும் அது போதாது என்று திரும்பவும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றைத் தொடங்கியிருக்கிறோம். மற்றொன்றுக்கு மெல்லப் பார்த்துக்கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம், அலுமினியம் என்றால் ஏதோ பிச்சைக்காரன் கையில் எடுத்துப்போகும் பாத்திரத்திற்குத் தானே பயன்படுகிறது என்று சிலர் சொல்லலாம். அலுமினியத்தை குறைவாக மதிப்பிடுகின்ற பல குடும்பங்கள் இருக்கின்றன. அது தவறு. அப்படி நினைப்பது நமக்கு உள்ள குறைபாட்டினால்தான். நமக்குக் கிடைக்கிற உலோகப் பொருள்களை ஈடுசெய்வதற்கும் நாட்டுப் பாதுகாப்பிற்கும் பல தொழில்கள் நடத்துவதற்கும் விமானம் போன்றவை கட்டுவதற்கும் அலுமினியம் அவசியம். கொடைக்கானலில் பாக்சைட் கிடைக்கிறது. அதை வைத்து அலுமினியம் தொழிற்சாலையை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் நான்காவது திட்டத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அசோக் மேத்தா அவர்கள், இந்த அளவுக்கு வெளிநாட்டுக்கு ஸ்டீல் இறக்குமதி செய்வதால் நம்முடைய நாட்டுப் பொருள் போய்விடுகிறது என்று தெரிவித்தும்

[திரு. க. அன்பழகன்] [29th March 1966

கூட 80 கோடி 100 கோடி என்று செலவுசெய்து இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்தினால் நல்ல தரமான ஸ்டீல் தயாரிக்க முடியும். ரூர்கேலா போன்ற இடங்களிலிருந்து பெறுவதைவிட மலிவாக அவை இருக்கமுடியும். வடக்கே தயாரிக்கப்பட்டு அந்த இரும்பைக் கொண்டுவந்து சேர்ப்பதில் உள்ள போக்குவரத்துச் செலவு மிச்சமாகும். ஆகையால் சேலம் இரும்புத் தொழிற்சாலையை மத்திய அரசாங்கம் ஏற்காவிட்டால் அதற்கு சவால் விட்டுவிட்டு மாநில அரசாங்கம் தனக்குத் தகுதி இருப்பதால் நாங்களே அதை நடத்திக் காட்டுகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சேலத் தொழிற்சாலையை நடத்தவேண்டும். அதற்கும் மத்திய அரசாங்கம் குறுக்கீடு செய்தால் நம்முடைய உரிமையைக் காப்பாற்ற இந்த அமைச்சரவையே ராஜினாமா செய்துவிட்டு சென்றுவிட வேண்டுமே தவிர எந்தக் காரணத்தாலும் அதை ஏற்படுத்தாமல் மத்திய அரசாங்கத்திற்கு இடம் கொடுத்தால் காங்கிரசின் பெயரால் பழி ஏற்றுக்கொள்வீர்கள் என்று எச்சரிக்க விரும்புகிறேன். அமைச்சர்களுடைய பொறுப்புணர்ச்சி எனக்குத் தெரியும். அவர்களுக்குள்ள அக்கறை எனக்குத் தெரியும். அப்படியிருந்தும் மத்திய சர்க்கார் அதற்கு முட்டுக்கட்டை போட்டால் நம்முடைய காங்கிரஸ் தலைவர்தானே பொறுப்பில் இருக்கிறார் என்று விட்டுக்கொடுக்கும் இடம் இருந்தால் மாநில அரசாங்கம் சாதாரண நகரசபை மண்டபமாகுமே தவிர, அது வெறும் பேச்சுக்கு இடமாகுமே தவிர, பொம்மை சர்க்காராக ஆக்கப்படுமே தவிர, பொதுமக்கள் மதிக்கத் தேவையில்லாத அளவுக்கு ஆகுமே தவிர, வேறு ஒன்றும் கிடைக்காது. சேலம் இரும்பாலைக்கு இதை சொல்லியதற்குக் காரணம் கருத்து வேறுபாடில்லை. அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் அறிந்துகொண்டிருக்கும் அளவுக்கு நிறைவேற்ற விடவில்லையே என்ற வருத்தம்தான் எல்லோருக்கும் இருக்கிறது. முதலமைச்சருக்கும் அந்தக் கருத்து இருக்குமென்று நம்புகிறேன். 1967 தேர்தல் வருவதற்கு முன்னால் சேலம் இரும்பாலையை ஏற்படுத்திக் காட்டவேண்டும். தேர்தல் வருவதற்கு முன்னால் ஏன் துவக்கச் சொல்கிறாய், துவக்காவிட்டால் அதை பிரசாரத்திற்குப் பயன்படுத்தலாம் என்று என்று கேட்பார்கள். துவக்கிவைத்துவிட்டு நீங்கள் பிரசாரத்திற்கு ஆரம்பியுங்கள். அதன் லாபம் உங்கள் பக்கம் இருந்தால் நான் வருத்தப்படமாட்டேன். வேறு தொழில் இருந்தால் அதில் அழுத்தம் இருக்காது. இவர் எஃகு அமைச்சர். எஃகும் இரும்பும் சேர்ந்து மத்திய சர்க்காரைப் பணிய வைக்கவேண்டும். ஒருமுறை பணிய வைத்துவிட்டால் மற்ற மாநில அரசாங்கங்களுடைய பெருமையும் காப்பாற்றப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக நான் சொன்னேன். பல புள்ளிவிவரங்கள் தருகிறார்கள். இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் அழகான பூமாலையைக் கையில் தருவதைப்போல தரப்படுகின்றன. கருத்துக்களில் தெளிவு இல்லை. கோழிக்குஞ்சு ஒருநாள் வயதானவைக்கு ரூ. 0.75 லட்சம் செலவு ஒதுக்கிடு மூன்றாவது திட்டத்தில், செலவானது 48 ஆயிரம், பிறகு 10 ஆயிரம், இரண்டும்



29th March 1966] [திரு. க. அன்பழகன்]

சேர்ந்து 58 ஆயிரம் ஆகியிருக்கிறது. இதை வரவேற்கிறேன். ரூபாய்க்குப் பிறகு பைசா அணா சொல்லத் தேவையில்லை. அதே போல் 1963-64-ஆம் ஆண்டில் 62,703 கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டு இருக்கின்றன, 703 ஒற்றைப் படை எண்ணாக இருப்பதிலே எனக்கு மகிழ்ச்சி. ஆனால் 1964-65-ல் அது 34,000 ஆக உயர்ந்தது. வள்ளிசாக ஆயிரத்திலே அது உயர்ந்திருக்கிறது. அப்புறம் 4,000-மும் எதற்கு என்று 1965-66-ல் அது 20,000 என்று ஆகிவிட்டது. அடுத்து 5-வது ஆண்டில் 1 லட்சம் என்று போடப்பட்டு இருக்கிறது. ஒரு குஞ்சு கூட அதிகமும் இல்லை, குறைவும் இல்லை. இதைப் பார்க்கும்போது இந்தச் சர்க்காரில் கோழி முட்டை இடுவது கூட அமைச்சர்களையும் அதிகாரிகளையும் கேட்டுக்கொண்டுதான் இடும்போல் இருக்கிறது. பெரிய நிபுணர்கள் தான் இந்தப் புள்ளி விவரங்களைத் தருகிறார்கள். 11-30 a.m.

அடுத்து 1964-65-ல் 3.51 லட்சம் மெட்ரிக் டன் (அம்மோனியம் சல்பேட் அளவில்) நைட்ரஜன் உரங்கள் அல்லது 0.70 லட்சம் மெட்ரிக் டன் நைட்ரஜன் உரங்கள் வாங்கிப் பயன்படுத்தப்பட்டன. அத்துடன் 0.31 லட்சம் மெட்ரிக் அமோனியம் சல்பேட் (0.05 லட்சம் மெட்ரிக் டன் நைட்ரஜன் உரத்தை இது கொடுக்கும்) பயன்படுத்தப்பட்டது. இது 0.70 என்றால் அது 0.31 மெட்ரிக் டன் அமோனியம் சல்பேட் கொடுக்கும் என்று ஒரு கணக்கு. அடுத்த பாராவில் இன்னொரு புள்ளி விவரம் 1.097 லட்சம் மெட்ரிக் டன் நைட்ரஜன் உரம் 5.43 லட்சம் மெட்ரிக் டன் அமோனியம் சல்பேட் உரத்திற்குச் சமம் என்று போட்டு இருக்கிறது. அங்கே புரோபோர்ஷன் 1 : 6, இங்கே 1 : 5. ஒன்றுக்கு 6 வீதத்தில் ஒரு இடத்திலும் ஒன்றுக்கு 5 வீதத்தில் ஒரு இடத்திலும் இருக்கிறது. இதிலே இருந்து இந்தப் புள்ளி விவரத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிற அக்கறை எவ்வளவு என்று கேட்க விரும்புகிறேன்.

கால்நடைக் கண்காட்சிகள், கருத்தரங்குகளுக்காக--பொது மக்களுக்கு கண் காட்சிகள் மூலம் கால்நடை வளர்ச்சி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் 3-வது ஐந்தாண்டு திட்டத்தில் ரூபாய் 3 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தும், 1961-லிருந்து 1965 வரை செலவு ரூ. 54,000 தான். ஆனால் 1965-66-ல் மட்டும் 6,58,000 ரூபாய் ஏன் ? இது ஒன்றும் " க்ராஷ் புரோகிராம் " விரைவு திட்டம் அல்ல. கண்காட்சி நடத்த மட்டும் 6 லட்சம் ஒரு ஆண்டுக்கு மட்டும். இதைப் பார்க்கிற போது கால்நடைக் கண்காட்சிக்கும் காங்கிரஸ் தேர்தலுக்கும் சம்பந்தம் இருக்குமோ என்ற சந்தேகம் உண்டாகிறது.

அதே போல மீன்பிடி துறைகளை அபிவிருத்தி செய்தலும் தகுதியான ஆற்று முகத் துவாரங்களில் துறைகளை ஏற்படுத்தலும், என்பதன்கீழ் 35,00,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக செலவழித்து இருப்பது ரூ. 12.75 லட்சம். மிச்சப் பணம் இல்லையா என்று கேட்கவில்லை. பணம் இருக்கிறது. மிச்சப்

[திரு. க. அன்பழகன்] [29th March 1966

பணம் இருந்தால் கூட மீன்வளத் துறையை எந்த அளவுக்கு அதிகப்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு உணவுப் பிரச்னையைச் சமாளிக்கலாம் என்ற ஒரு கருத்து இருந்தாலும் அந்தத் துறையில் பணம் செலவழிக்கப்படாமல் நிறுத்தப்பட்டது காரணமாக (தமிழ் அறிக்கையில் பக்கம் 88) நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் என்று போட்டு (0) பூஜ்யம் என்று போட்டு இருக்கிறார்கள். கீழே தரப்பட்ட குறிப்பில் நான்காவது திட்டத்தில் ரூ. 1,20,000 செலவில் நான்கு துறைமுகங்களும், இரண்டு தோணித்துறைகளும் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது என்று இருக்கிறது. ஆனால் அத்திட்டம் இதில் சேர்க்கப்படவில்லை; வேறு ஒரு பகுதியில் இருக்க வேண்டும். இது பற்றி நான்காவது திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை. என்றாலும் குறிப்பில் போடப்பட்டிருக்கிறது.

இனி நகர பகுதிக்காக, சென்னை நகரத்திற்கு சாலைகள் போடுவதற்காகவும் மற்ற காரியங்களுக்காகவும் நிதி ஒதுக்கப்பட்டது குறித்து அதன் உண்மையான நிலைமைகளை இந்த மன்றங்களில் அமைச்சர்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்லி இருக்கிறோம். அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் இந்த மன்றத் தலைவர் என்ற முறையில் சென்னை நகர சபையின் குறைகளுக்கு அவர்கள் மட்டும் பொறுப்பு அல்ல நாங்களும் காரணம் தான் என்று சொல்லி இருக்கிறார் என்பதை நான் வலியுறுத்த விரும்பவில்லை. நான் சொல்ல விரும்புவது இந்த மாகாணத் தலைநகராக இருக்கிற சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் எந்த வகையில் சென்னை மாநில அரசாங்கம் பொறுப்பாகக் கருதவேண்டும் என்றால் மகாராட்டிர மாகாணத்தில் பம்பாய் மாநகராட்சிக்கு அந்த மாநில அரசாங்கம் எவ்வளவு நன்கொடை தருகிறதோ, டெல்லி அரசாங்கம் டெல்லி மாநகராட்சிக்கு எவ்வளவு நிதி உதவி தருகிறதோ அந்த அளவு இல்லை என்றாலும் அதில் பாதியாவது, கல்கத்தா நகராட்சிக்கு அந்த மாநிலம் எவ்வளவு தருகிறதோ அதில் பாதியாவது இங்கே சென்னை மாநில அரசு சென்னை நகர மாநகராட்சிக்கு நிதி கொடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் இப்போதும் பணம் கொடுக்கப்பட்டு வருகிறதே என்று கூறலாம். ஆனால் இது தரப்படுகிற பணம் அல்ல. தரப்படுவதாக வாக்களிக்கப்படுகிற பணம். ஒவ்வொரு வேலைக்கும் எஸ்டிமேட் போட்டு அது அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு அரசாங்க அதிகாரிகள் அதை ஒத்துக்கொள்ள வேண்டும். இதற்கே 3 மாதம், 6 மாதம் ஆகிறது. இந்த நிலையில் அவர்களை எந்த வேலையையும் செய்ய விடுவதில்லை. அதிலும் கொடுக்கப்படுகிற பணம் பெரும்பாலும் கடனாகத் தரப்படுகிறது. அதற்கு வட்டி வசூலிக்கப்படுகிறது. வட்டி மட்டும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 லட்சம் 60 லட்சம் என்ற அளவில் மாநில அரசுக்கு மாநகராட்சி மன்றம் செலுத்த வேண்டியிருக்கிறது. அந்தச் சூழ்நிலை காரணமாக அவர்களுக்கு வரவேண்டிய வருமானம் தடுக்கப்பட்டு போகிறது. கடன் கொடுத்து வட்டி வாங்கி காரியம் செய்ய வேண்டிய அளவுக்கு மாநில அரசாங்கம் இதிலே தன் கடமையைச் சரிவர செய்யாத காரணத்தால்தான் பல்வேறு குறை



29th March 1966] [திரு. க. அன்பழகன்]

கள் சென்னையிலே ஏற்பட்டு இருக்கின்றன. அடுத்த 4-வது திட்டத்தில் பக்கிங்ஹாம் கால்வாயையும், கூவம் நதியையும் போக்குவரத்திற்காக பயன்படுத்த திட்டம் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் அது உடனடியாக நல்ல நீரோட்டப் பாதையாக ஆக்கப்பட்டால் தான் நகர போக்குவரத்து நெரிசல் குறையும் என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதோடு நான் சொல்ல விரும்புவது இன்னும் ஒன்று இருக்கிறது. சமீபத்தில் நடைபெற இருக்கிற உலக கண்காட்சி—சென்னையை ஒட்டிய பகுதியில் நடக்க இருக்கிற கண்காட்சிக்காக—அரசாங்கம் லட்சக்கணக்கான பணம் செலவழிக்க இருக்கிறது. மாநகராட்சி மன்றமும் பணம் செலவழித்து மாநில அரசாங்கத்தால் கட்டிடம் கட்டி சாலைகள் போட்டு, குடி தண்ணீர் வசதி செய்து அமைக்கப்பட இருக்கிறது. நான் சொல்ல விரும்புவது அந்தக் கண்காட்சி முடிந்ததும் அந்த இடத்தை இடித்துத் தள்ளிவிடாமல் அதை ஒரு புற நகர் பகுதியாக மாற்றி அதை அப்படியே வளர்ச்சி பெறச் செய்ய வேண்டும் என்பது தான். அதற்கு உபயோகப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள், அழகு தோரணங்கள், கண்காட்சிப் பலகைகள் ஆகியவைகள் தான் அங்கே இருந்து எடுக்கப்பட வேண்டுமே தவிர மற்றவைகள் அனைத்தும் அங்கேயே இருக்க வேண்டும். அந்தப் பகுதியை ஒரு புறநகர் பகுதியாக ஆக்க வேண்டும் என்ற அடிப்படையில் பொறியியலாளர்களிடம் சொல்லி அதற்கு ஏற்ற முறையில் இப்போதே திட்டம் போட்டு அங்கே அது அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. கமலக்கண்ணன் :** தலைவர் அவர்களே, நம் நாடு விடுதலை அடைந்து இன்று 3 ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கி, எல்லா துறைகளிலும் முன்னேறியும் கூட ஒரு வேண்டாத பிரச்னை காரணமாக இந்த முன்னேற்றங்களை எல்லாம் அப்படியே விழுங்கிவிடுகிற நிலை இன்று இருந்து வருகிறது. அது தான் ஜனப் பெருக்கம். இந்த ஜனப் பெருக்கத்தின் காரணமாக விவசாயத்தில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருந்தாலும் அதில் எப்போதும் பற்றாக்குறை இருந்துகொண்டு வருவதை நாம் காண்கிறோம்.

1961-ஆம் ஆண்டில் சாகுபடி செய்யும் நிலம் தமிழ்நாட்டில் சராசரி ஆளுக்கு 0.61 எக்கர் என்றும், அகில இந்திய சராசரி 0.98 எக்கர் என்றும் கணக்கிட்டிருப்பதைப் பார்க்கிறபோது இப்போது நம்முடைய நாட்டில் உள்ள நம் மக்களுக்குப் போதிய அளவு உற்பத்தி செய்வதற்கு நிலம் போதிய அளவு இல்லை என்று தான் தெரிய வருகிறது. நாம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் போதிய அளவு பணத்தை ஒதுக்கி, அதோடு கூட பருவ மழை நல்ல முறையில் இருந்த காரணத்தால் முதல் ஐந்தாண்டு திட்டத்திலும், 2-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் மக்களுக்குப் போதிய அளவு உணவு உற்பத்தியைப் பெருக்கும் நிலைமை நமக்கு

பணம் இருந்தால் கூட மீன்வளத் துறையை எந்த அளவுக்கு அதிகப்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு உணவுப் பிரச்சினையைச் சமாளிக்கலாம் என்ற ஒரு கருத்து இருந்தாலும் அந்தத் துறையில் பணம் செலவழிக்கப்படாமல் நிறுத்தப்பட்டது காரணமாக (தமிழ் அறிக்கையில் பக்கம் 88) நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் என்று போட்டு (0) பூஜ்யம் என்று போட்டு இருக்கிறார்கள். கீழே தரப்பட்ட குறிப்பில் நான்காவது திட்டத்தில் ரூ. 1,20,000 செலவில் நான்கு துறைமுகங்களும், இரண்டு தோணித்துறைகளும் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது என்று இருக்கிறது. ஆனால் அத்திட்டம் இதில் சேர்க்கப்படவில்லை; வேறு ஒரு பகுதியில் இருக்க வேண்டும். இது பற்றி நான்காவது திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை. என்றாலும் குறிப்பில் போடப்பட்டிருக்கிறது.

இனி நகர பகுதிக்காக, சென்னை நகரத்திற்கு சாலைகள் போடுவதற்காகவும் மற்ற காரியங்களுக்காகவும் நிதி ஒதுக்கப்பட்டது குறித்து அதன் உண்மையான நிலைமைகளை இந்த மன்றங்களில் அமைச்சர்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்லி இருக்கிறோம். அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் இந்த மன்றத் தலைவர் என்ற முறையில் சென்னை நகர சபையின் குறைகளுக்கு அவர்கள் மட்டும் பொறுப்பு அல்ல நாங்களும் காரணம் தான் என்று சொல்லி இருக்கிறார் என்பதை நான் வலியுறுத்த விரும்பவில்லை. நான் சொல்ல விரும்புவது இந்த மாகாணத் தலைநகராக இருக்கிற சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் எந்த வகையில் சென்னை மாநில அரசாங்கம் பொறுப்பாகக் கருதவேண்டும் என்றால் மகாராட்டிர மாகாணத்தில் பம்பாய் மாநகராட்சிக்கு அந்த மாநில அரசாங்கம் எவ்வளவு நன்கொடை தருகிறதோ, டெல்லி அரசாங்கம் டெல்லி மாநகராட்சிக்கு எவ்வளவு நிதி உதவி தருகிறதோ அந்த அளவு இல்லை என்றாலும் அதில் பாதியாவது, கல்கத்தா நகராட்சிக்கு அந்த மாநிலம் எவ்வளவு தருகிறதோ அதில் பாதியாவது இங்கே சென்னை மாநில அரசு சென்னை நகர மாநகராட்சிக்கு நிதி கொடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் இப்போதும் பணம் கொடுக்கப்பட்டு வருகிறதே என்று கூறலாம். ஆனால் இது தரப்படுகிற பணம் அல்ல. தரப்படுவதாக வாக்களிக்கப்படுகிற பணம். ஒவ்வொரு வேலைக்கும் எஸ்டிமேட் போட்டு அது அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு அரசாங்க அதிகாரிகள் அதை ஒத்துக்கொள்ள வேண்டும். இதற்கே 3 மாதம், 6 மாதம் ஆகிறது. இந்த நிலையில் அவர்களை எந்த வேலையையும் செய்ய விடுவதில்லை. அதிலும் கொடுக்கப்படுகிற பணம் பெரும்பாலும் கடனாகத் தரப்படுகிறது. அதற்கு வட்டி வசூலிக்கப்படுகிறது. வட்டி மட்டும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 லட்சம் 60 லட்சம் என்ற அளவில் மாநில அரசுக்கு மாநகராட்சி மன்றம் செலுத்த வேண்டியிருக்கிறது. அந்தச் சூழ்நிலை காரணமாக அவர்களுக்கு வரவேண்டிய வருமானம் தடுக்கப்பட்டு போகிறது. கடன் கொடுத்து வட்டி வாங்கி காரியம் செய்ய வேண்டிய அளவுக்கு மாநில அரசாங்கம் இதிலே தன் கடமையைச் சரிவர செய்யாத காரணத்தால்தான் பல்வேறு குறை





கள் சென்னையிலே ஏற்பட்டு இருக்கின்றன. அந்த 4-வது திட்டத்தில் பக்கிங்ஹாம் கால்வாயையும், கூவம் நதியையும் போக்குவரத்திற்காக பயன்படுத்த திட்டம் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் அது உடனடியாக நல்ல நீரோட்டப் பாதையாக ஆக்கப்பட்டால் தான் நகர போக்குவரத்து நெரிசல் குறையும் என்பதை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதோடு நான் சொல்ல விரும்புவது இன்னும் ஒன்று இருக்கிறது. சமீபத்தில் நடைபெற இருக்கிற உலக கண்காட்சி—சென்னையை ஒட்டிய பகுதியில் நடக்க இருக்கிற கண்காட்சிக்காக—அரசாங்கம் லட்சக்கணக்கான பணம் செலவழிக்க இருக்கிறது. மாநகராட்சி மன்றமும் பணம் செலவழித்து மாநில அரசாங்கத்தால் கட்டிடம் கட்டி சாலைகள் போட்டு, குடி தண்ணீர் வசதி செய்து அமைக்கப்பட இருக்கிறது. நான் சொல்ல விரும்புவது அந்தக் கண்காட்சி முடிந்ததும் அந்த இடத்தை இடித்துத் தள்ளிவிடாமல் அதை ஒரு புற நகர் பகுதியாக மாற்றி அதை அப்படியே வளர்ச்சி பெறச் செய்ய வேண்டும் என்பது தான். அதற்கு உபயோகப்படுத்தப்படும் விளம்பரப் பலகைகள், அழகு தோரணங்கள், கண்காட்சிப் பலகைகள் ஆகியவைகள் தான் அங்கே இருந்து எடுக்கப்பட வேண்டுமே தவிர மற்றவைகள் அனைத்தும் அங்கேயே இருக்க வேண்டும். அந்தப் பகுதியை ஒரு புறநகர் பகுதியாக ஆக்க வேண்டும் என்ற அடிப்படையில் பொறியியலாளர்களிடம் சொல்லி அதற்கு ஏற்ற முறையில் இப்போதே திட்டம் போட்டு அங்கே அது அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. கமலக்கண்ணன் :** தலைவர் அவர்களே, நம் நாடு விடுதலை அடைந்து இன்று 3 ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கி, எல்லா துறைகளிலும் முன்னேறியும் கூட ஒரு வேண்டாத பிரச்னை காரணமாக இந்த முன்னேற்றங்களை எல்லாம் அப்படியே விழுங்கிவிடுகிற நிலை இன்று இருந்து வருகிறது. அது தான் ஜனப் பெருக்கம். இந்த ஜனப் பெருக்கத்தின் காரணமாக விவசாயத்தில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருந்தாலும் அதில் எப்போதும் பற்றாக்குறை இருந்துகொண்டு வருவதை நாம் காண்கிறோம்.

1961-ஆம் ஆண்டில் சாகுபடி செய்யும் நிலம் தமிழ்நாட்டில் சராசரி ஆளுக்கு 0.61 எக்கர் என்றும், அகில இந்திய சராசரி 0.98 எக்கர் என்றும் கணக்கிட்டிருப்பதைப் பார்க்கிறபோது இப்போது நம்முடைய நாட்டில் உள்ள நம் மக்களுக்குப் போதிய அளவு உற்பத்தி செய்வதற்கு நிலம் போதிய அளவு இல்லை என்று தான் தெரிய வருகிறது. நாம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் போதிய அளவு பணத்தை ஒதுக்கி, அதோடு கூட பருவ மழை நல்ல முறையில் இருந்த காரணத்தால் முதல் ஐந்தாண்டு திட்டத்திலும், 2-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் மக்களுக்குப் போதிய அளவு உணவு உற்பத்தியைப் பெருக்கும் நிலைமை நமக்கு

[திரு. கே. கமலக்கண்ணன்] [29th March 1966

இருந்தது. ஆனால் 3-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நமக்கு பருவ மழை சதி செய்து கொண்டிருந்ததாலும் இன்னும் ஜனப் பெருக்கத்தின் காரணமாக பற்றாக் குறை ஏற்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம்.

வெளிநாடுகளில் இருந்து நாம் சென்ற ஆண்டில் கோதுமை உணவுப் பொருள் இறக்குமதி செய்தது மட்டும் ஏறத்தாழ 48 லட்சம் டன்னாகும். அதன் மதிப்பு ரூ. 170 கோடி என்பதைக் காண்கிறோம். இப்படி உணவுப் பொருளை இறக்குமதி செய்வதை விட ரசாயன உரத்தை இறக்குமதி செய்தால் நம்முடைய நிலங்களில் அதைப் போட்டு உணவு உற்பத்தியைப் பெருக்க சந்தர்ப்பம் ஏற்படும். அது மட்டுமல்ல. ரசாயன உரத்தைத் தயார் செய்யும் இயந்திரங்களையே வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து இங்கே அந்தத் தொழிற்சாலைகளை அமைத்தால் அதன் மூலம் உணவு உற்பத்தியை அதிகப்படுத்த ஒரு நிரந்தர வாய்ப்பு ஏற்படும். நம் நாட்டில் ஒரு சமயத்தில், வேளாண்மைத்
11-04 a.m. துறையில் வருமானம் தேசீய வருமானத்தை விட ஓரளவு அதிகமாகவே இருந்தது. இப்போது அது தேசிய வருமானத்தை விட மிக மிகக் குறைந்து கொண்டே வருவதை நாம் காண்கிறோம். நான் ஒரு விவசாயி. சென்ற ஐந்து, ஆறு ஆண்டுகளாக நான் விவசாயத்தில் அதிகப் பற்றுக் கொண்டு அதில் அதிகமாக ஈடுபட்டு வருகிறேன். உரத்தை, குறிப்பாக ரசாயன உரத்தை, எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உபயோகிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமான உற்பத்தியை நாம் காண்கிறோம். நம் நாட்டில் சராசரியாக ரசாயன உரம் எக்கருக்கு 2¼ கிலோ கிராம் விதம் தான் வழங்கப்படுகிறது. ஜப்பானில் இது ஏக்கருக்கு 260 கிலோகிராம் வீதம் விநியோகிக்கப்படுகிறது. எனவே இந்த விஷயத்தில் நம் நாட்டிற்கும் அந்த நாட்டிற்குமுள்ள வித்தியாசம் கண்கூடாக இருக்கிறது. நம் நாட்டில் நைட்ரஜன் உற்பத்தி 1,85,000 டன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் நமக்குத் தேவைப்படும் நைட்ரஜன் குறைந்த பட்சம் 32 லட்சம் டன். இந்த நாட்டில் கிராமங்களில் ஒன்று அல்லது இரண்டு அல்லது நான்கு எக்கர் நிலம் வைத்துக் கொண்டுள்ள ஏழைக் குடியானவர்கள், விஞ்ஞான முறையில் விவசாயம் செய்ய அவர்களுக்குத் தெரியாததால், அதற்கான வழிவகை இல்லாததால், ஒன்று அல்லது இரண்டு மாடுகளை வைத்துக்கொண்டு தினத்திற்கு ஒன்று அல்லது இரண்டு எக்கர் உழுவதையும் பயிர்த் தொழிலில் அவர்களுக்குக் கிடைக்கும் வருமானம் அவர்கள் குடும்பத்திற்கே போதாமல் இருப்பதையும் பார்த்திருக்கிறேன். நம் நாட்டில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கும் ஏழைக் குடியானவர்களுக்கு தனிச் சலுகை அளித்து, அவர்களுக்கு உரவினியோக வசதியும் கடன் வசதிகளும் செய்துகொடுத்தால், அவர்களுடைய பசிப் பிணி நீங்கும். உணவு உற்பத்தியும் பெருகும். பல நகரங்களில் உள்ள பணக்காரர்களும் தொழிலதிபர்களும் விவசாயத்தில் ஈடுபட்டு உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டு



29th March 1966] [திரு. கே. கமலக்கண்ணன்]

மென்ற நல்லெண்ணத்தோடு இருக்கிறார்கள். இந்த நிலையில் விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவிகள் செய்தால் அவர்கள் கிராமங்களுக்குச் சென்று உணவு உற்பத்தியைப் பெருக்கமுடியும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** காங்கிரஸ் பந்தல் என்று கூறுவதற்கு இடமில்லை. காங்கிரசுக்கு சொந்தமான மைதானம் அது. வேறு மைதானம் இல்லாததால் காங்கிரஸ் அதை அனுமதித்தது. அதிலே Jawans relief நிதிக்காக நிகழ்ச்சிகள் நடந்தன. அதற்கு பந்தல் வேண்டியிருந்தது. 5,000 பேர் தரையில் உட்காரும் அளவுக்கு வேறு ஹால் ஒன்றும் இல்லை. அதற்காக பந்தல் போடப்பட்டது. அந்தச் செலவு ஜவான்களுக்காக வசூல் செய்யப்பட்ட பணத்திலிருந்து கொடுக்கப்பட்டது.

---

° Printed as Appendix I on page 277.

[30th March 1966

DR. H. V. HANDE : Sir, do the Government allow party meetings to take place in this pandal? Have the Government allowed party meetings? Will the Government allow all parties to hold their meetings in this pandal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is not a question of Government allowing any party meetings and all that in this pandal. The pandal was erected, and the cost thereof was met from out of the collections for the Jawans' Relief Fund. The pandal was erected for that purpose, and the purpose has been served. The pandal is on the Congress site, and this has to be remembered. There is no question of Government allowing the use of the pandal for other parties.

### *Fertilizers*

* 158 Q.—SRI K. ANBAZHAGAN (on behalf of SRI S. K. SAMBANDHAN) : Will the Hon. the Minister for Home be pleased to state :

(a) whether the Government of India have fixed any quota for fertilisers for this State;

(b) if so, what it is; and

(c) the requirement of the State as on date?

**கனம் திரு. பி. கக்கன் :** (அ) இம்மாநிலத்திற்கு இரசாயன உரங்கள் வழங்குவதற்கு அளவுப் பங்கீடு எதையும் இந்திய அரசு நிச்சயிக்கவில்லை. இம்மாநில அரசாங்கம் ஒவ்வோர் ஆண்டும் தனது தேவைகளை மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி வருகின்றது. மத்திய இரசாயன உர மொத்த ஏற்பாட்டின் கீழ், இரசாயன உரம் கிடைப்பதற்கு ஏற்ப மத்திய அரசு இரசாயன உரங்களை ஒதுக்கி வருகின்றது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(உ) அமோனியம் சல்பேட் வகையில், 1966 ஜனவரி முதல் மார்ச்சு வரை 73,638 டன் உரம் தேவைப்படுகிறது.

**திரு. வி. கே. ராமசாமி முதலியார் :** நாம் அவ்வப்போது கேட்கும் அளவு கொடுக்கிறார்களா? கேட்கப்பட்டும் மறுக்கப் படுகிறதா?

**கனம் திரு. பி. கக்கன் :** நாம் கேட்ட அளவு முழுவதும் கொடுக்க வில்லை. அவர்களுடைய இருப்புக்குத் தகுந்தபடி எவ்வளவு தூரம் கொடுத்து உதவி செய்யவேண்டுமோ, அதைக் கொடுத்து உதவுகிறார்கள்.

**திரு. ஆர். வெங்கடாசலம் :** அப்படிக் கொடுக்கப்பட்ட உரத்தின் அளவு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பி. கக்கன் :** எந்த வருஷம் என்று சொன்னால் நல்லது.



30th March 1966]

**திரு. ஆர். வெங்கடாசலம் :** 1966-ல் எவ்வளவு உரம் கொடுக்கப் பட்டது?

**கனம் திரு. பி. கக்கன் :** 1966-ல் 2.56 லட்சம் டன் நாம் பெற்றிருக்கிறோம். நாம் கேட்டது 6.95 லட்சம் டன். Our demand was 6.95 lakhs tons. 2.56 lakhs tons alone have been received.

DR. H. V. HANDE : From the answer of the Hon. Minister, it is obvious that we have received only one-third. Is it the case that in the whole country all other States are receiving only one-third of what they ask for?

THE HON. SRI P. KAKKAN : I think it is better the hon. Member puts this question in Parliament. How can I answer a question relating to other States?

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சென்னை மாநிலத்தின் தேவை எழுபத்தைந்து 75 ஆயிரம் டன் என்று தெரிவிக்கப்படுகிறது. அந்த அளவு தேவை தன்னிறைவு உடையதாக நிறைவேற்ற ஏதேனும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. பி. கக்கன் :** Fertilizers Factory ஏற்படுத்தினால் போதுமான அளவு கிடைக்கும். அதற்கு முயற்சி செய்யப் படுகிறது. நாம் கேட்டதில் இன்னும் நாற்பது ஆயிரம் டன் வரவேண்டியிருக்கிறது. எவ்வளவு தூரம் உதவுவார்கள் என்று பார்க்கவேண்டும். மத்திய விவசாய அமைச்சரைப் பார்த்தேன். எவ்வளவு தூரம் உதவி செய்யமுடியுமோ அதைச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 40 சதவிகிதம் நமக்குக் கொடுத்து உதவி செய்திருக்கிறார்கள்.

**திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர் :** தலைவர் அவர்களே, உரத்தொழிற்சாலை நெய்வேலியில் வர இருப்பதாக சொல்லப் படுகிறதே, கூடியவிரைவில் வருமா? எப்போது வருமென்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பி. கக்கன் :** அனேகமாக வந்தது மாதிரிதான். அதிலிருந்து நமக்குக் கூடிய சீக்கிரம் உதவி கிடைக்குமென்று நம்புகிறேன்.

### *Cinema theatre*

* 159 Q.—DR. H. V. HANDE (on behalf of SRI M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(a) whether any temporary cinema theatre at Ramanathapuram town was burnt down recently; and

(b) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes.

[30th March 1966

(b) Sivaji Touring Talkies in Ramanathapuram town was burnt on 8th January 1964. The estimated value of the loss suffered by the touring cinema is reported to be Rs. 49,500.

Dr. H. V. HANDE : Has an investigation of the causes that led to the catastrophe been made, Sir?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : We have received a report from the Collector that an enquiry was made. We know only the loss, and the reason for the fire is not known. It may be accidental.

திரு. ஆர். வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்தகைய சினிமா கொட்டகைகளுக்கு அரசாங்கம் எந்த வகையிலாவது உதவி செய்ய முன்வந்திருக்கிறதா ?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : I do not think the Government can give any help.

*Shark Liver Oil Factory*

* 160 Q.—Sri J. PONNUSWAMY VILLAVARAYAR : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state whether there is any proposal to set up a factory for the extraction of Shark Liver Oil from the sharks available in the Tuticorin coastal area?

கனம் திரு. ஜி. பூவராகன் : இல்லை.

திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர் : தலைவர் அவர்களே, இந்த ஷார்க் லிவர் ஆயில் நம் மாநிலத்திற்கு மற்ற மாநிலங்களிலிருந்து வரவழைக்கபடுகிறதா ?

கனம் திரு. ஜி. பூவராகன் : மற்ற மாநிலங்களிலிருந்து தருவிக்கப்படுகிறது.

Dr. H. V. HANDE : Sir, have the Government examined the proposal of starting the factory? If the Government have considered it, have they estimated the cost of the proposed factory?

கனம் திரு. ஜி. பூவராகன் : அரசாங்கம் பரிசீலனை செய்தது. ஒரு பாக்டரி ஆரம்பிக்கவேண்டுமென்றால் 50 ஆயிரம் கிலோகிராம் தயாரிக்க வேண்டும். நம் மாநிலத்தைப் பொருத்தவரையில் 17 ஆயிரம் கிலோகிராம் தயாரிக்கிறார்கள். மேலும் இப்போது இதைப்போன்று தயாரிப்பதற்கு நம் கடற்கரையில் உள்ளவற்றில் தயாரிக்கிற எண்ணெயில் வைடமின் சத்து குறைவாக இருப்பதால் கேரளாவில் இப்போது ஏற்றுக்கொள்வதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். அத்தோடு synthetic vitamin-A மார்க்கெட்டில் விலை குறைவாக இருப்பதால், கேரளாவே இந்தத் தொழிலை சரியாக மேலும் தொடர்ந்து நடத்த முடியுமா என்ற சந்தேகத்தில் இருக்கிறது.

Mr. CHAIRMAN : Questions are over.



30th March 1966]

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS.

(1) Message from the Governor.

Mr. CHAIRMAN : I have received messages from the Governor of Madras recommending to the Legislative Council the consideration of the Madras Appropriation Bill, 1966 and the Madras Appropriation (No. 2) Bill, 1966.

(2) Message from the Assembly.

Mr. CHAIRMAN : I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the Madras Appropriation Bill, 1966 (L.A. Bill No. 5 of 1966) and the Madras Appropriation (No. 2) Bill, 1966 (L.A. Bill No. 7 of 1966) as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bills are Money Bills within the meaning of Article 199 of the Constitution of India.

III.—STATEMENT *re*: INCREASE IN DEARNESS ALLOWANCE TO GOVERNMENT SERVANTS.

* The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I would like to make a statement regarding the incidence of sales tax and certain decisions taken and announced in the other House, the increase in the rates of dearness allowance, and also the interim recommendations of the High Power Committee.

About the increase in dearness allowance, I would like to make the following statement. In my budget speech in the other House on 26th February 1966, I have already stated that the State Government were examining the question of increasing the rates of dearness allowance admissible to their employees so as to bring them on level with those applicable to the Central Government employees. Hon. Members will have noticed that the Government's ways and means position will continue to be difficult next year. Any decision on dearness allowance should, therefore, be such as not to upset our delicately balanced overall budgetary position. The Government have decided that the increase in the rates of dearness allowance is unavoidable. It will be given with effect from the pay for June due on 1st July 1966. We do hope for some improvement in our resources position by then.

The revised rates of dearness allowance will be as follows :—

| *Pay Group.* | *Dearness allowance.* |
|---|---|
| | RS. |
| Up to Rs. 89 ... ... ... ... ... | 38 |
| Rs. 90 to Rs. 149 ... ... ... ... | 58 |
| Rs. 150 to Rs. 209 ... ... ... ... | 76 |
| Rs. 210 to Rs. 399 ... ... ... ... | 93 |
| Rs. 400 to Rs. 1200 ... ... ... ... | 100 With marginal adjustment upto Rs. 1,300. |

[Sri M. Bhaktavatsalam] [30th March 1966

With this revision, the rates of dearness allowance of the employees of the State Government drawing up to Rs. 1,200 per mensem will be on a par with those of the Government of India, and, in fact, in the pay range Rs. 90 to 149, slightly better. Following past practice, the revised rates of dearness allowance will apply also to teachers and employees of local bodies.

## IV.—STATEMENT re: EXEMPTION OF FOODGRAINS FROM SALES TAX.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Chairman, Sir, about sales tax, I would like to make the following announcement. There has been considerable demand both inside and outside the House, particularly in this House, for the abolition of the sales tax on foodgrains. The sales tax collection on foodgrains has been on the increase, and during 1964-65 a revenue of Rs. 89 lakhs was realised. The Government have, however, decided to forgo this revenue and exempt all foodgrains except wheat and wheat products from sales tax. The Government have decided to exempt milk also from sales tax. Pulses and grams will continue to be subjected to multi-point

10-50 a.m.

tax. Under the Madras General Sales Tax Rules, 1959, excise duty paid by a dealer to the Central Government is excluded from his turnover for purpose of levy of sales tax. In the adjoining Andhra State excise duty has all along been included in the turnover for the purpose of sales tax. The Government of Kerala have since decided to adopt the procedure followed in Andhra Pradesh and the Government of Mysore are also following suit. Excise duty is already being included in turnover for purpose of levy of Central sales tax. It is considered preferable to follow the same procedure in respect of both the Acts. Also Government will be falling in line with the procedure being followed in the three neighbouring States. The Government have, therefore, decided to delete the existing provision providing for the deduction of the excise duty from the taxable turnover.

## V.—STATEMENT re: EXEMPTION OF CERTAIN ARTICLES FROM LOCAL SALES TAX.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I would like to make another announcement. The incidence of the inclusion of excise duty in the turnover for purpose of levy of local sales tax on the goods manufactured in the cottage industries has been considered by the Government taking into account the rate of excise duty payable on them. As a measure of relief to certain goods where such inclusion will result in a considerable burden, the Government have decided that band-made soaps, hand-made paper and hand-made matches may be exempted from local sales tax. In respect of matches other than hand-made matches, the sales tax will be reduced to one per cent. Under the provisions of the Central Sales Tax Act, the same concessions will be available in respect of inter-State transactions in these commodities.



30th March 1966]

## VI.—STATEMENT re: THE INTERIM REPORT OF THE HIGH POWER COMMITTEE ON ECONOMY AND ADMINISTRATIVE REORGANIZATION

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, as I mentioned, a High Power Committee on Economy and Administrative Reorganization has been appointed to look into the question of economies that could be effected and the reorganization that would prove useful. They have made certain interim proposals and I have laid this report on the table of the House which I hope hon. Members would look into.

## VII.—STATEMENT re: DECLARATION OF 'TIRUVALLUVAR DAY' AS A GOVERNMENT HOLIDAY.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I would like to make another announcement. There was a discussion in the other House on a non-official day and a suggestion by way of a Resolution that in honour of Tiruvalluvar, the great author of 'Kural', there must be a holiday. I said on that occasion that I did not believe in celebrating the memory of great men by merely enjoying a holiday and that further, I was not for increasing the holidays we enjoyed. Already we are having too many holidays. That was my view and I hope hon. Members also will more or less agree with that view. We should have less holidays and more working days for the benefit of the community. But I said on that occasion in the other House that if Government servants, particularly Non-Gazetted Officers would agree, we would substitute it for the Second Saturday of the month, when we would celebrate Tiruvalluvar Day, the day of his attaining Mukti. That could be done and that would also satisfy our sentiments without adding to the holidays we have. I am glad to say that the Non-Gazetted Officers have agreed to this suggestion. Therefore, Government have already passed this order, which I would like to communicate to this House.

"The question of setting apart a particular day as the Tiruvalluvar Day and declaring it as a Government holiday in lieu of the Second Saturday has been engaging the attention of the Government for some time. After taking into consideration the views expressed by the Tamil Nad Non-Gazetted Officers' Union and the Tamil Nad Secretariat Association on the subject, it has been decided that the day on which Tiruvalluvar attained Mukti, Vaikasi Anusham, shall be declared a Government holiday in lieu of the Government holiday on the second Saturday of the same month and that during 1966, Thursday, the 2nd June 1966, the day on which Tiruvalluvar attained Mukti will be a Government holiday in lieu of the holiday on 11th June 1966, Second Saturday."

With this revision, the rates of dearness allowance of the employees of the State Government drawing up to Rs. 1,200 per mensem will be on a par with those of the Government of India, and, in fact, in the pay range Rs. 90 to 149, slightly better. Following past practice, the revised rates of dearness allowance will apply also to teachers and employees of local bodies.

### IV.—STATEMENT re: EXEMPTION OF FOODGRAINS FROM SALES TAX.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Chairman, Sir, about sales tax, I would like to make the following announcement. There has been considerable demand both inside and outside the House, particularly in this House, for the abolition of the sales tax on foodgrains. The sales tax collection on foodgrains has been on the increase, and during 1964–65 a revenue of Rs. 89 lakhs was realised. The Government have, however, decided to forgo this revenue and exempt all foodgrains except wheat and wheat products from sales tax. The Government have decided to exempt milk also from sales tax. Pulses and grams will continue to be subjected to multi-point

10-50 a.m. tax. Under the Madras General Sales Tax Rules, 1959, excise duty paid by a dealer to the Central Government is excluded from his turnover for purpose of levy of sales tax. In the adjoining Andhra State excise duty has all along been included in the turnover for the purpose of sales tax. The Government of Kerala have since decided to adopt the procedure followed in Andhra Pradesh and the Government of Mysore are also following suit. Excise duty is already being included in turnover for purpose of levy of Central sales tax. It is considered preferable to follow the same procedure in respect of both the Acts. Also Government will be falling in line with the procedure being followed in the three neighbouring States. The Government have, therefore, decided to delete the existing provision providing for the deduction of the excise duty from the taxable turnover.

### V.—STATEMENT re: EXEMPTION OF CERTAIN ARTICLES FROM LOCAL SALES TAX.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I would like to make another announcement. The incidence of the inclusion of excise duty in the turnover for purpose of levy of local sales tax on the goods manufactured in the cottage industries has been considered by the Government taking into account the rate of excise duty payable on them. As a measure of relief to certain goods where such inclusion will result in a considerable burden, the Government have decided that hand-made soaps, hand-made paper and hand-made matches may be exempted from local sales tax. In respect of matches other than hand-made matches, the sales tax will be reduced to one per cent. Under the provisions of the Central Sales Tax Act, the same concessions will be available in respect of inter-State transactions in these commodities.



### VI.—STATEMENT re: THE INTERIM REPORT OF THE HIGH POWER COMMITTEE ON ECONOMY AND ADMINISTRATIVE REORGANIZATION

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, as I mentioned, a High Power Committee on Economy and Administrative Reorganization has been appointed to look into the question of economies that could be effected and the reorganization that would prove useful. They have made certain interim proposals and I have laid this report on the table of the House which I hope hon. Members would look into.

### VII.—STATEMENT re: DECLARATION OF 'TIRUVALLUVAR DAY' AS A GOVERNMENT HOLIDAY.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I would like to make another announcement. There was a discussion in the other House on a non-official day and a suggestion by way of a Resolution that in honour of Tiruvalluvar, the great author of 'Kural', there must be a holiday. I said on that occasion that I did not believe in celebrating the memory of great men by merely enjoying a holiday and that further, I was not for increasing the holidays we enjoyed. Already we are having too many holidays. That was my view and I hope hon. Members also will more or less agree with that view. We should have less holidays and more working days for the benefit of the community. But I said on that occasion in the other House that if Government servants, particularly Non-Gazetted Officers would agree, we would substitute it for the Second Saturday of the month, when we would celebrate Tiruvalluvar Day, the day of his attaining Mukti. That could be done and that would also satisfy our sentiments without adding to the holidays we have. I am glad to say that the Non-Gazetted Officers have agreed to this suggestion. Therefore, Government have already passed this order, which I would like to communicate to this House.

"The question of setting apart a particular day as the Tiruvalluvar Day and declaring it as a Government holiday in lieu of the Second Saturday has been engaging the attention of the Government for some time. After taking into consideration the views expressed by the Tamil Nad Non-Gazetted Officers' Union and the Tamil Nad Secretariat Association on the subject, it has been decided that the day on which Tiruvalluvar attained Mukti, Vaikasi Anusham, shall be declared a Government holiday in lieu of the Government holiday on the second Saturday of the same month and that during 1966, Thursday, the 2nd June 1966, the day on which Tiruvalluvar attained Mukti will be a Government holiday in lieu of the holiday on 11th June 1966, Second Saturday."

[30th March 1966

## VIII.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS APPROPRIATION BILL, 1966 (L.A. BILL No. 5 OF 1966.)

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Chairman, Sir, I move—

"That the Madras Appropriation Bill, 1966[a] (L.A. Bill No. 5 of 1966), as passed by the Assembly, be taken into consideration."

MR. CHAIRMAN : Motion moved—

"That the Madras Appropriation Bill, 1966[a] (L.A. Bill No. 5 of 1966), as passed by the Assembly, be taken into consideration."

***திரு. என். வி. நடராசன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதா மீது சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நமது மாநில சர்க்கார் பஞ்சப்படியை உயர்த்தி இருப்பதைக் கண்டு நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அதை ஜூன் மாதத்தில் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று சர்க்கார் உத்திரவிட்டிருப்பதை மாற்றி, ஏப்ரல் திங்களிலிருந்து அதை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் இன்னும் வரவேற்கக் கூடியதாக இருக்கும். எதிர்கட்சிகளும், சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர்களும், இதிலே ஒருமித்த கருத்தைப் பல நாட்களாக வலியுறுத்திக் கூறியிருந்தாலும், அது இன்றையதினம் நிறைவேறுகிறது என்றால் அதில் சிறு குறையும் இல்லாத அளவுக்கு, ஏப்ரல் திங்களிலிருந்து அதை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்று நான் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால், இங்கே பல கருத்துக்கள் ஏற்கனவே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. பஞ்சப்படி எப்படி இப்போது தரப்பட்டிருக்கிறதோ அதே போல் விவசாயத் துறையைப் பொறுத்தவரையில் 5 ஏக்கர் வரை நிலம் உள்ளவர்களுக்கு வரியேயில்லாத நிலைமையை இந்தச் சர்க்கார் உருவாக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்வதால் விவசாயத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஒரு லாபமும் ஏற்படாது என்று ஒரு வாதம் இங்கே சொல்லப்பட்டது. அவர்களுக்கு கிடைக்கிற உதவி அதிகமா, குறைவா என்பது அல்ல பிரச்னை. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய உற்சாகத்தை அது தருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே 5 ஏக்கர் வரை நிலம் உள்ளவர்களுக்கு வரியே இருக்கக் கூடாது என்ற வகையில் இப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதனால் உணவு உற்பத்தி அதிகரிக்கும்.

---

a Printed as Appendix II on pages 278–280.



30th March 1966] [திரு. என். வி. நடராசன்]

அடுத்தபடியாக இப்போது தேர்தல் நெருங்கிவரும்படியான காலமாக இருப்பதால் பாதுகாப்புச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று சர்க்காருக்குப் பலமுறை பல கோணங்களிலிருந்து எடுத்துக் கூறி வலியுறுத்தி வந்திருக்கிறோம். ஆனால் சர்க்கார் இந்த விஷயத்தில் எதிர்க் கட்சிகளினுடைய கோரிக்கையை நிறைவேற்ற முனையவில்லை. நான் இங்கே பத்திரிகைக் குறிப்பை வைத்துக்கொண்டு பேசுகிறேன் என்ற அளவில் அதைச் சர்க்கார் புறக்கணிக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். இன்று காலை "தினமணி" பத்திரிகையில் வெளி வந்த ஒரு செய்தியில் டெல்லியில் எல்லா மாநில முதலமைச்சர்களின் மாநாடு கூடப் போவதாகவும், அப்போது முதலமைச்சர்களை அழைத்து தேர்தல் நிதி திரட்டுவதற்கு யோசிக்கப் போவதாக, அனைத்து இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர் அவர்கள் கருதி இருப்பதாகவும் செய்தி வெளி வந்திருக்கிறது. இப்படி அரசியல் துறையில், கட்சி ஆட்சி என்பது வேறொன்றிவிடக் கூடாது. அது மக்களாட்சியாக மலரவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தான் நான் இதைக் கூறுகிறேன். தேர்தல் நெருங்கி வரும் இந்த நேரத்தில் கூட அரசாங்க விஷயங்களுக்காக டெல்லிக்கு போகிற போது, அதை கட்சி விஷயத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளப்போகிறார் என்று செய்தி வெளி வருவது அரசியல் அறமாகாது. அதே போல் தான் பாதுகாப்புச் சட்டம் என்பது பாரபட்சமாக பிரயோகிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் இங்கே தெரிவித்திருக்கிறேன். எனவே, பாதுகாப்புச் சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டும், அதன் மூலம் தேர்தல் ஒழுங்காக நடைபெற வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தி கூற விரும்புகிறேன்.

அதே போல் முதலமைச்சர் ஆனாலும் சரி, மற்ற அமைச்சர்களானாலும் சரி, தேர்தல் காலத்தில் அவர்களுடைய அதிகாரத்தை அல்லது ஆதிக்கத்தை கட்சி ஆதிக்கத்துக்காக பயன்படுத்த முயலக் கூடாது. அப்படிப்பட்ட சந்தேகங்கள், ஐயப்பாடுகள், எல்லாம் ஏற்கனவே உருவாகி வருகின்றன. எனவே, கூடுமான அளவுக்கு அமைச்சர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுதல் கூடாது என்பதுடன் தங்களின் அதிகார பலத்தை கட்சிக்காக பயன்படுத்தக் கூடாது என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தனியார் துறை பற்றியும், பொதுத் துறை பற்றியும் இந்த 11–00 a.m.
மன்றத்திலும், வெளியேயும் கூட நாங்கள் பல முறை பேசி இருக்கிறோம், பேசியும் வருகிறோம். ஆனால் அதற்குச் சர்க்கார் கூறுவது எல்லாம் தாங்கள் நடைபிடிக்கும் கலப்புப் பொருளாதாரம் தான் இந்த நாட்டுக்கு நல்ல பிரயோசனத்தை அளிக்கும் என்பது தான். அதை உண்மையிலேயே எதிர்க்கட்சியான—திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எங்களால் நம்பப்படுவதற்கான ஆதாரங்கள் இது வரையில் நடைமுறையில் காணவில்லை. அந்தக் கூட்டுப் பொருளாதாரத்தால் ஏழை மக்களின் வாழ்வு மலர்ந்து இருந்தால் அல்லது அவர்களின் மீது சுமத்தப்பட்ட வரிச்சுமை குறைந்திருக்கிறது என்றிருந்தால், அல்லது மக்கள்

*[திரு. என். வி. நடராசன்]* [30th March 1966

வாழ்க்கையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டு இருந்தால், அந்தக் கூட்டுப் பொருளாதாரத்தை உள்ளபடியே வரவேற்றிருக்கலாம். சர்க்கார் ஒரு தத்துவத்தைச் சொல்கிறது. ஆகவே அதை நாம் எதிர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் இதைச் சொல்லவில்லை. கலப்புப் பொருளாதாரம் நடை முறையில் பார்த்தால், ஒரே குழப்பமாகத் தான் இருக்கிறது. நாம் முதலாளித்துவத்தையாவது புரிந்துகொள்ள முடிகிறது. இந்தக் கூட்டுப் பொருளாதாரம் என்பதும் அதன் மூலமாக சோஷலிசம் வெற்றி பெறும் என்பதும் ஒரே குழப்பமாகத் தான் இருக்கிறது. இந்தச் சர்க்கார் இன்றைய தினம் ஆட்சியில் அமருவதற்கு முன்னால், அனைத்து இந்திய காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரஸ் கட்சியின் ஒவ்வொரு மாநாட்டிலும் என்னென்ன உறுதிகளைச் சொல்லிக் கொண்டு வந்தார்களோ அவைகளை யெல்லாம் இன்றைய காங்கிரஸ் ஆட்சியினர் மறந்து விட்டனர்—காங்கிரஸ் இந்த நாட்டை ஆளும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டால் எல்லாத் தொழில்களையும் நாங்கள் தேசிய மயம் ஆக்குவோம் என்று, ஏராளமான வாக்குறுதிகள் அன்றைய நாளில் தரப்பட்டிருக்கின்றன. அதைச் சென்ற கால காங்கிரஸ் வரலாற்றிலிருந்து தெரிந்துகொள்ளலாம். ஆனால் அதற்கு மாறாக இன்றையதினம் ஆட்சியில் இடம் பெற்றிருப்பவர்கள், நடந்து வருகிறார்கள். ஆகவே கொழுத்த லாபம் தரும் பெரும் தொழிலை எல்லாம் தேசிய மயமாக்க சர்க்கார் முற்பட வேண்டும். கூட்டுப் பொருளாதாரம் என்று சொல்லி மேலும் குழப்பத்தை விளைவிப்பதும் அல்லது மக்களுக்கு ஏற்பட வேண்டிய நல்ல நிலைமைகளுக்கு ஒரு முட்டுக்கட்டையாக இருப்பதும் ஏழை நடுத்தர மக்களை வஞ்சிப்பதாகும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது, சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலை பற்றியதாகும். அடிக்கடி நாங்கள் இதைப் பற்றிக் கூறுவதற்கு அமைச்சர் அவர்கள் பொருத்தருள வேண்டும். ஏனென்றால் இந்தப் பிரச்னையானது இங்கே நாம் இரும்பு உருக்குத் தொழிற்சாலையை அமைப்பது என்பது மட்டுமல்ல. அதிலே இந்த மாநிலத்தின் சுயமரியாதையும் பிணைந்திருக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அதற்காக இந்தச் சர்க்கார் கொடுத்த வாக்குறுதிகள் ஏராளம், நம் தொழில் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளும் ஏராளம். நாங்கள் இந்த மன்றத்தில் சேலம் இரும்புத் தொழிற்சாலையை அமைப்பதில் மத்திய சர்க்கார் இறுதியாக கையை விரிக்கத்தான் போகிறது என்று பேசியதைப்பற்றி நாங்கள் கேலி பேசுவதாகவும் கோபப்பட்டார்கள். சேலம் உருக்காலையை மத்திய சர்க்கார் உதவியுடன் அமைக்க முடியாது என்று எதிர்க்கட்சியினர் கேலி பேசுகிறார்கள் என்று சர்க்கார் தரப்பினர் சந்தேகப் பட்டார்கள் ஆனால் கடைசியாக அந்த நிலைமைக்கு இந்தப் பிரச்னை இப்போது வந்திருப்பது எனக்கு உள்ளபடியே வேதனையாக இருக்கிறது. நேற்று இந்த மன்றத்தில் தொழில் அமைச்சர் அவர்கள் அளித்த பதில் பெரும் ஏமாற்றமாக இருந்தது. இரவெல்லாம் கூட நான் வேதனைப்பட்டேன். அது தமிழ்நாட்டு கௌரவத்தைப் பற்றிய



30th March 1966] *[திரு. என். வி. நடராசன்]*

பிரச்னை என்பதை மறந்துவிடக்கூடாது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இதற்கு 80 கோடி 100 கோடி ரூபாய் தேவை என்றாலும், அதை நாம் சமாளித்துவிடலாம். ஆனால் மத்திய அரசும், சில அமைச்சர்களும் கொண்டுள்ள மனோபாவத்தை மக்களின் மன்றத்தில் கொண்டு வந்து அந்த வஞ்சனையை உலகுக்கு அறிவிப்போம். அதற்காக இந்தச் சர்க்கார் பக்கம் 'நாங்கள் நிற்போம்' என்று மக்கள் உறுதி கூறினார்கள். அதைப் போல் தான் எதிர்காலத்திலும் உறுதியுடன் நிற்போம். எனவே சர்க்கார் இதைக் கட்சிப் பிரச்னையாகக் கருதாமல் மத்திய சர்க்காருடன் நியாயத்திற்கும், உரிமைக்கும் போராட வேண்டும்.

நான் இதைச் சபையில் குறிப்பிட தலைவர் அவர்கள் நேரமும் அனுமதியும் அளிப்பார்கள் என்று நம்புகிறேன். ஆந்திர முதலமைச்சர் இந்த மன்றத்தில் பேசப்பட்ட பேச்சைக் குறித்து கூறியுள்ள கருத்துக்கள் பத்திரிகைகளில் வெளி வந்திருக்கிறது. அதைப் பற்றி நான் சொல்ல விரும்புவது எல்லாம், இது ஒரு மாநிலத்தின் (prestige) கௌரவத்தைப் பொறுத்த முக்கிய பிரச்னையாகும் என்பதுதான். . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இன்னொரு மன்றத்தில் நடைபெறுவது, அல்லது இன்னொரு அரசாங்கத்தில் நடைபெறுவது, அல்லது அந்த அரசாங்கத் தலைவர் சொன்னதுபற்றி இங்கே எடுத்துக் கூறுவது, அதைப் பற்றி விவாதிப்பது, விவாதத்தை வளர்ப்பது, என்பது நல்லது அல்ல. இதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். ஆனால் முதலில் நம் பேரில், இந்த மன்றத்தின் பேரில் தப்பு இல்லை. முதலில் வேறு மன்றத்தில் தான் தவறு நடைபெற்றது. தவறு என்றால் இந்த அரசாங்க அமைச்சர்களைப் பற்றி குறைவாகச் சொல்லாதிருந்தால் இந்தத் தகராறு வந்திருக்காது. இந்த அரசாங்க அமைச்சரைப் பொறுத்த மட்டில் அவர் செய்தது எல்லாம் மத்திய அரசாங்கத்தைக் கலந்துகொண்டு தான் வெளிநாட்டுக்குப் போய் வந்தார், மத்திய அரசாங்கத்தைக் கேட்காமல் போகவில்லை. அவர்களைக் கலந்து, அவர்களுக்குத் தெரிந்து தான் போனார். எனவே தான் சொல்லுகிறேன். இது இப்படியே வளர்ந்து கொண்டு போகக் கூடாது. அது நல்லதல்ல. இதை இப்படியே விட்டுவிட வேண்டும் இதில் என் பெயரைக் கூட இழுத்துவிட்டார்கள். அங்கே கேட்டதாக ஒரு பத்திரிகையில் பார்த்தேன். 'முதலமைச்சர் உட்கார்ந்து கொண்டிருந்தாரே இதை ஏன் கேட்கவில்லை' என்று போட்டிருந்தது. இதை நாம் அப்படியே ignore செய்வது தான் நல்லது. வளர்த்துக் கொண்டே போக வேண்டாம். இப்படியே விட்டுவிடுங்கள் என்று கனம் உறுப்பினர் நடராசன் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. என். வி. நடராசன் :** கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நான் முழுவதும் வரவேற்கிறேன். இதை ஒரு பிரச்னையாக்க நான் விரும்பவில்லை. ஆனால், ஆந்திரப் பிரதேச

[திரு. என். வி. நடராசன்] [30th March 1966

முதலமைச்சர் திரு. பிரம்மானந்த ரெட்டி "இதை தெற்கு ஜோனல் கவுன்சிலுக்குக் கொண்டுபோகப் போகிறேன். அப்போது ஒரு கை பார்க்கிறேன்" என்று வீராப்பாகப் பேசி யிருப்பதாக அறிகிறேன். அப்படி இது அங்கே வந்தால் அப் போது கனம் முதலமைச்சர் நம் மாநிலத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையுடன் இதை இப்படியே விட்டு விடுகிறேன்.

**மிஸ்டர் சேர்மன் :** பேச்சையும் கனம் அங்கத்தினர் முடித்து விடலாம். நேரம் ஆகிவிட்டது.

**திரு. என். வி. நடராசன் :** கலப்புப் பொருளாதாரத் திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும், தொழில்களை தேசியமயமாக்குவதில் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சொல்லிக்கொண்டு, என் உரையை முடிக் கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Sir, we are grateful to the Government for having abolished the sales tax on food-stuffs, and also for enhancing the dearness allowance of the Government employees, in spite of paucity of funds.

With regard to the general administration, I would like to say a word, Sir. Though our State is considered to be the best managed State among the States, still there are inordinate delays in regard to the disposal of papers in all the circles. I request the Hon. the Chief Minister to pull up the Departments and to issue necessary instructions to them to dispose of the papers quickly. In certain cases, they have to collect a number of items. For instance, there is a lot of delay in issuing cinema licences.

MR. CHAIRMAN : I think the mike is not co-operating. The hon. Member may try the next one.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Sir, there has been inordinate delay in regard to the disposal of papers connected with the issue of cinema licence. It takes nearly six months to one year, with the result that the Government stand to lose a large amount by way of entertainments tax. I request the Government to issue necessary instructions to dispose of the papers as quickly as possible. Even if the ryots put in petitions to the Tahsildar, or the Revenue Divisional Officer making certain requests, it takes a long time to get a reply from them. The result is, production suffers.

With regard to agriculture, I have already given my opinion in my budget speech. I do not want to reiterate the same. My submission is that a mobile van should be given to teach district with a view to testing the soil samples, rushing of pesticides, and also with a view to stepping up production.

With regard to education, I feel that the question of quality, dearth of personnel, want of space, etc., should be solved. That is all my submission. Thank you, Sir.



30th March 1966]

**திரு. கே. ராமதாஸ் :** கனம் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின் பேரில் என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். உணவு தானியங்கள் மீது இருந்த விற்பனை வரியை இந்த அரசாங்கம் ரத்து செய்திருக்கிறது; ஏழை மக்களுக்கு எவ்வளவு நன்மைகள் செய்ய இந்த அரசாங்கம் காத்துக்கொண்டிருக்கிறது என்பதும், இந்த அரசாங்கம் அவர் களுக்கு அவ்வப்போது நன்மைகள் செய்துவருகிறது என்பதும் இந்த வரி ரத்திலிருந்து நன்றாகத் தெரிகிறது. உணவு தானியங் களுக்கு மட்டுமன்றி பாலுக்கும் விற்பனை வரி ரத்து செய்யப் பட்டிருக்கிறது. ஏழைகள் உபயோகிக்கும் வெல்லத்தின் மீது இருந்த விற்பனை வரியும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பொருள்களின் மீது இருந்த விற்பனை வரி ரத்து செய்யப்பட்டதன் விளைவாக விலைவாசி நிச்சயம் குறையும் என்று நம்பலாம். ஆகவே இந்தப் பொருள்கள் மீது இருந்த விற்பனை வரியை ரத்து செய்துள்ள இந்த அரசாங்கத்தை தமிழ் நாட்டு மக்கள் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மேலும், நமது சர்க்கார் ஊழியர்களின் பஞ்சப்படி உயர்த்தப் பட்டிருக்கிறது. கனம் முதலமைச்சர் எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்று தெரிந்துகொண்டு அவ்வப்போது செய்ய வேண்டிய காரியங்களை அந்த அந்த நேரத்தில் செய்து வருகிறார். பொதுவாக சர்க்கார் ஊழியர்களும் இந்த சர்க்காரைப் பாராட்டு வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஒருவேளை எதிர்க் கட்சியினர், இந்தப் பஞ்சப்படி உயர்வு போதாது, இன்னும் உயர்வு அளிக்க வேண்டும் என்று கூறி அவர்களைத் தூண்டிவிடக்கூடும். ஆனால் சர்க்கார் ஊழியர்கள் தூண்டுதலுக்கு ஆளாகமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

விலைவாசி குறையக்கூடிய வகையில், சில பொருள்கள் மீது இருந்த விற்பனை வரியை ரத்து செய்துள்ள இந்த அரசாங்கத்தைப் பாராட்டி என் வார்த்தையை முடிக்கிறேன்.

**திருமதி சாஸ்வதி பாண்டுரங்கம் :** கனம் தலைவர் அவர்களே, 11-10
இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின் பேரில் இரண்டொரு வார்த்தை a.m.
கள் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கம் ஒரு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுமானாலும், மக்கள் வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் அரசாங்க ஊழியர்களின் பஞ்சப் படியை உயர்த்தியிருப்பதுடன் சில உணவுப் பொருள்கள் மீது இருந்த வரி யையும் நீக்கியிருப்பதால், இந்த அரசாங்கத்தை மக்கள் மிகவும் பாராட்டுகிறார்கள். இந்த அரசாங்கத்தார் சோப்பு செய்தல், காகிதம் செய்தல் போன்ற குடிசைத் தொழில்களுக்குச் சலுகை காட்டியிருப்பதுடன், மக்களுக்கு மிகவும் அவசியமான, தேவை யான தீப்பெட்டியின் மீது இருந்த விற்பனை வரியையும் நீக்கியிருக் கிறார்கள். ஏழை மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் அரசாங்கத்தார் இவ்வாறு செய்திருக்

[திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம்] [30th March 1966

கிறார்கள். பஞ்சப்படி உயர்வு அளிப்பது பஞ்சாயத்து, முனிசி பாலிடி முதலியவைகளில் வேலை செய்பவர்களுக்கும் விஸ்தரிக்கப் பட வேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

பாதுகாப்புச் சட்டத்தைப்பற்றிப் பேசப்பட்டது. பாது காப்புச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லும் போது, இப்போது பத்திரிகைகளில் வரும் செய்திகளையும் பார்க்க வேண்டும். இந்தியாவின் எல்லை ஓரத்தில் ஒரு பக்கத்தில் பாகிஸ் தான் துருப்புக்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை இன்று காலையில் பத்திரிகையில் பார்த்தேன். நிலைமை இவ்வாறு நிமிஷத்திற்கு நிமிஷம் மாறிவருகிறது. இதையெல்லாம் பார்க்கும் போது, பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்யலாமா என்று யோசிக்க வேண்டும். காவலாளியை உடனே எடுத்துவிடலாம்; ஆனால் திருடன் வராமல் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறதா என்றும், நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சக்தி நம்மிடம் இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். நம் நாட்டின் 'பார்டர்' ஓரங்களில் பாகிஸ்தான் துருப்புகள் இருக்கின்றன என்ற செய்தி எனக்குக் கவலையை அளிக்கிறது. நம்மிடம் எவ்வளவு உணவுப் பொருள்கள் இருக்கின்றன, நாட்டில் எவ்வளவு உணவுப் பொருள் கள் உற்பத்தியாகக்கூடும், இங்கே எவ்வளவு ஜனத்தொகை இருக் கிறது, ஜனங்களுக்கு உணவுப் பொருள்களை எவ்வாறு பங்கீடு செய்ய வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் மாற்றுக் கட்சித் தோழர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த விஷயங்களில் அவர்கள் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும். மக்கள் வாழ வேண்டும் என்ற நோக்கம் இருந்தால், அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும். அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதன் மூலம் தான் மக்களுக்குச் சேவை செய்ய முடியும் என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

**திரு. க. அன்பழகன்:** கனம் தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின் பேரில் இரண்டொரு கருத்துக்களைத் தெரி விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிதி ஒதுக்கீட்டில் பெரும் பகுதி, ஊழியர்களுக்கு அகவிலைப் படி உயர்வு அளிப்பு காரணமாக வும், வேறு பல சில்லறை விஷயங்கள் காரணமாகவும், ஏற்பட்டிருக் கிறது. இந்தப் படியை பஞ்சப் படி என்று சொல்வதைவிட, அகவிலைப் படி என்று சொல்வது பொருத்தமானது; ஏனென்றால் அகவிலைகள் உயர்வதால் இந்தப் படியை தங்கள் ஊழியர்களுக்கு அளிக்கும் கடமை அரசாங்கத்தாருக்கு இருக்கிறது. அதிலும், மத்திய அரசாங்கம் அதன் ஊழியர்களின் அகவிலைப் படியை உயர்த்தியவுடனேயே, மாநில அரசாங்க ஊழியர்களின் அகவிலைப் படியை உயர்த்த வேண்டிய கடமை இந்த அரசாங்கத்திற்கு இருக் கிறது. ஒன்றிரண்டு மாதத் தவக்கத்திற்குப் பிறகு இந்த அரசாங்கம் தன் ஊழியர்களின் அகவிலைப் படியை உயர்த்தியிருக் கிறது. மத்திய அரசாங்கம் எந்தத் தேதியிலிருந்து அதன் ஊழியர்களின் அகவிலைப் படியை உயர்த்தியிருக்கிறதோ, அந்தத்



30th March 1966] [திரு. க. அன்பழகன்]

தேதியிலிருந்தே இந்த மாநில அரசாங்க ஊழியர்களின் அகவிலைப் படியையும் உயர்த்த முன்வர வேண்டும் என்று இந்த அரசாங்கத் தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அகவிலை உயர்வுப் பிரச்னையை இந்த முறையில் சமாளிப்பதை விட, அகவிலைகளை உயர்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசாங்கத்தார் அகில இந்திய அமைப்பிலேயே கொண்டு வரலாம். ஊழியர்களுக்கு உணவுப் பொருள்களும் அத்தியா வசியப் பண்டங்களும், கூட்டுறவு முறையிலோ அல்லது வேறு முறையிலோ குறைந்த விலையில் கிடைக்க ஏற்பாடு செய்தால், பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து விலைவாசிகள் ஏறுவதும், விலைவாசிகள் ஏறுவதைத் தொடர்ந்து பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதுமாக இருக்கும் விஷ வட்டத்தை— 'vicious circle' கட்டுப்படுத்தலாம். இவ்வாறு விலைவாசி ஏற்றத்தைத் தொடர்ந்து அகவிலைப் படிகளை உயர்த்துவதால் அரசாங்க ஊழியர்களுக்கும் வேறு துறை ஊழியர்களுக்கும் நிவாரணம் கிடைத்தாலும், பாட்டாளி மக்களுக்கும், உழவர்களுக்கும், ஏழை மக்களுக்கும் நிவாரணம் கிடைப்பதில்லை. ஆகவே விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க அரசாங்கம் தக்க வழிவகைகள் காண வேண்டும்; இல்லா விட்டால், மக்களுக்கு பொருள்கள் குறைந்த விலையில் கிடைக்கச் செய்யவாவது அரசாங்கம் திட்டம் வகுக்க வேண்டும்.

சில பொருள்களுக்கு இப்போது விற்பனை வரியில் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. இவற்றிற்குச் சலுகை இந்த மன்றத்தில் ஏறத்தாழ இரண்டாண்டு காலமாகத் திரும்பத் திரும்பக் கோரப் பட்ட பிறகு, இப்போதாவது இந்தச் சலுகை அளிக்கப்பட்டிருப் பதை மனதார வரவேற்கிறேன். விற்பனை வரியைப் பொறுத்த வரையில், வரி ஏய்ப்பை அடியோடு தடுக்கவும், விற்பனை வரி வசூலை அதிகச் சிக்கல்கள் இன்றி எளிய முறையில் நடத்தவும் வழிவகை காண வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

குடிசைகளில் தயாரிக்கப்படும் தீப்பெட்டியின் மீதுள்ள எக்சைஸ் வரியை அரசாங்கம் நீக்குவதை வரவேற்கிறேன். இப்போது சிவகாசி போன்ற இடங்களில் தீப்பெட்டித் தொழில் பாதிக்கப்பட்டு, பல தொழிலாளர்கள் வேலை இல்லாமல் கஷ்டப் படுகிறார்கள். அந்த தொழிலாளர் பலருக்கு வேலை கிடைக் 11-20 a.m.
காத பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருப்பதாக அந்த வட்டாரத்திலிருந்து வருகிறவர்கள் தெரிவிக்கும் செய்தி யிலிருந்து அறிகிறேன். அவர்களுக்கு பொட்டாஷியம், சல்ஃபர் போன்ற பொருள்கள் கிடைக்காததால் அந்தத் தொழில் முடங்கி இருக்கிறது. அன்றாடம் கஞ்சி காய்ச்சுவதற்காக அந்தத் தொழிலைச் செய்துவருகிற ஏழைமக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால், தனிப்பட்ட அந்தத் தொழில் பாதிக்காமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு முதலாவதாக திருவள்ளுவர் பிறந்த திருநாளை விடுமுறையாக வைக்க முதலமைச்சர் அவர்கள் முன்வந்ததற்காக, திருவள்ளுவர் பெயரால் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத்

*[திரு. க. அன்பழகன்]* [30th March 1966

தெரிவித்துக்கொள்கிறேன். திருவள்ளுவர் பெயரால் உள்ள அந்த நாளை பழைய பண்டிகை நாளாக ஆக்கிவிடாமல் முற்போக்கு எண்ணங்கள் வளரும் வகையில், கருத்து விளக்கங்கள் தரும் வகையில், பல்வேறு கருத்துக்கள் மக்களிடம் பரப்பும் வகையில், அமையும்படி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், திருவள்ளுவர் நாளை 'வைகாசி அனுஷம்' என்று மாத்திரம் வைத்துவிடாமல், அறிவு பரவும் வகையில் வழி செய்ய வேண்டுமென்றும், முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன், இந்த மன்றத்தில் திருவள்ளுவர் படம் இல்லாதது பெரும் குறையாக இருக்கிறது. இங்கேயும் திருவள்ளுவர் படத்தைத் திறந்துவைக்க முன்வர வேண்டுமென்று முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்** : தலைவர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீடு அறிக்கையை ஆதரிக்குமுன், சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக நமது சுகாதார அமைச்சர் அவர்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ராமநாதபுரம் ஜில்லாவில் மூன்று இடங்களில் X-ray Plant வாங்கி சில காலமாக அவை தூங்கிக்கொண்டிருக்கின்றன. ராமனாதபுரம், பரமக்குடி, விருதுநகரில் எலக்ட்ரிக் கனெக்ஷன் கொடுத்து அதைச் செய்யவேண்டும். எவ்வளவோ முதல் போட்டும், அதை உபயோகிக்கமுடியாமல் இருக்கிறது என்பதை கவனித்து, அதைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அகவிலைப்படி என்று சொல்லவேண்டுமென்று நண்பர் அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். அது விஷயமாக உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டிய அளவு சர்க்கார் உதவி செய்திருப்பதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. மொத்தத்தில் வருஷத்திற்கு வருஷம் அகவிலைப்படி கொடுப்பதை விட்டுவிட்டு அகவிலையைக் குறைப்பதற்கு ஏதாவது வழியிருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலக்கடலை விஷயமாக அரசாங்கம் கண்ட்ரோல் கொண்டுவர, மத்திய சர்க்கார் ஏற்பாடு செய்திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். உதாரணமாக சாதாரண மக்கள் முன்பெல்லாம் நல்லெண்ணெய் உபயோகித்தார்கள். இப்போது நல்லெண்ணெய் சாதாரண மக்களுக்கு மிக அரிதாகிவிட்டது. நிலக்கடலை எண்ணெய் அதிக உபயோகத்தில் இருந்துவருகிறது. இப்போது கூட 7½ ரூபாய் ஆகிறது நிலக்கடலை எண்ணெய், என் அனுபவத்தில் ஒரு மூட்டை பருப்பு ரூ. 90 லிருந்து ரூ. 140-க்கு விற்கிறது. என்னுடைய கடையில் விற்கிறார்கள். 7 ரூபாய் என்று விற்றால்கூட அந்த விலைக்கு எண்ணெய் கட்டாது. அதனால் எண்ணெயாக ஆக்குவதை விட பருப்பாகவே விற்க ஆரம்பித்துவிட்டார்கள். சாதாரண மக்கள் உபயோகிக்கும் நிலக்கடலை எண்ணெய் கண்ட்ரோல் விலைக்குக் கிடைத்தால் நன்றாக இருக்கும். பஞ்சப்படி கொடுத்துக் கொண்டு போவதில் பயன் இல்லாமல் போகிறது. அதற்கு முன்பு அகவிலை ஏறுகிறது. அதற்கு திட்டம் தயாரித்து செயல்படுத்தினால்



30th March 1966] *[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]*

நன்றாக இருக்கும். விற்பனை வரி விலக்கு உணவுப் பொருள்களுக்குக் கொடுத்திருப்பதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதோடு உணவுப் பொருள் சம்பந்தமாக ஏற்படுகிற நிர்வாகச் செலவினால், குவிண்டால் ஒன்றுக்கு 8 ரூபாய், 10 ரூபாய் வரையில் அரிசிக்கு செலவாகிறது என்று நான் டிபார்ட்மெண்டில் விசாரிக்கும்போது கேள்விப்பட்டேன். செக்போஸ்ட் ஏற்படுத்துவதிலிருந்து, அந்த டிபார்ட்மெண்டில் ஏற்படும் செலவு காரணமாக அரிசியின் விலை 10 ரூபாய் வரையில் ஏறுகிறது. இது மிகவும் அதிகமாக இருக்கிறது என்று நினைக்கிறேன். இதை அமைச்சர் அவர்கள் நன்றாக விசாரணை செய்து அதைக் குறைக்கமுடியுமா என்று பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹை பவர் கமிட்டி சம்பந்தமாக ஏற்கனவே பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், டிபார்ட் மெண்டில் அதிகாரிகள் ஜாஸ்தியாக இருப்பதாக ஜனங்களிடத்தில் ஒரு கருத்து இருக்கிறது. அது சம்பந்தமாக அரசாங்கமும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இப்போது கூட 2,000 பியூன்களைக்கூட எடுப்பதாக இருக்கிறது என்று பத்திரிகையில் பார்த்தேன். எல்லா டிபார்ட்மெண்டிலும் சிக்கனமாக எவ்வளவு செய்யமுடியுமோ அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஃபெர்ட்டிலைசர் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். நான் மார்க்கெட்டிங் சொசைடி பிரசிடெண்ட். எங்கள் தாலூகாவில் அமோனியம் சல்பேட் கிடைக்கவில்லை என்று எங்கும் சொல்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதியில் அப்படித் தெரியவில்லை. எங்களுக்கு அலாட்மெண்ட் கிடைத்து, 1½ லட்சம் ரூபாய் வரையில் போட்டு வாங்கியிருக்கிறோம். அதை யாரும் எடுக்கவில்லை. நம் மாகாணத்திற்கு போதுமான அளவில் கிடைக்கவில்லை என்றால், எங்கள் பக்கத்தில் அப்படித் தோன்றவில்லை. பெர்டிலைசர் குறைவாக இருப்பதால் தான் உற்பத்தி குறைந்துவிட்டது என்று சொல்வது. . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அப்படி ராமனாதபுரத்தில் நிறைய பெர்டிலைசர் இருந்து, அங்கே தேவையில்லாமல் இருந்தால், நாளை நான் ராமனாதபுரம் போகிறேன். அங்கே கலெக்டரைப் பார்ப்பேன். அதைப்பற்றி கலெக்டரிடம் சொல்லி அங்கே தேங்கிக்கிடக்கும் பெர்டிலைசரை செங்கல்பட்டு, மற்ற ஜில்லாக்களுக்கு வரவழைத்துக் கொள்ள ஏற்பாடு செய்யலாம்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்** : அதை நான் சொல்லவில்லை. எங்களுக்குப் போதுமான அளவு கொடுக்கிறார்கள் என்று திருப்திகாகச் சொன்னேன். நாளைக்கு முதலமைச்சர் அங்கே போய் அங்கேயிருப்பதை கொண்டுவருகிறேன் என்று சொன்னால் அங்கு உள்ளவர்கள் என்னைத்தான் திட்டுவார்கள், 'இவர் போய் கெடுத்துவிட்டார்' என்று. திருப்திகரமாக அங்கே பெர்டிலைசர் கிடைக்கிறது என்பதைத்தான் சொன்னேன். அதைச் சொல்லிக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

[30th March 1966

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கல் மசோதா மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். முதலாவதாக நான் சொல்ல விரும்புவது இந்த கவுன்சில் கூட்டம் நடைபெறும் நேரத்தை மாற்றியமைத்துள்ள அம்சம் அவ்வளவு பொருத்தமானதாக இல்லை என்று என் மனதில் படுகிறது. இப்போதே, ஒரு நிமிஷத்திற்கு முன் ஒரு சிக்கல் ஏற்பட்டிருப்பதை நாம் உணருகிறோம். அந்தச் சபையில் இருக்கவேண்டிய தொழில் அமைச்சர் ஓடோடி இங்கே வரவேண்டியிருக்கிறது. இங்கேயிருந்து நடவடிக்கைகளைக் கவனிக்கவேண்டிய முதலமைச்சர் அவர்கள், அங்கே ஓடோடிச் செல்ல வேண்டியிருக்கிறது. ஒரே சமயத்தில் இரண்டு சபைகளும், கூடுவதால் இந்தச் சிக்கல் ஏற்படுகிறது. முதலமைச்சர் அவர்கள் பெருவாரியாக இங்கேயிருந்து, இங்கே உறுப்பினர்கள் பேசுவதைக் கேட்க முடியாமல் போய்விடுகிறது. தொழில் அமைச்சர் அவர்கள் அவசியமான நேரத்தில் அங்கே பேசமுடியாமல் போகிறது. இந்த நேர மாற்றத்தை புனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்க நிர்வாகத்திலே, சிக்கனப் படுத்தி செயல்படுத்த வேண்டுமென்று கருத்து பலதுறைகளிலே பல முறையில் சொல்லப் படுகிறது. அதிலே ஒரு உருப்படியான யோசனை நான் அறிந்தது பிரயோஜனப்படுமென்று நினைக்கிறேன். மத்திய அரசாங்கத்தில் சில இலாகாக்களில் Incentive bonus என்ற ஒரு முறையைப் பயன்படுத்துகிறார்கள். ஒரு மனிதன் எட்டு மணியில் இவ்வளவு வேலை செய்யவேண்டுமென்று நிர்ணயிக்கப்படுகிறது. அவன் செய்யும் எட்டு மணி வேலைக்கு அதிகமாகச் செய்தால், அதற்கு 50 சதவிகிதம் மேல் அவன் வேலை செய்தால், அதற்கு தனி போனஸ் என்று பாதி நாள் சம்பளம் அவர்களுக்கு கூடுதலாகக் கொடுக்கிறார்கள். ஒரு நாள் எட்டு மணி நேரத்தில் 14 மணி நேரத்திற்கான வேலை செய்து முடித்தால் இரண்டு நாளைக்கான கூலி கூடுதலாகக் கொடுக்கிறார்கள். இந்த முறையில் ஒருவரும் சோம்பேறித்தனமாக இருப்பதில்லை. ஆபீசில் பேப்பர் படிப்பதும், சொந்தக்காரர்களுக்கு லெட்டர் எழுதிக் கொண்டும் இருப்பதில்லை.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** செகரட்டேரியட்டில் அப்படி நடக்கிறதா ?

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** இங்கே இல்லை. சில ரயில்வே ஆபீஸ்களில் பார்த்திருக்கிறேன். அந்த முறையில் அரசாங்கம் கவனம் செலுத்த முற்பட்டால் சிக்கனப் படுத்துவது பெரும் சாதகமாக இருக்கும். இதை அரசாங்க அதிகாரிகள் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இப்போதெல்லாம் லாரிகள், மோட்டார்கள் ஆக்சிடெண்ட் கூடுதலாக விருத்தி அடைந்துகொண்டு போகிறது.

முன்பு இரவு 12 முதல் காலை 4 மணி வரை லாரிகள் ஓட்டக் கூடாது என்று ஒரு சட்டம் இருந்தது. அதை எடுத்துவிட்டு



30th March 1966] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

இருக்கிறார்கள். அதை மீண்டும் கொண்டு வந்தால் அது நல்ல பலன் அளிக்கக்கூடியதாக இருக்கும். அதையும் புனராலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ரோடுகளைப் பொறுத்தமட்டில், சென்னை நகரத்தில் உள்ள ரோடுகளைப் பொறுத்த அளவில், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ' இது ரோடுகள் தானா என்று கேட்கக் கூடிய அளவில் இருக்கிறது' என்றார். சென்னை நகரத்தில் மட்டுமல்ல, மாகாணத்தில் எந்த நகரத்திற்குப் போனாலும் பெருவாரியான நகரங்களில் ரோடுகளில் குழிகள் தோண்டப்பட்டு, பல இடங்களிலும் வெட்டப்பட்டு பாழ்படுத்தப்பட்ட நிலைமையைத் தான் அடிக்கடி காண்கிறோம். ஒரு தடவை ரோடுகளைச் செப்பனிடுகிறார்கள். சுத்தம் செய்கிறார்கள். பிறகு டெலிபோன் லைன் போடுவதற்கு என்று ஒரு தடவை குழி தோண்டுகிறார்கள். அதைப் போட்டுவிட்டு குழியை மூடியவுடன் செப்பனிட்டதும், பைப் லைன் போட என்று அங்கேயே மறுபடியும் குழி தோண்டுகிறார்கள். பிறகு அது முடிந்ததும், மீண்டும் மோரி போடுவதற்கு என்று ரோடுகளில் பள்ளம் வெட்டுகிறார்கள். இப்படி ரோடுகளை திரும்பத் திரும்ப வெட்டுவது என்பது விரும்பத்தக்க தல்ல. இதை ஒரு முறையாக அமுல் படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும். நான் சொல்ல வந்த யோசனை அண்டர்கிரவுண்டு என்ற நிலையிலேயே கவரேஜ்- ஸ்லாப் லிஸ்டத்தில் ஒரு பள்ளத்தையே தோண்டி விடுவது. பிறகு அதை ஸ்லாப் வைத்து மூடுவது. டெலிபோன் லைன் போடுவதாக இருந்தாலும், பைப் லைன் போடுவதாக இருந்தாலும், மோரி சம்பந்தப் பட்டதாக இருந்தாலும், ஸ்லாபை எடுக்க வேண்டியது, வேலை முடிந்ததும் மூடிவிடுவது என்று வைத்துவிட்டால் ரோடுகளை அடிக்கடி ரிப்பேர் செய்வது, மீண்டும் மீண்டும் அதைத் தோண்டுவது என்ற நிலை இல்லாமல், ரோடுகள் எப்போதுமே சுத்தமாக இருக்கக் கூடிய நிலை உருவாகும். அந்த அம்சத்தையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. ராமகிருஷ்ண ஆசாரி :** கனம் தலைவர் அவர்களே, நிதி 11-30
ஒதுக்கீடு மசோதாவைக் குறித்து இரண்டொரு வார்த்தைகள் a.m.
பேச விரும்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் அரசாங்க ஊழியர்களுக்கு விலைவாசி உயர்வு ஏற்பட்ட காரணத்தால் அவர்களுடைய பஞ்சப்படியை உயர்த்தியதால் நான் அவர்களை மனமாறப் பாராட்டுகிறேன். அதோடு நம் நண்பர்கள் எல்லாம் அவரை மத்திய அரசாங்கம் கொடுத்த தேதியிலிருந்து கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் அந்த மாதிரி கொடுப்பதற்கு நம்முடைய அரசாங்கத்தில் நிதி வசதி இருக்குமானால், நம் முதலமைச்சர் அவர்கள் தாராளமாகச் செய்வார்கள் என்றே நம்புகிறேன். ஆனால் அதை குறையாகப் பேசுவது அவ்வளவு சரியல்ல.

இரண்டாவது, உணவு உற்பத்தி விஷயத்தில் நாம் இப்போது முன் கை எடுக்க வேண்டும் என்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் ஜில்லாவில் பொய்கை அணை என்று ஒரு

[திரு. கே. ராமகிருஷ்ண ஆசாரி] [30th March 1966

திட்டம் இருக்கிறது. அதை அவசியம் நிறைவேற்ற வேண்டும் என்றும் அதை அடுத்த ஆண்டில் துவக்க வேண்டும் என்றும் நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்ததாக மதுரை பல்கலைக் கழகத்தில் சிற்பப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னதாக பத்திரிகையிலே பார்த்தேன். அது அவசியம். சிற்பப் பிரிவை ஏற்படுத்தி ஒரு சிற்பியை அதற்குப் பிரின்சிபாலாக நியமிக்க வேண்டும் என்றும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கல்வி விஷயமாக நம்முடைய நிதி ஒதுக்கீடு வெகு தாராளமாக இருக்கிறது. ஆனால் கல்வி நிலையங்களில் உள்ள கட்டிடங்கள் எல்லாம் பல வகையிலும் அவசர காலத்தை உத்தேசித்து நிறுத்தப் பட்டிருக்கின்றன. இதையும் இந்த வருஷத்திலேயே செய்வதற்கு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

அடுத்து தங்கக் கட்டுப்பாடு திட்டம் இன்னும் அமுலில் இருந்து வருகிறது. நகைத் தொழிலாளர்களுக்கான சலுகைகள் எல்லாம் 31-3-1966 தேதியோடு முடிவடைந்து போகின்றன என்று பத்திரிகைகளில் செய்தி வந்து கொண்டிருக்கிறது. ஆகவே அந்தச் சட்டம் அமுலில் இருக்கும் வரை, கால வரம்பின்றி நகைத் தொழிலாளர்களுக்கு கல்விச் சலுகையும் இன்னும் இதர சலுகைகளும் நீடிக்கச் செய்ய வேண்டும், என்று நான் முதலமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்ததாக இவர்களுக்குக் கடன் கொடுப்பதில் கூட ரொம்ப தாமதங்கள் எல்லாம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக நம்முடைய திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அசிஸ்டெண்ட் டைரக்டர் கடன் கொடுக்க, டைரெக்டராக மனுதாரர்களுக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார். 'நீங்கள் ஒரு எம்.எல்.ஏ. வையோ, அல்லது பஞ்சாயத்து பிரசிடெண்டையோ, அல்லது கிராம கர்ணம், அல்லது கிராம முனிசீப்பையோ கூப்பிட்டுக் கொண்டு வந்து பணம் வாங்கிக் கொண்டு போங்கள்' என்று புதிதாக நோட்டீஸ் அனுப்பி இருக்கிறார். இப்படிப்பட்ட ஏழைத் தொழிலாளர்கள், 50, 60 மைலிருந்து ஆளைக் கொண்டு வந்து ஜாமீன் கொடுத்து பணம் வாங்கிக்கொண்டு போவது கஷ்டமாக இருக்கிறது. அதை உடனடியாக கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சமீபத்தில் ஜப்பான் சென்று வந்தார் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள். அங்குள்ள சிறு குடிசைத் தொழில்களை நன்றாக கவனித்து வந்திருக்கிறார். நகைத் தொழிலாளர்களுக்கு கடன் கொடுத்து கெடுப்பதை விட, இம்மாதிரியான குடிசைத் தொழில்களை அவர்களுக்காக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த நம் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்ளுகிறேன்.



30th March 1966]

***கனம் திரு. எம். பக்தவத்சலம்**: கனம் தலைவர் அவர்களே, இந்த மான்ய ஒதுக்கீடு மசோதா பற்றிய விவாதத்தில் நான் இன்று தெரிவித்த சில விஷயங்களைப் பற்றியும் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். திருப்தியும் தெரிவித்திருக்கிறார்கள். பொதுவாக சில யோசனைகளையும் மீண்டும் வற்புறுத்தியிருக்கிறார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு பஞ்சப்படி உயர்த்தப்பட்ட விஷயத்தில், முதலில் விவாதத்தைத் துவக்கி வைத்த உறுப்பினர் திரு. நடராஜன் அவர்கள் ஏப்ரல் மாதத்திலிருந்தே கொடுக்கலாம் என்றார். நாளை மறு தினம் ஏப்ரல் மாதம் பிறக்கிறது. Financial Year என்று சொல்லுவார்கள், அதுவும் பிறக்கிறது. ஆகவே ஜூன் மாதத்திற்கு பதிலாக ஏப்ரல் முதல் தேதியிலிருந்தே கொடுக்கலாமே என்றார். ஆனால் கனம் உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள், எப்போது மத்திய சர்க்கார் கொடுத்தார்களோ, அந்தத் தேதியிலிருந்தே கொடுக்க வேண்டும் என்றார். ஆனால் இந்த மன்றத்தில் பேசிய உறுப்பினர்கள் யாரும் இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அதை நான் குறையாகச் சொல்லவில்லை. ஏதோ அந்த அளவுக்கு அரசாங்கத்தினுடைய நிலையை உணர்ந்து இருப்பதால் அவர்கள் இதற்கு மேலும் கொடுத்திருக்கலாம் என்ற கருத்தைத் தெரிவிக்கவில்லை என்பதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த விஷயமாக அந்த மன்றத்தில் பொது விவாதத்தில் பேசிய கனம் எதிர்க்கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் 'இந்தப் பஞ்சப்படியை தேர்தலுக்கு முன்பாவது கொடுக்க வேண்டும்—அக்டோபர் மாதத்திற்குள்ளாவது கொடுங்கள்' என்று தான் சொன்னார்கள். நான் அப்போதே குறுக்கிட்டுச் சொன்னேன், 'அக்டோபர் மாதம் வரை போகாது, அதற்கு முன்னேயே நாங்கள் கொடுக்கப் போகிறோம்' என்று.

கனம் திரு. நடராசன் அவர்கள் கூறியது போல ஏப்ரலில் இருந்தும் கொடுக்கலாம். இரண்டு மாதம்தான் வித்தியாசம், ஆனால் ஏப்ரலில் இருந்து கொடுக்கக்கூடிய நிலை இருந்தால் இப்போது நான் ஸ்டேட்மெண்ட் போட வேண்டியதில்லை. வரவு செலவு திட்டத்திலேயே சேர்த்திருக்கலாம். இதை அதில் சேர்த்து விட்டால் மட்டும் போதாது, இதைச் சரிக்கட்ட வேண்டும். இந்த ஆண்டில் ஜூன் மாதத்தில் இருந்து கொடுப்பதற்கே ரூ. 2½ கோடி செலவு ஆகிறது. ஒரு ஆண்டு பூராவுக்கும் கொடுப்பது என்றால் ரூ. 3½ கோடி ஆகிறது. இதற்கு வருவாயைப் பார்த்து தான் கொடுக்க வேண்டும். ways and means குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். இன்னும் ஆராய்ந்து முடியவில்லை. ஆராய்ந்து முடிந்திருந்தால், வரவு செலவு திட்டத்தில் சேர்க்கவில்லை என்றாலும், 'ஏப்ரலிலிருந்தாவது கொடுக்கிறோம்' என்று சொல்லியிருப்போம். இந்த இரண்டு மாதத்தில் ஏதாவது வழி காணலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால் இந்த மன்றம் இப்போது கூடி இருக்கிறது. அப்புறம் இன்னும் 2, 3 மாதம்

[திரு. எம். பக்தவத்சலம்] [30th March 1966

கூடாது. ஆகவே இப்போதே மன்றத்திற்குத் தெரிவிப்பது நலலது என்று கருதித் தான் ஜூன் மாதத்திலிருந்து கொடுக்கிறோம் என்று தெரிவிக்கிறேன்.

மத்திய அரசாங்கம் கொடுக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். அதை ஒட்டித் தான் நாமும் இதைக் கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்றாலும், எல்லா மாநிலங்களிலும் அவ்வாறு கொடுக்கப்படுவதில்லை. இன்றைக்கு நாம் கொடுக்கும் அளவுக்குக் கொடுக்காத மாநிலங்களும் உள்ளன. அவர்களால் முடியவில்லை. கனம் உறுப்பினர் ராமதாஸ் அவர்களும், திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் அவர்களும் கூட கேட்டார்கள். ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கும், பஞ்சாயத்து யூனியனில் பணம் பெறுகிறவர்களுக்கும், தனிப்பட்ட பள்ளிகளில் இருப்பவர்களுக்கும் இந்தப் பஞ்சப்படி உயர்வு கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். ஆசிரியர்களுக்கும், ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கும் கொடுக்கிறோம். தனிப்பட்ட பள்ளிகளில் இருப்பவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கிறோம்.

மத்திய அரசாங்கத்தினிடம் நான் கேட்டேன். 'நீங்கள் கொடுத்தால் நாங்களும் கொடுக்க வேண்டியிருக்கிறதே, ஆகவே நீங்கள் அதற்கு ஓரளவாவது உதவி அளிக்க வேண்டும்' என்று அவர்களிடம் சொன்னேன். ஆனால் நிதி நிலைமை அவர்களை அனுமதிக்கவில்லை. அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் 'எங்கள் நிலைமையே கஷ்டமாக இருக்கிறது, மேலும் நாங்கள் கொடுக்கிற அளவிலே நீங்கள் கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை, நாங்கள் அகில இந்திய ஊழியர்களுக்கு உயர்த்திக் கொடுப்பதாலேயே நீங்கள் அப்படிச் செய்ய வேண்டும் என்று இல்லை' என்ற கருத்தைக்கூட அவர்கள் தெரிவித்தார்கள். இருந்தாலும் நாங்கள் இதை ஆராய்ந்து, இதைக் கொடுக்க வேண்டியது அவசியம் என்று உணர்ந்துதான் இதைக் கொடுக்க முற்பட்டிருக்கிறோம். எப்படியும் இதைக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நிதிநிலைமையைச் சரிக்கட்ட வழிவகைகளை ஆராய்ந்து, அதன் பிறகு இந்த முடிவை இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். திரு. அன்பழகன் கூறியது போல இது ஒரு நிரந்தரமான பரிகாரம் அல்ல. விலைவாசிகள் ஏறுகின்றன. விலைவாசிகள் ஏறுவதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. பொருளாதார நிபுணர்கள் இதை ஆராய்ந்து கருத்துக்கள் தெரிவிக்கிறார்கள். அரசாங்க நிர்வாகத்திலும் இது ஆராயப்பட்டு பிரச்னையின் தீர்விற்கு வழிவகைகள் காணப்பட்டு வருகின்றன. இது நமது அரசாங்கத்தின் பிரச்னை மட்டும் அல்ல. இது அகில இந்தியப் பிரச்னையாக இருக்கிறது. இது உலகப் பிரச்னையாக இருக்கிறது. வேறு நாடுகளிலும் விலைவாசிகள் ஏறுகின்றன. இந்தப் பிரச்னைக்கு எப்படித் தீர்வு காண்பது, சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு எப்படி நிவாரணம் அளிப்பது, என்பதெல்லாம் அரசாங்கத்தின் கவனத்தில் தொடர்ந்து இருந்து வருகிறது. நல்ல பண்டங்களை மலிவான விலையில் உத்தியோகஸ்தர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்காக



30th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

அரசாங்கத்தார் சில ஆண்டுகளாக Consumers' Co-operative Stores ஏற்பட உதவியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையைத் தீர்க்கும் விஷயத்தில் மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, இந்த மாநிலம் முன்னணியில் இருக்கிறது என்றுகூடக் கூறலாம். ஆனால் இது போதாது. பெரிய அளவில் உள்ள purchasing machinery -க்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பொருள்களை வாங்கி லாபமோ நஷ்டமோ இல்லாத முறையில் விநியோகிக்க வேண்டும். அதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், என்ன கடன்கள் கொடுக்க வேண்டும் என்பது கவனிக்க வேண்டிய விஷயங்கள். இப்போது அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்காகவும், ஆலைத் தொழிலாளர்களுக்காகவும் Consumers' Co-operative Stores இருக்கின்றன. பொதுவான Consumers' Co-operative Stores களும் இருக்கின்றன. இதையெல்லாம் இன்னும் பெரிய அளவில் நடத்த வேண்டும் என்பது மத்திய அரசாங்கத்தின் யோசனையாக இருக்கிறது. பஞ்சப்படி பெறாத பொதுமக்களை விலைவாசி உயர்வு பாதிக்கிறது. இது ஒரு vicious circle இப்படியே அகவிலைப் படியை உயர்த்திக் கொண்டே போனால் பயனில்லை என்பதை மத்திய அரசாங்கத்தார் உணர்ந்திருக்கிறார்கள். இந்த விஷயத்தில் அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

விற்பனை வரியைக் குறைப்பதுபோல நில வரியையும் குறைக்க 11-40 a.m.
வேண்டும் என்று கனம் அங்கத்தினர் திரு. நடராசன் சொன்னார். ஐந்து ஏக்கர் வரையில் இந்த வரியைக் குறைக்கலாம் என்று அவர் சொன்னார். இப்போது நம் நாட்டில் ஐந்து ஏக்கர் நிலம் உடையவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அரை ஏக்கர் நிலம் உடையவர்கள் நம் தமிழ்நாட்டில் எத்தனை பேர்? 3½ கோடி ஜனத்தொகையில் 50, 60 லட்சம் பேர்தான் சுமார் அரை செண்ட் நிலம் உடையவர்கள். மற்றவர்களுக்கு அது கூட இல்லை. அவர்களுக்கும் சாப்பாடும், குடியிருக்க இடமும் கிடைக்கச் செய்ய வேண்டியது அவசியம். அவர்களை நாம் தெருவில் விட்டுவிட முடியாது. அவர்களுக்கு, ஒன்றுமே இல்லாவிட்டாலும், குடியிருக்க நிலம் வேண்டும். அவர்களுக்கு, குடிசைகளாவது கட்டிக் கொள்ள மனை வழங்க வேண்டுமென்ற திட்டத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஹரிஜனங்களுக்கு ஓரளவு பணம் கொடுக்கிறோம். அவர்களுக்கு மட்டுமன்றி, மனையில்லாத எல்லோருக்கும் மனைகள் வழங்க வேண்டுமென்ற திட்டத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் அதற்குப் பணம் ஒதுக்கியிருக்கிறோம். குடி தண்ணீர் வழங்குவது என்றால், சிலருக்கு மட்டுமின்றி எல்லோருக்கும் வழங்க வேண்டும். மக்களின் இம்மாதிரியான அத்தியாவசியமான தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இதையெல்லாம் செய்ய வேண்டுமானால் வருமானம் உள்ளவர்கள்—தொழிலாளர்களுக்குக்கூட வருமானம் வருகிறது—அவர்களுக்குப் போதிய வருமானம் இல்லாவிட்டாலும், வேலையில்லாமல் திண்டாடுபவர்கள் நலனுக்காகக் காணிக்கை

[திரு. எம். பக்தவத்சலம்] [30th March 1966

செலுத்துவது போல நினைத்து profession tax போன்ற வரிகள் கொடுக்க வேண்டும். ஒன்று அல்லது இரண்டு எக்கர் நிலம் உடையவர்கள், மற்றும் நிலமே இல்லாதவர்களின் வரிகளைப் புறக்கணிக்க முடியாது. சோஷலிசத்தை எற்க மறுப்பவர்கள் யாரும் இல்லை. வசதி உள்ளவர்களும், சரி, இரண்டொரு எக்கர்களை வைத்துக்கொண்டு பயிர் செய்பவர்களும் சரி, எல்லோரும் ஒன்றுமே இல்லாதவர்கள் நலனுக்காக உதவ வேண்டியது அவர்களுடைய கடமையும் பொறுப்பும் ஆகும். அது இல்லை என்றால், சோஷலிசம் இல்லை. நம்மைவிட ஹீன ஸ்திதியில் உள்ளவர்களின் நிலையை உணர்ந்து, அவர்கள் நலனுக்காக நம்மாலான காணிக்கையைச் செலுத்துவது தான், சோஷலிசத்தின் அடிப்படை. மக்கள் வரி கொடுக்கிறார்கள். பருவ மழை தவறிவிட்டது. பயிர்கள் சரியாக விளையவில்லை. இதையெல்லாம் அரசாங்கம் கவனித்துவருகிறது. திட்டங்களை நிறைவேற்றுவதில், அரசாங்கத்திற்கும் ஆர்வம் இருந்தாலும். இதையெல்லாம் கவனித்து, உணவுப் பொருள்கள் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய விவசாயிகள், நிவாரணத்துக்கு உரியவர்கள் என்பதால், அவர்களுக்கு அரசாங்கம் வரி விஷயத்தில் தாராளமாக நிவாரணம் அளித்திருக்கிறது. நாங்கள் அவர்களுக்கு மேலும் நிவாரணம் அளிப்போம்.

அரிசி விலையைப் பொறுத்தவரையில், 'மார்ஜின்' இருக்கிறது என்று சொல்லப்பட்டது. 2½ ரூபாய், 3 ரூபாயாக மாற்றப்பட்டுள்ளது. ஒரு எக்கர் நிலம் உள்ளவர்களிடம் தானியம் வாங்குவதில்லை என்றாலும், அப்படிப்பட்டவர்கள் தானியம் கொடுத்தால், அவர்களுக்கு incentive bonus சேர்த்துக் கொடுப்போம். அவர்களாகக் கொடுக்கும் தானியத்திற்கு incentive bonus கொடுக்கிறோம். விலை உயர்வைப் பொறுத்த வரையில், retail விலை தான் உயர்த்தப்படுகிறது. அதனால் 'மார்ஜின்' அதிகமாக இல்லை என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள். ஆனால் மார்ஜினைக் குறைப்பது அரசாங்கத்தின் கவனத்தில் தொடர்ந்து இருந்துவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றிப் பேசப்பட்டது. அது நாடு சம்பந்தப்பட்ட பிரச்னை. நாட்டின் நலனுக்குப் பாதுகாப்புச் சட்டம் வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் இப்போது பிரச்னை. சில கனம் அங்கத்தினர்கள் கூறியது போல, இன்றுள்ள நிலைமை எப்படி இருக்கிறது என்பதை பத்திரிகைகளில் பார்க்கிறோம். தாஷ்கண்டில் பாகிஸ்தானுடன் ஒப்பந்தம் ஏற்பட்டது. சீனத் தொல்லைதான் இருக்கிறது என்று நினைத்தோம். இப்போது அது மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறும் நிலையில் இருக்கிறது. நமது பிரதம மந்திரி அமெரிக்க ஜனாதிபதியுடன் பேசுகிறார் என்றால், பாகிஸ்தானில் புதிய உறவும், டாங்கிகள் போருக்குத் தயாராக இருக்கின்றன. இவ்வாறு பாகிஸ்தானின் நிலை இப்போது திருப்திகரமாக இல்லை. இதுபற்றி நமது பாதுகாப்பு மந்திரி பாராளுமன்றத்தில் பேசியுள்ளது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்கும். நாட்டைப் பாதுகாக்கத் தான் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. தேர்தலில் நிற்பவர்களுக்காகப் பாதுகாப்புச் சட்டம் இல்லை. நாட்டுப் பாதுகாப்பு முக்கியமானது. ஒருவர் தேர்தலில் ஜயிக்கலாம், அல்லது தோற்கலாம். தேசப் பாதுகாப்பு முக்கியமானது. அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், தேர்தலின்போது பாதுகாப்புச் சட்டத்தை தவறுதலாக எதிர்க் கட்சியினர் மீது பிரயோகித்து வெற்றிபெற வேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை. இந்த காங்கிரஸ் கட்சிக்கும் சரி, இந்த ஆட்சிக்கும் சரி, பரிபூர்ணமான நம்பிக்கை மக்களிடத்திலும், தங்களிடத்திலும் இருக்கிறது. ஆகையால் ஒருக்காலும் தேர்தலில் நிற்கிறவர்கள், காங்கிரசை எதிர்க்கிறவர்கள், கொஞ்சம் கூட அச்சப்படவேண்டியதில்லை. வரம்புக்குள்ளாக கட்டுப்பாட்டோடு நடத்தலாம். பாதுகாப்புச் சட்டத்தைப் பிரயோகிப்போம் என்று அஞ்ச வேண்டியதில்லை. அதற்காகப் பாதுகாப்புச் சட்டத்தை எடுத்துவிடுங்கள் என்றால் அதை எடுக்கமுடியாது. நாட்டுக்குப் பாதுகாப்புச் சட்டம் முக்கியமானது கனம் உறுப்பினர் நடராஜன் அவர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார்கள். பத்திரிகையில் பார்த்ததாகச் சொன்னார்கள். தாங்கள் மாநில முதலமைச்சர்கள் அரசாங்கக் காரியமாக அடுத்த மாதம் 9, 10 தேதிகளில் டெல்லிக்குப் போவதாக இரண்டு மாதங்களுக்கு முன்பே தெரிவிக்கப்பட்டது. ஏப்ரல் 9, 10 தேதிகளில் வரமுடியுமா என்று கேட்டார்கள். முடியும் என்றோம். விவசாயத்தைப் பற்றிப் பேசுவதற்கு என்று கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. முதலமைச்சர்கள், விவசாய அமைச்சர்கள் எல்லோரும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயத்தில் இந்த பசலியில் பருவ காலத்தில் எப்படியெல்லாம் அதிகமாக உற்பத்தியைப் பெருக்குவதில் நாம் ஈடுபடவேண்டுமென்று பேசுவதற்காக அந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கூடத்திற்கு முதலமைச்சர்கள் போவதால்; அதைப் பயன்படுத்திக்கொண்டு காங்கிரஸ் தலைவர் அவர்களோடு பேசப் போகிறார்கள். மாநிலக் காங்கிரஸ் தலைவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பத்திரிகையில் பார்த்திருக்கலாம். எப்படியோ, தேர்தல் விஷயம்; அதுமட்டுமல்ல, தேர்தல் நிதி விஷம் என்று உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அதற்கு என்ன செய்வது? நாங்கள் போகிறோம். போனால் மத்திய அரசாங்கம் எதற்காக கூட்டியதோ அதற்கு முழு நேரமும் இருப்போம். அங்கிருந்து அது முடிந்ததும் ஒரு சினிமாவுக்குப் போகக்கூடாதா, நண்பர்கள் கல்யாணத்திற்குப் போகக்கூடாதா? 'எப்படி அரசாங்கக் காரியத்திற்கு வந்து கல்யாணத்திற்குப் போவது என்று கேட்பதா? ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்றால் வெளியே போகக்கூடாதா? 'அங்கே ஏன் போனீர்கள்' என்று கேட்பது? அரசாங்கக் காரியமாகத்தான் நாங்கள் போகிறோம். பம்பாயில் கூடப் போகிறோம், காங்கிரஸ் அலுவலாகப் போகிறோம், காங்கிரஸ் தலைவர் அப்போது கூட்டமாட்டாரா? ஏப்ரல், மே மாதத்தில் 21 தேதியில் அங்கே வைத்திருக்கிறோம். நாங்கள் போனால் காங்கிரஸ் தலைவரைப் பார்ப்போம். காங்கிரஸ் தலைவர் வீட்டுக்குப் போகக் கூடாதா?

[திரு. எம். பக்தவத்சலம்] [30th March 1966

செலுத்துவது போல நினைத்து profession tax போன்ற வரிகள் கொடுக்க வேண்டும். ஒன்று அல்லது இரண்டு எக்கர் நிலம் உடையவர்கள், மற்றும் நிலமே இல்லாதவர்களின் வசதிகளைப் புறக்கணிக்க முடியாது. சோஷலிசத்தை ஏற்க மறுப்பவர்கள் யாரும் இல்லை. வசதி உள்ளவர்களும், சரி, இரண்டொரு எக்கர்களை வைத்துக்கொண்டு பயிர் செய்பவர்களும் சரி, எல்லோரும் ஒன்றுமே இல்லாதவர்கள் நலனுக்காக உதவ வேண்டியது அவர்களுடைய கடமையும் பொறுப்பும் ஆகும். அது இல்லை என்றால், சோஷலிசம் இல்லை. நம்மைவிட ஹீன ஸ்திதியில் உள்ளவர்களின் நிலையை உணர்ந்து, அவர்கள் நலனுக்காக நம்மாலான காணிக்கையைச் செலுத்துவது தான், சோஷலிசத்தின் அடிப்படை. மக்கள் வரி கொடுக்கிறார்கள். பருவ மழை தவறிவிட்டது. பயிர்கள் சரியாக விளையவில்லை. இதையெல்லாம் அரசாங்கம் கவனித்துவருகிறது. திட்டங்களை நிறைவேற்றுவதில், அரசாங்கத்திற்கும் ஆர்வம் இருந்தாலும், இதையெல்லாம் கவனித்து, உணவுப் பொருள்கள் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய விவசாயிகள், நிவாரணத்துக்கு உரியவர்கள் என்பதால், அவர்களுக்கு அரசாங்கம் வரி விஷயத்தில் தாராளமாக நிவாரணம் அளித்திருக்கிறது. நாங்கள் அவர்களுக்கு மேலும் நிவாரணம் அளிப்போம்.

அரிசி விலையைப் பொறுத்தவரையில், 'மார்ஜின்' இருக்கிறது என்று சொல்லப்பட்டது. 2½ ரூபாய், 3 ரூபாயாக மாற்றப் பட்டுள்ளது. ஒரு எக்கர் நிலம் உள்ளவர்களிடம் தானியம் வாங்குவதில்லை என்றாலும், அப்படிப்பட்டவர்கள் தானியம் கொடுத்தால், அவர்களுக்கு incentive bonus சேர்த்துக் கொடுப் போம். அவர்களாகக் கொடுக்கும் தானியத்திற்கு incentive bonus கொடுக்கிறோம். விலை உயர்வைப் பொறுத்த வரையில், retail விலை தான் உயர்த்தப்படுகிறது. அதனால் 'மார்ஜின்' அதிகமாக இல்லை என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள். ஆனால் மார்ஜினைக் குறைப்பது அரசாங்கத்தின் கவனத்தில் தொடர்ந்து இருந்துவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றிப் பேசப்பட்டது. அது நாடு சம்பந்தப்பட்ட பிரச்னை. நாட்டின் நலனுக்குப் பாதுகாப்புச் சட்டம் வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் இப்போது பிரச்னை. சில கனம் அங்கத்தினர்கள் கூறியது போல, இன்றுள்ள நிலைமை எப்படி இருக்கிறது என்பதை பத்திரிகைகளில் பார்க் கிறோம். தாஷ்கண்டில் பாகிஸ்தானுடன் ஒப்பந்தம் ஏற்பட்டது. சீனத் தொல்லைதான் இருக்கிறது என்று நினைத்தோம். இப்போது அது மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறும் நிலையில் இருக்கிறது. நமது பிரதம மந்திரி அமெரிக்க ஜனாதிபதியுடன் பேசுகிறார் என்றால், பாகிஸ்தானில் புதிய உறவும், டாங்கிகள் போருட்காட்சியு மாக இருக்கின்றன. இவ்வாறு பாகிஸ்தானின் நிலை இப்போது திருப்திகரமாக இல்லை. இதுபற்றி நமது பாதுகாப்பு மந்திரி பாராளுமன்றத்தில் பேசியுள்ளது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்கும். நாட்டைப் பாதுகாக்கத் தான் பாதுகாப்புச்



30th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

சட்டம் இருக்கிறது. தேர்தலில் நிற்பவர்களுக்காகப் பாது
காப்புச் சட்டம் இல்லை. நாட்டுப் பாதுகாப்பு முக்கியமானது.
ஒருவர் தேர்தலில் ஜயிக்கலாம், அல்லது தோற்கலாம். தேசப்
பாதுகாப்பு முக்கியமானது. அரசாங்கத்தைப் பொறுத்த
வரையில், தேர்தலின்போது பாதுகாப்புச் சட்டத்தை தவறுதலாக
எதிர்க் கட்சியினர் மீது பிரயோகித்து வெற்றிபெற வேண்டும்
என்று நாங்கள் விரும்பவில்லை. இந்த காங்கிரஸ் கட்சிக்கும் சரி,
இந்த ஆட்சிக்கும் சரி, பரிபூர்ணமான நம்பிக்கை மக்களிடத்
திலும், தங்களிடத்திலும் இருக்கிறது. ஆகையால் ஒருக்காலும்
தேர்தலில் நிற்கிறவர்கள், காங்கிரசை எதிர்க்கிறவர்கள், கொஞ்சம்
கூட அச்சப்பட வேண்டியதில்லை. வரம்புக்குள்ளாக கட்டுப்பாட்
டோடு நடத்தலாம். பாதுகாப்புச் சட்டத்தைப் பிரயோகிப்
போம் என்று அஞ்ச வேண்டியதில்லை. அதற்காகப் பாதுகாப்புச்
சட்டத்தை எடுத்துவிடுங்கள் என்றால் அதை எடுக்கமுடியாது.
நாட்டுக்குப் பாதுகாப்புச் சட்டம் முக்கியமானது கனம்
உறுப்பினர் நடராஜன் அவர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்
பிட்டார்கள். பத்திரிகையில் பார்த்ததாகச் சொன்னார்கள்.
தாங்கள் மாநில முதலமைச்சர்கள் அரசாங்கக் காரியமாக அடுத்த
மாதம் 9, 10 தேதிகளில் டெல்லிக்குப் போவதாக இரண்டு
மாதங்களுக்கு முன்பே தெரிவிக்கப்பட்டது. ஏப்ரல் 9, 10 தேதி
களில் வரமுடியுமா என்று கேட்டார்கள். முடியும் என்றோம்.
விவசாயத்தைப் பற்றிப் பேசுவதற்கு என்று கூட்டம் கூட்டப்பட
டிருக்கிறது. முதலமைச்சர்கள், விவசாய அமைச்சர்கள்
எல்லோரும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயத்தில் இந்த
பசலியில் பருவ காலத்தில் எப்படியெல்லாம் அதிகமாக
உற்பத்தியைப் பெருக்குவதில் நாம் ஈடுபடவேண்டுமென்று
பேசுவதற்காக அந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. அந்தக்
கூடத்திற்கு முதலமைச்சர்கள் போவதால்; அதைப் பயன்
படுத்திக்கொண்டு காங்கிரஸ் தலைவர் அவர்களோடு பேசப்
போகிறார்கள். மாநிலக் காங்கிரஸ் தலைவர்கள் அழைக்கப்பட்டிருக்
கிறார்கள் என்று பத்திரிகையில் பார்த்திருக்கலாம். எப்படியோ,
தேர்தல் விஷயம்; அதுமட்டுமல்ல, தேர்தல் நிதி விஷம் என்று
உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அதற்கு என்ன செய்வது?
நாங்கள் போகிறோம். போனால் மத்திய அரசாங்கம் எதற்காக
கூட்டியதோ அதற்கு முழு நேரமும் இருப்போம். அங்கிருந்து
அது முடிந்ததும் ஒரு சினிமாவுக்குப் போகக்கூடாதா, நண்பர்கள்
கல்யாணத்திற்குப் போகக்கூடாதா? 'எப்படி அரசாங்கக்
காரியத்திற்கு வந்து கல்யாணத்திற்குப் போவது என்று
கேட்பதா? ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்றால் வெளியே
போகக்கூடாதா? 'அங்கே ஏன் போனீர்கள்' என்று கேட்பது?
அரசாங்கக் காரியமாகத்தான் நாங்கள் போகிறோம். பம்பாயில்
கூடப் போகிறோம், காங்கிரஸ் அலுவலாகப் போகிறோம், காங்கிரஸ்
தலைவர் அப்போது கூட்டமாட்டாரா? ஏப்ரல், மே மாதத்தில் 21
தேதியில் அங்கே வைத்திருக்கிறோம். நாங்கள் போனால் காங்கிரஸ்
தலைவரைப் பார்ப்போம். காங்கிரஸ் தலைவர் வீட்டுக்குப் போகக்
கூடாதா?

செலுத்துவது போல நினைத்து profession tax போன்ற வரிகள் கொடுக்க வேண்டும். ஒன்று அல்லது இரண்டு எக்கர் நிலம் உடையவர்கள், மற்றும் நிலமே இல்லாதவர்களின் வரிகளைப் புறக்கணிக்க முடியாது. சோஷலிசத்தை எதிர்க்க முற்படுபவர்கள் யாரும் இல்லை. வசதி உள்ளவர்களும், பத்து, இருபது எக்கர்களை வைத்துக்கொண்டு பயிர் செய்பவர்களும் சரி, எல்லோரும் ஒன்றுமே இல்லாதவர்கள் நலனுக்காக உதவ வேண்டியது அவர்களுடைய கடமையும் பொறுப்பும் ஆகும். அது இல்லை என்றால், சோஷலிசம் இல்லை. நம்மைவிட ஹீன ஸ்திதியில் உள்ளவர்களின் நிலையை உணர்ந்து, அவர்கள் நலனுக்காக நம்மாலான காணிக்கையைச் செலுத்துவது தான், சோஷலிசத்தின் அடிப்படை. மக்கள் வரி கொடுக்கிறார்கள். பருவ மழை தவறிவிட்டது. பயிர்கள் சரியாக விளையவில்லை. இதையெல்லாம் அரசாங்கம் கவனித்துவருகிறது. திட்டங்களை நிறைவேற்றுவதில், அரசாங்கத்திற்கும் ஆர்வம் இருந்தாலும். இதையெல்லாம் கவனித்து. உணவுப் பொருள்கள் உற்பத்தியைப் பெருக்கக்கூடிய விவசாயிகள், நிவாரணத்துக்கு உரியவர்கள் என்பதால். அவர்களுக்கு அரசாங்கம் வரி விஷயத்தில் தாராளமாக நிவாரணம் அளித்திருக்கிறது. நாங்கள் அவர்களுக்கு மேலும் நிவாரணம் அளிப்போம்.

அரிசி விலையைப் பொறுத்தவரையில், 'மார்ஜின்' இருக்கிறது என்று சொல்லப்பட்டது. 2½ ரூபாய், 3 ரூபாயாக மாற்றப்பட்டுள்ளது. ஒரு எக்கர் நிலம் உள்ளவர்களிடம் தானியம் வாங்குவதில்லை என்றாலும், அப்படிப்பட்டவர்கள் தானியம் கொடுத்தால், அவர்களுக்கு incentive bonus சேர்த்துக் கொடுப்போம். அவர்களாகக் கொடுக்கும் தானியத்திற்கு incentive bonus கொடுக்கிறோம். விலை உயர்வைப் பொறுத்த வரையில், retail விலை தான் உயர்த்தப்படுகிறது. அதனால் 'மார்ஜின்' அதிகமாக இல்லை என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள். ஆனால் மார்ஜினைக் குறைப்பது அரசாங்கத்தின் கவனத்தில் தொடர்ந்து இருந்துவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதுகாப்புச் சட்டத்தைப் பற்றிப் பேசப்பட்டது. அது நாடு சம்பந்தப்பட்ட பிரச்னை. நாட்டின் நலனுக்குப் பாதுகாப்புச் சட்டம் வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் இப்போது பிரச்னை. சில கனம் அங்கத்தினர்கள் கூறியது போல, இன்றுள்ள நிலைமை எப்படி இருக்கிறது என்பதை பத்திரிகைகளில் பார்க்கிறோம். தாஷ்கண்டில் பாகிஸ்தானுடன் ஒப்பந்தம் ஏற்பட்டது. சீனத் தொல்லைதான் இருக்கிறது என்று நினைத்தோம். இப்போது அது மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறும் நிலையில் இருக்கிறது. நமது பிரதம மந்திரி அமெரிக்க ஜனாதிபதியுடன் பேசுகிறார் என்றால், பாகிஸ்தானில் புதிய உறவும், டாங்கிகள் பொருட்காட்சியுமாக இருக்கின்றன. இவ்வாறு. பாகிஸ்தானின் நிலை இப்போது திருப்திகரமாக இல்லை. இதுபற்றி நமது பாதுகாப்பு மந்திரி பாராளுமன்றத்தில் பேசியுள்ளது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்கும். நாட்டைப் பாதுகாக்கத் தான் பாதுகாப்புச்



சட்டம் இருக்கிறது. தேர்தலில் நிற்பவர்களுக்காகப் பாது
காப்புச் சட்டம் இல்லை. நாட்டுப் பாதுகாப்பு முக்கியமானது.
ஒருவர் தேர்தலில் ஜயிக்கலாம், அல்லது தோற்கலாம். தேசப்
பாதுகாப்பு முக்கியமானது. அரசாங்கத்தைப் பொறுத்த
வரையில், தேர்தலின்போது பாதுகாப்புச் சட்டத்தை தவறுதலாக
எதிர்க் கட்சியினர் மீது பிரயோகித்து வெற்றிபெற வேண்டும்
என்று நாங்கள் விரும்பவில்லை. இந்த காங்கிரஸ் கட்சிக்கும் சரி,
இந்த ஆட்சிக்கும் சரி, பரிபூர்ணமான நம்பிக்கை மக்களிடத்
திலும், தங்களிடத்திலும் இருக்கிறது. ஆகையால் ஒருக்காலும்
தேர்தலில் நிற்கிறவர்கள், காங்கிரசை எதிர்க்கிறவர்கள், கொஞ்சம்
கூட அச்சப்படவேண்டியதில்லை. வரம்புக்குள்ளாக கட்டுப்பாட்
டோடு நடத்தலாம். பாதுகாப்புச் சட்டத்தைப் பிரயோகிப்
போம் என்று அஞ்ச வேண்டியதில்லை. அதற்காகப் பாதுகாப்புச்
சட்டத்தை எடுத்துவிடுங்கள் என்றால் அதை எடுக்கமுடியாது.
நாட்டுக்குப் பாதுகாப்புச் சட்டம் முக்கியமானது கனம்
உறுப்பினர் நடராஜன் அவர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்
பிட்டார்கள். பத்திரிகையில் பார்த்ததாகச் சொன்னார்கள்.
தாங்கள் மாநில முதலமைச்சர்கள் அரசாங்கக் காரியமாக அடுத்த
மாதம் 9, 10 தேதிகளில் டெல்லிக்குப் போவதாக இரண்டு
மாதங்களுக்கு முன்பே தெரிவிக்கப்பட்டது. ஏப்ரல் 9, 10 தேதி
களில் வரமுடியுமா என்று கேட்டார்கள். முடியும் என்றோம்.
விவசாயத்தைப் பற்றிப் பேசுவதற்கு என்று கூட்டம் கூட்டப்பட்
டிருக்கிறது. முதலமைச்சர்கள், விவசாய அமைச்சர்கள்
எல்லோரும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயத்தில் இந்த
பசலியில் பருவ காலத்தில் எப்படியெல்லாம் அதிகமாக
உற்பத்தியைப் பெருக்குவதில் நாம் ஈடுபடவேண்டுமென்று
பேசுவதற்காக அந்தக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. அந்தக்
கூடத்திற்கு முதலமைச்சர்கள் போவதால்; அதைப் பயன்
படுத்திக்கொண்டு காங்கிரஸ் தலைவர் அவர்களோடு பேசப்
போகிறார்கள். மாநிலக் காங்கிரஸ் தலைவர்கள் அழைக்கப்பட்டிருக்
கிறார்கள் என்று பத்திரிகையில் பார்த்திருக்கலாம். எப்படியோ,
தேர்தல் விஷயம்; அதுமட்டுமல்ல, தேர்தல் நிதி விஷயம் என்று
உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அதற்கு என்ன செய்வது?
நாங்கள் போகிறோம். போனால் மத்திய அரசாங்கம் எதற்காக
கூட்டியதோ அதற்கு முழு நேரமும் இருப்போம். அங்கிருந்து
அது முடிந்ததும் ஒரு சினிமாவுக்குப் போகக்கூடாதா, நண்பர்கள்
கல்யாணத்திற்குப் போகக்கூடாதா? 'எப்படி அரசாங்கக்
காரியத்திற்கு வந்து கல்யாணத்திற்குப் போவது என்று
கேட்பதா? ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்றால் வெளியே
போகக்கூடாதா? 'அங்கே என் போனீர்கள்' என்று கேட்பதா?
அரசாங்கக் காரியமாகத்தான் நாங்கள் போகிறோம். பம்பாயில்
கூடப் போகிறோம். காங்கிரஸ் அலுவலாகப் போகிறோம், காங்கிரஸ்
தலைவர் அப்போது கூட்டமாட்டாரா? ஏப்ரல், மே மாதத்தில் 21
தேதியில் அங்கே வைத்திருக்கிறோம். நாங்கள் போனால் காங்கிரஸ்
தலைவரைப் பார்ப்போம். காங்கிரஸ் தலைவர் வீட்டுக்குப் போகக்
கூடாதா?

[30th March 1966

**திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொல்கிற விளக்கம் நேரடியாக இல்லை என்று நினைக்கிறேன். முதலமைச்சர்கள் மூலமாக நிதி சேர்ப்பது என்ற கருத்து இருக்கிறது. முதலமைச்சர் என்ற முறையில் நிதி சேர்க்கும் காரியத்தில் ஈடுபடும் நிலைமை வந்தால் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் வேற்றுமை இல்லாத நிலைமை ஏற்படுகிறது. முதலமைச்சர் நிதி சேர்க்க ஈடுபடும் நிலைமை ஏற்பட்டால், உண்மையாகவே ஜனநாயகத்திற்குப் பொருந்தாததாக இருக்குமே. காங்கிரஸ் கட்சி செய்வதற்கும், முதலமைச்சர் காங்கிரஸ் கட்சிக்காக வேலை செய்வதற்கும், உள்ள வேறுபாட்டைப் பொறுத்து தான் கேட்கப்பட்டது. முதலமைச்சர் என்ற முறையில் இல்லாமல், பக்தவத்சலம் என்ற முறையில் செய்தால் அதை யாரும்
11-50 a.m. கேட்கமாட்டார்கள். ஆனால் நிலைமை அவ்வாறு இல்லாமல் வேறு விதமாக இருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உறுப்பினர் நடராஜன் அவர்கள் குற்றச் சாட்டுக்கு விடையளித்தேன். உறுப்பினர் அன்பழகன் குற்றச்சாட்டிற்கும் சமாதானம் சொல்கிறேன். அங்கே எப்படி காங்கிரஸ் தலைவர் கூட்டம் கூட்டலாம் என்று கேட்கிறார்கள்.

**திரு. என். வி. நடராஜன் :** தலைவர் அவர்களே, நான் சொல்லியதும் அதே கருத்துத்தான். தனிப்பட்ட முறையில் விருந்துக்கும், திருமண விழாக்களுக்கும் செல்வதை யாரும் கேட்கமுடியாது. முதலமைச்சர் என்றமுறையில் செல்லாமல் சொந்த ஹோதாவில் காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் செல்லுவதில் ஆட்சேபணையில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முதலமைச்சர் ஹோதாவில் போனாலும், பாதுகாப்புக் கைதி போல போலிசார் முதலமைச்சரைச் சூழ்ந்துகொண்டு போகவேண்டுமென்றும், முதலமைச்சர் வேலையைப் பார்க்க வேண்டுமென்றும் சொல்வதற்கில்லை. அப்படிப் போகவேண்டுமென்று உறுப்பினர்கள் எதிர்பார்க்கமாட்டார்கள். முதலமைச்சர் என்ற முறையில் தான் போகிறோம். வேலை முடிந்ததும் வேறு வேலை பார்த்தால் தப்பு என்று சொல்ல முடியாது. நிதி திரட்டுவது என்று சொன்னார்கள். இந்த ஜனநாயகத்தில் நடப்பது உலகத்தில் உள்ள ஜனநாயக நாடுகளில் நடப்பதுதான். இதைக் கண்டு நாம் யாரும் ஆத்திரப்படுவதற்கு அல்லது கவலைப்படுவதற்கு இடமில்லை. கவலைப்பட்டும் பயனில்லை. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் என்றால் அவர்களுக்கு சில வரம்புகள் இருக்கின்றன. அமைச்சர்களுக்கு அந்த வரம்பு இல்லை. அடியோடு வரம்பே இல்லை என்று சொல்லவில்லை. அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு இருப்பதைப்போன்ற வரம்புகள் இல்லை. முதலமைச்சர் அரசாங்க வேலை செய்கிறார். கட்சி ஹோதாவில் அவர்கள் காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தினராக இருக்கலாம். நிர்வாகக் கமிட்டியில் இருக்கலாம். ஆனால் கட்சியில் பதவி எதுவும் அதாவது காரியதரிசி போன்றவற்றை ஏற்றுக்கொள்ளமுடியாது.



30th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

நிர்வாகக் கமிட்டியில் இருக்கிறோம். கட்சி வேலையைக் கவனிக்கிறோம், இது உலகத்தில் எங்கும் நடப்பதுதான். ஒப்புக்கொள்ளப்பட்டது. பாரதநாட்டில் மட்டுமல்ல. ஆனால் கனம் எதிர்க்கட்சி உறுப்பினர்களுககு உரிமை உண்டு கேட்பதற்கு. கண்டிக்கவும் குற்றம் சாட்டவும் உரிமை உண்டு. பதவியைத் தவறாகப் பயன்படுத்தி, கட்சிக்கு பலம் சேர்ப்பதையோ நீதி திரட்டுவதையோ கேட்க உரிமை உண்டு. ஆனால் 'நிதி திரட்டுவதே தப்பு. அதைப்பற்றி காங்கிரஸ் தலைவர் பேசுவதே தப்பு' என்று பேசுவதற்கு இடம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

Private sector, Public sector பற்றி நடராஜன் அவர்கள் சொன்னார்கள். அதைத் தவிர்க்க முடியாது. எல்லாவற்றையும் Nationalise பண்ணுவதாகக் காங்கிரஸ் கமிட்டி சொல்லவில்லை. அனுபவ சாத்தியத்தை ஒட்டித்தான் அவர்கள் சொல்வார்கள். Nationalisation அதிகமாகச் செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். அதைச் செய்து வருகிறோம். எல்லாவற்றையும் Nationalise செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. அப்படி வந்தால் என்ன ஆகும்? கனம் உறுப்பினர்கள் இப்போது ஐந்து ஏக்கர் என்றெல்லாம் பேசுகிறார்கள். எல்லாவற்றையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டால், எல்லா நிலங்களையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். அதுதான் Nationalisation. Complete nationalisation என்றால் விவசாயத்தைத்தான் முக்கியமாக எடுக்கவேண்டும். இப்போது சிறு குடி, பெருங்குடி மக்கள், தனித்தனியாக விவசாயம் செய்கிறார்கள். இதையெல்லாவற்றையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றால், அவர்களைக் கூலியாட்களாக வைத்துத்தான் செய்ய வேண்டும். ஆகையால் Complete Public sector என்றால் நிலம் முக்கியமானது. Public sector, Private sector என்பதை ஒருக்காலும் தவிர்க்க முடியாது.

சேலம் உருக்காலையைப் பற்றிச் சொன்னார்கள். சேலம் உருக்காலை விஷயத்தில் அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. அங்குள்ள உருக்கு, நிலக்கரி இரண்டையும் இணைக்க வேண்டும். அதை எப்படிச் செய்வது என்பதற்காகத்தான் ஜப்பான் நிபுணர்களை விசாரித்தோம். இன்னும் அந்த ரிப்போர்ட் வரவில்லை. அந்த ரிப்போர்ட் வந்ததும், மத்திய சர்க்காருக்குப் போகும். மத்திய அரசாங்கத்தின் நிலையை நான் விளக்க விரும்புகிறேன். சேலத்தில் கேட்பது பெரிய ஆலை அல்ல, சிறிய ஆலைதான். அரை லட்சம் டன் capacity உள்ளதைத்தான் கேட்கிறோம். ஆனால் பெரிய உருக்காலைக்கு ஒரு திட்டம் இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அது இருக்கிறது. பெரிய ஆலை என்றால் அதை vizag ல் வைக்கலாமா, Hospet ல் வைக்கலாமா என்று இருக்கிறது. அவற்றோடு நாம் போட்டிக்கு வரவில்லை. அப்படி வந்தால் மற்றவர்கள் ஆத்திரப்படலாம். நாம் Hospit க்கும் வரவில்லை, vizag க்கும் வரவில்லை. 'அவர்களுக்கும் ஏற்படட்டும்; நமக்கும் ஏற்படட்டும்' என்றுதான் சொல்கிறோம். மத்திய அரசாங்கத்தின் நிலைமை அப்படித்தான் இருக்கும்.

[திரு. எம். பக்தவத்சலம்] [30th March 1966

மூன்றுக்கும் கொடுக்கலாம். அதற்கு நிதி அனுமதிக்கிறதா என்பது தான் மத்திய அரசாங்கத்தின் கவலை. சேலம் Steel இல்லை என்று மட்டும் சொல்லவில்லை. vizag இல்லாவிட்டாலும் சேலம் நிச்சயமாகக் கொடுப்பார்கள். Economic ஆகச் செய்யவேண்டுமென்றால், அதை விஸ்தரிக்கவேண்டும் என்று சில நிபுணர்கள் சொல்கிறார்கள். ஆகவேதான் 'உங்களுக்கு அந்த சங்கடம் இருந்தால் நாங்களே செய்கிறோம்' என்று சொல்கிறோம். அதைத்தான் தொழில் அமைச்சரும் தெரிவித்திருக்கிறார். ஆகையால் இதில் யாரும் கவலைப்படவேண்டாம். தொடர்ந்து அரசாங்கம் அதில் கவனம் செலுத்தி வருகிறது. செய்யவேண்டியதைச் செய்யத் தவறவில்லை. அந்த வகையில் பொறுமையுடன் இருக்கவேண்டும். 'என் நேற்று வரவில்லை, நாளைக்கு வருமா' என்றெல்லாம் கேட்பதில் பயனில்லை. தொடர்ந்து இதில் அரசாங்கம் கவனம் செலுத்தும் என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் தாமதம் பற்றிச் சொன்னார்கள். தாமதம் தவிர்க்கப்பட வேண்டியதுதான். சில இடங்களில் தாமதம் இருக்கிறது. சில இடங்களில் நாம் விசாரிக்கப் போனால், அது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. இப்போது கமிட்டி போட்டு இருக்கிறது. இது பற்றி மாநிலத் தலைமைக் காரியாலயங்களில் ஆராய்வதோடு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கமிட்டியிலிருந்து ஒருவர் போய் அங்கே காரியாலயங்கள் எப்படி இயங்குகின்றன என்று பார்த்து அதில் ஏதாவது திருத்தம் செய்ய வேண்டும் என்றால், அது எந்த முறையில் இருக்க வேண்டும் என்றெல்லாம் அரசாங்கம் கவனம் செலுத்த இருக்கிறது.

கனம் உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் திருவள்ளுவர் நாளைக் கொண்டாடும் வகையில் விடுமுறை கொடுத்தது பற்றி பாராட்டினார்கள். நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அவருக்கு வைகாசி மாதம் அனுஷ நட்சத்திரம் என்பது ஒரு அச்சத்தை ஏற்படுத்தி இருக்கிறது. ஒரு கலவரத்தைக் கூட ஏற்படுத்தி இருக்கிறது. ஏதாவது ஒரு நாளை வைத்துக் கொள்ளலாம் என்றால் அதில் அர்த்தம் இல்லை. அவர் முக்தி அடைந்த நாளை வைத்துக் கொள்ளலாம். நாம் கூட Death anniversary கொண்டாடுகிறோம். அந்த முறையில்தான் வைகாசி, அனுஷம் என்று நிர்மானித்தோம். இதை அந்த மன்றத்திலே கூட சொன்னேன். பிறகு எந்தப் படம் உண்மையான படம் என்பதில் சர்ச்சை வந்தது. இந்தச் சட்ட மன்றத்திலும் ஒரு திருவள்ளுவர் படத்தை வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அது கனம் உறுப்பினர்கள் கையிலே இருக்கிறது. அவர்கள் அதற்கு (subscribe) உதவி செய்ய வேண்டும். அது இந்த மன்ற உறுப்பினர்களின் நன்கொடையாக இருக்க வேண்டும். அது இருந்தால் மற்றவைகளுக்கு நான் ஏற்பாடு செய்கிறேன். அதே படமோ, அல்லது வேறு மாதிரி படமோ இருக்க வேண்டும் என்றாலும் சரி, இது நம் தபால் பில்லையிலும் வந்திருக்கிறது. அதை வரைந்து கொடுக்கக் கூடியவர் இருக்கிறார். அதற்கு வேண்டிய செலவை



30th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

இந்த மன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டால் இங்கேயும் அதை வைக்கலாம். இதை ஒரு பண்டிகை போல் என்றால், பொங்கல் பண்டிகை போல் கொண்டாட வேண்டும். அங்கே ஒருவர் கேட்டார் 'ஏன் ஏர் முனைத் திருவிழா என்று வைக்கிறீர்கள்; அதை ஏன் அறுவடைத் திருவிழா என்று வைக்கக் கூடாது' என்று. நல்ல வகையில் சொன்னால் கூட 'அப்படி ஏன்' 'இப்படி ஏன்' என்று கேட்கிறார்கள். பிறகு நான்தான் 'ஏர் இல்லாமல் அறுவடை ஏது' என்று கேட்டேன். இப்படிப்பட்ட முற்போக்குக் கருத்தை எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் கொண்டாட வேண்டும். திருவள்ளுவர் கூறிய கொள்கையைப் பின்பற்றக்கூடிய வகையில் திருவள்ளுவர் விழா கொண்டாடப்பட வேண்டும் என்பது என்னுடைய எண்ணம். இதற்கு மேல் உங்கள் நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. எனவே அங்கத்தினர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

கனம் தலைவர் அவர்களே, ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்ல மறந்துவிட்டேன் கனம் வகாப் அவர்கள் லாரிகள் ஆக்சிடெண்டைக் குறைப்பதற்காக இரவில் லாரிகள் போவதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறினார்கள். அதையெல்லாம் ஆராய்ந்து பார்த்தோம். இரவில் லாரிகள் போவதைத் தவிர்த்தால், இரவில் சில பண்டங்கள் பெங்களூரிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் வர வேண்டியது வர முடியாமற்போகும். இரவில் போகாமல் பகலில் போகச் சொன்னால், இன்னும் ஆக்சிடெண்ட் அதிகமாகப் போய் விடும். ஆகவே அதை மாற்றுவதற்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். 12-00 noon.

தங்கக் கட்டுப்பாடு பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசாரி அவர்கள் சொன்னார்கள். 'தங்கக் கட்டுப்பாடு விதிகளை எப்படி தளர்த்துவது; தொடர்ந்து அவர்களுக்கு எப்படி நிவாரணம் அளிப்பது' என்பது எல்லாம் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது என்று கூறி என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Madras Appropriation Bill, 1966 (L.A. Bill No. 5 of 1966), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2, the Schedule, Clause 1, the Long Title and the Enacting Formula, were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras Appropriation Bill, 1966 (L.A. Bill No. 5 of 1966), as passed by the Assembly, be passed.

MR. CHAIRMAN : The question is—

"That the Madras Appropriation Bill, 1966 (L.A. Bill No. 5 of 1966), as passed by the Assembly, be passed.

The motion was put and carried and the Bill was passed.

[30th March 1966

(2) THE MADRAS APPROPRIATION (NO. 2) BILL, 1966 (L.A. BILL NO. 7 OF 1966).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras Appropriation (No. 2) Bill, * 1966 (L.A. Bill No. 7 of 1966), as passed by the Assembly, be taken into consideration."

MR. CHAIRMAN : The question is—

"That the Madras Appropriation (No. 2) Bill, 1966 (L.A. Bill No. 7 of 1966), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2, the Schedule, Clause 1, the Long Title, and the Enacting Formula were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras Appropriation (No. 2) Bill, 1966 (L.A. Bill No. 7 of 1966), as passed by the Assembly, be passed."

MR. CHAIRMAN : The question is—

"That the Madras Appropriation (No. 2) Bill, 1966 (L.A. Bill No. 7 of 1966), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

IX.—NON-OFFICIAL BUSINESS.

(i) BILL.

*The Madras Panchayats (Amendment) Bill*, 1965 (*L.C. Bill No. 1 of 1965*).

MR. CHAIRMAN : The hon. Member, Sri S. K. Sambandhan, is not in his seat. Therefore, the Madras Panchayats (Amendment) Bill, 1965, is deemed withdrawn.

(ii) RESOLUTIONS.

(1) *Working of co-operative societies*—cont.

MR. CHAIRMAN : The hon. Member, Sri S. K. Sambandhan, is not in his seat. Therefore, the resolution standing in his name is deemed withdrawn.

(2) *Admission in schools and colleges*—cont.

MR. CHAIRMAN : The hon. Member, Sri K. Anbazhagan, will now speak.

திரு. க. அன்பழகன் : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த மன்றத்தில் கொண்[illegible] தீர்மான[illegible] தான் இது. ஓரளவுக்கு [illegible] கருத்து [illegible]

* Printed as Appendix III on pages 281-283.



30th March 1966] [திரு. க. அன்பழகன்]

முதலமைச்சர் அவர்கள் சில விளக்கங்கள் தந்ததோடு அன்றைய தினம் அந்த விவாதம் நிறுத்தப்பட்டது. அது இன்றையதினம் தொடருகிறது. 12-10 p.m.

இதனுடைய கருத்து தொடக்க நிலைப் பள்ளிகளிலிருந்து உயர்தர, கல்லூரி மட்டம் வரை, பல்வேறு கட்டங்களிலும் மாணவர்கள் அவரவர்கள் சேர வேண்டிய வகுப்புகளில் சேருவதற்கு விண்ணப்பிக்கிற காலத்தில், பலருக்கு இடம் கிடைக்காத நிலை ஏற்படுவதைத் தவிர்க்க தக்க வழிமுறையைக் காண்பதற்கு ஒரு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்பது தான். ஓரளவுக்கு இட நெருக்கடியைத் தளர்த்துவதற்காக, மாணவர்களுக்கு இடங்களை அதிகமாக்க வேண்டும் என்று கருத்து தோன்றுகிறது, என்ற முறையில் சென்ற தடவை முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். 'பல இடங்களில் நாங்கள் இடங்களை அதிகப்படுத்தி இருக்கிறோம்; கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் இவ்வளவு இடங்களை அதிகப் படுத்தி இருக்கிறோம், உயர் நிலைப் பள்ளிகளில் இவ்வளவு இடங்களை அதிகப்படுத்தி இருக்கிறோம், என்று புள்ளி விவரம் கொடுத்து, இவ்வாறு அதிகமாக ஆக்கி இருப்பதால் இட நெருக்கடி பெரும் அளவுக்கு தவிர்க்கப்பட்டது' என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

ஆனால் பொதுவாக மாணவர்கள், 2 திங்கள், 3 திங்கள் என்று இடர்பட்டு கடைசியாக ஒரு இடத்தில் சேருகிறார்கள். இட நெருக்கடி தவிர்க்கப்படுகிறது, மாணவர்களுக்கு எங்கும் இடம் கிடைக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னாலும், மாணவர்கள் கல்லூரியில் சேருவதற்கு இடம் பிடிப்பது என்பது ஒரு பெரிய அரசியல் தேர்தல் நடத்துவது போல் அந்த நேரத்தில் இருக்கிறது. இதில் இருக்கிற சிக்கல் எல்லாம் மாணவர்களுக்கு அடியோடு கல்லூரியில் இடம் இல்லாமல் போய்விட்டது என்று சொல்லுவதை விட ஏதேனும் ஒரு கல்லூரியில் சேர மாணவர்கள் படுகிற இடர்பாடுகள் அதிகம் என்பதாகும். அதற்குக் காரணம் ஒரு மாணவன் ஒரு இடத்தில் மட்டும் விண்ணப்பம் போட்டால் அந்தக் கல்லூரியில் இடம் கிடைக்கிறதோ இல்லையோ என்ற எண்ணத்தில் பல கல்லூரிக்கு விண்ணப்பம் போட நேரிடுகிறது. ஒரு கல்லூரிக்கு 5, 6, 7, 10 என்ற அளவுக்கு ஒவ்வொரு கல்லூரிக்கும் நுழைவு கட்டணம் செலுத்த நேரிடும். அப்படியெல்லாம் நுழைவு கட்டணம் செலுத்தி விண்ணப்பித்துக் கொண்ட பிறகு ஏறத்தாழ அவர்கள் ஒரு 4 கல்லூரிக்குப் போய்த் திரும்பி வந்து 5-வது கல்லூரியில் சேருகிற நிலை ஏற்படுகிறது. சென்னை நகரத்திலே இருக்கிற மாணவனுக்கு, சென்னையில் இடம் கிடைக்காத காரணத்தால் காஞ்சிபுரத்தில் போய்ச் சேருகிறான். காரைக்குடியில் இருக்கிற மாணவன் அங்கே இடம் கிடைக்காத காரணத்தால், அடுத்து இருக்கிற சிவகங்கையிலும், புதுக்கோட்டையிலும், சேருகிறான். இவைகளை நான் ஒரு குற்றமாகச் சொல்லாவிட்டாலும், இன்றைய சமுதாயத்தில் இவையனைத்தும் வீண் அலைச்சல், தொல்லை தருகின்றன. எனவே, இவற்றைப் பற்றி ஆராய்ந்தாக வேண்டும் என்று விரும்புகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [30th March 1966

பெரும்பாலும் மாணவர்கள் எந்த எந்த ஊரில் வாழ்கிறார்களோ அந்தந்த ஊரில் உள்ள கல்லூரிகளிலேயே இடம் கிடைப்பதற்கு முதல் வாய்ப்பு அளிக்கும் ஒரு நிலை இருக்க வேண்டும். இரண்டாவது, மாணவர்கள் பல கல்லூரிகளில் விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லாமல், ஒரு மாணவன் ஏதாவது ஒரு இடத்தில் விண்ணப்பம் கொடுத்துவிட்டால், அது எல்லா கல்லூரிக்கும் சேர்ந்த விண்ணப்பமாகக் கருதப்பட வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் இருப்பவன், கல்லூரியில் சேர விண்ணப்பிக்கிறபோது, இந்த, இந்த கல்லூரிக்கு என்று தனித்தனியாக விண்ணப்பிக்காமல், அதேபோல் திருச்சி மாவட்டத்தில் இருப்பவன் தனி விண்ணப்பம் போடாமல், அவைகள் எல்லாம் ஒரே இடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவைகளுக்கு எல்லாம், கல்லூரி முதல்வர்களால், பிரதிநிதிகளால், அல்லது அவர்களைக் கொண்ட குழுவால் அந்தந்த வட்டாரத்திலேயே இடம் கிடைக்கின்ற வகையில், அந்த மாணவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். அப்படி அளிக்கப்படுகின்ற நிலைமை இருக்குமானால் கல்லூரி மாணவர்கள் விடுதியிலே கூட கூட்டம் குறையும். காரணம் பெரும்பாலான மாணவர்கள் தங்கள் தங்கள் வீடுகளிலிருந்தே கல்லூரிக்குச் சென்று படித்து வரும் நிலை ஏற்படும். அது மட்டுமின்றி, கல்லூரியைச் சுற்றி 2, 3, 5 மைல் வரையில் இருக்கிற இடங்களிலிருந்தும் மாணவர்கள் தங்கள் வீட்டிலிருந்து அன்றாடம் கல்லூரிக்கு வந்து போகும் நிலை ஏற்படும். இன்று பல மாணவர்கள் தங்கள் சொந்த ஊரில் உள்ள கல்லூரிகளில் இடம் கிடைக்காததால் வெளியூர்களிலுள்ள கல்லூரிகளில் படிக்கிறார்கள்; அவர்கள் வெளியூர்களில் விடுதிகளில் தங்கியிருக்கிறார்கள்.

SRI M. A. MUTHIAH CHETTIAR: The pre-university students do not get admission in the same college.

திரு. க. அன்பழகன்: பல மாணவர்கள் புகுமுக வகுப்பில் படித்த கல்லூரியிலேயே பட்டப் படிப்புப் பெற முடியாததாலும் இந்தத் தொல்லை இருக்கிறது. இவர்கள் வேறு ஊரில் இருந்தால், பெற்றோர்களுடைய சுமை அதிகமாகிறது. இந்த நிலையில் நடுத்தர வகுப்பினருடைய பிள்ளைகளும், தாழ்ந்த நிலையிலுள்ளவர்களின் பிள்ளைகளும் கல்லூரிப் படிப்புப் பெறுவது எளிதாக இல்லை. எனவே விண்ணப்பங்கள் தனித் தனி இடங்களில் இல்லாமல் ஒரு இடத்தில் குவிக்கப்பட வேண்டும். அதாவது ஒரு இடத்தில் குழு அமைத்து அங்கே விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டு, அங்கே முடிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்து கல்லூரிக்குத் தொடர்பான இடத்தில், மாணவர்கள் குடியிருக்கும் இடங்களிலுள்ள கல்லூரிகளில் அவர்களுக்கு இடம் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இப்போதுள்ள முறையில், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று சிலரைப் பார்த்து வேண்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது. சில இடங்களில் அவர்கள் சிலருடன் உறவு கொண்டாட வேண்டியிருக்கிறது. பல்கலைக்கழக துணைவேந்தராக உள்ள கனம் எதிர்க்கட்சித் தலைவர் ஒன்று குறிப்பிட்டிருக்கிறார். கல்லூரியில் மாணவர்கள் சேர்ப்பதில் எத்தனையோ தவறான நடைமுறைகள்



30th March 1966] [திரு. க. அன்பழகன்]

தொடங்கியிருக்கின்றன என்றும் எத்தனையோ இடங்களில் பல தவறுகள் நடந்திருக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். புகுமுக வகுப்பு என்ற வகுப்பு இருப்பதால் இப்போது அதிகமான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே, இந்த புகுமுக வகுப்பைக் கொண்டுவந்த நிபுணர்கள் இந்தத் திட்டத்தால் பல நன்மைகள் இருப்பதால் இந்த திட்டம் இப்படியே இருக்க வேண்டும் என்று கருதியதை நான் அறிவேன். திட்டத்தைக் கொண்டுவந்தவர்களுக்கு அதிலுள்ள நன்மைகள் தெரியும். அவர்கள் இத்திட்டத்தைப் பாராட்டினாலும், 10-வது வகுப்பு பள்ளி இறுதி வகுப்பாக வந்த பிறகு, இந்தப் புகுமுக வகுப்பு, மாணவர்கள் மேல் வகுப்பிற்குச் செல்வதைத் தடுக்கக்கூடியதாக இருக்கிறது. நான் சொல்வது பிள்ளை இல்லாதவன் சொல்லும் கருத்து அல்ல. என் பிள்ளைகள் அந்த வகுப்பில் படித்து மேல் வகுப்பிற்குச் செல்லும் நிலையில் இருப்பதால் இவ்வாறு சொல்கிறேன். இது ஓராண்டுப் படிப்பாக இருப்பதால் ஒரு சிக்கல் இருக்கிறது. உயர்நிலைப் பள்ளியில் தமிழ் பயிற்சி மொழியாக இருக்கிறது. அந்த மொழியில் உயர்நிலைப் பள்ளியில் படித்தவர்கள் புகுமுக வகுப்பில் ஆங்கிலத்தின் மூலம் கல்வி பெற்று மேல் வகுப்பிற்குச் போக வேண்டியிருக்கிறது. புகுமுக வகுப்பு ஓராண்டுக் காலப் படிப்பாக இருக்கிறது. இந்த நிலையில் புகுமுக வகுப்பில் படிப்பவர்கள் மேல் வகுப்பிற்குப் போக 9 அல்லது 10 மாத காலத்தில் தங்களை முழுத் தேர்ச்சி உடையவர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அங்கே பயிற்சி மொழி ஆங்கிலமாக இருப்பதால் இது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. புகுமுக வகுப்பு என்று இல்லாவிட்டாலும், நாலையாவது இரண்டாண்டு காலப் படிப்பாக ஆக்கப்பட வேண்டும், அல்லது இரண்டாண்டுக்கான பாடத் திட்டத்தைக் கொண்ட இந்தப் படிப்பின் பாடத்திட்டம் ஓராண்டுக்குரிய பாடத் திட்டமாகக் குறைக்கப்பட வேண்டும். காரணம், இப்போது இதன் பாடத் திட்டம் அதிகமாக இருக்கிறது. ஓராண்டுப் பாடத் திட்டத்தை மாணவர்கள் படிக்க முடியும். இப்போதுள்ள அளவு பாடத் திட்டத்தை அவர்கள் படிக்க முடியவில்லை, காரணம் பத்து ஆண்டுகள் வரை அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி அவர்களுடைய தரத்தைப் போதிய அளவு உயர்த்தவில்லை. அது ஜனநாயகத்தின் ஒரு விளைவு. மேலும் தனியார் நடத்தும் பள்ளிகளில், மாணவர்களின் தரம் உயர்ந்ததாக இருந்தால் அது பாராட்டப்படவில்லை, அது கண்டிக்கப்படுகிறது. அரசாங்கப் பள்ளிகளிலும், மாநகராட்சிப் பள்ளிகளிலும் மாணவர்கள் தரம் குறைந்திருக்கிறது. அதற்கு ஆசிரியர்களைக் குறை கூறுவதற்கில்லை. பள்ளி இறுதி வகுப்பில் தேறும் மாணவர்களுக்கு தரம் போதிய அளவில் இல்லாததால் புகுமுக வகுப்புத் தேர்வில் 50, 60 சதவிகிதத்தினர் தேற முடிவதில்லை. புகுமுக வகுப்பு வந்தபோது, அதைக் கொண்டு வந்த நிபுணர்கள், அது கல்லூரிப் படிப்போடு ஒட்டியதல்ல என்றும், ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகு அது உயர்நிலைப் பள்ளியில் சேரும் என்றும் கூறினார்கள். அது அவ்வாறு உயர்நிலைப் பள்ளியில் சேரும் வாய்ப்பு இன்று இல்லை. அவ்வாறு செய்தால் அந்த வகுப்பு ஆசிரியர்களுக்கு கல்லூரியில் வேலை இருக்காது.

[30th March 1966

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவசியமான நிதி இல்லாத கல்லூரிகளில், புகுமுக வகுப்புக்கு அனுமதி தரப்படமாட்டாது.

**திரு. க. அன்பழகன்:** கனம் அமைச்சர் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நிதி இல்லாவிட்டால் புகுமுக வகுப்பு அனுமதிக்கப்பட மாட்டாது. புகுமுக வகுப்பிற்கு வந்த மாணவர்கள் கருத்துக்களை ஆங்கிலத்தில் தெரிந்துகொள்ள ஆறு மாத காலம் ஆகும். அந்தத் தகுதியைப் பெற்றவுடன் இரண்டு மாத காலத்தில் தேர்வு வருகிறது. 15, 15½ வயதில் எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்பில் இறுதித் தேர்விற்குச் சென்ற மாணவர்கள், இந்தக் குறுகிய காலத்தில் மறுபடியும் இந்த இறுதித் தேர்விற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அதற்கு அவர்கள் புதிய பாடங்களைப் படித்துத் தேர்ச்சி பெற வேண்டியிருக்கிறது. மற்றப் பல்கலைக் கழகங்களில் இந்த வகுப்பிற்கான பாடத்திட்டம் குறைவாக இருக்கிறது. அவ்வாறு இங்கேயும் பாடத்திட்டத்தைக் குறைக்க வேண்டும், அல்லது அந்தப் படிப்பில் ஆங்கிலம் பயிற்சி மொழியாக இல்லாமல் தமிழ் பயிற்சி மொழியாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

மேலும் இந்த நாட்டில் தொடக்கக் கல்வியிலிருந்து கல்லூரிக் கல்வி வரையில், கல்வி முறை நல்ல முறையில் இல்லை. பட்டப் படிப்பிற்கு முன்பு மாணவர்கள் 10 அல்லது 11 ஆண்டுகள் படிக்க வேண்டும் என்ற நிலை இருக்கிறதே தவிர, அந்தக் காலக்கட்டத்தில், எதெது பயிற்றுவிக்கப்பட வேண்டுமோ அதது அவ்வப்போது பயிற்றுவிக்கப்பட வாய்ப்பு இல்லை. ஆதாரக் கல்வியை நடத்த எந்தவிதமான ஆதாரமும் இப்போது இல்லை. ஆதாரக் கல்வியானது வேறு வகையில் தான் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதை திரு. ஜாகிர் ஹுசைன்கூட ஏற்றுக்கொண்டிருக்கிறார். இப்போது ஆதாரக் கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பது விரும்பத்தகாதது. தொழில் முறைகளைப் பயிலும் ஆர்வத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். ஐந்து முதல் 11 வயது வரையுள்ளவர்களுக்கான கல்வியில் அந்த வாய்ப்பு இல்லை. இந்த நாட்டுக் குழந்தைகள் வேலை செய்யக் கூச்சமோ வெட்கமோ படுபவர்கள் அல்லர். எனக்குத் தெரிந்த வரையில் பெரும்பான்மையான குழந்தைகளுக்கு வேலை செய்வதில் தான் அக்கறை இருக்கிறதே தவிர, படிப்பில் இல்லை. தொழிற் பயிற்சிப் பள்ளிகளின் குறை நீக்கப்பட வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்பு 11 முதல் 16 வயது வரை உள்ள மாணவர்களுக்கு தொழிலில் ஆர்வத்தையும் அக்கறையையும் உண்டாக்க 7-வது முதல் 10-ஆவது வகுப்பு வரையில் 'Manual Training' அல்லது 'Weaving Training' அல்லது உடற் பயிற்சியோடு கூடிய வேறு ஏதாவது தொழிற் பயிற்சி இருக்கும். அது தான் ஆதாரக் கல்வியோடு ஒட்டிய கல்வி முறை. அத்தகைய தொழிற் பயிற்சிக்கு ஆசிரியர் 'Part time Teachers' ஆக நியமிக்கப்பட்டிருப்பதால் அந்த ஆசிரியர்கள் இப்போது மனமுடைந்து போயிருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு வேலை பார்ப்பதற்கு சமுதாயத்தில் சந்தர்ப்பம் இல்லை. ஆதாரக் கல்வி அடிப்படையில் ஏதாவது செய்ய வேண்டுமென்றால் 11 வயது முதல் 16 வயதுக்குள்ள, அந்த



30th March 1966] [திரு. க. அன்பழகன்]

வகுப்பில் ஏதாவது ஒரு வகையில் தொழிற் கல்வி அளிக்கலாம். அதற்கு மேல் பயிற்சிக் காரணமாக ஆர்வம் காட்டுகிற மாணவர்கள், அதற்கு மேற்பட்ட வகுப்பிற்கு வரும்போது, 'Bifurcated Course' என்ற முறையில் எந்த உயர்நிலைப்பள்ளியாக இருந்தாலும் விஞ்ஞான கல்வி 'Physics, Chemistry' முதலியவற்றில் அதிக ஆற்றல் பெறும் வகையில், சரித்திரம், பூகோளம் போன்றவற்றில் கணக்கு மட்டுமல்லாமல் வேறு பல பாடங்கள் இருக்க இருக்க வேண்டும். ' 'Optional Mathematics' பல இடங்களில் முக்கிய பாடமாக கருதப்பட்டு வருகிறது. கணக்கு மட்டும் போதாது என்பது என்னுடைய கருத்து. கணக்கில் ஆர்வம் உள்ளவர்கள் நூற்றுக்கு 30 பேர் தேறக்கூடும். மற்றவர்களுக்கு தேவையில்லை. பெண்களுக்கு 'Fine arts' என்ற நுண் கலையில் அதிக தேர்ச்சி பெறும் வகையில் தொழிலில் பயிற்சி இருக்குமானால் நல்லது. தொழிற் கல்வியை உயர்நிலைப் பள்ளியிலேயே ஓரளவு பெறும் வகையில் 'Bifurcated course' பல வகையில் பிரிக்கப்பட்டால் மாணவர்கள் கல்லூரிக் கல்விக்கு மோதுவது குறையும். கல்லூரிப் படிப்பு படித்தபிறகு பல ஆண்டுகள் வேலைக்காகத் திண்டாடும் பரிதாபகரமான சூழ் நிலை நிச்சயமாகக் குறையும். 'Secretarial course' வகுப்பு இருக்கிறது ஏழாவது பத்தாவது வகுப்பிற்குள்ளாக, இரண்டாண்டு படிப்பு வைத்து, உடனடியாக கிளார்க் வேலைக்கு மனுப்போட்டால் வேலை ஏற்றுக்கொள்ளும் வகையில் பயிற்சி அளிக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் பத்தாவது—பத்தாவது என்றே சொல்கிறேன். பலருடைய எண்ணத்தில் அப்படி பத்தாவது என்றே நினைவு இருப்பதால் அப்படிச் சொல்கிறேன். கணக்குப்படி பார்த்தால் 11-வது என்று ஆகும். பள்ளி இறுதி வகுப்பு படித்து பிறகு, பி.யு.சி. படித்து அதன்பிறகு இன்சினியருக்கோ, டாக்டருக்கோ பி.ஏ. படிப்பிற்கோ போகிறார்கள். அப்படியிருப்பதற்கு மாறாக பி.யு.சி. படித்த பின்னரும், ஒரு ஆண்டு காலத்தில் 'Secretarial' course' ஆசிரியப் பயிற்சி அல்லது வேறு விதமான பயிற்சி என்று மாணவர்கள் வெவ்வேறு துறையில் போவதற்கு 12-20 p.m.
வகை செய்யவேண்டும். 100-க்கு 30 மாணவர்கள் உயர்நிலைப் படிப்பு தேறியவர்கள் கல்லூரிப்படிப்பு ஒன்றையே குறிக்கோளாகக்கொள்ளும் நிலைமை மாற்றப்பட்டு, வேறு தொழில் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் தொழிற் கல்லூரிகள் பல ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பாலி டெக்னிக் இருக்கிறது. இன்னும் அவை வளரவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. 'Industrial school' ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளின் எண்ணிக்கை போதாது என்பது என்னுடைய கருத்து. அவை அதிகமாகவேண்டும். மத்திய சர்க்காரின் தொடர்போடு **Industrial** தவிர மற்ற Technical பயிற்சி பெறும் மாணவர்களுக்கு தனியாக பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய பெயர் எனக்குத் தெரியவில்லை. Central Industrial School என்று நினைக்கிறேன்.

*திரு. எம். ஏ. முத்தையா செட்டியார்:* அது ஆங்கில Medium ஸ்கூல்தான். Technical ஸ்கூல் அல்ல.

[30th March 1966

**திரு. க. அன்பழகன்** : Technical சார்பில் பள்ளி தொடங்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். Industrial school ஆக அது இருக்க வேண்டும். மத்திய சர்க்கார் தொடர்பு கொண்டு தொடங்குவதற்கு எந்த விதமான நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை. கல்விக் கூடம் எதுவாக இருந்தாலும் அதற்கான கல்வி முறை அமைக்கும் தனி உரிமை உடைய அமைப்பு பல்கலைக் கழகம். அரசாங்கம் சில ஆலோசனைகளைச் சொல்லலாம். அதுவும் மாநில அரசாங்கம் தான் சொல்லவேண்டும். அப்படியில்லாமல் மத்திய அரசாங்கம் அதை எடுத்துக்கொண்டால் மாநில அரசாங்கத்தின் உரிமையில் அது தலையிடுவதாகும். மாநில அரசாங்கத்திற்குத்தான் அதற்கான உரிமை இருக்கவேண்டும். மத்திய அரசாங்கம் வேண்டுமானால் நிதி உதவி செய்யலாம். அவர்கள் உயர்நிலைப்பள்ளி இன்ன வகையாக தொடங்கவேண்டும் என்று தெரிவிப்பதும், அதன் மூலமாக ஒரு கல்வி முறையை உண்டாக்க விரும்புவதும் ஏற்றதல்ல. உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்த மாணவர்கள் பட்டப்படிப்புத்தான் படிப்பாக இருக்கிறது என்று எண்ணம் மாறும் வகையில் வேறு படிப்பிற்கான வழி செய்யவேண்டும். 'Secretarial course' மட்டுமல்ல, வணிகத்துறையில் பயிற்சி பெறுவது மட்டுமல்ல, பலதுறைகளில் ஏற்படுத்தலாம். Sanitary Inspectors' Course என்று இருக்கிறது. அதில் இருநூறுபேருக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அதை விரிவுபடுத்தலாம். ஓராண்டு இரண்டாண்டுக்குப் பிறகு வேலைக்குச் செல்லமுடியும் என்ற வகையில் தொழிற்கல்வி அமைய வேண்டும் என்று விரும்புகிறேன். நான் சொல்கிறேன் என்னும் போது இது நிபுணர்களின் கருத்து அல்ல என்பதையும் நிச்சயமாக அறிவீர்கள். நிபுணர்கள் கொண்ட குழு ஒன்று அமைத்து இன்றைக்கு எவ்வளவு மாணவர்கள் சேருகிறார்களோ அந்த மாணவர்கள் பல்வேறு துறையில் பயிற்சிபெற்று நாட்டுக்குப் பயனுள்ள வகையில் கல்வித்துறை சீர்திருத்தப்பட்டு இருக்கிறது என்றாலும் அது போதாது என்னும் நிலை ஏற்படும் என்பதால், அதற்கு ஏற்ப திட்டமிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாகச் சொன்னால் டாக்டருக்குப் படிக்கிறவர்கள் அந்தப் படிப்பை முடித்த பிறகு ஹெல்த் ஆபீசர் வேலை பார்ப்பதற்கு மறுபடியும் ஒரு ஆண்டு பயிற்சி பெறவேண்டியிருக்கிறது. ஹெல்த் ஆபீசர் வேலைக்கு டாக்டர் படிப்பிற்கான அத்தனையும் தேவையில்லை. டாக்டர் பெறுவதைவிட ஊதியம் அதிகமாக இல்லை. ஹெல்த் ஆபீசர் போன்ற சில துறைக்கு சில வகையான தனி படிப்புகள் இருக்கவேண்டும். Pharmacist என்ற தனி கோர்ஸில் மருந்து கலப்பதற்கும், தயாரிப்பதற்கும் தனிப் பாடம் இருக்கிறது. ஹெல்த் ஆபீசர் போன்ற சில துறைக்குத் தனியாக திட்டம் இருக்குமானால், டாக்டர் வேலைக்குப் படித்த பிறகு House Surgeon ஆக இருந்து ஒரு ஆண்டு பயிற்சிக்கும் போவதென்றால், அதனால் டாக்டர்களினால் ஏற்படும் பலன் நாட்டிற்குக் குறைகிறது. அதை மாற்றியமைக்கவேண்டும். இதனால் இட நெருக்கடி குறையும். கல்லூரியில் சேருவதற்கென்று வருகின்ற விண்ணப்பங்கள், கல்லூரியில் இருக்கின்ற இடத்தைப் போல நான்கு மடங்கு எண்ணிக்கையில் இருக்கின்றன. வழி முறைகள் பிரிக்கப்படாததால் அப்படி வருகிறது. அதனால்



30th March 1966] [திரு. க. அன்பழகன்]

இட நெருக்கடி தவிர்க்கப்படவேண்டுமென்று இந்தத் தீர்மானத்தின் மூலமாக வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இட நெருக்கடியைக் குறைக்க வேண்டுமென்ற கருத்து இருக்கிற அதே நேரத்தில், தனியார் நடத்துகிற பள்ளிகள், ஏற்கனவே எந்த அளவு தாராளமாக நம்மால் அனுமதிக்கப்பட்டு நடைபெறுகிறதோ, அதைத் திடீரென்று மாற்றக்கூடாது. தனியார் பள்ளி வேண்டுமென்று கூறுகிற கருத்துடையவன் அல்ல நான். அரசாங்கம் அவசியமாக ஏற்று நடத்தவேண்டியவற்றில் நிறைவேற்றவேண்டும். ஆனால் அரசாங்கம் தானாக செய்யமுடியாத போது, தனியாரிடம் உள்ள பள்ளிகளை கைக்கொள்ள வேண்டுமென்ற கருத்து ஏற்படுவது தவறு. முதலமைச்சர் அவர்கள் நான் சொல்கிற ஒரு நிகழ்ச்சியைக் கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன். 1948-க்கு முன்னர் தனியார் பள்ளிக்கு எண்டோமெண்ட் நிதி தேவையில்லை என்ற கருத்து அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 40, 50 ஆண்டுகளாக பல பள்ளிகள் நடைபெறுகின்றன. அவற்றில் தகராறுகள், புகார்கள் வந்தால் அவற்றை இலாகாவைச் சேர்ந்தவர்கள் விசாரித்து இருக்கிறார்கள். அண்மையில் தஞ்சை நகரத்திலுள்ள ஒரு பள்ளி நிர்வாகிகளுக்கு அரசாங்க சார்பில் அனுப்பப்பட்டிருக்கிற வற்புறுத்தல், வேண்டுகோள், கட்டாயப்படுத்தக்கூடியதாகப் போடப்பட்டு 37 ஆயிரம் ரூபாய் நிதி சேர்ந்திருக்கவேண்டுமென்றும், அதுவும் 1966-க்குள் நிதி சேர்த்து எண்டோமெண்ட் நிதியாகக் கட்டாவிட்டால் அரசாங்கம் அந்தப் பள்ளி நிர்வாகத்தை எடுத்துக்கொள்ள நேரிடும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. தஞ்சையில் கல்யாணசுந்தரம் உயர்நிலைப் பள்ளிக்கு அரசாங்க இலாகாவினரால் அப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பள்ளி நிர்வாகிகள் சிலர் அதுபற்றி தெரிவித்தார்கள். அந்தப் பள்ளி தொடங்கி 72 ஆண்டுகள் ஆகிறதாம். 1948 ஆம் ஆண்டுக்கு முன்பு ஏறக்குறைய 45 ஆண்டுகாலம் நடைபெற்று பல மாணவர்கள் அதன்மூலம் பயன்பெற்றிருக்கிறார்கள். அந்தப் பள்ளி 1948-க்குப் பின்னர் தொடங்கியதாக இருந்தால் 35 ஆயிரம் நிதி கொடுக்க வேண்டுமென்று கேட்கலாம். பள்ளி தொடங்கி இவ்வளவு ஆண்டு காலம் நடைபெற்றதற்குப் பிறகு இன்றைக்கு 35 ஆயிரம் நிதி கட்ட வேண்டுமென்று கேட்பதற்கு அரசாங்கத்திற்கு நியாயம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். நிதியிருந்தால் கொடுக்கக் கூடாது என்பதல்ல. அதற்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்க அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறதா? எழுபது ஆண்டு நடைபெற்ற பள்ளியில் நிதி கட்டாவிட்டால் அதை நடத்துவதற்கு அனுமதிக்க மறுப்போம் என்று சொல்ல அரசாங்கத்திற்கு எந்தச் சட்டம் இடம் தருகிறது? சட்டம் இடம் தராத நிலையில் ஒருவேளை ஆலோசனை சொல்வதாக இருந்தால்கூட 'பள்ளி நடத்த அனுமதிக்க மாட்டோம்' என்று சொல்ல முடியாது. நிர்வாகம் நடத்துகிறவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கோபமா? பொதுத் தொண்டாற்றி வரும் வகையில், பள்ளி நடத்துகிறவர்கள் எப்படி அதைத் தொடர்ந்து நடத்த முடியும்?

திடீர் என்று இந்த ஆண்டில் 'நிதி சேருங்கள்' என்றால் உடனே எப்படி நிதி சேர்க்க முடியும்? அந்தப் பள்ளிக்கூடத்தைப் பற்றிய

[திரு. க. அன்பழகன்] [30th March 1966

ஆடிட் ரிப்போர்ட்டிலோ அல்லது அந்தப் பள்ளிக்கூடத்தை இன்ஸ்பெக்ட் செய்தவர்கள், அந்தப் பள்ளிக்கூடத்தின் நிர்வாகத்தை ஆராய்ந்து பார்த்தவர்கள், ஏதேனும் குறை எழுதி வைத்திருக்கிறார்களா என்றால், இதுவரை எந்தக் குறையும் குற்றமும் எழுதப் படவில்லை. இதற்கு மாறாக யாராவது தூண்டி விட்டால் அதற்காக ஒரு தனிப்பட்டவர் பள்ளிக்கூடத்திற்கு உடனடியாக எச்சரிக்கை நோட்டீஸ் கொடுக்கிற அளவுக்கு அரசாங்க இலாகாக்கள், கல்வி இலாக்கா சம்பந்தப்பட்டவர்கள், நிதி இலாகாவைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்றால், ஏன் அந்த நிலை என்று முதலமைச்சர் அவர்கள் விசாரிக்க வேண்டும். 1948-ம் ஆண்டுக்கு முன்னால் நடைபெற்ற பள்ளிக்கூடங்கள் நிதி சேர்க்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் என்ற முறையில் உத்திரவிட்டிருக்கிறார்களா ? அப்படி 50, 100 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் பள்ளிக்கூடங்கள் நிதி சேர்க்க வேண்டும் என்றால், இந்தச் சூழ்நிலையில் இன்னும் அதிகமாக புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுவதற்கு உற்சாகம் ஏற்படுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதோடு இதன் காரணமாக ஏற்படக்கூடிய நெருக்கடி எவ்வளவு அதிகமாக இருக்கும் என்பதையும் உணர வேண்டும். இதன் காரணமாக ஒரு வேளை அந்தப் பள்ளிக்கூடமோ அல்லது வேறு பள்ளிக்கூடங்களோ நிறுத்தப்பட்டால், அந்த நிலைமை காரணமாக எவ்வளவு மாணவர்கள் இடர்ப்பாடுகளுக்கு உள்ளாக நேரிடும் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். எனவே இவைகளையெல்லாம் அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்த்து அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் இப்படிப்பட்ட புது உத்தரவுகள் மூலமாக சிக்கல்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த உத்தரவையும் அமைச்சர் அவர்களிடம் தருகிறேன். இப்போது இல்லாவிட்டாலும் பின்னாலாவது பதில் சொல்லுவார் என்று இதைக் கொடுக்கிறேன். சட்டப்படி இல்லாத காரியங்களில் கல்வி இலாக்கா இந்த அளவுக்கு உத்திரவுகள் போடுவது எந்தவகையில் நியாயம் என்று நான் அறிய விரும்புகிறேன். கல்வி இலாக்கா அதிகாரிகளை நெருங்கிக் கேட்டதில் அவர்களே சொல்லியிருக்கிறார்கள் ' உங்களைப் பொறுத்த வரையில் வற்புறுத்த எந்த நியாயமுமில்லை, வேண்டுமானால் வேண்டுகோள் விடலாம் ' என்று. இதையெல்லாம் எண்ணிப் பார்த்து தனியார் பள்ளிக்கூடங்கள் எந்த வகையிலும் மூட நேரிடாத வகையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றும் ஒன்று, பிள்ளைகள் இவ்வளவு பேருக்கு ஒரு வகுப்பில் இடம் தருவது என்று இருக்கிறது. 35 பேர் அளவுக்கு இருக்கலாம். அதிகமாக 40, 45, 55 வரை அனுமதிக்கலாம் என்ற முறையை வைத்துக் கொண்டு, 50 பிள்ளைகளுக்கு மேல் ஒரு வகுப்பில் இருந்தால், அந்தப் பள்ளிக்கூடத்தைச் சார்ந்தவர்கள், அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக் கொண்டால், அதை இரண்டு வகுப்புகளாக ஆக்கலாம் என்ற உத்திரவு இருக்கிறது. ஆனால் 58, 59 பிள்ளைகள் இருக்கிற பள்ளிகளில் 2 வகுப்புகளாக நடத்தவா வேண்டும் என்று கேட்டால், அதிகாரிகள் அதற்கு அனுமதிப்



30th March 1966] [திரு. க. அன்பழகன்]

பதில்லை. விதிமுறையைச் சரியாகக் கையாளுவதில்லை, ஆனால் 52 பேர் இருக்கிற இடத்தில் அதை 2 வகுப்புகளாக அனுமதிக்கிறார்கள். 58 பேர் உள்ள வகுப்பைக் கொண்ட பள்ளித் தலைமையாசிரியர் 2 வகுப்பாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டால் ' இடம் இல்லை ' என்று சொல்லி அனுமதி மறுக்கப்படுகிறது. இதை மாற்றுவதற்கு உண்மையாகவே முறை வகுக்கப் பட்டிருந்தாலும், சரியாக அது நிர்வகிக்கப்படுவதில்லை. ஒருவருக்கு ஒரு விதம், இன்னொருவருக்கு இன்னொரு விதம் என்ற முறை இருக்கக் கூடாது. அடுத்த ஆண்டு இவ்வளவு பிள்ளைகள் சேருவார்கள் என்று இருந்தால், முன்கூட்டியே அதை அனுமதித்து இடத்தை விரிவு படுத்த வேண்டும்.

தற்போது ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களை அரசாங்கம் நிர்வகித்து வருகிறது. அப்படி நிர்வகிக்கிற காரணத்தால் ஏற்பட்டிருக்கிற நிலைமை என்னவென்றால் ஒரு 50 ரூபாய் செலவில் ஒரு கொட்டகைக்கு கீத்து மாற்ற வேண்டும் என்றால் அரசாங்க இலாக்காவுக்கு எழுதி அனுமதி பெற வேண்டும் என்பதால் காரியம் செய்ய முடியவில்லை. ஜில்லா தலைநகர்களில் அந்த அதிகாரங்கள் இருந்தபோது எவ்வளவு வேகமாக இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தார்களோ அந்த அளவுக்கு இப்போது செய்ய முடியவில்லை. காரணம், அப்படிச் செய்ய முடியாத அளவுக்கு ' Red tapism ' நீளம் மிக அதிகமாக வளர்ந்துவிட்டு இருக்கிறது. எங்கேயோ பதில் கேட்டு வாங்க வேண்டி இருப்பதால், உடனடியாக காரியங்கள் செய்ய முடியவில்லை. இப்போது மார்ச்சு 1966. 1966 ஜூன் மாதத்திற்குள் கல்வி அமைச்சர் அவர்கள் எவ்வளவு பள்ளிகளில் இடங்களை அதிகப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு இப்போதே உத்திரவிட வேண்டும். அதற்கு எவ்வளவு தொகை செலவாகுமோ அதையும் ஒதுக்கி கொட்டகை போட்டோ, வகுப்பறைகள் ஏற்படுத்தியோ நெருக்கடியைத் தீர்க்க வேண்டும். ஆகவே கல்வித் துறையைக் கண்காணித்து, அதில் ஏற்படுத்த வேண்டிய சீரமைப்புகளைக் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்ல ஒரு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இவ்விஷயத்தைப் பற்றி மீண்டும் ஒரு முறை சந்தர்ப்பம் கிடைத்தால் மற்ற கருத்துக்களைத் தெரிவிப்பேன் என்று கூறி, என் உரையை முன்மொழிந்து முடித்துக் கொள்கிறேன். 12-30 p.m.

SRI M. A. MUTHIAH CHETTIAR : Mr. Chairman, Sir, I rise to formally second the Resolution moved by the hon. Member Sri Anbazhagan. When I take this opportunity to speak, it is technically necessary that I should second the Resolution.

I am glad that the hon. Member Sri Anbazhagan has spoken with a lot of personal knowledge of the educational system and in a very moderate way also. I am sure, most of the suggestions made by him will be considered by the Government. I know most of them are already engaging the attention of the Government. I wish only to mention that before we proceed on the question of the Government being urged to find out ways and means of avoiding the over-crowding of students or applicants in the colleges,

[Sri M. A. Muthiah Chettiar] [30th March 1966

we should first of all congratulate the Hon. Minister in charge of Education who is also happily our Chief Minister on having managed to open many new colleges in the last few years and particularly women's colleges. But for the fact that several new colleges have been opened during the recent years, the rush would have been still greater, and the difficulties faced by the students would have been still greater. We must also congratulate the Government on the performance they have shown in having opened many polytechnics and technical institutions, engineering colleges and medical colleges.

Sir, having said that by way of congratulating the Government on their past efforts in this direction, I shoud like to offer a few brief remarks on the subject. The Government should continue their efforts to open more and more medical colleges, more and more polytechnics, and more and more engineering colleges. I have been saying that there should be a medical college in each district. The former Medical Schools could have been continued if the standard of education up to the matriculation class had been maintained. As the quality of the students coming out of the High Schools was poor, we had to raise the minimum qualification required for admission to the M.B.B.S. course. Even then, the present day M.B.B.S. are only equal to the L.M.Ps. of the olden days. The Hon. the Minister for Health will agree with me when I say this. The knowledge of English of the present day M.B.B.S. doctors is no better and, therefore, they cannot read the medical books and journals and improve their knowledge. Therefore, I recommend to the Government that more medical colleges should be opened in district headquarters. Now the district headquarters hospitals are much better than they were in the olden days. They are better equipped. If you compare the General Hospital of forty or fifty years ago with the present day district headquarters hospitals, I should say, the district headquarters hospitals are much better equipped than the General Hospital of those days. So you can have a medical college in every district headquarters. You can have a medical college at Coimbatore where you have a first class district headquarters hospital. I am glad there is a medical college at Chingleput. There is a medical college at Vellore. Like that every other district must have a medical college as early as possible.

Another point which was made by the hon. Member Sri Anbazhagan is that the parents were put to heavy expenditure on the education of their boys, because they were posted to distant colleges. The students have to stay necessarily in hostels and the hostel charges are heavy especially now. If there was to be a medical college in each district, the parents would not be put to unnecessary financial strain. Another point which I would like to refer to in this connection is this. Why is it that the medical students, the present day doctors do not want to go to the villages? But they don't go and they won't go. Why? These people have spent more than six or seven years of their student



30th March 1966] [Sri M. A. Muthiah Chettiar]

life in cities and they are continuing to live there with their wives and children enjoying all the conveniences of the city life. Therefore, they won't agree to have a change and go to the villages. That is the position of the doctors now. If the colleges had been started at the district headquarters, students from the same district, say, from Trichi or Madurai, would have joined that college and would be coming even from their villages and thus keeping constant touch with the villages. After the completion of the course, they would be willing to continue to live in the villages and practise in the villages. But now the doctors having lived for many years in cities and enjoyed all the conveniences of city life do not want to go to the villages; they do not want to go to Tiruchi, Musiri or Perambalur even. That is another reason why I would commend to the Hon. the Chief Minister to open more and more medical colleges in the districts and try to produce qualified doctors who would be willing to serve in the villages. They have four or five medical colleges now. Earlier, on another occasion I had mentioned about Chidambaram. When I ask for a medical college for Chidambaram, I should not be considered to be talking on parochial grounds. Sri Kamaraj, when he was the Chief Minister, started the idea of having a hundred bedded hospital at Chidambaram, near the Town Club and close to the Railway station. I hope that the hospital will come up soon and, after this hospital comes up a medical college also can be started, as we would be having a fine hospital as an adjunct to the college. Without the hospital, it is not possible to start a medical college. Soon after the hospital comes, the college can also be opened. Like that every district must have a medical college, Tirunelveli has one now. We must congratulate the Government on their performance in this direction.

Sir, with regard to engineering colleges, the Government are doing their best. I commend to the Government the opening of more engineering colleges in the districts, and students near about the colleges alone should be admitted to those colleges. The Government's endeavour is to open a polytechnic in every taluk but they have not achieved their objective. I do hope they will achieve it.

Now, Sir, the J.T.I. and the Industrial schools are not popular. Students who have passed only the III Form are admitted to these schools. Now I am arguing in favour of the point made by the hon. Member Sri Anbazhagan that we must divert the students elsewhere to stop overcrowding of applicants to the Pre-University Course. I think that is the main object of the Resolution moved by the hon. Member, though he had made many other useful suggestions in the course of his speech. As I said, the Junior Technical Schools are very unpopular. They pay a stipend of Rs. 20 to each student and that too only to half the number of students. This stipend is not enough. They must give full stipend and to all the students. Then they may be

[Sri M. A. Muthiah Chettiar] [30th March 1966

popular. The boy is given a three years' training, and, after completion of the training, he may be considered to be equal to a Matriculate and allowed to go to polytechnics also.

Now, Sir, there is a very great difficulty in these students being apprenticed in industrial establishments while doing their studies. This is very necessary. But the industries are not taking them. The Government are issuing licences for these industries. It is not stipulated as a condition of the grant of the licence that the industries should take in apprentices, unpaid apprentices. Now they refuse to take them on the ground that they will spoil their machines, or there will be unnecessary overcrowding resulting in loss of production. If this is put in as a condition for the grant of the licence, they are bound to take them. The Government can fix the number of apprentices that each industry or factory should take.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, even as it is, there is an obligation on the part of the industries to take in trainees. There is already a provision that they should accommodate a certain number of apprentices.

SRI M. A. MUTHIAH CHETTIAR: I am glad the Hon. the Chief Minister has said that there is provision. But I know there are a number of industrial units where there are no apprentices at all. I would, therefore, request the Government to insist on the industrialists taking a specified number of trainees.

Now, Sir, the Government are establishing very good industrial estates in many places. At every one of these industrial estates, there should be a polytechnic or an industrial school, quite apart from the schools they might start at taluk headquarters. Then it would be easy for these students to get apprenticed at the various industries in the Industrial Estate.

The Government should also start part-time courses at a number of places. As was pointed out by the hon. Member Sri Anbazhagan the courses might extend to even five years. If we have these part-time courses, those working in the Estate, can qualify themselves. Those already qualified and working in the Estates could be taken as part-time teachers in the polytechnics to be opened in these Industrial Estates. Many B.Es. who are employed as mechanical, electrical and civil engineers on the Estates can work as part-time lecturers in these polytechnics.

12-40 p.m. They can do teaching also part-time. It is possible to employ them. It is possible to give training to students undergoing the course in the evenings. That is one way of relieving the pressure on the colleges. Though a number of colleges have been opened, to relieve the strain upon the colleges, diploma courses should be started to take in students in the evenings.

There is one other matter to which I would like to refer. We do not have many agricultural colleges in our State. We have one in the Annamalai University and another at Coimbatore.



30th March 1966] [Sri M. A. Muthiah Chettiar]

(Sri K. Rajaram: There is one at Madurai). Yes, there is one at Madurai. I would recommend that we open agricultural diploma courses also like the other courses in ploytechnics. The agriculture graduate [B.Sc. (Agri.)] thinks that he is a very big man in the field of agriculture. Therefore, if we want to have field workers, let us have a diploma course in agriculture. The course may be for three years. After passing the S.S.L.C. the students may take to this course. Probably they have to appoint a committee of teachers engaged in agricultural education to start one or two diploma courses in agriculture. We can have agricultural diploma courses.

I do not know whether there is any veterinary college anywhere except Madras. I would plead for the institution of a veterinary diploma course. The veterinary graduate would not visit the villages or the village centres.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: We have the stockmen's course in the veterinary college.

SRI M. A. MUTHIAH CHETTIAR: I am sorry. I did not know this. I would plead with the Chief Minister to start this course in more places than in Madras alone. I do not know, besides Madras whether there is any other place where veterinary training is given.

Sir, the Sanitary Inspectors' course and the Pharmacy course must also be started. In every place there is a medical college, there should be the Pharmacy course centre. The Sanitary Inspectors' course is very useful. We have a number of panchayat unions and municipalities. We do want qualified men. Many of the boys after passing the S.S.L.C. will take up this Sanitary Inspectors' Course.

My friend explained very fully the Pre-University course. I can say just for the information of the House the violent fight that I put up against the institution of the Pre-University course. In spite of our regard for the distinguished Vice-Chancellor, Dr. A. Lakshmanaswami Mudaliar, we said that the Pre-University course would be a failure. We said that it would be a failure. It proved to be a failure. Kerala has gone back on it. Bombay and U.P. have not yet gone back. It must be a two-year course, if we want to divert the students to technical courses or honours courses. Probably later on the Pre-Professional course may be given up, if found necessary. But I am not an expert in agricultural engineering, and medical education. The time has come when the Government must take a decision. With all due respect to the Vice-Chancellor, I am sure he will not object. He has seen that the Pre-University course is overburdened. The students are not able to manage with one year's Pre-University course. It should be spread over two years. It is not possible for the student to catch up with one year's course. After passing the S.S.L.C examination, one year's Pre-University course is not enough for

[Sri M. A. Muthiah Chettiar] [30th March 1966]

the student. The population is growing and the schools also are growing in number. There is always the shortage of teachers. There is always the shortage of school buildings. These shortages will be there. It is not possible to improve the standard of education in the schools. At the same time we want more schools. we cannot ask the Government to provide schools *ad nauseam* and also plead for the quality of education. We have got to reconcile ourselves. We have to face this question of shortage of schools and teachers. The only way to solve the problem is to have more number of years in the Pre-University stage. After two years in the Pre-University stage, the students may go to B.Sc. and other courses. I shall not repeat all that Sri Anbazhagan said about Secretarial Courses and about persons who cannot take to Science course. Now it is all the more necessary to give facilities for science degree courses. We have received an aid of 300 millions for our country, thanks to our Prime Minister's visit to the United States of America. I am sure a lot of encouragement will be shown to scientific education and post-graduate scientific education. I must congratulate the Government on the starting of a post-graduate centre of medicine somewhere on the road to Mahabalipuram. It is a very good institution. Scientific education will be greatly helped by the offer of Amercian aid. We do not know whether there will be very good students in the colleges. Some of them or at least a percentage of them will be given very good training in this centre. For this purpose, the American aid will be helpful.

I would like to mention about the medium of instruction. I would plead for the English medium of instruction. I am not pleading for the English medium in S.S.L.C or in the Pre-University. But there is the necessity for the use of the English medium in the higher classes. I shall not go in detail into the question of the English medium. The Government may have 101 media of education. But English must be taught well. The country has progressed by English education. It has adopted the English methods of democratic institutions. We have adopted the English methods of administration in every branch. In every branch of knowledge, we have progressed because of the English medium. I have no doubt that we have progressed because of the English institutions. It is only the English speaking parts of the world that have come to the help of the world. They are going to help every State. When we are abusing America, they help us. If we stop abusing them, they will help us much more. (Sri K. Rajaram : Nobody abuses). No, no. We have not been abusing them in the past few weeks. I shall not take up the time of the House by quoting all the instances in which we abused them. I have a fairly good memory. If we have stopped abusing them it is good.

It is better that the Hon. the Chief Minister received the American fertilisers personally. A photograph of this is published in the papers. It is being sent to America and other places. To-day the news and the photograph will be published in the



30th March 1966] [Sri M. A. Muthiah Chettiar]

American papers. It is good propaganda. The people there will think that the Chief Minister of Madras State himself is receiving the fertilisers. It is a very good idea. If the Director of Agriculture receives the fertilisers, it will have no effect. But the Chief Minister himself getting the fertilisers has very good effect. The Americans will say that the Chief Munister has appreciated the American help. After all we should express our thanks in a physical manner and not by words. The supply of fertiliser and the photograph of the Chief Minister taking it, I am sure, will be published in the American papers. The report has already gone. Therefore, while I commend all this, I would only like to say one other matter.

My hon. Friend mentioned about the special schools—the English medium schools. There are thirty schools intended more for the Defence Units and the All-India Service. There is one at Avadi and another at I.I.T. The one at I.I.T. is started, but I do not know about Avadi.

There is one other matter about grants to schools. Mr. Anbazhagan referred to the endowment of Rs. 35,000 or Rs. 70,000. I do not object to the rule relating to endowment of Rs. 35,000.

One other matter I would like to bring to the notice of the Chief Minister. He is not likely to have known this. At Madurai, the Madurai mills are running a school for the children of the workers. It is a fine school. The results are ninety per cent. It is very near to the mills. It is next to the railway gate. It is a beautiful building with three storeys. It has been started by the mill owner. The Government of Madras have refused to give a grant of even one rupee. They are prepared to pay the salaries of the teachers of new schools to be started to-morrow or schools to be started after a few years. The Government of India are prepared to give grants on condition that it is an English medium school straightway. We are prepared to do it there. But the children of the workers cannot take to English medium. I am fighting for English medium. At the same time I cannot fight for English medium in this particular school. Therefore, I would like the Hon. the Chief Minister to consider the question of admitting that school for grant and not make that school go into the Government of India scheme of having English medium. It will not be useful to the children of the workers. It will be useful to the upper middle classes of Madurai. That is not the purpose of the school.

Sir, finally I would like to say that the resolution wants a committee to be set up. I am no believer in committees. Though I seconded the resolution, I did so because the rules required that non-official resolutions shall be seconded. This has just provided me an opportunity also to speak. Now the point is that committees will not solve anything. We have expressed our views. Let us assume that the hon. Member Mr. Anbazhagan and I are members of the committee to-day. Let this committee be dissolved at 1 o'clock. We have expressed our views. Let the Chief Minister give his reply. Let him do something. He

[Sri M. A. Muthiah Chettiar] [30th March 1966

is already doing something. He is a practical person. He has taken a bold stand on the steps that he should take to improve the quality of education. He supports English medium. He supports Tamil medium wherever it is necessary absolutely. That is exactly the view he should take. He does not have a partisan attitude. We wish him all luck in the work that he does. Let us take him as the head of the experts. Let him have the experts and do something. Let him carry on with his work. Let us not bother him with committees. Let it not bring out a report after one year. Let him have time to do something and tell us what he is doing.

Sir, with these words, I would commend the suggestions made to the Hon. the Chief Minister's attention.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவர் அவர்களே, இப்போது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும், மாணவர்கள் சேருவதில் உள்ள நெருக்கடியை எல்லோரும் பார்த்திருக்கிறோம். அட்மிஷன் காலங்களில் மிகவும் மோசமான ஒரு நிலை உருவாகின்றது. சிலர் சில இடங்களில் போய் Recommendation செய்து சீட் வாங்குகிற நிலைமை இருக்கிறது. போதுமான சீட்டுகள் ஆங்காங்கே இல்லாததால் தான் இந்த நெருக்கடி அதிகமாக இருக்கிறது என்பது நன்கு அறிந்த உண்மையாகும். இந்தக் கருத்தை அரசாங்கத்தின் சார்பில் ஏற்றுக்கொள்வதாக இல்லை. மாணவர்கள் ஒரே சமயத்தில் 8, 10 இடங்களுக்கு அப்ளிகேஷன் கொடுப்பதால் தான் நெருக்கடி அதிகமாகத் தெரிகிறது. அப்படி இல்லாமல் ஒரே ஒரு இடத்திற்கு மட்டும் அப்ளிகேஷன் கொடுத்தால் இவ்வளவு நெருக்கடி இருக்காது என்று அரசாங்கத் தரப்பில் பதில் சொல்லப்படுகிறது. அதை ஆராய வேண்டியது அவசியம். ஆராய்ந்து இதில் எது உண்மை என்று கண்டுபிடிக்க வேண்டும்.

சில காலேஜ்களில் புகுமுக வகுப்புக்கு இவ்வளவு மார்க் வாங்கினால்தான் அட்மிஷன் என்று நிர்ணயித்துவிடுகிறார்கள். எனக்குத் தெரிந்த ஒரு காலேஜில் 450 மார்க்குகள் வாங்குகிறவர்களுக்குத்தான் அட்மிஷன். அதற்குக் குறைவாக மார்க்கு வாங்குகிறவர்களுக்கு புகுமுக வகுப்பில் அட்மிஷன் கிடையாது என்று கூறிவிடுகிறார்கள். இந்த நிலையில் ஒவ்வொரு காலேஜும் இவ்வளவு மார்க்கு வாங்கினால் தான் அட்மிஷன் என்று நிர்ணயித்துவிட்டால், குறைந்தபட்ச மார்க்கு வாங்கும் மாணவர்கள் எங்கேதான் போய் படிப்பது? என்னுடைய நண்பர் ஒருவர் ஹாஸ்யமாக என்னிடம் சொல்லுவார், 'நானும் நீயும் ஒரு காலேஜ் துவக்குவோம். அதில் 250 மார்க்குக்கு மேலே வாங்கிய மாணவர்களுக்கு இடம் இல்லை. 250-க்கு குறைவாக வாங்கிய மாணவர்களுக்கு மட்டும்தான் இடம்' என்று போடுவோம் என்பார்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதோடு மட்டுமல்லாமல் புதிதாக எந்த மாணவர்களையும் சேர்ப்பதில்லை என்று போட்டு எல்லா வருஷத்திற்கும் அந்த மாணவர்களையே வைத்துக் கொள்ளலாமே.



30th March 1966]

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** ஹாஸ்யமாக என்னுடைய நண்பர் அதைச் சொல்லுவார். அது இப்போது நினைவுக்கு வந்ததால் சொன்னேன். அந்த அளவுக்கு நெருக்கம் அதிகமாக இருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு நம் மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்கள் நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லும் போது சொன்னார்கள். 'உபாத்தியாயர்கள் அனுமதிக்கப்படும் ஸ்கூல்களில் donation இவ்வளவு என்று வாங்குவதாக அரசாங்கத்திற்கு ரிப்போர்ட்டு வந்திருக்கிறது' என்று. Donation கொடுத்துத்தான் சேர வேண்டும் என்றால் அதற்குப் பெயர் donation என்று சொல்லுவது என்று சிந்திக்க வேண்டும். அளவுக்கு மீறிய நெருக்கம் இருப்பதால் தான் இந்த நிலைமை ஏற்படுகிறது. நீண்ட நேரம் பேச நேரம் இல்லாததால் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.

ஒரே மாணவன் பல இடங்களுக்கு அப்ளிகேஷன் போடுவதால் தான் இந்த நெருக்கம் என்று சொல்லுகிறார்கள். அது தான் உண்மையான காரணம் என்றால் அதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு ஜில்லாவில் ஒன்றுக்கு மேற்பட்டு 10 காலேஜுகள் என்று இருந்தால் அந்த 10 காலேஜுக்குமாகச் சேர்ந்து ஒரு குழு ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த ஒரு குழுவினிடத்தில்தான் அந்த ஜில்லாவைச் சேர்ந்த மாணவர்கள் எல்லாம் அப்ளிகேஷன் கொடுக்க வேண்டும். அப்படி அப்ளிகேஷன் கொடுக்கும் மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான காலேஜை தாங்கள் எந்தக் காலேஜில் சேர விரும்புகிறார்கள் என்பதை "Preference" முறையில் தெரிவிக்க வேண்டும். இப்போது biennial election-ல் முதல் ஓட்டு, இரண்டாவது ஓட்டு என்று போடுவது போல் இந்த 10 காலேஜுகளிலும் தாங்கள் முதலில் விரும்புவது எது, இரண்டாவது விரும்புவது எது என்று வரிசைப்படுத்தி குறிக்க வேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் முடிந்த அளவுக்கு தாங்கள் விரும்பிய காலேஜுகளில் இடம் பெறத் தக்க அளவுக்கு குழு அவர்களுக்கு இடம் ஒதுக்க வேண்டும். அப்படிப்பட்ட கமிட்டிகள் ஜில்லாவாரியாக நியமிக்கப்பட வேண்டும். ஒரு ஜில்லாவில் அப்ளிகேஷன் கொடுத்த மாணவன் மற்ற ஜில்லாவில் அப்ளிகேஷன் கொடுக்க விடக் கூடாது. அப்படிச் செய்தால் நெருக்கம் அதிகமாக இல்லாத நிலை உருவாகும். அப்படிக் கொடுக்கும்போதும் ஒரு ஜில்லாவில் இடம் அதிகமாக இருந்து மாணவர்கள் அதற்கேற்றார்போல் இல்லை என்ற நிலை ஏற்படும் கட்டத்தில் மற்ற ஜில்லாக்களிலிருந்து மாணவர்களை இங்கே ஒதுக்கும் முறை கையாளப்பட வேண்டும். மாணவர்கள் வசதியை அனுசரித்து அந்த ஜில்லாவில் உள்ள மாணவர்களைப் பகிர்ந்து vacancy உள்ள ஜில்லாவுக்கு, குழுக்களே அனுப்பக் கூடிய வகையை நிர்ணயித்தால் அட்மிஷனில் உள்ள நெருக்கம் பெருவாரியாக தீர்க்கப்பட ஒரு உருப்படியான வகை ஏற்படும் என்ற கருத்தைச் சொல்லிக் கொண்டு, நண்பர் அன்பழகன் அவர்கள் பிரேரேபித்துள்ள தீர்மானத்தை ஆதரித்து அரசாங்கம் இதுபற்றி ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

[30th March 1966

*** கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் தலைவர் அவர்களே, சில வழிவகைகளை ஆராய்ந்து காண ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டும் என்று இந்தத் தீர்மானம் கூறுகிறது. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இவைபோன்ற மற்ற கல்வி ஸ்தாபனங்களிலும் மாணவர்களுக்கு போதிய இடமில்லாததால் இந்த இடமில்லாத பிரச்னைக்குத் தீர்வுகாண ஒரு கமிட்டி நியமிக்க வேண்டும் என்று இந்தத் தீர்மானம் கூறுகிறது. இந்தக் கமிட்டி என்ன செய்ய முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இந்தக் கமிட்டி சாதாரணக் கல்லூரிகளையும், மருத்துவக் கல்லூரிகளையும், எஞ்ஜினியரிங் கல்லூரிகளையும் அதிகமாக அமைக்க வேண்டும் என்று தீர்மானம் போடக்கூடும். அப்படி தீர்மானம் போட்டுவிட்டால் மட்டும், கல்லூரிகளை அமைத்துவிட முடியாது. அரசாங்கம் தொடர்ந்து ஆண்டுதோறும் கல்வி ஸ்தாபனங்களைப் பெருக்கிவருகிறது என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த எண்ணிக்கை இப்போது இரட்டிப்பாக இருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு அவற்றின் எண்ணிக்கை 980 ஆக விருந்தது. இப்போது அது, 2,000-க்கு மேற்பட்டதாக இருக்கிறது. இப்போது கிராமப்புறங்களில் கல்லூரிகள் இருக்கின்றன. கிராமப்புறங்களில் ஆர்ட்ஸ் கல்லூரிகளை அதிகப்படுத்திவருகிறோம். எல்லாப் பள்ளிகளுக்கும் அல்லது எல்லாக் கல்வி ஸ்தாபனங்களுக்கும் போடப்படும் மனுக்களில் 'preference' காட்டுவது பற்றிக் குறிப்பிடப்பட்டது. எஞ்ஜினியரிங் கல்லூரியில் அவ்வாறு நடக்கிறது. அங்கே மாணவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு இடங்கள் பகிர்ந்து கொடுக்கப்படுகின்றன. நான் கல்லூரிப் படிப்புப் பெற்ற காலத்தில் மாணவர்கள் ப்ரெஸிடென்சி கல்லூரிக்கு மனுப் போடுவார்கள். அங்கே இடம் கிடைக்காவிட்டால் அவர்கள் பச்சையப்பன் கல்லூரிக்கு மனுப் போடுவார்கள். அங்கே இடம் கிடைக்காவிட்டால் ராயப்பேட்டையில் உள்ள ஒரு கல்லூரியில் சேர முடியுமா என்று அவர்கள் பார்ப்பார்கள் ராயப்பேட்டையில் உள்ள அந்தக் கல்லூரி இப்போது வேறு கல்லூரியாக மாறியிருக்கிறது. நான் ப்ரெசிடென்சி கல்லூரி ஒன்றுக்குத்தான் விண்ணப்பம் அனுப்பினேன். அங்கே இடம் கிடைத்தால் கிடைக்கிறது, கிடைக்காவிட்டால் போகிறது என்று இருந்தேன். எனக்கு அங்கே இடம் கிடைத்தது. நான் யாரையும் பார்க்கவில்லை. அந்தக் காலத்தில் கூட சிபாரிசு இருந்தது. ஆனால் இப்போது எல்லோருக்கும் கல்வியில் ஆர்வமும் ஒரு பரபரப்பும் இருக்கின்றன.

இந்த நிபுணர்கள் கமிட்டியை நியமிக்க வேண்டும் என்று கூறிய கனம் அங்கத்தினர் வேறு சில விஷயங்களைப் பற்றியும்—Syllabus மாறுதல் வேண்டும் என்று குறிப்பிட்டார் இது இந்தத் தீர்மானத்துடன் சம்பந்தமில்லாதது. மத்திய அரசாங்கம் Education Commission-ஐ நியமித்திருக்கிறது அந்தக் கமிஷனில் நிபுணர்கள்—அன்னிய நாட்டு நிபுணர்கள்கூட—இருக்கிறார்கள். அதில் நமது கல்வி ஸ்தாபனத்தைச் சேர்ந்த சீனியர் அதிகாரி இருக்கிறார். அவர்களெல்லாம் சேர்ந்து ஜூன் மாதத்திற்குள் ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பார்கள். அந்த



30th March 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

அறிக்கை வந்த பிறகு என்னென்ன கருத்துக்களை ஏற்றுக் கொள்ளலாம் என்பதையெல்லாம் ஆராயலாம். ஆகவே, இந்தப் பிரச்னைகளை ஆராயும் விஷயத்திற்கு இங்கே கொஞ்சம்கூட இடமில்லை.

புகுமுக வகுப்பைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் திரு. அன்பழகனும் திரு. முத்தையா செட்டியாரும் பேசினார்கள். புகுமுக வகுப்பு பற்றிய விஷயங்கள் பல்கலைக்கழகத்தால் கவனிக்கப்பட வேண்டும். இப்போது புகுமுக வகுப்பு ஓராண்டு காலத்திற்குத்தான் இருக்கிறது. அது இரண்டாண்டு காலத்திற்கு இருந்தால் நல்லதுதான். ஒரு மாணவன் அல்லது மாணவி 15 வயதுக்கு மேல் ஒரு வகுப்பில் இருந்து படித்தால், அவர்களுடைய பெற்றோர்கள் செலவு செய்ய வேண்டியிருக்கும் என்பதையும் நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். 1–00 p.m.

உயர்நிலைப் பள்ளியிலேயே தொழிற் கல்வியும் அளிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. இந்த விஷயம் இப்போது கவனிக்கப்பட்டு வருகிறது. உயர்நிலைக் கல்வியைப் பொறுத்தவரையில், ஸெகண்டரி கல்வியைப் பொறுத்தவரையில் அது பூர்த்தியான படிப்பாக இருக்க வேண்டும். ஆசிரியர்களைச் சந்தித்தபோது, அது 11 ஆண்டு காலக் கல்வியாக இருந்தால் தான் பூர்த்தியான கல்வியாக இருக்கும் என்று சொன்னார்கள். அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆகவே அது 11 ஆண்டுகாலத்துக்கு இருக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். வேறு சில மாநிலங்களில் ஹையர் செகண்டரி ஸ்கூல்ஸ் இருக்கின்றன. புகுமுக வகுப்பை அந்த மாநிலத்தினர் ஹையர் செகண்டரி ஸ்கூலிலே சேர்த்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, ஹையர் செகண்டரி ஸ்கூல் படிப்பை முடித்தவர்கள் நேரடியாக டெக்னிகல் கோர்ஸுக்குப் போகலாம். இந்த விஷயத்தையும் நிபுணர்களுடனும் பல்கலைக்கழகத் துணை வேந்தருடனும் ஆராய்ந்தோம். இப்போது உயர்நிலைக் கல்வியைப் படித்து முடிப்பவர்களில் ஒரு சிலர்தான் கல்லூரிக்குச் செல்கிறார்கள். கல்லூரியில் படிக்க விரும்புகிறவர்களுக்குத்தான், ஹையர் ஸெகண்டரி கோர்ஸ். கல்லூரியில் படிக்க விரும்பாதவர்கள் மீது அதை ஏன் சுமத்த வேண்டும்? ஒவ்வொரு பள்ளியையும் ஹையர் ஸெகண்டரி ஸ்கூலாக அமைப்பதானால், அதற்குச் செலவு ஏற்படும். ஆகவே எல்லாப் பள்ளிகளையும் ஹையர் ஸெகண்டரிப் பள்ளிகளாக ஆக்க முடியாது. நான் பெருமையடித்துக் கொள்ளவில்லை; மற்ற மாநிலங்களில் இந்த கோர்ஸை தொடங்கியவர்கள் "நாங்கள் இந்த கோர்ஸை தொடங்கிவிட்டுத் திண்டாடுகிறோம்" என்று கூறுகிறார்கள். இந்த கோர்ஸை ஆரம்பித்தால், ஆசிரியர்கள் தேவைப் படுவார்கள், லாபரட்டரிகள் தேவைப்படும், பள்ளிகளில் செலவு ஏற்படும். இதுபற்றிக் கலந்தாலோசிக்கப்பட்டது. புகுமுக வகுப்பு உயர்நிலைப் பள்ளியில் இருக்கமுடியாது. இந்த வகுப்பு இரண்டு ஆண்டு காலப் படிப்பாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. முன்பு டிக்ரி கோர்ஸ் இரண்டு ஆண்டு காலப் படிப்பாகவும், ஆனர்ஸ் கோர்ஸ் மூன்று ஆண்டு காலப் படிப்பாகவும்

இருந்தன. ஆனர்ஸ் கோர்ஸ் அவ்வாறு இருந்தது பிரயோஜனமில்லை என்று நான் கூட நினைக்கிறேன். கணக்கு ஆனர்ஸ் படித்தவருக்கு கணக்குத்தான் தெரியும். ஆங்கிலம் அவ்வளவு தெரியாது. அவர் கணக்குப் போட்டுக்கொண்டு மட்டும் இருக்கலாம். அதை எடுத்துச்சொல்லக்கூட அவருக்குத் தெரியாது. ஆகவே அந்த ஆனர்ஸ் கோர்ஸ் நீக்கப்பட்டது குறித்து நான் வருந்தவில்லை. பல்கலைக்கழகம் டிக்ரீ கோர்ஸை குறைந்த பட்சம் மூன்ருண்டு காலம் உள்ளதாக ஆக்கியிருக்கிறது. டிக்ரீ கோர்ஸுக்கான காலத்தைக் குறைக்க வேண்டும் என்று சொல்ல எனக்குக்கூடத் துணிவில்லை.

**திரு. க. அன்பழகன்** : ஆனர்ஸ் கோர்ஸ் நீக்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் கூறினுர். அந்தக் கோர்ஸ் இப்போது எம்.ஏ. என்ற பெயரில் தனியாக இருக்கிறது. ஆகவே அந்தப் படிப்பின் இடத்தில் வேருெரு படிப்பு வந்துவிட்டது. இண்டர்மீடியட் படிப்பு இரண்டாண்டு காலப் படிப்பாக இருந்தபோது பி.ஏ. படிப்பு இரண்டு ஆண்டு காலப் படிப்பாக இருந்தது. எனவே பி.யு.ஸி. படிப்பை இரண்டு ஆண்டு காலப் படிப்பாக ஆக்கினுல் பி.ஏ. படிப்பை இரண்டு ஆண்டு காலப்படிப்பாக ஆக்கலாம். இரண்டாண்டு கால பி.ஏ. படிப்பை படித்த பலர் தான் இன்று அமைச்சர்களாக இருக்கிருர்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இப்போது எம்.ஏ. படிப்பை, பி.ஏ. படிப்பைப் படித்துவிட்டுத்தான் படிக்க வேண்டும். முன்பு ஆனர்ஸ் கோர்ஸ் இருந்தபோது, பி.ஏ.-க்குப் படிக்காமலே ஆனர்ஸ் படிப்புப் படிக்கலாம். இன்னும் கொஞ்சம் படித்திருந்தால், மூன்று ஆண்டுகள் படித்திருந்தால், எங்களுக்கு அதிக ஆற்றல் இருக்குமே என்று நான் நினைக்கிறேன். மூன்று ஆண்டு காலப் படிப்பே போதாது என்று கனம் அங்கத்தினர் திரு. முத்தையா செட்டியார் அவர்கள் சொன்னது என் நினைவிற்கு வருகிறது. மற்ற நாட்டுப் பட்டதாரிகளுக்கும் இந்த நாட்டுப் பட்டதாரிகளுக்கும் தரத்தில் மிகுந்த வித்தியாசம் இருக்கிறது என்று அவர் சொல்லியிருக்கிருர். மூன்று ஆண்டுகளாக இருக்கும் பி.ஏ. படிப்புக் காலத்தை இரண்டு ஆண்டுகளாக ஆக்கலாம் என்று சொல்லுவது சரி என்று எனக்குத் தோன்றவில்லை.

ஆனல் அது மூன்று ஆண்டுகள், பி.யு.சி.யில் இரண்டு ஆண்டு, உயர்நிலைப்பள்ளியில் 11 ஆண்டு என்ருல் மொத்தம் 16 ஆண்டுகள் ஆகிறது. அது அதிக சுமையாக இருக்கும். மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அது சுமையாகத்தான் இருக்கும். மாணவர்கள் அதிகமாக படித்தால் நல்லது என்ருலும் பெற்றோர்களுக்கு சுமையாக இருக்கும். Education Commission வந்தபோது என்னிடம் பேசினுர்கள். பி.யு.சி.க்கு போய்ச் சேருகிறவர்கள், தமிழ் பாடத்தைக் கற்றவர்கள் கஷ்டப்படுகிருர்கள் என்பதை நானே கவனித்திருக்கிறேன். சென்ற ஆண்டு பல்கலைக்கழக வைஸ் சான்சலருக்கு அது பற்றி எழுதினேன். அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு அதை எல்லா பிரின்சுபாலுக்கும் தெரிவிப்பதாகவும் சொன்னுர்கள். புகுமுக வகுப்பில் தமிழிலும் சொல்லிக் கொடுக்கட்டும். ஆங்கிலத்திலும் சொல்லிக் கொடுக்கட்டும்,





தமிழர்கள்தானே அதை சொல்லிக் கொடுக்கிருர்கள். தமிழில் சொல்லிக் கொடுக்கமுடியாது என்று யாரும் சொல்லமுடியாது. எந்தக் கருத்தாக இருந்தாலும் தமிழிலே சொல்லலாம். மேலே படிக்கும்போது, இங்கே தமிழில் சொல்லிவிட்டால், மறுபடியும் அந்தக் கஷ்டம் வரும். ஜெய்ப்பூர் போயிருந்தபோது அங்கே சிறந்த முறையில் நடக்கும் மகளிர் கல்லூரி ஒன்றுக்கு, 'மகாராணி கல்லூரி' என்ற கல்லூரிக்கு போயிருந்தேன். அங்கே நம் Queen Marry's காலேஜில் படித்த பட்டதாரி, ஒருவர் Lecturer ஆக இருந்து பாடம் சொல்லிக் கொடுக்கிருர். அவர் இந்தியிலும் ஆங்கிலத்திலும் சொல்லிக் கொடுக்கிருர். புகுமுக வகுப்பில் அந்த மாதிரி சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று நம் வைஸ் சான்சலரிடம் கேட்டேன். அவரும் ஒப்புக்கொண்டார். புகுமுக வகுப்பில் தமிழில் சொல்லிக் கொடுக்கத் தயார்தான். அதையும் பல்கலைக் கழகம் ஏற்றுக் கொள்ளும் என்று நினைக்கிறேன். தமிழிலும் ஆங்கிலத்திலும் வேறு வகுப்பு வைக்கலாம். இன்னும் ஒவ்வொரு கல்லூரியிலும் தமிழிலேயே சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்பது தான் என்னுடைய எண்ணம். இந்த ஆண்டிலே எவ்வளவு தூரம் நிறைவேற்ற முடியுமோ அந்த அளவு நிறைவேற்றத்தான் நாம் பார்க்கிறோம். அடுத்து Basic education vocation வேண்டுமென்று சொன்னுர்கள். Vocation தான் Basic-நூல் நூற்பது ஒன்றுதான் Basic என்று எப்போதும் இல்லை. இப்போது கொஞ்சம் கூட சந்தேகம் இல்லாமல் வேறு தொழில்கள், கையினுல் வேலை செய்யும் பழக்கம், மனப்பான்மை வேண்டுமென்று தான் Bifurcatd course எல்லாம் ஹைஸ்கூலில் இருக்கிறது. அதையொட்டி பாலிடெக்னிக்குக்குப் போவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. பாலிடெக்னிக்ஸ் நிறைய இருக்கின்றன. இன்னும் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இன்னும் அதிகமாக வைக்கவேண்டுமென்று நாம் எதிர்பார்த்தாலும் அதற்கு நிதி வேண்டும்.

மருத்துவக் கல்லூரி பற்றி கனம் முத்தையா செட்டியார் அவர்கள் சொன்னுர்கள். இந்தத் திட்டத்திலே மூன்று மருத்துவக் கல்லூரிகள், கோயமுத்தூர், சேலம், திருச்சி ஆகிய இடங்களில் வைக்கவேண்டுமென்று போட்டிருக்கிறோம். போட்டிருந்தாலும் மூன்றையும் வைக்கமுடியுமா என்று சந்தேகமாக இருக்கிறது. கோயமுத்தூருக்குப் போனபோது 'முன்பே நன்கொடை அளிப்பதாகச் சொன்னீர்கள்; கொடுக்கக்கூடியவர்கள்தான் என்றுதான் சொல்கிறேன். நீங்கள் கொடுத்தால் அடுத்த ஆண்டிலேயே மருத்துவக் கல்லூரி கோயமுத்தூரில் கொண்டு வருகிறேன். எனக்கும் ஆர்வம் இருக்கிறது' என்று சொன்னேன். ரூ. 25 லட்சம் கொடுத்தால், 'இப்போது நிதி இல்லை என்ருலும் திட்ட முதல் ஆண்டிலே பிளானிங் கமிஷனிடம் சொல்லி 25 லட்சம் வந்திருக்கிறது, அதை வைத்து ஆரம்பிக்கலாம் என்று சொல்லலாம்' என்று அவர்களிடம் சொன்னேன். அதற்கு அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். மூன்று கல்லூரிகளுக்கு பணத்திற்கு எங்கே போவது என்று பார்க்கிறோம். மருத்துவக் கல்லூரிக்கு 600 பேர் எடுப்பது என்று இருக்கிறது. இப்போது

936 சேர்க்கிறோம். இருந்தாலும் போதவில்லை. இன்னும் மருத்துவப் படிப்பு தேறியவர்கள் அதிகமாக வந்தால்தான், கிராமங்களுக்கு மருத்துவ உதவி நல்லமுறையில் கிடைக்கும். இங்கெல்லாம் எத்தனை போர்டு போட்டாலும் வருமானம் வந்து விடுகிறது. டாக்டர் என்று போர்டு போட்டால் ஏதோ வியாதியஸ்தர்கள் வருகிறார்கள். வருமானம் வருகிறது. சர்க்கார் உத்தியோகம் இல்லாவிட்டால் உடனே போர்டு போட்டுக் கொள்கிறார்கள். அந்த நிலைமை மாறி, 'எந்த கிராமத்திற்குப் போட்டாலும் போடுங்கள்; எங்களுக்கு வேலை கொடுத்தால் போதும்' என்று சொல்லும் நிலைமை வரவேண்டும். மாவட்டத்திற்கு ஒரு கல்லூரி வேண்டுமென்பது அவசியம்தான். கனம் முத்தையா செட்டியார் அவர்கள் கூட சொன்னார்கள். வைஸ் சான்ஸலர் அவர்களும் சொன்னார்கள். எப்படிச் செய்வது என்பதைத்தான் நாம் பார்க்கிறோம்.

1-10 p.m. தனிப்பட்டவர்கள் பள்ளி பற்றி கூறினார்கள். தனிப்பட்ட பள்ளி நடத்துகிறவர்கள் பெரிய சாதனையைச் சாதிக்கிறார்கள் என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் கனம் உறுப்பினர் கூறிய பள்ளி சரியாக நடக்கவில்லை. கல்யாணசுந்தரம் உயர்நிலைப்பள்ளி ரூ. 35 ஆயிரம் டெபாசிட் கட்டவேண்டுமென்று நீண்ட காலமாக இருக்கிறது. எண்டோமெண்ட் எதற்காக இருக்கிறது? நாளைக்கு 'ஆசிரியர்கள் நிறுத்தப்படுகிறார்கள், அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. பாக்கிகள் சரியாக கொடுக்கப்படவில்லை', என்றால் அதற்கு ஒரு உத்தரவாதம் இருக்கவேண்டும். பள்ளித் தேவையைக் கவனிக்கவேண்டியது அவசியம். சில இடங்களில் அம்மாதிரி நடப்பதில்லை. இந்த order காட்டினார்களே அதிலே 'நிதிநிலைமை சரியாக இல்லை' என்று போட்டிருக்கிறது. ஏற்கனவேயே இந்த ரூ. 35 ஆயிரத்தை வாங்கியிருக்கவேண்டும். 'பரவாயில்லை, கல்யாணசுந்தரம் உயர்நிலைப்பள்ளி இருக்கட்டும்', என்று சலுகை காட்டியதால் வந்தது இது. இப்போது உள்ள நிலைமையைப் பார்த்தால் இப்போது ரூ. 75 ஆயிரம் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. புதிதாக ஆரம்பிக்கும் பள்ளிகளுக்கு ரூ. 70 ஆயிரம் கட்டினால்தான் சரியாக இருக்குமென்ற நிலை இருக்கிறது. பள்ளியை நடத்துகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நலன் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதுதான் நோக்கம்.

**திரு. க. அன்பழகன்:** சட்டத்தில் இருக்கிற விளக்கம், 1948-க்குப் முன் தோன்றிய பள்ளிக்கு எண்டோமெண்ட் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை என்பது. கேட்கப்படுவதும் இல்லை. இப்போது இருக்கிற ஆசிரியர்களுக்கு அரசாங்கமே நேரடியாக சம்பளம் கொடுக்கிறது. அப்படி இருக்கும்போது ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு அரசாங்கம் வழங்குகிற நிலையில் நிதி சேர்க்க வேண்டுமென்று எப்போதோ தோன்றிய பள்ளிக்கு சொல்வது சட்டப்படி நியாயமில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தப் பள்ளிக்கு அது இல்லை. அதில் காணப்படுவதுபோல 'நிதிநிலைமை நிர்வாகம் சரியில்லை' என்றுதான் கேட்கிறார்கள். வரம்புக்கு உட்பட்டு





இலாகாவினர் கேட்கிறார்களே தவிர, வரம்பு மீறி கேட்கவில்லை. அப்படி ஏதாவது இருந்தால் எப்படியும் கோர்ட்டார் இருக்கிறார்கள். சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அவர்கள் அங்கே போவார்கள். திரு. அன்பழகன் அவர்கள் அதைப்பற்றிக் கவலைப் படவேண்டாம். அரசாங்கத்திற்கு கல்யாணசுந்தரம் உயர்நிலைப் பள்ளி மீது வெறுப்பு இல்லை. நாங்கள் படித்த காலத்திலேயே அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன், அதன் மீது வெறுப்பில்லை. நிர்வாக ரீதியிலேதான் கேட்டிருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

கல்லூரிக்கு இடம் போதவில்லை என்றால் குறிப்பிட்ட கல்லூரி, குறிப்பிட்ட கோர்ஸ், குறிப்பிட்ட உயர்நிலைப்பள்ளி, குறிப்பிட்ட பள்ளி வேண்டுமென்றால்தான் நெருக்கடி ஏற்படுகிறது. சில கல்லூரிகளில் மாலை வகுப்புகள் ஏற்படுத்தியிருக்கிறோம். Queen Mary's கல்லூரியில் வைத்திருக்கிறோம் சென்னையில், கும்பகோணத்தில் வைத்திருக்கிறோம். இன்னும் அதிகமாக வைப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். சட்டக் கல்லூரிக்கும் மாலை வகுப்பு வைத்திருக்கிறோம். விவசாயக் கல்லூரி மூன்று இருக்கிறது இப்போது. இதில் எவ்வளவு தூரம் சேர்க்க முடியுமோ அந்த அளவுக்குச் சேர்க்கிறோம். Post-Graduate Veterinary கல்லூரி இன்னொன்று அமைக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. Short term course இப்போது நடைபெற்று வருகிறது. என்னென்ன வகையில் கவனம் செலுத்த வேண்டுமோ அதைச் செய்கிறோம். கல்லூரி வரவேண்டுமென்ற ஆர்வம் கொண்டவர்களுக்கு ஏற்ற வகையில் எவ்வளவு தூரம் பல சாதனங்களை அதிகப்படுத்த முடியுமோ பயன்படக்கூடிய ஸ்தாபனமாக இருப்பதற்கு அதில் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. உயர்நிலைப்பள்ளி syllabus-க்கு consultative committee இருக்கிறது. நேற்று முன் தினம் கூட அதைப்பற்றி ஆராய்ந்தோம். நேற்றுதான் syllabus மாற்றியமைப்பதைப்பற்றி பேசினோம். விஞ்ஞான அறிவு போதாது, எப்படி அதை அதிகப்படுத்துவது, விஞ்ஞானக் கூடங்கள் எப்படி அமைப்பது என்பதைப் பற்றி எல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம்.

கனம் திரு. முத்தையா செட்டியார் அவர்கள் மதுரை மில் நடத்தும் பள்ளிக்கு recognition கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதற்கு ஏதாவது காரணம் இருக்கலாம். அதைப்பற்றி எனக்குத் தெரியவில்லை. recognition-க்கு என்ன விதிகள் இருக்கிறதோ, எவ்வாறு நடக்கவேண்டுமென்று வற்புறுத்தப் படுகிறதோ, அவ்வாறு அது நடக்கவேண்டும். வேறு வகையிலே 'தனி பள்ளியாக வைத்திருக்கிறோம். அதற்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்கலாம். விலக்கு கொடுக்க முடியாது என்றால், 'நீங்கள் இஷ்டத்திற்கு பள்ளியை நடத்துங்கள்' என்று சொல்ல முடியும். அது என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால்

[திரு. எம். பக்தவத்சலம்] [30th March 1966

வரை நாம் அனைவரும் பரவசமடையலாம். ஆனால் சமீப காலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக நடைபெறும் ஊழல்கள் கூட்டுறவு இயக்கத்திற்கு இழிவைத் தேடும் வகையில் பெருகியுள்ளன. ஊழல்கள் மலிந்து விட்டன என்று சர்க்கார் தரப்பிலிருந்தே எடுத்துக் கூறும் அளவுக்கு தலைவிரி கோலமாகிவிட்டது. இதனால் கூட்டுறவு தத்துவத்திற்கு இழுக்கு நேருவது மட்டுமல்ல. நாட்டில் மற்றத் துறைகளில் ஊழல் ஏற்படவும் வழி செய்கிறது என்பதை சர்க்கார் உணரவேண்டும். இனியாவது தங்க கண் காணிப்போடு சர்க்கார் கடமையாற்ற வேண்டும். ஊழல்கள் ஏற்பட்ட ஆரம்ப காலத்திலிருந்து நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த அளவுக்குச் சீர்குலைவு ஏற்பட்டிருக்காது. எதிர்க் கட்சியினர் குறைபாடுகளை எடுத்துச் சொல்லும்போது, அதை நடுநிலையிலிருந்து ஆராய்ந்து கட்சிக் கண்ணோட்டத்தைத் தவிர்த்திருந்தால், கூட்டுறவு இயக்கம் எந்த நன்மைகளை நாட்டுக்கு வழங்க வேண்டுமோ அவற்றை வழங்கியிருக்கும். இங்கு கூட நமது அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை முன்மொழிந்து பேசிய போது, இந்தியத் துணைக்கண்டத்தில் மற்ற மாநிலங்களைவிட நம் மாநிலத்தில் இந்த இயக்கம் நல்ல முறையில் நடைபெறுவதாகச் சொன்னார்கள். அது போதாது. மற்ற மாநிலங்களில் தவறுகள் இருப்பதைவிட இது பரவாயில்லை என்பது பெருமை தருவதல்ல. ஒழுங்காக நடைபெறுகிறதா? மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டக்கூடியதாக இருக்கிறதா, ஏழைகளுக்குப் பயன்படுகிறதா என்று பார்க்கவேண்டும். அந்த நிலைமை ஏற்பட்டால் சர்க்காருக்கும் கூட்டுறவு இயக்கத்திற்கும் பெருமையாகும். பல கோடிக் கணக்கான ரூபாய்களை ஒதுக்கி இருப்பதற்கும் பயன்கிடைக்கும். எனவே சர்க்கார், கூட்டுறவு இயக்கத்தில் தவறு செய்கிறவர்கள் மீது தயவு தாட்சண்யம் இன்றி, விட்டுக் கொடுக்காமல், கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும். எதிர் காலத்தில் இந்த இயக்கத்தின் மூலமாகப் பலன் ஏற்படும் வகையில் செயலாற்றவேண்டுமென்பதுடன் தவறு செய்பவர்களைத் தண்டிக்க இன்னும் சட்டத்தை கடுமையாக்க வேண்டுமென்றும் கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** தலைவர் அவர்களே, சமர்ப்பிக் கப்பட்டிருக்கிற மசோதாவை ஆதரிக்கிறேன். அதற்குக் காரணம் கூட்டுறவுத் துறையிலே நடைபெறுகிற ஊழல்களைத் தடுப்பதற்கு இந்த மசோதா வழிவகை செய்ய ஆரம்பித்திருக்கிறது என்று கருதுகிறேன். முற்றிலும் அந்த ஊழல்களைத் தடுப்பதற்கு இன்னும் விரிவான ஒரு மசோதா வரவேண்டுமென்று மதிப்பிற்குரிய திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் கூறியதை நான் ஆதரிப்பதோடு அவ்வாறு செய்வதற்குரிய ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல நினைக்கிறேன். இப்போது கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பிலே இருக்கிற உத்தியோகப் பற்றற்றவர்கள் தவறு செய்தால் அவர்களைத் தண்டிப்பதற்கும் மீண்டும் அந்தப் பொறுப்பில் வராமல் செய்வதற்கும் ரிஜிஸ்டிராருக்கு அதிகாரம் வழங்குகிற மசோதாவாக இது அமைகிறது.





ஆனால் அதிலும் தப்பித்து விடுவார்கள் என்பது என்னுடைய கருத்து. என்னுடைய நண்பர் ஒருவர் கார் வைத்துக் கொண்டி ருக்கிறார். பெரும்பாலும் அவராகவே ஓட்டுவார். அவர் கார் ஓட்டிச் செல்லும்போது எப்போதும் அவருடன் டிரைவரையும் வைத்துக்கொள்வார். 'நீங்கள்தான் கார் ஓட்டுகிறீர்களே' டிரை வருக்கு வேறு ஏன் சம்பளம் கொடுக்கிறீர்கள், ஏதாவது சலுகைக் காக வைத்திருக்கிறீர்களா' என்று கேட்டால், அவர் என்ன சொல் கிறார் தெரியுமா? 'கார் ஓட்டிச் செல்லும்போது, நான் யார் மீதாவது விட்டுவிட்டால், அந்தப் பொறுப்பை அந்த டிரைவர் தலையில் போடுவதற்காகத்தான் அவனை கூடவே வைத்திருக்கிறேன்' என்றார். அப்படித்தான், உத்தியோகப் பற்றற்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது, இப்போது நடைபெறுவது என்ன வென்றால், அங்குள்ள கிளார்க்குகள் மேல் தப்பைத் தூக்கி வைத்து, அவனை ஒப்புக் கொள்ள வைத்து, அதற்கு ஏதாவது ரூபாய் வேண்டுமானாலும் அவனுக்குக் கொடுத்து 'ஏதாவது புரமோஷன்தான் இல்லாமல் போகும், வேலை போகாது' என்று சொல்லி தப்பித்துக்கொள்கிறார்கள். அதற்கு வழியிருக்கிறது. அதற்கு அனுமதி பெற்ற ஒரு உத்தியோகஸ்தர் வந்தால், தவறு நேரும்போது அவருக்கு கடுமையான தண்டனை இருக்கும் சூழ் நிலையில் ஊழல்களை அகற்ற முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உத்தியோகப் பற்றற்ற பொறுப்பாளிகள், எம்.எல்.ஏ., எம்.எல்.சி. யூனியன் சேர்மன்கள் இவர்களாக இருக்கக் கூடாது என்ற நிலை வந்தால் ஓரளவுக்கு தவறுகளைத் தடுக்க முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கையிருக்கிறது. நான் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினரே தவிர பொறுப்பாளி அல்ல. பலர் அந்த அதிகாரத்தை வைத்து ரிஜிஸ்ட்ரார் போன்றவர்களை எல்லாம் செயல்படமுடியாமல் ஆக்கிவிடுகிறார்கள் என்பது என்னுடைய கருத்து. அது தவறாக இருக்கலாம். சொல்லும்போது தவறாகத் தெரிந்தாலும் உண்மை அதுதான். சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்துகொண்டு, கூட்டுறவு சொசைடியின் தலைவராகவும் இருந்தால், அங்குள்ள அதிகாரிகளிடத்தில் வேலைகளை ஒப்புவித்து விட்டு வரவேண்டியிருக்கும். அங்கு ஊழல்கள் நடைபெற அது ஏதுவாகும். படித்தவர்கள், இளைஞர்கள் எத்தனையோ பேர் இருக் கிறார்கள். அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். எத்தனையோ ஊழல்கள் இருக்கின்றன. அவைகளைச் சொல்வதற்கு இது நேரமல்ல என்று விட்டு விடுகிறேன். கன்னியாகுமரியில் கூட்டுறவு ஆலை புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கிறது. மிக மகிழ்ச்சியோடு அதை வரவேற்று எவ்வளவோ அங்கத்தினர்களை சேர்ந்து சிறப்பாக நடத்துகிறார்கள். ஆனால், அந்த ஆலைக்கு ஆலைத் தொழிலாளர் 400 பேர் தேவையென்று விளம்பரம் செய்தார்கள். அதற்கு 11 ஆயிரம் அப்பேட்சை மனுக்கள் கொடுத்தார்கள். விளம்பரத்தில், என்ன தகுதிவேண்டும், வயது எவ்வளவு இருக்கவேண்டும் என்பன ஒன்றும் இல்லை. ஆலைக்கு ஆள் எடுக்கவேண்டும். அதற்காக ஒரு ரூபாய் கொடுத்து விண்ணப்பம் பாரம் வாங்கி பூர்த்தி செய்து அனுப்புங்கள் என்று சொன்னார்கள். மாவட்டம் பூராவுமிருந்து 11 ஆயிரம் பேரில் அதற்கான இண்டர்வியூ, கமிட்டி மெம்பர்கள்,

கவுன்சிலர், எம்.எல்.ஏ., போர்டு மெம்பர், போன்றவர்களைப் பார்ப்பதிலும் கேட்பதிலும் கார்களை வாடகைக்கு எடுத்துக் கொண்டு செலவழித்ததே, ஒவ்வொருவரும் 500 அல்லது 400 ரூபாய் வரை ஆகியிருக்கும் போலிருக்கிறது. அந்த வேலை பலருக்குக் கிடைக்கவில்லை. இதுவரை எத்தனை பேர் எடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அறிவிக்கவில்லை. இண்டர்வியூ முடிந்து பல மாதங்கள் ஆகியும் தேர்வு முடிவு தெரிவிக்கப்படவில்லை என்றால், ஊழல் எப்படி நடந்துகொண்டிருக்கிறது என்பதுதான் அதன் பொருள். கூட்டுறவு இயக்கங்கள் மிகவும் கண்டிப்பாக சட்டங்களை அமுல் நடத்தவேண்டும். இன்னும் பல உதாரணங்கள் தரமுடியும். ஊழல்களைத் தடுப்பதற்கு முதல்படி எடுத்து வைப்பதற்காகப் பாராட்டிக்கொண்டு, அத்தோடு நிறுத்தி விடாமல் தொடர்ந்து ஆவன செய்யவேண்டும். கூட்டுறவு சங்கங்கள் எல்லாப் பொருள்களையும் வினியோகிக்கும் சூழ்நிலை வருகிறது. சட்டைத் துணியில் இருந்து மற்ற பொருள்களின் விலை ஏறும் போதெல்லாம், அவற்றைக் குறைந்த விலைக்குக் கொடுக்க கூட்டுறவை பயன்படுத்த வேண்டியிருக்கிறது. அதற்கான நல்ல சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

11-00 a.m. **கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார்:** கனம் சேர்மன் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின் பேரில் பல மெம்பர்கள் யோசனை சொல்லியதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, நடக்கின்ற ஊழல்களைக் கணக்கிட்டுப் பார்த்தால் பல கோடி ரூபாய் புழக்கத்தில் இருக்கிற நோக்கில், அந்த ஊழல்கள் அதிகம் என்று சொல்லாவிட்டாலும் ஓரளவுக்கு இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற முறையில்தான் இந்தத் திருத்த மசோதா வருகிறது. இந்த மசோதா கொண்டுவருவதற்கு அடிப்படைக் காரணம், நான் ஆரம்ப உரையிலே சொல்லியதுபோல உடனடியாக ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு இந்தப் பொறுப்பைக் கொடுக்கிற பொழுது, நேரடியாக விசாரணை செய்கிறார்கள். விசாரணை செய்து தவறு இருக்கிறது என்ற நிலை ஏற்பட்டால் அவர்களை உடனடியாக நீக்குவதற்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்ற முறையில்தான் இதைச் செய்கிறோம். இங்கு பேசிய கனம் மெம்பர்கள் இதை ஆதரித்துப் பேசினார்கள். ஆரம்பித்து வைத்துப் பேசிய கனம் வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் முன்பு 1961-ம் வருட சட்டத்திற்கு விதிகள் கொண்டு வந்த ஆரம்ப நிலையில் இது வந்திருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அப்போது அது பொறுக்குக் குழுவிற்குச் சென்றபோது அவர்கள் அதை அலசிப் பார்த்து 'இப்போது அது தேவையில்லை' என்று நிறுத்திவிட்டார்கள். இல்லாவிட்டால், அப்போதே வந்திருக்கும். பொறுக்குக் கமிட்டி மூலமாகத்தான் யோசனை செய்து நிறுத்தி வைத்தார்கள். அதற்கு ஒரு துணையாக இருக்கும் முறையில்தான் இது வருகிறது. இதன் மூலமாக அங்குள்ள ஊழல்களைக் களைவது மட்டுமல்ல, ஜாக்ரதை செய்வதற்கும் பயன்படும். இதை வரவேற்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பும் இதில் கொடுக்கப்பட்டிருக்கிறது.





கடைசியாகப் பேசிய கனம் மெம்பர் அவர்கள் கூட சொன்னார்கள். தலைவராக இருக்கிறவர்கள் தவறு செய்து விட்டு இருக்கிற காரியஸ்தர் மீது பொறுப்பை வைத்துவிடுகிறார்கள் என்றார்கள். இன்றைக்குள்ள நிலையில் காரியதரிசிகள் யாரும் 'தலைவர் சொல்கிறார்' என்பதற்காக தவறை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு இல்லை. காலம் மாறிவிட்டது. அந்த மாதிரி நிலையில் நான் பார்த்ததில்லை. ஆகவே இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Madras Co-operative Societies (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 2 of 1966), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

## (2) THE MADRAS ELETRICITY DUTY (AMENDMENT) BILL, 1966 (L. A. BILL No. 6 OF 1966.)

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, I move—

"That the Madras Electricity Duty (Amendment) Bill, [a] 1966 (L.A. Bill No. 6 of 1966), as passed by the Assembly, be taken into consideration."

Under sub-section (1) of Section (3) of the Electricity Duty Act, 1939 every licensee has to pay a duty calculated at the rate of 3 P. per unit of energy sold by him at a price exceeding 15 paise per unit as fixed in 1939. With a view to augment the resources for implementing the development schemes and meeting the additional responsibilities devolving on the State Government on account of the National emergency, it has been found necessary to increase the rate from 3 paise to 5 paise. I wish to make it clear that this will not in any way be a burden on the people, as the duty is directly payable by the licensees and it cannot be passed on by them. An additional revenue of Rs. 18 lakhs per annum is expected. The draft Bill seeks to give effect to the above increase in the rate of duty.

Under rule 3 of the Madras Electricity Duty Rules, 1939 electricity duty in respect of a month should be paid to Government before the expiry of the following month. Section 6 of the Madras Electricity Duty Act, 1939 and the rules made thereunder provide for recovery of duty as arrears of land revenue in case of default but do not provide for payment of penal interest in the case of belated payment. There is a tendency on the part of certain licensees to pay the duty after the due date and then apply for condonation. In order to provide an incentive for prompt payment of duty, it is necessary to make provision in the

---

[a] Printed as Appendix VI on pages 362

[Sri R. Venkataraman] [31st March 1966

Act for payment of penal interest for the belated payment of duty. Similar provision exists in the Madras Electricity (Taxation on Consumption) Act, 1962. The draft Bill provides for this also.

I request the House to accept the motion.

MR. CHAIRMAN : The question is—

"That the Madras Electricity Duty (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 6 of 1966), as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Long Title and the Enacting Formula, were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move :

"That the Madras Electricity Duty (Amendment) Bill, 1966, (L.A. Bill No. 6 of 1966), as passed by the Assembly, be passed."

Sir, I want to make one further observation. I thought that there might be a discussion, and so I did not make this. Since there was no discussion, I want to make it myself.

Sir, when the Bill was prepared, I was assured by the Department that the clear profit of the various licensees would be sufficient to meet the payment of the additional duty. It is after discussing with them that part of the Bill—and afterwards representations have come to us that in some cases it will not be possible for the licensees to meet the extra duty out of their own clear profit—I have already given an undertaking to this House as well as the other House that as a result of the imposition of additional duty, there will be no increase at all in the rates of electricity. I will have this matter re-examined, and if it is going to impose additional burden on the people, the Act may not be implemented immediately. This is what I want to say.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Madras Electricity Duty (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 6 of 1966), as passed by the Assembly, be passed."

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Sir, I have been reiterating on the floor of this House about the taking over of private electricity undertakings. They should be acquired as early as possible. I know that financial difficulties are in the way. But still it should be possible for the Government to take over the undertaking as early as possible, and the companies must be given a promissory note that the amount will be paid in 10 or 15 instalments or something like that. Because, I know of instances where these



31st March 1966] [Sri V. K. Ramaswamy Mudaliar]

licensees are not working properly and, there is so much of unhappines among the consumers. Therefore, I request the Hon. Minister to take up the private undertakings as expeditiously as possible. That is all my submission, Sir.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, in the Draft outline of the Fourth Plan we have made a provision for acquisition of licensees but as the hon. Member himself said. the cost of acquisition is pretty high. Under the present Act, we have to pay market value or twenty times the net profit which they have made and so on. And that too is left to the choice of the licensee and not to the choice of the Government. The suggestion was floated during the discussion in the Electricity Tariff Committee, of which I was the Chairman, that the Government of India might think of amending the law and provide for fair compensation instead of the present rates of compensation. I do not know whether the Government of India are going to implement it or it was only a mere passing suggestion. However, I am of opinion that in view of the fact that we have practically covered 80 per cent of the State by State Electricity Board service, it will be to the advantage of the State, even if we have to pay a little more compensation, according to the present law, to acquire these existing licensees, and then have the entire Madras State covered by the Electricity Board distribution system. This is under the active consideration of the Planning Commission and when the Planning Commission finalises the Fourth Plan, a final decision would be taken in the matter. 11-10 a.m.

MR. CHAIRMAN : The question is—

"That the Madras Electricity Duty (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 6 of 1966), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

## (3) THE MADRAS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1966 (L. A. BILL No. 8 OF 1966.)

THE HON. SRI V. RAMAIAH : Mr. Chairman, Sir, I move :

"That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1966 [a] (L.A. Bill No. 8 of 1966), as passed by the Assembly, be taken into consideration."

Sir, this Bill, has been necessitated by certain proposals of the Economy Committee of the Government which have been accepted by the Government. After surveying the quantum of work in administering the Agricultural Income-tax Act both in respect of plantations and non-plantations, the Economy Committee came to the conclusion that we need not retain separate Agricultural Income-tax Officers in most of the non-plantation areas and that this work could be distributed amongst

[a] Printed as Appendices VII on pages 362-66

[Sri V. Ramaiah] [31st March 1966

the Taluk Tahsildars who can be empowered to discharge the functions under the Agricultural Income-tax Act. The Committee considered that in order that the step may prove successful the orders of composition under section 34 of the Amending Act of 1958 (in respect of non-plantation crops) should also be valid for three years as in the case of orders of composition passed under section 65 of the principal Act. The Bill is principally intended to give effect to these proposals and in the process certain pressing amendments in respect of the same sections which have been considered necessary by the Board of Revenue are also being incorporated.

According to section 14 of the Madras Agricultural Income-Tax Act, 1955 (Madras Act V of 1955), Agricultural Income-Tax officers are now appointed by the Government. As these officers are in the grade of Tahsildars who are usually appointed by Collectors from lists approved by the Board of Revenue, it is considered that Agricultural Income-Tax Officers may be appointed by the Commissioner of Agricultural Income-Tax who is an officer in the grade of Collector and that necessary powers for the purpose may be vested in him. Section 14 is proposed to be amended suitably. The proposed amendment will also facilitate the quick appointment of Taluk Tahsildars, wherever considered feasible, as Agricultural Income-Tax Officers without having to come up to Government every time.

There are at present, two sets of provisions in regard to composition of agricultural income-tax. Under section 65 of the Madras Act V of 1955, any person holding not exceeding 50 standard acres of plantation land can apply for composition and the composition orders will be in force for a period of three years. But under section 34 of the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Act, 1958 (Madras Act XXIX of 1958) and section 14 of the Madras Agricultural Income-tax (Extension to Added Territory) Act, 1961 (Madras Act II of 1961), which is applicable to the territory added to this State from the State of Andhra Pradesh, any person holding land other than plantation up to any extent can apply for composition and the composition orders will be in force for a period of one year only. This is a temporary provision which has been extended up to the year 1968–69. Legal opinion is to the effect that a person having both plantations and non-plantations should apply under section 65 in respect of plantations (if it is below 50 standard acres) or file a return in respect of the same (if it is more than 50 standard acres) and apply under section 34 of the amending Act of 1958 in respect of non-plantation lands (irrespective of extent of non-plantations). With reference to the above provisions a person owning both plantation and also non-plantation land gets a double exemption in that he can either apply separately for composition for plantation and non-plantation lands and gets the first 12½ standard acres exempted under each head or get his first Rs. 3,600 of



31st March 1966] [Sri V. Ramaiah]

agricultural income from plantation free from agricultural income-tax and also get the first 12½ standard acres of non-plantations exempt. It was never the intention of the Government to give the double exemption and Government have therefore decided to remedy this and the provisions under section 65(a), (b) and (c) are intended to have this effect. Also in consonance with the recommendations of the Economy Committee it is provided that all composition orders should be valid for three years subject however to the concession that if there is reduction of extent the assessee can apply for a reduction of the composition amount and also the freedom is given to him to opt to submit a return in the succeeding year. As a result of this provision, Government are hoping to achieve substantial economy by transferring the bulk of the work in the non-plantation areas to Taluk Tahsildars while retaining the special staff in the plantation areas.

Provisions have also been made for reassessment of the agricultural income of any year in cases where the closing stock of any agricultural produce has not been taken into account in the year concerned, if the assessee applies for composition in the next year.

There has been doubt regarding the position of members of registered firms who apply for composition under section 65. In order to make the position clear we have stated that each individual partner of a firm is entitled to apply for composition together in respect of the lands held by him individually and his share of the partnership lands.

Certain other amendments of a minor and consequential nature have also been proposed.

I request the House, Sir, to accept the motion.

MR. CHAIRMAN: Motion moved.

"That the Madras Agricultural Income-Tax (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 8 of 1966) as passed by the Assembly, be taken into consideration".

SRI V. K. RAMASWAMY MUDALIAR: Mr. Chairman, Sir, I am one of those people who believe that this Act should be repealed. A lot of establishment charges are incurred for the collection of this tax. Even when the Bill was introduced, I made the suggestion that if it was necessary to raise revenues, we could increase the land revenue to some extent, on the basis of what was expected from the agricultural income-tax and thus save a lot of expenditure on staff intended for the collection of the new tax, and also the pinpricks suffered by the assessees. As it is, the ryots are made to carry their accounts from place to place and are put to a lot of hardship, because accounts are not settled for a number of years. Even if the aggrieved party were to appeal, it takes a lot of time for settlement of accounts and the disposal of the appeals.

[Sri V. K. Ramaswamy Mudaliar] [31st March 1966

I welcome the proposal of the Government to transfer a part of the work to the regular Revenue Department, but I do not know how much of savings there will be on account of this. To that extent at least there will be, I am sure, less of harassment caused to the assessees.

In regard to the composition of tax, once it is effected, it should be made permanent, unless changes become necessary on account of the assessee purchasing or selling away his lands. The composition of the tax is to be reviewed once in three years. The review also takes a lot of time resulting in considerable harassment to the ryots. My submission, therefore, is that the composition of tax once fixed should be made permanent.

These are the few suggestions I wish to make in regard to this measure, Sir.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Chairman, Sir, the hon. Member's suggestion for the repeal of this Act has to be considered in the light of the entire taxation policy of the Government on land. Our Hon. the Chief Minister has mentioned that the Government would like to go into all aspects of this land tax as such. When the whole question is taken up for consideration, the view expressed by the hon. Member will also be borne in mind. I am not going into the merits of the question just now of continuing the Act or repealing it. But this will have to be considered in the light of all problems connected with land tax as such.

Sir, regarding the composition of tax, I am sure hon. Members are aware that when this Act was passed, it was intended to be a temporary measure and so the levy was extended year after year. Now the composition has become more or less permanent in the sense that the Act itself has become permanent. But so far as the composition of the tax is concerned, we have been allowing composition of tax in respect of non-plantation areas year after year. Now we have accepted the recommendation of the High Power Committee and we are diverting some of the work of this department to the regular revenue establishment. In order to ease the difficulties experienced by the department and also the farmers, we have now accepted that composition of tax also will be on a three-year basis. In that three-year basis, any difficulty faced by the farmers in the matter of reduction of land and all that will be looked into, but I am not now in a position to assure the House whether this also will be made a permanent one. All these will have to be considered fully in due course.

11-20 a.m. MR. CHAIRMAN: The question is:

"That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 8 of 1966), as passed by the Assembly, be taken into consideration."



31st March 1966] [Mr. Chairman]

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 1 to 10, the Long Title, and the Enacting Formula were put and carried.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Chairman, Sir, I move—

"That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 8 of 1966), as passed by the Assembly, be passed."

MR. CHAIRMAN: The question is:

"That the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1966 (L.A. Bill No. 8 of 1966), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

### IV.—VALEDICTORY SPEECHES.

MR. CHAIRMAN: The next item on the agenda is 'Valedictory Speeches'. Hon. Members are aware that twenty-one members, elected and nominated, of this House will retire every two years. The term of office of twenty-one members will expire on the afternoon of the 20th April 1966. Some members have been re-elected, some are contesting elections and some have decided not to seek re-election. Regarding procedure, I suggest that members who are definitely retiring may, if they want, speak first, and then the other members from the Opposition and one or two members from the Government side, if willing. Then the Hon. the Leader of the Opposition may speak and then the Members of the Government, if they want, and then the Leader of the House may speak. I shall wind up the proceedings.

**திரு. கே. கமலக்கண்ணன்:** தலைவர் அவர்களே, நான் 1960-ம் ஆண்டு எப்ரல் மாதத்திலே Local Board Authorities Constituency சார்பாக தேர்ந்து எடுக்கப்பட்டவன். இந்த 6 ஆண்டிலே, 2 ஆண்டுகளுக்கு ஒரு முறையாக 21 அங்கத்தினர்கள் இந்த மேல் சபைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள். அப்படி ஏறக்குறைய 63 மெம்பர்களும் முதலில் இருந்த 63 அங்கத்தினர்களும், ஆக ஏறக்குறைய 126 அங்கத்தினர்களுடைய தொடர்பு இங்கே எனக்குக் கிடைத்தது. சிறந்த பேச்சாளர்கள், பல துறைகளிலும் அனுபவம் வாய்ந்தவர்கள், பேராசிரியர்கள், மற்றும் பெரியார் களுடைய பல அரிய பெரிய சொற்பொழிவைக் கேட்கவும், பெரிய அரசியல் வாதிகளுடைய தொடர்பு கொள்ளவும் எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அதன் பயனாக நாட்டுக்குச் சேவை செய்யும் மனப்பான்மைக்கு இன்னும் அதிகமான ஊக்கம் கிடைத்தது.

நம்முடைய அமைச்சர் அவையிலே இருக்கும் ஒவ்வொரு கனம் அமைச்சர் அவர்களும், நான் பொதுச் சேவை காரணமாக, பொதுமக்கள் சார்பாக எந்தப் பிரச்னையை எடுத்துக் கொண்டு போனாலும் கூட, என் பேரில் அவர்கள் அன்பு கொண்டு அந்தப்

பிரச்னையை நன்கு கேட்டு, என்னென்ன அவர்களால் செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு ஒரு அன்பு காட்டி நல்ல முறையில் செய்திருக்கிறார்கள். தங்களுக்கு முன்னால் இருந்த மேல் அவைத் தலைவர் டாக்டர் பி. வி. செரியன் அவர்களும், தாங்களும் கூட, நான் எப்போது, எந்தச் சந்தர்ப்பத்தில் எந்த மசோதாவில் பேச வேண்டும், என்று தங்களை அணுகியபோதெல்லாம், உடனடியாக எனக்கு உத்தரவு கொடுத்து பேச சந்தர்ப்பம் அளித்திருக்கிறீர்கள். நான் இப்போது ஓய்வு பெற்றாலும் கூட, மறுபடியும் மேல்சபை அங்கத்தினராக வர வேண்டும் என்ற கருத்து இருந்தாலும்கூட, அதை விட சிறந்த பணி விவசாயம்தான், என்று என்னுடைய கருத்தில் தோன்றியதால் இப்போது தீவிரமாக விவசாயத்தில் ஈடுபடவேண்டும் என்ற நோக்கத்தோடு நான் இங்கிருந்து ஓய்வு பெறுகிறேன். அதோடுகூட பல பொதுச் சேவைக்காக இயங்குகின்ற சங்கங்கள் பலவற்றிலும் நான் அங்கம் வகிக்கின்ற காரணத்தால், அவைகளின் மூலம் தொடர்ந்து பொதுச் சேவை செய்யலாம் என்பதே என் கருத்து. ஆனால் மேல் சபை, அல்லது சட்ட சபையில் இருக்கிற அங்கத்தினர் செய்கிற அளவுக்கு, எனக்கு வாய்ப்பு இனி கிடைக்காது என்றாலும் கூட, நான் பல பெரியவர்களோடு கொண்டிருக்கிற தொடர்பு காரணமாக, என்பேரில் மற்றவர்கள் கொண்டிருக்கிற அன்பு, நான் அவர்களிடத்தில் வைத்திருக்கிற அன்பு, இவைகளின் காரணமாக நான் சட்ட மன்ற அங்கத்தினனாக இல்லாவிட்டாலும் கூட, பொதுச் சேவையைப் பொறுத்தமட்டில் எனக்கு உதவி செய்ய அவர்கள் எப்போதும் முன்வருவார்கள் என்று நம்புகிறேன். நான் ஓய்வு பெற்றாலும், அந்த நம்பிக்கை இருக்கிறது. அதோடு கூட இந்த 6 ஆண்டுகளாக உத்தியோகஸ்தர்களும் இப்படி பொதுமக்கள் சம்பந்தமாக அவர்களை அணுகிய போதெல்லாம் அவர்கள் அன்போடு எனக்குச் செய்ய வேண்டியதை செய்திருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். குறிப்பாக தலைவர் அவர்களுக்கும், அமைச்சர் அவையிலே இருக்கிற ஒவ்வொரு அமைச்சர் அவர்களுக்கும், நன்றி தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

11-30 a.m. **திரு. கே. ஆர். இராமசாமி:** மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, இந்தச் சட்ட மன்றத்தினுடைய உறுப்பினனாக கடந்த ஆறு ஆண்டு காலமாகப் பணியாற்றும் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் எனக்கு அளித்தது. கடைசியாக இன்றைய தினம் விடை பெறும் நிலையில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

கலைத் துறையில் பணியாற்றிய என்னை, அரசியலிலே கலந்து கொள்ளும்படியாகச் செய்து, இந்த மன்றத்தில் இடம் பெறச் செய்து, என்னை அறிமுகப்படுத்திய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். முதன் முதலாக கலைத்துறை என்றாலே தாழ்த்தப்பட்டவர்களாக, ஒதுக்கப்பட்டவர்களாக, நெடுநாட்களாக இருந்து வந்த பழக்கம்





போய், இப்போது கலைஞர்களை கௌரவித்து கேடயங்கள் கொடுக்கப்படுவதைப் பார்க்கும்போது, உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைவதை விட வேறு யாரும் அதிகமாக மகிழ்ச்சியடைய முடியாது. ‘ஓர் இரவு’ என்ற கதையில் நான் திருடனாக நடித்தது உண்டு. அப்போது நான் என்னுடைய தங்கை வீட்டிற்கே திருட போகிறேன். அப்போது என்னுடைய தங்கையை ஒரு காமுகன் வந்து கெடுக்கப் பார்ப்பான். அப்போது என்னைப் பார்த்து ‘நீ என்னுடைய காதலனாக நடி’ என்று கேட்பார்கள். நானும் நடிக்கிறேன். பிறகு என்னுடைய பூர்வோத்திரத்தை கேட்டு அறிந்த அந்தத் தாய் என்னைப் பார்த்து நீ நல்லவன் என்கிறார்கள். அப்போது நான் சொல்லுகிறேன். “என் வாழ்க்கையிலேயே நீ தானம்மா என்னை நல்லவன் என்று சொல்லியிருக்கிறாய். நல்லவன் என்ற பெயரை உன் வாயால்தான் முதலில் கேட்கிறேன்” என்று சொல்லியிருக்கிறேன்.

அதேபோல்தான் அறிஞர் அண்ணா அவர்கள் முதன்முதலாக கலைஞர்களைப் புகழ்ந்தார். கலைஞர்களை நாட்டிலே நடமாடக்கூடியவர்களாக, சமுதாயத்தைச் சீர்படுத்தக்கூடியவர்களாக ஆக்கி அவர்களுக்கும் அரசியலில் பங்கு வேண்டும் என்று நாடகக் கலையில் அவர்களும் பங்குகொண்டு வேடம் அணிந்து நாட்டுக்கு என்னென்ன பணியைச் செய்ய முடியுமோ அவைகளை எல்லாம் செய்தார். என்னுடைய தலைவர் சொன்னது போல் மத்திய ஆட்சி மொழியாக எந்த மொழி வரவேண்டும் என்று தமிழ் நாட்டில் நடந்த பல கேடுகளை அலசிப் பார்த்து, ஆராய்ந்து, பிற்காலத்தில் அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெறாத வண்ணம், அவைகள் முதல்வர், தொழில் அமைச்சர் அவர்களுக்கும், இந்த மன்றத்தின் முதல்வர், தொழில் அமைச்சர் அவர்களுக்கும், இந்த மன்றத்தின் மரபு கெடாமல் பணியாற்றி, நான் பேசியபோது ஊக்குவித்துப் பாராட்டிய அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர்களுக்கும், எல்லா அங்கத்தினர்களுக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்து, குறிப்பாக என் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

**Dr. H. V. Hande:** Mr. Chairman, Sir, I would not take much of the time of the House. It is only two years ago I had the privilege of coming into this House. Just within this period of two years, the experience of mine is so pleasing here that I would like to take this opportunity to congradulate everybody, starting from the Leader of the House, who has been following the procedure so admirably well. In fact to say this point mainly, I rose to speak. We are missing some of the excellent Members with whom I have had the privilege of associating in this House for the past two years, for instance, the able social worker Srimathi Clubwala Jadhav. We are seeing her in this chamber for the last time. There are so many friends of mine with whom I have moved very intimately. Some of them belong to different political parties. We have moved with them in such a fine way. I only hope that the atmosphere in this House is copied by the

Legislatures all over our country. I can definitely say, without fear of contradiction, that this is one of the best conducted Legislative Councils in the whole country. The credit for it goes not only to the Leader of the House but to the Leader of the Opposition also who has co-operated in the proceedings of the House.

Sir, let me take this opportunity to say that we have moved very friendly with every one. In a doctors' conference, when two doctors differ on a particular diagnosis or treatment, they do have heated debates and discussion. They always try to give objective and constructive suggestions. But after the discussion is over, they again become friends. In the same way, we have expressed our views in this House. Different viewpoints have been expressed in perfect cordiality. I only hope that our House would be copied by every other House in the country. Thank you, Sir.

**திரு. க. அன்பழகன்:** கனம் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் கடந்த ஆறு ஆண்டுகளாக சிறந்த முறையில் பணியாற்றி இன்று விடைபெற்றுக்கொள்ளும் மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் பலருக்கும் நாம் வாழ்த்துக்கூறும் முறையில் என் உரையை நிகழ்த்த விரும்புகிறேன். இந்த மன்றத்தின் சிறப்பு இந்த ஆறாண்டு காலத்தில் மேலும் உயர்ந்திருக்கின்றது என்றே நான் கருதுகிறேன். நான் இங்கே ஆறு ஆண்டுகளும் இருந்து, அதன்பிறகு, இந்தச் சிறப்பு உயர்ந்திருக்கிறது என்று எண்ணுகிறேன் என்று யாரும் எண்ணத் தேவையில்லை. நான் இங்கே நான்கு ஆண்டுகளாகத்தான் இருந்துவருகிறேன். முன்பு பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே செயல்பட்டுவந்த இந்த மன்றத்தில் தமிழில் பேசும் பலர் இந்த ஆறாண்டு காலத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள். மிகச்சிறந்த அரசியல் கருத்துக்களையும் சட்டக் கருத்துக்களையும் தமிழில் சொல்ல முடியும் என்ற பெருமை இந்த ஆறாண்டு காலத்தில் இந்த மன்றத்தில் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. அந்த வகையில் பல மதிப்புக்குரிய அங்கத்தினர்கள் இந்த மன்றத்தில் ஒரு மறு மலர்ச்சியைத் தோற்றுவித்தார்கள். நான் சார்ந்திருக்கும் கட்சியில் உறுப்பினராக இருக்கும் திரு. கே. ஆர். ராமசாமி இந்த மன்றத்தில் எதிர்க் கட்சி வரிசையில் முதல் முதலில் அமர்ந்த கலைஞர் பிரதிநிதி ஆவார். கலைஞர் பிரதிநிதியாக விளங்கிய அவர் இந்த மன்றத்தில் இந்த ஆறாண்டு காலத்தில் பேசிய நேரங்களில் ஒவ்வொரு நேரத்திலும், கலைத் துறைக்காகவும் தமிழுக்காகவும் பல முறை வாதாடியிருக்கிறார்.

என்னுடைய கட்சியைச் சேர்ந்த திரு. தங்கவேல் முதலியார் இந்த மன்றத்தில் பேசும்போது அவர் வயது மிகுந்தவராக இருப்பதால், அவருடைய குரல்கூடத் தடுமாறும். அனுபவம் உள்ள அவர் கூறும் கருத்துக்களை, மற்றவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களோ இல்லையோ, மதிப்பிற்குரிய மன்ற முதல்வர் ஏற்றுக்கொள்வதை, தாம் ஏற்றுக் கொண்டதாக அவர் சொல்லாவிட்டாலும், அவருடைய சிரிப்பிலிருந்து அறியலாம். அவர்கள் அந்த முறையில் இந்த மன்றத்தின் உயிரோட்டத்தை அதிகப்படுத்தியிருக்கிறார்கள்.





திரு. கமலக்கண்ணன் தம் உள்ளத்தில் பட்டதை மாற்றிக் கூறும் இயல்பே உடையவர் அல்ல. அவர் உள்ளது உள்ளவாறு பேசி இந்த மன்றம் அதன் கடமையை நிறைவேற்ற இம்மன்றத்திற்குத் துணையாக இருந்தார்.

சில கனம் உறுப்பினர்கள் இன்று தேர்தலில் ஈடுபட்டிருந்தாலும், அவர்களும் இன்று விடை பெறுவதாகவே கருத வேண்டும். திரு. சுப்பையா செட்டியார் பல குறைகளை எடுத்துச் சொல்லி அவற்றை அரசாங்கம் களையப் பெரிதும் உதவியிருக்கிறார்.

திரு. எஸ். கே. சம்பந்தன் தேர்தலில் ஈடுபட்டிருக்கிறார். அவர் என்ன சொல்லியிருந்தாலும், ஒரு போதும் யாரிடமும் பகை நோக்குடன் பேசியதில்லை என்பதை அவர் மனச்சான்றை அறிந்து நான் சொல்வேன். மனதில் பட்டதைச் சொல்வதுதான் சட்ட மன்ற உறுப்பினரின் கடமை. அவர் எப்படிப் பேசியிருந்தாலும், அவர் அந்த முறையில் சில உண்மைகளை எடுத்துச்சொல்லி தன் கடமையை ஆற்றியிருக்கிறார். மேலும், கேள்வி நேரத்தில் மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களால் திரு. எஸ். கே. சம்பந்தன் அவர்களுடைய பெயரே அடிக்கடி கூப்பிடப்படும் முறையில், கேள்வி நேரத்தையே காப்பாற்றியவர் அவர் தான். அவர் மன்றத்தில் இருந்திராவிட்டால் கேள்வி நேரமே கேட்பாரற்ற நேரமாகப் போயிருக்கக்கூடும். கேள்வி நேரத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் சிலரும் சிறந்த முறையில் பணியாற்றியிருக்கிறார்கள்.

ஸ்ரீமதி கிளப்வாலா ஜாதவ் இன்று இங்கே பேசியிருப்பார் என்று எதிர் பார்த்தேன். ஆனாலும், அவர் இதுவரையில் பேசிய நேரங்களிலேயே நிறையக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். சமுதாயத் துறையில், சமுதாயத்திலுள்ள அழுக்குகளைப் போக்கும் துறையில் பணியாற்றும் அவர் அத்துறையில் அனுபவம் உள்ளவர். சமுதாயத்திலுள்ள இழுக்குகளையும் அழுக்குகளையும் எவ்வாறு நீக்க முடியும் என்பதற்கு அவ்வப்போது பல கருத்துக்களைத் தெரிவித்து அவற்றை அரசாங்கம் பரிசீலிக்கச் செய்த பெருமை அவரைச் சாரும். அரசியல் கட்சித் தொடர்பு இல்லாவிட்டால், சமுதாயத்தில் ஒன்றுமே செய்ய முடியாது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இந்த அம்மையார் அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, தனி ஒருவராக இருந்து, முன்னால் நின்று இந்தப் பணியைச் சிறப்பாக நிறைவேற்றி மற்றவர்களுக்கும் துணை நின்றிருக்கிறார். அவர் இந்த மன்றத்தில் சொல்லியுள்ள கருத்துக்கள் அரசாங்கத்தால் கவனிக்கப்பட வேண்டியவையாகவும், அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவையாகவும், அவைகுறித்து அரசாங்கம் தன் கருத்துக்களைச் சொல்ல வேண்டியவையாகவும், இருந்திருப்பதால் அவர் விடைபெறுவதுகுறித்து நாம் மகிழ்ச்சி அடையும் நிலையில் இல்லை. கனம் மன்ற முதல்வர் கூறியிருப்பது போல அவர் இதைவிடப் பெரிய பணியில் ஈடுபட்டு, அவர் பணியாற்றுவதாக இருந்தால், அவர் அவ்வாறு பணியாற்றட்டும். அந்த எண்ணம் எக்காரணத்தாலாவது நிறைவேறாது போகக்கூடுமானால், அவர் இந்த மன்றத்தில் இருப்பது மிகவும்

[திரு. க. அன்பழகன்] [31st March 1966

பொருத்தமானது என்பதால் அவரை இந்த மன்றத்திற்குத் திரும்பவும் கொண்டுவர வேண்டிய பொறுப்பை மதிப்பிற்குரிய மன்ற முதல்வர் ஏற்றுக்கொள்வார் என்று நினைக்கிறேன்.

நமது மன்றத்தின் மதிப்பிற்குரிய தலைவர் ஆத்திரப்பட்டு எதையும் செய்யமாட்டார், அவர் தன் தவறுகளை நகைச்சுவையாலேயே மாற்றிக்கொள்ளக்கூடிய மனோபக்குவம் உடையவர். அப்படிப்பட்ட தலைவரையும், பல பேர் கோபித்துக்கொள்ளும் போது சிரிக்கவும், பலபேர் சிரிக்கும்போது கோபிக்கவும் செய்யும், முதல்வரையும், இந்த மன்றம் பெற்றிருப்பதால், இந்த மன்றத்தின் செயல்முறைகள் உயர்ந்த முறையில் இருக்கின்றன. உண்மையிலேயே, நாட்டில் மற்றச் சட்ட மன்றங்கள் இப்போது செயல்படும் விதத்தைப்பற்றி நான் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அதுகுறித்து நான் வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை. இப்போது பல மாநிலங்களில் இந்த மன்றங்களில் எதிர்க் கட்சி உறுப்பினர்களாக இருப்பவர்கள் ஓரளவு நாட்டுக்கும் மக்களுக்கும் பெரியவர்களாகத்தான் இருக்கிறார்கள். இருந்தாலும் சில மாநிலங்களில், சட்ட மன்றங்களில் நடவடிக்கைகள் நடந்துள்ள விதத்தைப் பார்க்கும்போது, இந்த நாட்டில் ஜனநாயகத்திற்குக் குந்தகம் ஏற்பட்டுவிடுமோ, ஜனநாயகத்தில் பொதுமக்களுக்கு உள்ள சிறந்த பங்கு குறைந்துபோகக்கூடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில், நாங்கள் சுறுசுறுப்பாக இருக்க விரும்பும், எதிர்ப்பைத் தெரிவிக்க விரும்பும், எதிர்க்கட்சியினர்தான். நான் சார்ந்திருக்கும் கட்சியில் உள்ள உறுப்பினர்கள், குறைகள் தோன்றும்போது அவற்றை உட்னுக்குடன் தெரிவிக்க விரும்புகிறவர்கள் தான். எங்கள் கட்சியைச் சேர்ந்த தலைவர், பிரச்னைகளுக்கு உடனடியாக விதாயம் தேட முயலும்போது, சட்ட மன்றத்தின் கண்ணியத்தைக் குறைக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். நாங்கள் 'நல்ல பிள்ளைகள்' என்று கனம் அமைச்சர்களே சொல்வார்கள் என்று நினைக்கிறேன். ஆனால், நாங்கள் நல்ல பிள்ளைகளாக இருப்பதால், நாங்கள் பெட்டிப் பாம்புகள் என்று அவர்கள் நம்பிவிட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். நான் ஏன் இதையெல்லாம் இப்போது கூறுகிறேன் என்றால், என் கட்சியைச் சேர்ந்த சில மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் இன்று விடைபெறுகிறார்கள். அவர்களால் இந்த மன்றத்தின் கண்ணியம் உயர்ந்திருக்கிறது. நான் சார்ந்திருக்கும் கட்சியைச் சேர்ந்த கனம் உறுப்பினர்களாலும், ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர்களாலும், மற்ற கனம் அங்கத்தினர்களாலும் இந்த மன்றத்தின் கண்ணியமும் பெருமையும் உயர்ந்திருக்கின்றன. இன்று விடைபெறும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு என் வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் தெரிவித்து என் உரையை முடிக்கிறேன்.

11-40 a.m. SRI M. A. MUTHIAH CHETTIAR: Mr. Chairman, it is out of sincere feelings that I rise to speak on this occasion. We must take into account the manner in which parliamentary institutions are functioning in this country. At the present moment,



31st March 1966] [Sri M. A. Muthiah Chettiar.]

we in Madras have been very fortunate. All these sixty-five years parliamentary institutions have been in existence in this State. First it was a small Council meeting at the Governor's Room which was the former Revenue Secretary's room or the Finance Secretary's room. Later it met at a small hall. Still later it met at a bigger hall where our distinguished Chairman was also a Member or Minister. We in Madras are proud of the fact that parliamentarians in the past, in the recent past, and in the present have done well to uphold the dignity of this House and to consider matters in a very dispassionate manner. Feelings may sometimes rise high, but they have always been tempered with moderation. Points of view have been expressed in a calm manner. The credit for this should go not only to the party in power from time to time, but to all sections of the House. I very much appreciate what Sri Anbazhagan said now, namely, that though belonging to a party which sits on the Opposition, his leader and others have considered this House as a place where there should be a calm discussion even on the most intricate and exciting problems. While we are proud of the achievements, it is time that we also consider the usefulness of this House. As one who has been in the Lower House for 34 years and who has the opportunity of being in this House now,—I said even on the day I was sworn in a Member—I may say that I praise the work of this House not because I have become a Member of this House, but I have quoted in my earlier speeches in the Lower House and in other places outside the Legislature about the importance and usefulness of the Upper House. I have also said on several occasions that the useful part played by the Madras Upper House has been a beacon-light to other States and it has helped States which did not have an Upper House to ask for an Upper House, and the Upper House has come into existence in subsequent years. The credit must go to persons who have been Leaders of the House from time to time, and the present Leader of the House, Sri Venkataraman, and the distinguished Vice-Chancellor, the Leader of the Opposition, the other leaders and members of the other Parties in this House. It was given to me as the Leader of the Opposition in the Lower House and as a member of the Congress Party to refer the Ministers to the discussion that would be taking place in a day or two in the Upper House and say, "You would not agree with me now. You will come back after the Leader of the Opposition in the other House appeals to you for moderation, but we will not be sore on that account." I should also say to the credit of the Madras Government and the Ministers that they have not been slow to re-examine good viewpoints. I do sincerely hope that the tradition of this House will be built up from time to time in such a way that it will not only be a beacon-light to other States but to the bigger parliaments in this country, particularly at this time. We have seen in other countries dictatorship being established. We are very proud of democratic institutions. We have derived them from the British democracy. But somebody can rightly come and tell me, "Do not think of the British Parliament. Go to a place here where

[Sri M. A. Muthiah Chettiar.] [31st March 1966

some centuries ago good democracy was functioning." I may refer to communal gatherings in our country. However much we may dislike communal gatherings, we know of communal gatherings where democratic institutions have flourished well. It is in communal gatherings that discussions have taken place on the basis of feelings of equality. It is there that the poorest and the richest men, men with property and men with no property, learned men and illiterate people have had an equal say. It is in the village community that unanimity is achieved. I may be allowed to say in my own humble manner that I am happy about my community where there is no president for a community meeting. There can be nothing but a unanimous decision at such a meeting. Where it is not possible to come to unanimous decisions, we disperse without the subject being decided upon. That is the custom prevailing till to-day and we are very proud of that. That we have been vouchsafed democratic institutions in the past is a matter of great pride to all of us and we will keep up that tradition. I am laying emphasis on this to-day. I would not have said this yesterday. But this morning's news in the papers made me feel like this. Otherwise, I would not have spoken. I am sure the Leader of the Opposition will speak better and improve upon what I say with his usual eloquence. But I shall only like to say that Members of Parliament in Delhi should not repeat what people in other places like Bengal have done. Particularly at a time when we are held in high esteem in big countries, when our Prime Minister is holding the flag of India aloft in America and when she is achieving great things, it is a great pity that such things should happen in Delhi. I am happy to say that all leaders of parties are concerned about the action of a few Members at a meeting to which I am referring and I do sincerely hope that these Members will make amends by regretting the past, and conducting themselves in the Delhi Parliament in such a way that the credit of India goes high in the estimation of other Parliaments in the world. I do sincerely hope that for centuries to come we will have democratic institutions. This country has built up democratic institutions. The ruling Party will have to see from time to time that they go forward in a moderate way and that they do not precipitate the ushering in of Socialism. Let them have Socialism of the real, progressive type which will be for the economic benefit of this country, which will increase the strength of this country. I have seen in the last few months, particularly in the last year or two, a growing feeling even in this party which stands for democratic Socialism that it is necessary to build up the strength of the country to evolve Socialism and to see that Socialism spreads successfully. Otherwise, we will not be able to have democracy; we may have dictatorship. The Congress President has given a warning that dictatorship may come about. Once dictatorship comes about, the dictator will be there only for a few weeks and dictators will change every month. We pray that such a thing should never happen in this country



31st March 1966] [Sri M. A. Muthiah Chettiar.]

On this occasion only one reference I would like to make personally. Many distinguished Members of this House are retiring. I should like to pay my tributes to all the retiring Members. I have been here only for a short time, but I have heard the speeches of these Members on a number of occasions. Though I have not heard the speech of Sri K. R. Ramaswamy before, he made a good speech to-day full of very fine sentiments. Then, Sri Kamalakannan and others made very fine speeches. I should like to make a special reference to the distinguished Lady Member of this House, Srimathi Clubwala Jadhav. She is an ornament to society. She has done real, concrete work for thirty or forty years and rendered service in an unstinting manner in the public life of this country. She will be happy if I translate a few of the ideas which Sri Anbazhagan expressed because, though she knows Tamil, she does not know very good Tamil. I share the sentiments which Sri K. Anbazhagan expressed. We will regret the absence of Srimathi Clubwala Jadhav in this House. But the regret is mitigated by the feeling which is generated from what we heard from the Hon. the Leader of the House, that she will be transferred to a higher sphere of activity. We are very happy about it. Sri Anbazhagan also said that if Srimathi Clubwala Jadhav was not transferred to a higher sphere of activity, it would be the duty of this House and the Leader of the House to see that she came back to this House. That is the feeling I want to translate. All Members of this House are equal and she and we have the great honour of being colleagues in this House. It is a great honour to her and she has deserved it.

One other thing I would like to mention. The dignity of the House has been enhanced by the able way in which the Leader of the House and the Leader of the Opposition have co-operated in conducting the deliberations of the House. The Leader of the House is not only leader of this House but is leading the entire country in the economic sphere. It is a great credit to him and a credit to our country. We have been told that we are going to meet and talk about it later on in August, but the same thing will have to be repeated. If like Srimathi Clubwala Jadhav our Friend is not going to Delhi with a good portfolio, the best thing would be for him to be here.

